# ஒரு மலரின் பயணம்

ஆர்.மணிமாலா



# ஒரு மலரின் பயணம்

ஆர்.மணிமாலா

தேவி வெளியீடு [redacted]

தபால் பெட்டி எண்: [redacted]

23/11, காசிம் சாகிப் தெரு,

இராயப்பேட்டை :: சென்னை-600 014.

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஒரு மலரின் பயணம் |
| ஆசிரியர் | : | ஆர்.மணிமாலா |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | ஜூலை, 2001 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 11.6 Kg. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 328 |
| நூல் கட்டுமானம் | : | சாதா அட்டை பைண்டிங் |
| நூல் வெளியிடுவோர் | : | தேவி வெளியீடு<br>தபால் பெட்டி எண்: 668<br>23/11, காசிம் சாகிப் தெரு<br>இராயப்பேட்டை<br>சென்னை - 600 014 |

விலை: ரூ.80.00

ஒளி அச்சு : நம் பிராசஸ், போன்: 4331808
அச்சிட்டோர் : சேகர் ஆப்செட் பிரஸ், சென்னை - 600 005.



மாவட்ட கிளை நூலகம்
32955


# ஒரு மலரின் பயணம்

பொருளடக்கம்


1. ஒரு மலரின் பயணம் ............................................ 5

2. உயிரே உன்னை அழைக்கிறேன் ........................ 119

3. காதல் தர வந்தேன் ............................................ 237



32955
5008309


# ஒரு மலரின் பயணம்



## 1

மழை சீறலாய் பூமியை குதறிக் கொண்டிருந்தது. கார் வைப்பர் தண்ணீரை இப்படியும் அப்படியும் தள்ளி விட்டும் விடாப் பிடியாய் மறுபடி நனைத்துக் கொண்டிருந்ததை குதூகலம் கொப்பளிக்க பார்த்துக் கொண்டிருந் தாள் செளம்யா! ஆவலில் கண்கள் விரிய, பூஞ்சிரிப்பில் உதடு பிளந்து பற்கள் மின்ன... வெளியே கையை நீட்டினாள். மழை முத்துக்கள் ஒரு கையளவு சேர்ந்ததும் அதை அப்படியே பக்கத்திலிருந்த மிருதுளா மீது விசிறி அடித்தாள்.

''ஏய்....'' என்ற செல்லக் கோபத்தோடு செளமியின் தொடையில் தட்டினாள்.

''என்ன செளமி விளையாட்டு இது? போதும் வண்டிய எடு! டைமாகுது... டிக்கெட் கிடைக்காமப் போயிடும். அப்புறம் கிளாசை கட் அடிச்சதுக்கு எந்த பலனும் இல்லாமப் போயிடும்'' பின் சீட்டிலிருந்த செலின் கெஞ்சலாய் கேட்க...

''பிக்சர் போயே ஆகணுமா? அதோ பார்! மழை எவ்ளோ அழகா பெய்யுது! இந்த நேரத்துல பீச்சுக்குப் போனா எப்படியிருக்கும்?''

''பார்க்கறவங்க இதுங்க மெண்டல் ஆஸ்பிடல்லேர்ந்து தப்பிச்சு வந்ததுங்கன்னு நினைச்சுக்கப் போறாங்க... அய்யோ

டைமாறதும்மா... ப்ளீஸ்.... சீக்கிரம் போயேன்'' மிருதுளா கெஞ்சவும் மனசேயின்றி ஸ்டீரியங்கைப் பற்றினாள்.

**பொ**துவாகவே இதுபோன்று தோழிகளோடு சினிமாவிற்கு வரும் ரகமில்லை சௌம்யா. பீச், ஓட்டல் என்று மட்டும் சுற்றுவாள். தியேட்டருக்கு வந்து படம் பார்க்கவெல்லாம் பிடிக்காது. நிறைய கூட்டத்தைப் பார்த்தாலே அவளுள் ஒரு சலிப்பு ஏற்படுவது உண்டு. எந்த சந்தோஷமான விஷயம் அவளை பாதித்தாலும் கைதட்டி பலமாய் சிரிப்பாள். ஆனால் வெளியில் இப்படி சிரித்தால் பலரின் கேலி பார்வைக்கும் ஆளாவதால்... அந்த வெளிப்படையான சந்தோஷமெல்லாம் தன் வீட்டோடு வைத்துக் கொள்வாள்.

பெற்றவர்களுக்கு பிள்ளைகளால், முக்கியமாய் பெண்ணை பெற்றவர்களுக்கு ஏற்படும் பெரிய நிம்மதி கன்னி மனது கல்லடிப்படாது இருப்பதில்தான்.

பனிரெண்டு வயதிலேயே பாய் பிரண்ட் இடுப்பில் கைபோட்டு செல்லும் மாடர்ன் யுகத்தில் தன் மகள் கிளீன் சிலேட்டாய் இருப்பதில் புவனேஸ்வரிக்கு மகா பெருமை!

மத்த பெண்களைப் போல் ஒரு ஆபாச பேச்சு இல்லை. டி.வி.யில் ஆணும் பெண்ணும் கட்டிப் பிடித்து பாட்டுப் பாடினால் கூட முகம் சுளிக்கும் பால் மனம். ஒருநாள் கவனக்குறைவால் இவள் கார் சக்கரத்தில் அரைபட்டு இறந்த வெள்ளாட்டுக் குட்டிக்காக ஒருநாள் முழுக்க சாப்பிடாமல் கண்ணீர் வடித்த இரக்க சுபாவம். அதனாலேயே... தன் மகளைப் பற்றி அதிகமாய் பயமின்றி இருந்தாள்.

சௌம்யா நல்ல அழகு! சிவப்பும் வெளுப்பும் கலந்த நிறம் பெண்களுக்கு உடல் மறைக்க நகை போடுவதில் உள்ள ஆபத்தை விட, பளீரென அடிக்கும் அழகில்தானே விபரீதமே வருகிறது. சௌம்யாவின் மனதை அவள் வயதுக்கேற்றபடி பக்குவப்படுத்த அவள் விரும்பியதே இல்லை. அந்தக் குழந்தைத்தனம்தான் சௌம்யாவிற்கு மிகப் பெரிய பிளஸ் பாயிண்ட்!



கல்லூரி விட்டு வீட்டிற்கு வந்தால் தன் செல்ல நாய்க்குட்டி பப்பியோடு பொழுதை போக்குவாள். அம்மாவோடு கேரம் விளையாடுவாள். படிப்பாள், சாப்பிடுவாள்... சாப்பிட்டதும் தூங்கி விடுவாள். பணக்கார பெண்களுக்கே உரிய ஆணவமோ, அடாவடியோ... எதுவுமே அவளை தொட்டதில்லை.

அப்படிப்பட்டவளை தியேட்டரில் போய் உட்கார வைத்தால்? அதுவும் காதல் படம்!

படம் முடிந்ததும் தலை பாரமாய் வலித்தது. மௌனமாய் நடந்து வந்து காரில் அமர்ந்தாள்.

''சூப்பர் படம்ப்பா.''

''நம்பறதுக்கு கஷ்டமா இருந்தாலும்... அதை முரண்பாடே இல்லாம ஏத்துக்க வச்சுட்ட சாமர்த்தியம் கதையில இருக்கு. ஆனா இப்போ உள்ள காதலெல்லாம் கண்கள்ல ஆரம்பிச்சி உதட்டுலதான் முடியுது. இல்லையா செலின்?'' மிருதுளா உதடு மடித்து குறும்பாய் கேட்கவும் செலின் முகம் இருண்டது.

''அதை ஏன் என்கிட்ட கேக்கறே?''

''ஓரளவு நம்ம குருப்ல லவ் எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவ நீ தானே! ஏதோ அறியா பசங்க நாங்க. சொன்னா எங்களுக்கும் ஹெல்பா இருக்குமில்லையா?''

''ச்சை! இந்த உலகத்துல சந்து பொந்துல உக்காந்து லவ் பண்ணாலும் கண்டுபிடிச்சிடறாளுங்கப்பா!''

''நொந்துக்காதே! நீ பிரேமை கிஸ் அடிச்சப்ப... சத்தியமா நான் பார்க்கலப்பா! ச்சீ... ரொம்ப மோசம். இப்படியா கடிக்கறதுன்னு நீ சொன்னதுகூட எங்காதுல விழவேயில்லை.''

''ஏய்...'' என்றாள் பயமாய். ''எப்ப... எப்ப பார்த்தே இதெல்லாம்?''

''போன வாரம் ஈவினிங் ஷோ ஆனந்த்ல படம் பார்க்க மம்மி டாடியோட வந்தப்ப எங்க சீட்டுக்கு முன்னாடி சீட்ல

உக்காந்திட்டிருந்தியா இல்லையா? ஹூம்... படமெங்கே பார்த்தேன்? அங்கே இங்கே அசையாம இண்டர்வெல்லுக்கு கூட எழுந்து போகாம இருந்த உன்னை நான் டிஸ்டர்ப் பண்ணலை. தவிர என் பாரெண்ட்ஸ் முன்னால ஒரு டிவைன் லவ்வலர்ஸ டிஸ்டர்ப் பண்ண மனமே கேக்கலை. ஆனாலும் ரொம்ப கடியோ?''

''ஓ ஜீஸஸ்'' என்றபடி வெட்கமும் அவமானமுமாய் சீட்டில் தலையை கவிழ்த்துக் கொண்டாள்.

''ஏய் என்ன ஆச்சு?'' மிருதுளா பதறினாள்.

''....''

''எனக்கு தெரிஞ்சு போச்சுன்னு பீல் பண்றீயா? இங்கே பார் செலின்! நான் உன்னை கிண்டல் பண்ணேனேயொழிய... அதை தப்புன்னு சொல்லலை. நிறைய பேர் காதல், செக்ஸ்னாலே அலர்றாங்கப்பா! திஸ் இஸ் பேட்... கல்யாணத்துக்கு முன்னால நம்மோட லைப் பார்ட்னரோட குணம் நம்ம டேஸ்டுக்கு ஒத்து வருதான்னு பார்க்கறதோட கழுத்தை நீட்டி திருமதியாயிடறது சரியில்லை. எத்தனை திருமணங்கள் பொருத்தமில்லாத, திருப்தியில்லாத செக்ஸால கோர்ட்ல டிவோர்ஸ் வரைக்கும் போறாங்க தெரியுமா? இது ரொம்ப முக்கியம் செலின். ரெண்டாம் பட்சம்னு ஒதுக்கற இதுதான் தாம்பத்யத்தோட தலைவிதியையே மாத்துது. ஐ பிராமிஸ்... நிச்சயமா நானும் லவ் பண்ணுவேன். உறவும் வச்சுப்பேன். அதுல திருப்தி ஏற்பட்டா மட்டுமே...''

''ஸ்டாப்... ஸ்டாப்... நீ நிஜமாவே இண்டியன் லேடிதானா? இது மோசமான டாபிக் மிருதுளா! எல்லாத்துக்கும் மனசுதான் காரணம். பிடிச்ச எந்த பொருளையும் சின்ன குறையிருந்தாலும் ஏத்துக் கறதுக்கு மனசு பக்குவப்படணும். சப்போஸ், உனக்கு அந்த பிரண்டோட அப்ரோச் பிடிக்கலேன்னா வேற ஒருத்தர்கிட்டேயும் டெஸ்ட் பண்ணுவியா?'' செலின் கோபமாய் கேட்டாள்.

''வொய் நாட்? அதிலென்ன தப்பு?''



''தப்புதான்... எல்லாமே தப்புதான். நான் லவ் பண்றவதான். பார்க், தியேட்டர்னு சந்தர்ப்பம் அமையற இடங்கள்ல சின்ன சின்ன உரசல்களோட சந்தோஷப்பட்டுக்கறோம். தட்ஸ் ஆல்! ஆனா எந்த சந்தர்ப்பத்திலேயும் லிமிட் மீற மாட்டோம். அந்த விஷப்பரீட்சையில இறங்கவும் மாட்டோம்'' என்று ஆணித்தரமாய் கூறிவிட்டு அப்போதுதான் சௌம்யாவைப் பார்த்தாள்.

திடுக்கிட்டாள்.

முகமெல்லாம் சிவந்து, கண்கள் பளபளத்துக் கொண்டிருந்தது.

''சௌமி... அழுதியா என்ன?''

''ம்ஹூம்...''

''பார்த்தா அழுத மாதிரிதான் இருக்கு. என்னாச்சு உனக்கு?''

''பச்... விடு.''

''சொல்லாம விடப் போறதில்லை'' மிருதுளா அவள் தோளைப் பிடித்து அழுத்தினாள்.

''பாவமில்லே அவ...''

''யாரு?''

''படத்திலே அவளை உயிருக்குயிரா காதலிச்சா... ஆனா அவன் அவளைக் கட்டிக்காம வேற ஒருத்திய கட்டிக்கிட்டானே... அவ மனசு என்ன பாடுபடும்? வேதனைப்படும்?''

''அட ராமா!'' தலையில் கை வைத்துக் கொண்டாள் மிருதுளா.

''அதுக்கா அழுதே? நீயென்ன சின்னக் குழந்தையா? நிஜத்துக்கும் சினிமாவுக்கும் வித்தியாசமில்லையா? பதினெட்டு வயசுப் பொண்ணு! பணக்காரி... அழகான காலேஜ் ஸ்டூடன்ட்! சினிமாவில வர்ற டிராஜடி சீனைப் பார்த்து அழுதான்னு சொன்னா... அவமானம் தாங்காம எல்லா காலேஜ் ஸ்டூடன்கும் ஸ்டிரைக் பண்ணி உனக்கு டிஸ்மிஸ் ஆர்டர் தர்ற வரை ஓய மாட்டாங்க. வயசுக்கேத்த

மனப்பக்குவமே உனக்கில்லே... பயமா இருக்குடி உன்னைப் பார்த்தா. நீ நிறைய தெரிஞ்சிக்கணும் சௌமி! அதுக்கு முதல் காரியமா... நீ யாரையாவது லவ் பண்ணு'' கவலையும் கிண்டலுமாய் குரல் ஒலிக்க...

''வேணாம்ப்பா! அவ இப்படியே இருக்கட்டும். உன் பாரீன் கல்ச்சரெல்லாம் அவளுக்கு சொல்லித் தந்துடப்போறே? அவ மனசுல நஞ்சை கலக்காதே'' செலின் தடுத்தாள்.

சௌம்யா சில கணங்கள் கண் மூடினாள்.

இதயத்தில் புதைந்திருந்த அந்த உருவம் மிக மங்கலாய்... எழுந்து கண்களில் வந்து நின்றது.

''சௌமி... சௌக்கியமா?'' என்றான் கரகரப்பாய்!



2

குடித்து முடித்து காலி கோப்பையை டீப்பாய் மீது வைத்த சிவராமன், பவ்யமாய் பைலை எடுத்து கையெழுத்துப் போட வேண்டிய இடங்களை காட்டினார்.

புஷ்பலிங்கம் போட்டார்.

''இன்னைக்கு பாங்க்லேர்ந்து பத்து லட்சம் எடுக்க வேண்டியிருக்கும்ணா.''

''ஈஸ்வரி பீரோவுல இண்டியன் பேங்க் செக்புக் இருக்கும். எடுத்துட்டு வா.''

ஈஸ்வரி எடுத்து வந்து கொடுத்ததும் நாலைந்து செக்கில் கையெழுத்துப் போட்டு தம்பியிடம் நீட்டினார்.

''அடிக்கடி என்னை தொந்தரவு பண்ணாதேப்பா'' என்றவர், ''வேற எதிலேயாவது கையெழுத்து போட வேண்டியிருக்கா?''

''இல்லேண்ணா... அவ்வளவுதான். நான் கிளம் பட்டுமா?''

''ஏண்டா பறக்கிறே? சாப்பிட்டுப் போயேன்.''



''ஆச்சண்ணா... முடிச்சிட்டுதான் வந்தேன்.''

''எங்கே ஹோட்டல்லதானே? போடா எவ்வளவு சொன்னாலும் நீ திருந்த மாட்டே. கடல் மாதிரி வீடு இருக்கு. இங்க வந்து இருன்னா கேக்கறதில்லே. தனி ரூம் எடுத்து தங்கியிருக்கே. நாப்பது வயசுக்கு மேலேயே ஆயாச்சு. கல்யாணம் பண்ணிக்கடான்னாலும் இப்ப வேணாண்ணா நான் நல்ல உயர்ந்த இடத்துக்கு வரணும். அதுவரைக்கும் அந்த பேச்சே எடுக்காதீங்கன்றே. ஏன் இப்ப நான் உன்னை கம்பெனி பொறுப்புக்கள் அத்தனையும் கொடுத்து நல்ல பொஸிஷன்ல தானே வச்சிருக்கேன்? என்னமோ போ!''

''வரட்டுமாண்ணா டைமாயிடுச்சி'' சிவராமன் எழுந்து கொண்டார்.

''கழட்டிக்கறியா? நல்ல ஆளுப்பா. நீ! சரி... போய் வா! நான் வரணுமா ஆபீசுக்கு?''

''அவசியமில்லேண்ணா நான் பார்த்துக்கறேன்'' என்றபடி போய்விட்டார் சிவராமன்.

புகைத்து முடித்த பைப்பினுள்ளிருந்த சாம்பலை ஆஷ்ட்ரேயில் கொட்டி விட்டு வாட்சைப் பார்த்தார்.

''என்ன பண்றா இன்னும்? வரச் சொல்லு ஈஸ்வரி. பசிக்குது'' புஷ்பலிங்கம் குரலில் லேசாய் சலிப்பு தென்பட்டது.

''தன்ராஜை பத்து மணிக்கு சோழாவுல மீட் பண்றதா சொல்லியிருக்கேன். கரெக்ட் டயத்துக்கு போய் சேரணும்.''

''ஹாய் டாடி... குட்மார்னிங் மம்மி குட்மார்னிங்'' முயல் போல் மாடிப்படியில் குதித்தோடி வந்து கொண்டிருந்தாள் சௌம்யா.

''வாடா... என்ன இவ்ளோ லேட்? டாடி காத்திருப்பேன்னு தெரியாதா?''

''அவரசம்னா... நீங்க சாப்பிட்டு போயிருக்கலாமே டாடி! எனக்காக ஏன் வெய்ட் பண்றீங்க?''

''என் அம்முவ விட்டுட்டு நான் என்னைக்காவது தனியா சாப்பிட்டிருக்கேனா?''

சௌம்யா அப்பாவின் அருகே அமர்ந்து செல்லமாய் கன்னத்தில் முத்தமிட்டவள் உடனடியாக முகம் சுளித்தாள்.

''உவ்வே... ஒரே பேட் ஸ்மெல்! ஸ்மோக் பண்ணீங்களா?''

''ஹி... ஹி... ஒண்ணே ஒண்ணுதான்.''

''ஒரு சிகரெட்டா? ஒரு பாக்கெட்டான்னு நீயே கேளு சௌமி! டாக்டர் என்னதான் அட்வைஸ் பண்ணாலும் கேக்கறதில்லே! நீ கேட்டாவது இந்த பழக்கத்தை விடறாரா பார்க்கலாம்'' ஈஸ்வரி குறைபட்டுக் கொண்டாள்.

''ஏம்ப்பா? இவ்ளோ நாத்தம் அடிக்கிற சிகரெட்டை பிடிக்கறதால உங்களுக்கென்ன லாபம்?''

''ரொம்ப பெரிய மனுஷி! வா... வந்து உட்காரு... சாப்பிடலாம்! எடுத்துவை ஈஸ்வரி.''

''இந்த விஷயத்திலே மட்டும்தான் உங்களை எனக்கு பிடிக்கலே இல்லை டாடி! உடம்புக்கு கெடுதல்னு தெரிஞ்சும் செய்யறது தப்புதானே? மம்மி கூட கொஞ்சம் கெட்டுப் போயிட்டாங்க.''

''ஏம்மா? அவளும் சிகரெட் பிடிக்கிறாளா?''

''ஐயே... அதில்லேப்பா! மத்தவங்க எச்சிலை சாப்பிடறது பேட் ஹாபிட்தானே?''

''ஆமாம்.''

''மம்மி... நீங்க சாப்பிட்டு மிச்சம் வைக்கறதை எல்லாம் சாப்பிடறாங்க... சீச்சீ!'' என்று சொல்லி விட்டு மாட்டிக்கிட்டியா? என்பது போல் அம்மாவைப் பார்த்து கண்ணடித்தாள்.

''கடவுளே... ஏய் சௌமி... எதையெதை சொல்றதுன்னு விவஸ்தையே இல்லையா?'' புவனேஸ்வரி அதட்டினாள்.



பளீரிட்ட அந்த பொலிவான முகத்தில் நெற்றியிலும் வகிட்டிலும் இட்டிருந்த குங்குமம் போல் முகம் வெட்கத்தில் சிவந்து போனது.

புஷ்பலிங்கம் குறும்பாய் மனைவியை பார்த்து கண்ணை சிமிட்டியவர், ''இந்த பிரச்சினையை நான் பார்த்துக்கறேன் அம்மு... பிறகு வந்து விசாரிச்சுக்கறேன். நீ சாப்பிடும்மா! ஆமா... ஏன் கண்ணெல்லாம் சிவந்திருக்கு?''

''நைட்டு கண்ணு முழிச்சி படிச்சேன். இன்னைக்கு செமஸ்டர் தொடங்குது.''

''அதுக்காக? லேட் நைட் விழிச்சி படிச்சா உடம்பு என்னத்துக்காகும்? அப்படியெல்லாம் கஷ்டப்பட்டு படிக்கணும்னு என்னடா அவசியம்'' மகள் தலையை பாசமாய் வருடினார்.

''எனக்கும் மேரிங்கற பிரண்டுக்கும் போட்டி. யார் நிறைய மார்க் வாங்கறதுன்னு.''

ஈஸ்வரி நெய் மணக்கும் பொங்கலை வெள்ளித் தட்டில் வைத்தாள். கணவனுக்கு இட்லி வடையை வைத்தாள். அவருக்கு பொங்கல் பிடிக்காது.

''மம்மி பிளீஸ்... அப்படியே ஊட்டி விட்டுடு. நான் படிக்கணும்'' சௌம்யா பாடப் புத்தகத்தை பிரித்து தீவிரமாய் படிக்க... புவனேஸ்வரி ஸ்பூனில் எடுத்து அவளுக்கு ஊட்ட ஆரம்பித்தாள்.

''என்ன ஈஸ்வரி இது? அவதான் விவரம் தெரியாம ஊட்டச் சொன்னா... நீயும் ஊட்டி விடறதா?''

''அதனாலென்னங்க? அவ நமக்கு இன்னும் குழந்தை தானே?''

''பதினெட்டு வயசு ஆயாச்சு. அவளுக்கு இந்த வயசுக்கு தேவையான பக்குவம் இன்னும் வரலையேன்னு நான் கவலைப்படறேன். நீ என்னடான்னா.''

''அதது கல்யாணமானா தன்னால தெரிஞ்சிட்டுப் போகுது. இந்த காலத்துல பத்து பன்னென்டு வயசிலேயே மனசிலே நஞ்சு கலந்து போகுது. பாதை மாறிப் போகுது., இதையெல்லாம் கண்ணெதிரே பார்க்கறப்போ, சௌம்யா போல ஒரு பொண்ணைப் பெத்ததுக்கு நாம புண்ணியம் பண்ணியிருக்கணும்.''

''தங்கத்தை வெட்டி எடுத்து உடனே யூஸ் பண்ணிக்கறோமா? புடம் போட்டாத்தானே மதிப்பு? இவளை இப்படியே புகுந்த வீட்டுக்கு அனுப்ப முடியுமா?''

அப்பாவின் பேச்சுக்கள் படிப்பிலிருந்த கவனத்தையும் மீறி காதில் விழ, புத்தகத்தில் 'அவன்' உருவம் தெரிந்தது. உடல் சிலிர்க்க... தன்னை சுதாரித்துக் கொண்டாள்.

அவனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ''இப்போது மிகப் பெரியவனாகி விட்டிருப்பானோ?'

''என்ன சௌமி ஒரு மாதிரியாயிட்டே?''

''ஒ... ஒண்ணுமில்லே டாடி! இப்ப எதுக்கு இந்த கல்யாணப் பேச்செல்லாம் பேசறீங்க?''

''வேற எப்பம்மா பேசுவாங்க? டாடி உனக்காக எவ்வளவு பெரிய இடத்துல மாப்பிள்ளை பார்த்திருக்கேன் தெரியுமா?''

''நிஜமாவா? என்கிட்டேகூட சொல்லலியே... யாருங்க அது? அந்த குன்...''

''ஷ்ஷ்... உளராதே'' என்று அதட்டினார் புஷ்பலிங்கம்.

சௌம்யா சாப்பிட்டது போதும் என்று கையை காட்டி... இதயம் தடதடக்க அப்பாவை பார்த்தாள்.

''தன்ராஜ்னு ஒரு பிரண்டை பார்க்கப் போறேன்னு சொல்லிட்டிருந்தேனே... அவரோட பையன்தான். பேரு சுதாகரன். ஒரே பையன். பார்க்க ராஜாவாட்டம் இருப்பான். நம்மை விடவும் அந்தஸ்துல பெரிய இடம். அந்தப் பையனுக்கு பொண்ணு குடுக்க



மந்திரி வீட்லேர்ந்தெல்லாம் நீ... நான்னு போட்டிப் போடறாங்க! ஆனா சுதாகரனுக்கும் நம்ம சௌம்யாவை தான் பிடிச்சிருக்காம்.''

புவனேஸ்வரி பூரித்துப் போனாள்.

''நம்ம சௌமி எப்பவும் யோகக் காரியாச்சே? ஆமா சௌம்யாவை அவரு எங்கே பார்த்தாராம்?''

''ஏதோ ஒரு வீட்டு விசேஷத்துல எடுத்த வீடியோ கேசட்ல... அவரோட பிரண்ட் வீட்ல பார்த்திருக்காரு...''

''அப்படியா?'' புவனேஸ்வரி அனைத்து பல்லையும் காட்டினாள்.

மனிதனுக்கு ஆபத்து வருவதே வாக்கை காற்றில் பறக்க விடும்போதுதான். கணவனுக்கு இணையாய் புவனேஸ்வரியும் கொடுத்த வாக்கை மறந்து உயரே உயரே பறக்க நினைக்கிறாள்.

சௌம்யாவிற்கு மனசெல்லாம் வலித்தது. ஒருவித பயம் அவளை பிடித்துக் கொண்டது. 'அப்படியானால் அவன்?'

இரட்டை மாடி பஸ் சென்னை நகரில் வலம் வந்தது.

வியப்பாய்... ஆசையாய் பார்த்தாள் சௌம்யா!

''அந்த பஸ்ல போகணும்னு ஆசையாயிருக்கு மீரா... போகலாமா?''

''போடி நீ வேற... அவனவன் காணாததை கண்டுட்ட மாதிரி ல்லோரும் இதிலேயே ஏர்றாங்க. ஏறி இறங்கறதுக்குள்ள உடம்பு னியா துணி தனியான்னு கழண்டு போகுது! உனக்கேன் இந்த ஆசையெல்லாம்? கேட்டா உங்கப்பா இரட்டை மாடி காரே பாங்கித் தருவாரே?''

''இருந்தாலும்... பஸ்ல போக ஆசையா இருக்கு.''

''உங்க வீட்ல மொத்தம் எத்தனை கார் இருக்கு சௌம்யா?''

கலா சாதாரணமாய் கேட்டாலும்... அவள் வயிறு பகபவென்று பொறாமையில் எரிந்தது.

'என்ன வரம் வாங்கி வந்தாள் இவள்? கொள்ளை அழகு. கொள்ளை கொள்ளையாய் பணம். பணக்கார வீட்டுப் பிள்ளைகள் என்றாலே படிப்புக்கும் அவர்களுக்கும் பர்லாங்தூரம் என்ற சாபக்கேட்டை உடைத்தெறிந்து அதிலும் பர்ஸ்ட்! ஒரு பாய் பிரண்ட், ஒரு கெட்ட பழக்கம், ம்ஹூம்... எதுவுமே இல்லை. தலைக்கனமில்லை. குழந்தையைப் போல் வெள்ளை மனது. ஓசியில் காரில் போவதற்கென்றே இவளுடன் பிரண்ட்ஷிப் வைத்துக் கொள்ள போட்டி போடும் பெண்களின் கூட்டம்.'

நிஜமாகவே... ஆண்டவனின் அற்புதக் குழந்தைதான் இந்த சௌம்யா! சௌந்தர்யமான அழகு தேவதை. நடன தாரகை ஸ்ரீநிதியை நினைவுபடுத்தும் சாந்தமான தேவதை! எல்லோரிடமும் எளிமையாய் பழகும் இனிய குணம்! ஓஸோன் வரைக்கும் நச்சுக்காற்று பரவி இருந்தாலும் இவள் வெள்ளை சிரிப்பினை நெருங்க அது பயப்படவே செய்தது.

ஆனால் மிருதுளா சொன்னதை போல் இந்த காலத்தில் இந்தளவு வெகுளித்தனம் ஆபத்தில்லையா?

கலாவின் பொறாமை குணம் அறியாமல் சொல்லிக் கொண்டிருந்தாள் சௌம்யா.

''ம்... டாடிக்கு சியரா, எனக்கு பியட், மம்மிக்கு மாருதி, வீட்டு வேலைகளுக்கு காய்கறி வாங்க போக வர அம்பாஸடர், தவிர காண்டஸாவும் இருக்கு?''

''ஏண்டி... உங்கப்பா பப்ளிக் இன்வெஸ்ட் பண்ற பணத்தையெல்லாம் காரா வாங்கிக் குவிக்கிறாரா? இத்தனை கார் மூணு பேர் உள்ள குடும்பத்துக்கு எதுக்கு?''

''என்னைக் கேட்டா? என் டாடிய போய் கேள்.''

சௌம்யா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட்ஸ், சௌம்யா பில்டர்ஸ், சௌம்யா ஹார்ட்வேர்ஸ், சௌம்யா லாரி சர்வீஸ் என்று கண்ணில் அறைபடும் சௌம்யாவின் பெயர்



புஷ்பலிங்கத்துக்கு சொந்தமானவை. கம்பெனிகளின் விளம்பரத்திற்காக மட்டுமே மாதாமாதம் பல லகரங்களை செலவிடுகிறார். விளம்பரமில்லா வியாபாரமும், கையில்லாத மனிதனும் ஒன்றுதான்.

அதிக வட்டி, பரிசு குவியல் என்று அவர் மக்களை மயக்கியதில் ஈக்கள் போல் வந்து குவிந்தனர். சுருக்குப்பையில் முடித்து வைத்தவர்கள் கூட பணத்தை அவிழ்த்து சௌம்யா கம்பெனியில் முதலீடு செய்தனர். கம்பெனி ஊர் ஊராக கிளை விட்டு பரந்து விரிந்தது.

இந்த கலாவின் அப்பா கூட தன் மகள்களின் திருமணத்திற்கென்று இந்த கம்பெனியில் தான் பணம் போட்டிருந்தார்.

''சரி நேரமாகுது... நான் வரட்டுமா?'' காரை உசுப்பி கிளப்பினாள் சௌம்யா!

ஏதோ ஒரு பாடலை ஹம் செய்தபடி மெதுவாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

மழை இன்னும் தூறிக் கொண்டுதான் இருந்தது. காற்றில் ஈரம் கலந்து உடம்பை சிலிர்க்க வைத்தது.

சௌமிக்கு இந்த மாதிரியான கிளைமேட் ரொம்பப் பிடிக்கும்.

ஜன்னலோரம் சேரில் அமர்ந்து கோடு கோடாய் இறங்கும் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டு நேந்திரம் பழ சிப்சை கொறித்துக் கொண்டு மடியில் பப்பியை போட்டுக் கொண்டு வேடிக்கை பார்க்கப் பிடிக்கும். இவள் கதகதப்பில் சுகமாய் அமர்ந்து அதுவும் வேடிக்கை பார்க்கும்.

'இந்த நேரத்தை மிஸ் பண்ணக் கூடாது' நினைத்தவள் பார்கிட் ரோடு வழியாக கார் நுழைய வேகத்தை கூட்டினாள்.

''எப்படியும் ஒரு பத்து நாளாவது மெட்ராஸ்ல இருப்பேல்ல வினோத்?''

''மேலேயும் ஆகலாம் ஒரு முக்கியமான பங்ஷன்ல கலந்துக்கணும். ரெண்டாவது ஒரு டீலிங்கை முடிச்சிட்டுப்

போகனும். பார்ட்டி திருச்சிக்குப் போயிருக்கு. வந்தது வந்தாச்சு... முடிச்சிட்டே போய்டலாம் பாரு'' சொன்ன வினோத் உயரமாய், சிகப்பாய் சுருள் முடியோடு அடர்த்தியான மீசைக்குள் குறும்பாய் மின்னும் சிரிப்போடு... உதட்டில் சிகரெட்டோடு இருந்தான்.

''மெட்ராஸ் வந்து ரொம்ப நாளாச்சல்ல?''

''நாளில்லே கேசவா... பல வருஷமாயாச்சு.''

''எப்போதான் கல்யாண சாப்பாடு போடப் போறதா பிளான்? வயசாகலையாப்பா?''

வினோத் மந்தகாசமாய் சிரித்தான். அவன் நினைவலைகள் எங்கோ போய் எதையோ தொட்டு மீண்டன.

''போட்றலாம்... சீக்கிரமே போட்றலாம்... இந்த விசிட்ல என் கல்யாண மேட்டரும் அடங்கியிருக்கு.''

''டேய் வினோத்... மறைக்காதே யார்டா அது?''

''சஸ்பென்ஸ்!'' என்றபடி காரின் கதவை திறந்து உட்காரப் போன வினோத் மீது... தேங்கியிருந்த மழைநீர் அலையாய் எழுந்து வீசி விட்டு போனது செளமியாவின் கார்! புகைத்துக் கொண்டிருந்த சிகரெட் கூட செத்துப் போனது.



3

இதற்குள் சைக்கிளில் போய்க் கொண்டிருந்த ஒரு பெரிசு, ஸ்கூட்டரில் சென்ற நடுத்தர வயது ஆண், நாலைந்து பெண்கள்... என்று சின்னதாய் கூட்டம் நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தது.

வினோத்திற்கு உடம்பெல்லாம் கூசிப் போனது. மடிப்பு கலையாத அவனின் உயர்ரக ஆடை முழுவதும் சகதி நீர்! சாக்லேட் நிற மாருதி அழுக்கு சிறுவனாய் அங்கங்கே திட்டுதிட்டாய் சேற்றைப் பூசிக் கொண்டு பரிதாபமாக நின்றிருந்தது.



ஆத்திரம் தாங்காத வினோத் ஓங்கி காலை தூக்கி தரையை உதைக்க... ஆவென்று அலறினான் கேசவன்.

''ஸ... ஸாரி... கேசவ்... தெரியாம...''

''இட்ஸ் ஓக்கேப்பா! என்ன சார்? என்னாச்சுன்னு இப்படி நின்று வேடிக்கைப் பார்க்கறீங்க? அடுத்த வண்டி உங்க மேல சேத்தை அடிச்சிட்டு போறதுக்குள்ள போங்க சார்... போங்கம்மா.''

கூட்டம் கலைந்தது.

செளம்யா ஒரு சின்ன குலுக்கலோடு காரை நிறுத்தி எட்டிப் பார்த்தாள்.

''அச்சச்சோ...'' பதறியபடி இறங்கி இவர்களை நோக்கி வந்தாள்.

''ஏன் மேடம்? கண்ணு மண்ணு தெரியல? எல்போர்டா? காரை ஓட்டக் கத்துக்கறதுக்கு இதுவா இடம்? மெதுவாப் போகத் தெரியாதா?''

கையெடுத்து கும்பிட்டாள் செளம்யா.

''ஸாரி... ரியலி ஸாரி சார்! நான் கவனிக்கலே.''

''ஸாரி சொல்லிட்டா... நடந்ததெல்லாம் இல்லேன்னு ஆயிடுமா? போச்சு... என் டிரஸ்ஸெல்லாம் போச்சு'' வினோத் இன்னும் எகிறினான்.

''ஸாரிங்க... வேற எப்படி மன்னிப்பு கேக்கச் சொன்னாலும் கேக்கறேன். தெரியாம நடந்து போச்சுங்க'' என்றவள் சட்டென்று தன் துப்பட்டாவை எடுத்து அவன் உடை, முகம், கார் என எல்லாவற்றையும் துடைத்தாள்.

''மன்னிச்சிடுங்க... ப்ளீஸ்'' என்றபடி லேசாய் கண்களில் ஈரத்தோடு விடைபெற்றுப் போனவளின் மனதிற்குள் அந்த வண்டு குடைந்தது.

யாரிவன்? எங்கோ பார்த்திருக்கிறேனே இவனை?

வினோத் அயர்ந்து போனான்.

என்ன பெண் இவள்?

காரை விட்டு இறங்கி வந்த வேகத்தை பார்த்து தன் தவறு தெரியாமலிருக்க சத்தம் போட்டு பேசுவாள் என்று நினைத்தான்.

ஆனால் சகதி என்றும் பாராது, ஒரு ஆணைத் தொடுகிறோமே என்றும் உணராது... அவள் பாட்டுக்கு துடைத்து விட்டுப் போகிறாள்!

யாரிவள்?

''சிங்காரச் சென்னையில் எந்த பகுதியை சேர்ந்த சிங்காரி இவள்?''

சற்று நேரம் முன்பு வரை அவள் மீதிருந்த தாங்க முடியாத சினம்... இப்போது சுத்தமாய் காணாமல் போயிருந்தது.

'ரொம்பவே பயந்து விட்டிருக்கிறாள். முகம் கலவரத்தில் வெளுத்துப் போய்... கண்களில் லேசாய் கண்ணீர் கூட எட்டிப் பார்த்ததே... சே... அதிகமாய் திட்டி விட்டேனா?'

'அவளை எங்கோ பார்த்திருக்கிறேன். அந்த கண்களும், உதடுகளும் எனக்கு மிக மிக பரிச்சயமானவை. யார் யார்?'

''என்ன வினோ ஷாக்கடிச்சு நின்னுட்டே?''

''யார்டா அவ?''

''தொழிலதிபர் புஷ்பலிங்கம் கேள்விப்பட்டிருக்கியா?'' ஆச்சர்யமாய் நிமிந்தான் வினோத்.

''சொல்லு... அவருக்கு இவள் என்ன உறவு?''

''அவரோட ஒரே டாட்டர்தான் இவ... பேரு சௌம்யா.''

''சௌம்யாவா?'' அந்த் பெயரை உச்சரித்தபோது வாய் வழியே பனிக்கட்டி சறுக்கி... தொண்டையை சில்லிட்டது.



அந்த பங்களா முழுக்க இண்டு இடுக்கு விடாமல் ஜிகினா தோரணங்களாலும் மலர்களாலும் சீரியல் பல்புகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வீட்டினுள்ளேயே நடுஹாலில் தாமரைப் பூவிலிருந்து தண்ணீர் பீய்ச்சியடித்துக் கொண்டிருந்தது.

விருந்தினர்கள் ஒவ்வொருவராய் வரத் துவங்கினர்.

சென்ட்டராய் அலங்கரிக்கப்பட்ட உயர்ரக வெல்வெட் சேரில் வெட்கம் மேலிட மணப்பெண் போல் அலங்கரிக்கப்பட்ட புவனேஸ்வரியும் மாப்பிள்ளை மிடுக்கோடு புஷ்பலிங்கமும் வருகிறவர்களுக்கு வணக்கம் சொல்லி வரவேற்று கொண்டிருந் தனர்.

அவர்களுக்கு முன்னால் வீற்றிருந்த பர்மா தேக்கில் இழைத்து நவீன வேலைப்பாட்டுடன் கூடிய டேபிளின் மேல் தாஜ்மகால் வடிவில் கேக்! சௌம்யா அந்த கேக்கின் மேல் அலுங்காமல், நலுங்காமல் இருபது மெழுகுவர்த்திகளை வைத்துக் கொண்டிருந் தாள்.

இளநீல நிறத்தில் பட்டுப்பாவாடை, அதே நிற ரவிக்கையும் வெள்ளை நிற தாவணியும், இரட்டை சடை பின்னலுக்கு பாலமிட்டது போல் முல்லைச்சரமும் சூடி, நவீன கிராமத்து மின்னல் போல் காண்பவர்களை சுண்டியிழுத்துக் கொண்டிருந்தாள். உடல் முழுவதும் பருவத்தின் செழுமை கோலோச்சியிருந்தாலும் அந்த முகத்தில் மட்டும் பால்மணம் இன்னும் இருந்தது.

புஷ்பலிங்கம், புவனேஸ்வரி 20 வது ஆண்டு மணவிழா! இதற்கு முன் கொண்டாடியதை விட இந்த ஆண்டு மிக சிறப்பாய் கொண்டாடுவதில் ஒரு காரணமாயிருக்கிறது. துவக்கி இரண்டே வருடத்தில் மக்கள் மத்தியில் நிலையாய் நம்பிக்கையாய் மனதில் இடம் பிடித்து விட்ட சௌம்யா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்டின் வெற்றிகரமான மூன்றாம் ஆண்டின் துவக்கம், மணவிழாவோடு வெற்றி விழாவையும் சேர்த்து நடத்துவதால் வியாபார துறை நண்பர்கள் அதிகமாய் கலந்து கொண்டனர்.

அந்த ஹால் நிரம்பத் தொடங்கியது. புஷ்பலிங்கத்தின் கண்கள் யாரையோ எதிர்பார்த்து அடிக்கடி வாசலை பார்த்தன.

''டாடி... எல்லோரும் வந்தாச்சு. ஆரம்பிக்கலாமான்னு மானேஜர் கேக்கறார்'' சௌம்யா கேட்டாள்.

''இன்னும் பத்து நிமிஷம் போகட்டும். முக்கியமான கெஸ்ட்டெல்லாம் இன்னும் வரலே.''

''அது யாருப்பா முக்கியமான கெஸ்ட்?'' என்று கேட்க வாயை திறந்தபோது...

''ஹலோ...'' என்றபடி கம்பீரமான குரல் பின்னாலிருந்து கேட்டது.

''வாங்க... வாங்க...'' என்று வரவேற்றார், உற்சாகமாய் புஷ்பலிங்கம்.

''உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருந்தோம்.''

''ஸாரி... கார் ட்ராபிக்ல மாட்டிக்கிட்டது... அதனால்தான் லேட்...''

''அதனாலென்ன? இதோ இவதான் மை ஒன்லி ஒன் டாட்டர் சௌம்யா.''

சௌம்யா அப்போதுதான் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

ஆறடிக்கும் குறையாத கம்பீரமான உயரம் புஷ்டியான மீசை! அணிந்திருந்த கண்ணாடி பிரேமில், கோட் பாக்கெட்டில், காலரி, பொத்தான்களில் என எங்கும் தங்கம் மின்னின. சென்ட்டிலேயே குளித்திருப்பாரோ என்றொரு சந்தேகம் எழும் நறுமணம்.

''ஹலோ மைடியர்!'' என்றபடி அவள் தலையை வாஞ்சையாய் தடவினார்.

அந்த மனிதரை அச்சில் வார்த்தது போல் அவருக்குப் பின்னால் நின்றிருந்த இளைஞனை அப்போதுதான் பார்த்தாள்.



மாநிறமாய், மிடுக்காய், துருதுருவென சௌம்யாவை விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த பார்வையின் வீச்சை தாங்க முடியாமல் தலையை கவிழ்ந்து கொண்டாள்.

''சௌமி... இவர்தான் என் பிரண்ட் தன்ராஜ். இவர் மிஸ்டர் சுதாகரன். இவரோட ஒரே மகன். நான் ஏற்கனவே சொன்னேனே. அவர்தான்'' அப்பா சிரிப்பும் கும்மாளமுமாய் அறிமுகப்படுத்த புரிந்து போனது. அம்மாவும் அணிந்திருந்த வைரங்களையும் மீறி, அவள் சிரிப்பு ஒளி வீசியது.

சௌம்யாவின் நா உலர்ந்து உள்ளங்கை வியர்த்துப் போனது.

''வ... வணக்கம்'' என்று கைகூப்பியவளின் அருகே சென்ற சுதாகரன்... ''பைனல் இயர் படிக்கிறியா சௌமி?'' என்று கேட்டான் ரொம்ப நாள் பழகியவன் போல் உரிமையோடு.

''க்கும்...'' என்று கிண்டலாய் கனைத்தார் தன்ராஜ்.

''அப்பா எதிர்லேயே டாவடிக்கிறியா மகனே? அவசரப் படாதே சுதா! பங்ஷன் முதல்ல நடக்கட்டும். அப்புறம் உன் பியான்ஸியை தனியே அழைச்சிட்டு போய் பேசிக்கோ... என்ன மிஸ்டர் புஷ்பலிங்கம்? இதிலே உங்களுக்கொன்னும் அப்ஜக்ஷன் இல்லையே.''

''நோ... நோ... அவள் உங்க வீட்டு மருமகள். இப்பவே கூட அழைச்சிட்டுப் போய் பேசலாம்...''

''தாங்க்யூ அங்கிள்... முதல்ல பங்ஷனை ஆரம்பியுங்க அப்புறம் பேசிக்கறோம்... என்ன சௌமி நான் சொல்றது?'' சுதாகரனின் பார்வை போன இடமே சரியில்லை.

நிலைகொள்ளாமல் தவித்தாள் சௌம்யா.

''வேண்டாமே... இவன் எனக்கு வேண்டாமே. டாடி... என் விருப்பம் முக்கியமாய் படவில்லையா?''

நான் சின்னப் பெண்தான். ஆனால் கன்னிப்பெண் அல்லவா? என் வயதுக்கே உரிய விருப்பு வெறுப்புகள் எனக்கு இருக்கக் கூடாதா? என் மனதிற்கென்று தனிப்பட்ட கருத்து இருக்கக் கூடாதா? கடவுளே... இதை நான் எப்படித் தெரியப்படுத்துவேன்? இவன்தான் உனக்கு என்று முத்திரை குத்திய வினோத்தை ஏன் டாடி மறந்து போனீர்கள்? என்னால் மறக்க முடியவில்லையே... பிறகெப்படி இந்த சுதாகரனோடு என்னால் வாழ முடியும்? மனம் ஓலமிட்டது. கண்ணீர் வருவேன் என்று முரண்டு பிடித்தது. அடக்கிக் கொண்டாள்.

விழா துவங்கியது. பெரிய பலூன் ஊசியால் குத்தப்பட்டு வெடிக்க... ஜிகினா பேப்பர்கள் ஹாலெங்கும் பறந்தன. மெழுகுவர்த்தியை ஊதி அணைத்து தாஜ்மகாலை வெட்டினார். மனைவிக்கு ஊட்டினார். புவனேஸ்வரி வெட்கப்பட்டு சாப்பிட்டு நாணியபடி கணவனுக்கு ஊட்டினாள். பிளாஷ்கள் மின்னின. வீடியோ கேமராக்கள் பதிவு செய்து கொண்டன.

பஃபே முறையில் டின்னர். காக்டெயிலும் இருந்தன.

உச்சபட்ச சந்தோஷத்தில் திளைத்திருந்த புஷ்பலிங்கம் அந்த மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டார்.

''டியர் ஃப்ரண்ட்ஸ்! ஒரு முக்கியமான சந்தோஷமான செய்தியினை... இந்த சந்தோஷமான நேரத்தில் தெரியப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதோ... இவரை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். பிஸினஸ் உலகின் சாம்ராட் மிஸ்டர் தன்ராஜ்! அப்படிப்பட்ட சாம்ராட்டிற்கு நான் சம்பந்தியாகப் போகிறேன்.''

''ஹோ...'' வென ஆரவாரத்தோடு பலத்த கரவொலி எழுந்தது.

திடுமென கண்ணீர் எட்டிப் பார்த்தது சௌம்யாவிற்கு. நாசூக்காய் துடைத்துக் கொண்டாள். சுதாகரன் இவள் பக்கமாய் திரும்ப இவள் முகத்தை வேறுபக்கம் திருப்ப... திடுக்கிட்டாள்.



''அவனா?''

''அவனோதான்.''

''இங்கு ஏன் வருகிறான்?''

வியப்பும், ஆவலுமாய் இரண்டடி முன்னேறினாள்.

வினோத் கையில் பெரிய கிஃப்ட் பார்சலுடன் கம்பீரமாய் வந்துக் கொண்டிருந்தான்.

சௌம்யாவின் பார்வை அவன் மீதே நிலைத்திருந்தது.

புஷ்பலிங்கத்தை நெருங்கி கையைப் பற்றிக் குலுக்கினான் வினோத். அவரே கூட சற்று தடுமாறிப் போனார்.

''யாரிவன்?''

''ஐ'ம் வினோத்.... ஃப்ரம் குன்னூர். வெங்கடேசனின் மகன்''

ஒரு கணம் அதிர்ந்து பின் சுதாரித்துக் கொண்டார் புஷ்பலிங்கம்.

''ஓ... வெங்கட்டின் மகனா? சாரிப்பா... பார்த்து ஏழெட்டு வருஷமாயிடுச்சா... சட்டுனு நினைவுக்கு வரலே... ரியலி ஸாரி வினோத்.''

குபீரென மலர்ந்துப் போனாள் சௌம்யா.

'வினோத்... வினோத்தா இது? என் வினோத்தா... இப்படி நெடு நெடுவென கம்பீரமாய் வளர்ந்து... ஒகாட் எப்படி நான் அடையாளம் கண்டுக்காமல் போனேன்? இவர் மேலேயே சகதியை வீசி விட்டேனே... வினோத் என்னைத் தெரிகிறதா? சௌம்யா. உன் சௌம்யா. ஓடிப் பிடித்து விளையாடிய நாட்கள் நினைவிருக்கிறதா வினோத்? நான் மறக்கவேயில்லை. தெரியுமா?'

சௌம்யாவிற்கு ஓடோடி வந்து அவன் கையைப் பற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

வினோத் மென்மையாய் சிரித்தான்.

"இட்ஸ் ஓக்கே அங்கிள். ஆண்டவன் மனிதனுக்கு கொடுத்த மிகப்பெரிய பரிசுகள் இரண்டுதான். ஒன்று சந்தோஷம்; இன்னொன்று மறதி. அதுக்காக முக்கியமான எல்லாத்தையும் மறந்துடக் கூடாதில்லையா? அப்பா உயிரோடிருந்திருந்தால்... இதை நான் நினைவுப்படுத்த வேண்டிய சூழ்நிலையே இருக்காது அங்கிள்."

"எதைச் சொல்றே?"

"நீங்களும் அப்பாவும் சம்பந்தியாகப் போறதைப் பத்தி வாய் ஓயாமல் பேசிக்குவீங்களே... அதச் சொல்றேன். நவ்... ஹி இஸ் நோ மோர்! அம்மாவும் இல்லை. என் கல்யாணத்தைப் பத்தி நானே பேச வேண்டிய சூழ்நிலை. ஐ வான்ட் யுவர் டாட்டர் சௌம்யா! அவளை கல்யாணம் செய்துக்க விரும்பறேன். இந்த நல்ல நேரத்தில் இதை சொல்றதுக்கு... நான் சந்தோஷப்படறேன்" வினோத் நிதானமாய் சொல்லி முடித்தான்.

புஷ்பலிங்கம் சற்றே திகைத்தவர்... பின் பலமாய் சிரிக்கத் துவங்கினார்.

அந்த சிரிப்பின் தொனியில் ஏளனம், டன் டன்னாய் கலந்திருக்க. வினோத் மட்டுமல்ல சௌம்யா கூட அதிர்ந்து போனாள்.



4

**வி**னோத் மிக மிக அதிர்ந்து போனான். அவன் எதிர்பார்த்து வந்தது ஒன்று... நடப்பது ஒன்று.

"என் பொண்ணை... உனக்கு கல்யாணம் செய்துக் கொடுக்கணுமா? டூ லேட் வினோத். இந்த சந்தோஷமான நேரத்தில் நானும் இப்பதான் ஜஸ்ட் ஒரு பத்து நிமிஷம் முன்னாடிதான் என் பொண்ணோட வருங்கால கணவரை அறிமுகப்படுத்தினேன். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப்



போல்... முகத்தில் சிரிப்பு மாறாமல் சொல்லி விட்டு அலட்சியமாய் தோளைக் குலுக்கிக் கொண்டார் புஷ்பலிங்கம்.

சங்கடமாய் சுற்றுமுற்றும் பார்த்த வினோத்திற்கு சூழ்நிலையின் தாக்கம் புரிய ரத்தம் சுண்டிப்போய் தலை கவிழ்ந்தான்.

புஷ்பலிங்கமும், வெங்கடேசனும், அதாவது வினோத்தின் அப்பாவும் பால்ய காலத்திலிருந்து சிநேகிதர்கள். புஷ்பலிங்கத்தின் சொந்த ஊர் கோயம்புத்தூர். அதே ஊரில், ஒரே தெருவைச் சேர்ந்தவர்தான் வெங்கடேசன்.

சமவயது நண்பர்களாய், அவர்கள் ஆடித் திரிந்த காலமெல்லாம்... நல்ல நட்பின் நிரந்தர தழும்பை ஏற்படுத்திய... நினைத்து நினைத்துப் பெருமைப்படக் கூடிய காலங்கள்... ஒருவரின் ரகசியம் மற்றவரின் இதயப் பெட்டகத்தில், தப்போ, சரியோ, எதுவுமே அவர்களைத் தாண்டிப் போகாததற்கான நட்பு.

படிப்பு, பெண்கள், சினிமா, சிகரெட் என்று சுற்றிக் கொண்டிருந்தவர்களின் இடையில் ஒரு பிரிவு ஏற்பட்டதே... வாழ்க்கையின் அடுத்தக்கட்டமான வேலை தேடும் படலத்தில்தான் ஓரளவு குறை சொல்ல முடியாதளவு வசதியுடையவர்தான் வெங்கடேசனின் தந்தை. குன்னூரில் ஒரு தேயிலை எஸ்டேட்டும், பங்களாவும் இருந்தது. மற்றபடி கோயம்புத்தூரில் நாலைந்து மச்சு வீடுகள். அதிலிருந்து வரும் வாடகைப் பணம் பிரச்சினையில்லாத நிரந்தர வருவாய். திடீரெனத் தாக்கிய இரண்டாவது அட்டாக்கில் பயந்துப் போனவர், உடனடியாக எஸ்டேட் பொறுப்பை தன் ஒரே மகனிடம் ஒப்படைத்து குன்னூருக்கு அனுப்பி வைத்து விட்டார்.

புஷ்பலிங்கம் அந்தளவு வசதிவாய்ப்புகள் உடையவரல்ல. தந்தை இல்லை. தாய் மட்டுமே இருக்கும் ஒரு ஓட்டு வீடும்.. சிறிதளவு விவசாய நிலமுமே... சொத்து. புஷ்பலிங்கத்தின் தம்பி சிவராமன்... சிறு வயதிலேயே அடிதடி, திருட்டு, என ஈடுபட்டு இரண்டு வருடம் சிறுவர் ஜெயிலில் இருந்து விட்டு வந்தவன்.

வெங்கடேசன் குன்னூர் போன பின்பு நண்பனை பிரிந்திருக்க முடியாமல் வாரத்திற்கொரு முறையாவது புஷ்பலிங்கமும், குன்னூர் சென்று வருவதுண்டு. அப்போது அவருக்கு ஏற்பட்ட பல அனுபவங்கள் புதிய நட்பு அவருள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டிருந்தன. இயல்பாகவே பூனையை யானையாக்கிக் காட்டும் திறமைப் படைத்த வெங்கடேசன் எஸ்டேட் நிர்வாகத்தை திறம்பட நடத்தினார். இரண்டே வருடத்தில் பக்கத்தில் விலைக்கு வந்த மற்றொரு எஸ்டேட்டையும் வாங்கினார்.

அதுவரை சும்மாவே செக்குமாடுப் போலச் சுற்றி வந்த புஷ்பலிங்கத்திற்கு நண்பனின் வளர்ச்சி ஒரு வித தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விட்டிருந்தது. நட்புக்குள் வரக் கூடாத பொறாமை வந்தது. அவனை விட ஒருபடி உயர்ந்து காட்ட வேண்டும் என்கிற வெறி வளர... வம்பு பண்ணி அம்மாவின் பெயரிலிருந்த வீட்டை விற்று பணத்துடன் சென்னைக்கு வந்தார். எந்த தொழிலும் அனுபவமில்லை. நுனி கூட பிடிபடாத நிலையில் யாரோ, ஒரு புது நண்பரின் அறிமுகத்தால்... கொள்ளை லாபம் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசை மட்டும் கண்ணை மறைக்க.. தீர விசாரிக்காது அகலக்கால் வைத்தார். மலேஷியாவில் நம்ம ஊர் லெதர்பேக், பர்ஸ் போன்ற பொருட்களுக்கு ஏக கிராக்கி மட்டுமல்ல நல்ல லாபமும் கூட.

கணக்குப் போட்டுப் பார்த்த புஷ்பலிங்கத்திற்கு மகிழ்ச்சியில் விழி பிதுங்கியது போட்ட பணத்தை விட இரு மடங்கு லாபம். எல்லாப் பணத்திற்கும் லெதர் பொருட்களை வாங்கி அந்த புது நண்பர் மூலம் அனுப்பிவிட்டு, இலவு காத்த கிளி போல காத்திருக்க வேண்டியதாயிற்று. போனவர் போனவர்தான். பணமும் வரவில்லை. பொருளும் வரவில்லை. அப்பட்டமாய் ஏமாற்றப் பட்ட புஷ்பலிங்கத்திற்கு எதிர்காலம் இருட்டானது. தாயார் அந்த கவலையிலேயே நோய்வாய்ப்பட்டார். சிவராமன் அண்ணனின் அடாவடி செயலைக் கண்டு மனதிற்குள்ளேயே பொருமினான்.



அந்த நேரத்தில் கேட்காமலேயே வந்து கைகொடுத்தவர் வெங்கடேசன்தான்.

ஒரு பெரிய தொகையை நண்பனின் கையில் கொடுத்து, "நீ தன்மானம் பார்ப்பவன். நட்பிற்கு அது தேவையில்லை யென்றாலும், உன் தனிப்பட்ட எண்ணத்திற்கு களங்கம் விளைவிக்க நான் விரும்பவில்லை. இந்தப் பணம்... உனக்காக உன் நண்பன் தரும் பணம். இதை நீ கடனாக நினைத்தாலும் சரி, எப்படி நினைத்தாலும் சரி... உன் முன்னேற்றம் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு தருகிறேன். இன்னும் தேவை எனும்போது தயங்காது கேள். நல்ல பிஸினஸில் இதைப் போடு. பேசாமல் தவணை முறையில் பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரத்தில் இறங்கிவிடேன். எனக்குத் தெரிந்து நஷ்டம் வராத ஒன்றுக்கு இரண்டாய் சம்பாதிக்கும் வியாபாரம் இதுதான். விஷ் யூ ஆல் சக்ஸஸ்..." என்று அவர் வாழ்த்திக் கொடுத்த பணம்தான், புஷ்பலிங்கத்தின் வீட்டில் விளக்கேற்றி வைத்தது.

'போயும்... போயும் இவனிடமே கைநீட்டி வாங்க வேண்டியதாயிற்றே' என்ற கறுப்பு புள்ளி மட்டும் அவர் மனதில் அழியவில்லை. வெங்கட் சொன்னது போலவே தவணை முறையில் வீடு வீடாக சேர், டேபிள், ஃபேன், கட்டில், ஸ்டீல் சாமான்கள், ரேடியோ என்று விற்க... நல்ல கிராக்கி ஏற்பட... இரண்டு பேரை வேலைக்கமர்த்தி விரிவுபடுத்துமளவு லாபம் கொழித்தது. பத்து விரல்களில் நான்கு விரல்களுக்கு மோதிரம் போட்டுக் கொண்டார். அஞ்சு பவுனில் செயினைப் போட்டுக் கொண்டு காற்றுக்காக சட்டையில் இரண்டு பட்டன்களை போடாமல் வைத்திருந்தார்.

மெதுவாய் எல்லா பிஸினஸிலும் நுழைந்து பார்த்தார். மலேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து மனிதர்களின் வீக்னஸ்களை கேட்டறிந்து கொண்டார். பொதுவாகவே அந்நாட்டு சீதோஷ்ண நிலையோ, என்னவோ அப்பெண்களுக்கு புஷ்டியான அங்கங்கள்

கிடையாது. அதனாலேயே அங்கு சிட்டுக்குருவி லேகியம் போன்ற நாட்டு மருந்துப் பொருட்களுக்கு கிராக்கி உண்டு. சாப்பிட்டால், பெண்கள் அழகாய், திரட்சியாய், கவர்ச்சியாய் ஆகிவிடுவார்கள் என்கிற விளம்பரத்தால் கவரப்பட்டு அதுபோன்ற கடைகளில் மக்கள் ஈக்களாய் மொய்ப்பதுண்டு.

ஒரு பெரிய நூல் பிடிபட்ட சந்தோஷத்தில் புஷ்பலிங்கம் இங்கிருந்து நாட்டு மருந்துக் கடையில் பதினான்கு ரூபாய்க்கு சிட்டுக் குருவி லேகியம் வாங்கி அதை பத்தாக பிரித்து வேற சிறுசிறு குப்பிகளில் அடைத்து லேபிளில் வாயில் நுழையாத ஏதோ ஒரு பெயரை ஒட்டி விற்க... வியாபாரம் பிடிச்சிக்கிட்டு ஓடியது.

எல்லா வெற்றி தோல்விக்கும் மனமே காரணம், நம்மால் முடியும். இது நிச்சயம் நடக்கும் என்கிற எண்ணம் மனதில் நிலைபெறுமானால்... அந்த ஹ்யூமன் சைக்காலஜிபடி... மூளையின் கட்டளைப்படி உடல் வணங்குகிறது. செயல்படுகிறது. அப்படி நம்பிக்கையோடு சாப்பிட்ட லேகியம் மாற்றத்தை தர... அடித்தது ஜாக்பாட்! மாதம் ஒரு முறை மலேசியாவிற்கும், இந்தியாவிற்குமாய் பறந்து பணத்தைச் சேர்த்தார். வெங்கடேசனுக்கு பணத்தைத் திருப்பித் தந்தார்.

வெங்கடேசனுக்கு திருமணம் நடந்தது. வினோத் பிறந்தான். வினோத்திற்கு ஐந்து வயதான போது புஷ்பலிங்கம் திருணம் நடந்தது. அவரின் அம்மா சொந்தத்திலேயே பெண்ணைப் பார்த்து புவனேஸ்வரியை கட்டி வைத்தார். சௌம்யா பிறந்தாள். சென்னையிலேயே நிரந்தர வாசம்.

தன் நண்பனோடு தனக்குள்ள நட்பு கடைசிவரை நிலைப்பெற வேண்டும் என்கிற ஆசையோடு, சென்னை வரும்போதெல்லாம் சொல்லுவார். "டேய் புஷ்பா... இப்பவே சொல்லிட்டேன். சௌம்யா என் வீட்டு மருமகள். அப்புறம் அத்தை மகன், மாமா மகன்னு எவனாவது வில்லனா முளைச்சி வினோத்துக்கு இடைஞ்சல் செஞ்சானா... அவனுங்களுக்கு தலையே இருக்காது" என்பார் வெங்கடேசன் விளையாட்டாய்.



"நல்ல வேளை வெங்கட். அப்படி யாரும் உறவுக்கார பசங்க இல்லை. என் பொண்ணு வினோத்துக்குத்தான் கவலையே படாதே. ஆமா... சாப்பாடெல்லாம் என் மருமகனுக்குப் போடாம நீயே திங்கறியா? ஏன் இப்படி ஒல்லியாரிக்கான்?" புஷ்பலிங்கம் வினோத்தை இழுத்து வைத்துக் கொண்டு தலையைக் கோதுவார்.

"பாரேன்... இப்பவே சம்பந்தி சண்டையை ஆரம்பிக்கிறான். ஒரு தீனி விடாம நல்லாத்தின்னுட்டு பையன் ஒரே மாசத்திலே மூணு கிலோ கூடிட்டது கண்ணுக்குத் தெரியலியா?"

"வாயை மூடுங்க முதல்ல. உங்க கண்ணே போதும் என் பிள்ளைக்கு" என்றபடி வருவாள் அமிர்தம் வெங்கட்டின் சகதர்மினி.

புஷ்பலிங்கத்திற்கும் இந்த விஷயத்தில் பரம திருப்திதான். இன்றைய தேதியில் எழுபது எண்பது லட்சங்களுக்கு ஒரே நேர் வாரிசு வினோத். அவன் தன் மருமகனானால்... அதை விட அதிர்ஷ்டம் வேறென்ன? நட்பை தாண்டி, அன்பை தாண்டி வியாபார நோக்கோடு அவர் கணக்குப் போட்டார்.

நாளாக... ஆக... தனலக்ஷ்மியின் பார்வை மொத்தமும் புஷ்பலிங்கத்தின் மீதே நிலைத்தது. எதில் காலடி எடுத்து வைத்தாலும் சக்ஸஸ். மாடி வீட்டைப் பொத்துக் கொண்டு கொட்டியது செல்வம். பாங்க் பாலன்ஸில் பணம் திணறி திரண்டது.

எத்தனை நதிகள் வந்து சேர்ந்தாலும் கடல் நிரம்பி வழிவதில்லை. அதுபோல் புஷ்பலிங்கத்தின் பண ஆசை... இன்னும்... இன்னும்... என்று ஏறிக் கொண்டே போனது.

மனித மனம் விசித்திரமானதாயிற்றே. பணம் அந்த மனதை அடியோடு மாற்றியது. புஷ்பலிங்கம் இப்போது உச்சியில் நின்று வெங்கட்டைப் பார்த்தார். சமமாய் நிற்க தகுதியில்லாதவர் என் ஒதுக்கினார். வெங்கட் சந்தர்ப்பம் கிட்டும் போதெல்லாம் நண்பனை பார்க்க வர தவறுவதில்லை. ஆனால், இவர் போனில் கூட பேச

பிடிக்காது. நட்பை வெட்டி விட விரும்பினார். நெஞ்சளவு இது குறித்து வெங்கட்டுக்கு குறை இருந்தாலும் அவர் வெளிக்காட்டிக் கொண்டதில்லை.

நட்பு என்பது உடன்படிக்கை அல்ல. கைம்மாறு வேண்டாத ஓர் உறவுதான். இதை நன்கு புரிந்து வைத்திருந்தார். வெங்கட் நண்பனின் குணம் அறிந்து கொஞ்சம் கொஞ்சமாய் ஒதுங்கிப் போய் ஒரு கட்டத்தில் வருவதையே நிறுத்தினார்.

வினோத்தான் கேள்வி மேல் கேள்வியாய் எழுப்பினான்.

புரியாத... அறியாத வயதில் விதைத்தது. மீசை அரும்பும் பருவத்தில் முளைத்து வந்தது.

''ஏம்ப்பா... புஷ்பா - அங்கிள் வர்றதேயில்லே?''

''வருவாருப்பா...''

''ஒருவேளை அவர்க்கு உடம்பு சரியில்லையோ?'' பதில் கூறாது தலையைக் கோதுவார்.

''நாம போய் பார்த்துட்டு வரலாமா?''

''அது அவ்வளவா சரியில்லேடா கண்ணா. எதுவுமே நிரந்தமில்லே இந்த உலகத்திலே. பெத்த தாயே சாஸ்வதமில்லே. நண்பன் ஸ்திரமாய் இருப்பானா? உனக்கு சொன்னாப் புரியாது. அங்கிள் இப்ப ரொம்ப பிஸியாய்ட்டார். இப்ப நம்மளப்பத்தி நினைக்க முடியுமா? நாம போய் தொந்தரவு செய்யறதும் தப்பு வினோத் எல்லாமே ஆண்டவன் செயல். அவனுக்கு விருப்பமிருந்தா... எல்லாரையும் சந்திக்க வைப்பான். நீ படி. நல்லா படிச்சு. நல்ல மனுஷன்னு பேர் வாங்கு'' பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

புரிந்தும் புரியாமல் வினோத் விலகிப் போனாலும் 'பட்டுப் பாவாடை சட்டையில் சட்டெனத் தோன்றி மறைந்த சௌம்யாவின் உருவம் அவனை இம்சித்தது.



'இனி உன்னைப் பார்க்க முடியாதா சௌமி? சேர்ந்து விளையாட முடியாதா சௌமி?' நெஞ்சில் கனமாய் ஏதோ அழுத்திற்று.

சில வருடங்கள் கழித்து சென்னைக்கு வந்த வெங்கட் நண்பனை சந்தித்தார்.

''என்ன வெங்கட்? மறந்துட்டியாப்பா? ஆளேக் காணலை?'' புஷ்பலிங்கத்தின் நுனிநாக்கில் இருந்து வார்த்தைகள் வந்தது.

''நல்லது கெட்டதுன்னா மட்டும் சந்திக்கணும்னு ஆகிப் போச்சு நம்ம நட்பு. இல்லையா புஷ்பா?''

''நான் எதையும் மறக்கலேப்பா... சொல்லு என்ன விசேஷம்?''

''விசேஷமில்லே... காரியம்.''

''கா... காரியமா? யாருக்கு?'' என்றார் பதற்றமாய்.

''அமிர்தாவுக்கு. போய்ட்டா பத்து நாள் முன்னாடி பதினாறாம் நாள் காரியம்... சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்'' கண்களில் அமிலம் சுரந்தது.

''பாவி... எப்போடா? எப்படிடா? ஏன்... ஏன்டா எனக்கு சொல்லலே?''

அமிர்தா இறந்ததை விடவும், அந்த முக்கியமான செய்தியை தனக்குத் தெரியப்படுத்தவில்லையே என்கிற கவுரப் பிரச்சினையே புஷ்பலிங்கத்திற்கு பூதாகரமாய் தெரிந்தது.

''போன் பண்ணினேன்... பேசிட்டிருக்கும் போதே லைன் கட்டாயிடுச்சு. அந்த சூழ்நிலையிலே மறுபடி மறுபடி போன் பண்ண முடியலே.''

''இட்ஸ் ஓக்கே. எப்படியாச்சு?''

''பாத்ரும்ல கரண்ட் லீக்காயிருக்கு! முதல் ஆளா குளிக்கப் போனா எங்களை முந்திக்கிட்டு போய் சேர்ந்திட்டா'' உடல் குலுங்கியது.

புஷ்பலிங்கம் நிஜமாகவே ஆறுதல் சொல்ல முடியாமல் வெகு நேரம் வெங்கட்டின் கையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தார்.

''ஐய்... அங்கிள்... எப்போ வந்தீங்க? வினோத் வரலியா அங்கிள்?'' ஓடோடி வந்த சௌம்யாவை ஆதங்கமாய் தலையை வருடி கொடுத்தார். பதிலேதும் கூறாமல் மவுனமாய் புன்னகைத்தபடி.

காரியத்துக்கு போய் வந்ததோடு சரி. அதன் பிறகு எட்டியே பார்க்காதவர் அடுத்தாற்போல் குன்னூருக்குப் போனது. ஐந்து வருடம் முன்பு வெங்கட்டின் மரணத்தின் போதுதான்.

''உனக்கு நானிருக்கேன் வினோத். எதுவாயிருந்தாலும் தயங்காமல் என்னைக்கேள்'' என்று சொல்லிவிட்டுப் போகும் போது வினோத்திற்கு இருபது வயது.

''நேரம் வரும்போதே நிச்சயம் கேட்பேன்'' சொல்லவில்லை. நினைத்துக் கொண்டான்.

இரண்டு வருடம் முன்பு தம்பி சிவராமனின் ஆலோசனையோடு ஆரம்பிக்கப்பட்ட சௌம்யா ஃபைனான்ஸ் இப்படி ஒரேயடியாய் சுருட்டி ஆகாயத்தில் உட்கார வைத்துவிடும் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை.

நல்ல நரி மூளை சிவராமனுக்கு. தன் நண்பன் புருஷோத்தமனை தனக்கு பர்சனல் செக்ரட்டரியாக அமர்த்திக் கொண்டான். அற்புதமாய் செயல்திட்டங்கள் போடுவதில் அவனும் கில்லாடி. தம்பியின் அசாத்திய திறமை மீது ஏகமாய் பெருமை புஷ்பலிங்கத்துக்கு அதனாலேயே இந்த பைனான்ஸ் கம்பெனி மீது அதிகமாய் கவலைப்படாமல் நேரத்தை வீணாக்காமல் மற்ற வியாபாரங்களில் கவனம் செலுத்த முடிந்தது.

பழைய நண்பனின் மகனாயிற்றே என்று வினோத்திற்கு இந்த விசேஷத்திற்கு அழைப்பிதழ் அனுப்பியவரே அவர்தான். அதுவும் தற்செயலாகத்தான். ஆனால் இவன் என்னடாவென்றால்... பெண்ணல்லவா வந்து கேட்கிறான்?



''தம்பி... சின்ன வயசுல கோலி விளையாடுவோம். வயசாய்டுச்சுன்னா விளையாட முடியுமா? பார்க்கறவங்க கேலி பண்ண மாட்டாங்க? நீ இன்னும் பழசையே நினைச்சிட்டிருக்கியா? மறந்துடு... எல்லாத்தையும் மறந்துட்டு உருப்படியா வேலையைப் பாரு. நானே உனக்கு வேற பொண்ணு பார்க்கறேன்... வெங்கட்டோட பிள்ளைக்கு இதைக்கூட நான் செய்ய மாட்டேனா?''

''....''

''அதோ... நிக்கறார் பார் சௌம்யா பக்கத்துல... அவர்தான் என் மாப்பிள்ளை. ரொம்ப பெரிய இடம் பார்த்தாலே தெரிஞ்சிருக்கும்.''

வினோத் அடிவாங்கிய இதயத்தோடு சௌம்யாவைப் பார்க்க...

பொங்கி வந்த கண்ணீரை மறைக்க சட்டென தலையை திருப்பி மாடியேறி ஓடிய அவளின் செய்கை... பளாரென கன்னத்தில் அடித்தது போலிருக்க... வினோத் அவமானமும், கசப்புமாய் அடிபட்ட புலியாய் வெளியேறினான்.



## 5

**'சோ'** வென்று கொட்டிக் கொண்டிருந்த மழையை சோகமாய் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களை மூடினால் அவமானத்தில் சிவந்து போய் நின்ற வினோத் விஸ்வரூபமெடுத்தான்.

'டாடி... ஏன் டாடி இப்படியெல்லாம் நடந்து கொண்டீர்கள்? வினோத்தை ஏனிப்படி இன்ஸல்ட் செய்தீர்கள்? அவருக்கு என்ன குறை? எனக்கு சுதாகரனை கொஞ்சமும் பிடிக்கலையே... ஐயோ... இதை யாரிடம் சொல்வேன்? என்னை ஏன் ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை? உனக்கு சுதாகரனைப் பிடித்திருக்கிறதா என்று ஒரு வார்த்தை கூட கேட்கலையே... ஏன் டாடி? நான் மறுப்பேன் என்று தெரிந்தா?

தெரிந்துமா இந்த ஏற்பாடு? என்னால் ஏன் இதை தைரியமாய் எதிர்க்க முடியவில்லை? எதற்காகப் பயப்படுகிறேன்?'

சாப்பிடக் கூடப் பிடிக்காது குப்புறப்படுத்துக் கொண்டிருந்தவளை வந்து எழுப்பினாள் அம்மா.

''சௌமி... எந்திரி... போன் வந்திருக்கு.''

''யாரும்மா?''

''அவர்தான்... சீக்கிரம் வா.''

''அவர்ன்னா?''

''விளக்கமா சொல்லணுமா? மாப்பிள்ளைடி...''

ஆயாசமாய் இருந்தது.

நாய்க்குட்டி போல் மல்லாந்திருந்த ரிசீவரை கையில் எடுத்தாள்.

''ஹலோ...''

''ஹாய் சௌமி! ஏன் இவ்ளோ லேட்? தூக்கமா இந்நேரத்துக்கா?''

''ம்...''

''இந்த மழைல நல்லா பெட்ஷீட்டை இழுத்துப் போர்த்திக்கிட்டு தூங்கறசுகம் வேற எதிலேயும் கிடைக்காது. அதைவிட பெரிய சுகம்...''

''....''

''கூட நானும் அதே பெட்ஷீட்ல இருந்தா... கிடைக்கும் வரட்டுமா?''

''....''

''ஏய்... என்ன சௌமி?'' பேச்சே காணோம்?''



''எனக்கு... எனக்கு இப்படியெல்லாம் பேசினாப் பிடிக்காது''

''அது சரி... கட்டிக்கப் போறவக்கிட்டே அரசியலா பேச முடியும்? சௌமி நாளைக்கு வர்றியா... வெளியே போய்ட்டு வரலாம்.''

''வே... வேண்டாம்...''

''ஏன்?''

''பி... பிடிக்கலே.''

''அம்மா தாயே! உன்னை ரொம்ப மாத்த வேண்டிய வேலை இருக்கிறதாலதான் கூப்பிடறேன். ஃபர்ஸ்ட் நைட்ல விளக்கமா சொல்லிக் கொடுக்கவெல்லாம் எனக்குப் பொறுமையில்லே. வயசுப் பொண்ணு. இப்படி மண்ணு மாதிரி இருக்கியே... உன்னை கடிச்சி தின்னுட மாட்டேன். ரெடியா இரு. நானே வந்து பிக்கப் பண்ணிக்கறேன்.''

பதில் கூறாது, தொப்பென ரிசீவரை வைத்தவள் உதடுகள் நர்த்தனமாட அம்மாவிடம் வந்தாள்.

''அம்மா... வேணாம்மா... எனக்கு கல்யாணமே வேணாம்?''

''பைத்தியம்... பொண்ணா பொறந்தா கல்யாணம்னு ஒண்ணு நடந்து தான் தீரும். இப்படியெல்லாம் பேசக் கூடாது.''

''அந்த ஆளை எனக்குப் பிடிக்கலேம்மா.''

''யாரைச் சொல்றே?''

''சுதாகரனைத்தான்'' பேச்சில் வெறுப்பு.

''அடிப்பாவி! அவரையா... அந்த ஆள்னு மரியாதை இல்லாமச் சொல்றே? அப்பா காதிலே விழுந்தா ரொம்ப கோபப்படுவார். கல்யாணம்னா... எல்லா பொண்ணுங்களும் இப்படித்தான் பயப்படும். ஆய்ட்டா புருஷனை விட்டு... இப்படி அப்படி போகமாட்டாங்க. உன்னை இன்னும் குழந்தையாவே

நினைச்சு வளர்த்தது தப்புன்னு இப்ப புரியுது. நாளைக்கு மாப்பிள்ளை வர்றேன்னு சொன்னாரா?''

''ம்...!''

''நல்லா டிரஸ் பண்ணிட்டு ரெடியா இரு. இது மாதிரி ஒரு இடம் கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும். கடவுளே... இந்தப் பொண்ணுக்கு என்னன்னு சொல்லி நான் புரிய வைப்பேன்? ஒழுங்கா நடந்துக்கடி சௌமி. ஏடாகூடமா நடந்துக்காதே. அப்பாவால அதையெல்லாம் தாங்கிக்க முடியாது'' புலம்பினாள் புவனேஸ்வரி.

நாளைய பொழுதை நினைத்தாலே உதறியது சௌமியாவிற்கு வெறுமையாய் வெளியே பார்வையை வீசினாள்.

''பட்டிக்காடு மாதிரி துப்பட்டாவை ஏன் போர்வை மாதிரி போர்த்திக்கறே? ஒன் சைடா போடு'' உரிமையாய் எடுத்து ஒரு பக்கமாய் துண்டு போல் தொங்கவிட்டவன் கை... வேண்டுமென்றே உரசியது.

நெளிந்தாள்.

பெசன்ட் நகர் கடற்கரையில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் ஜோடிகள் காற்று எலும்பை துளைத்து ஓட்டைப் போட்டது. காரினுள்ளே அமர்ந்திருந்தனர். சுதாகரனும் சௌமியாவும்.

''சௌமி...'' கிசுகிசுப்பாய் அழைத்தவன் இன்னும் நெருங்கி அமர்ந்தான்.

''ஏன்... நான் எங்கே கூப்பிட்டாலும் வர மாட்டேங்கறே? ப்ச்... நிமிர்ந்து என்னைப் பார். நான் உன்னை கட்டிக்கப் போறவன் சௌமி. எத்தனையோ பொண்ணுங்க க்யூவுல நிக்கறாங்க என்னைக் கட்டிக்க. ஆனா, நான் கட்டிக்க ஆசைப்பட்டது. இந்தப் பொண்ணைத்தானே?'' ஆசையாய் கன்னத்தை நிமிண்டினான்.

''காதல்னா... என்னன்னு தெரியுமா உனக்கு?''



அந்த வார்த்தையைக் கேட்டதும் வினோத்தின் நினைவுதான் வந்தது. வேதனையாய் உதட்டை கடித்து கண்களை மூடிக் கொண்டாள்.

''இப்படி நீ உதட்டை கடிக்கிறது எவ்ளோ அழகா இருக்கு தெரியுமா?'' நான் கடிச்சுப் பார்க்கட்டுமா?''

தலையை பயமாய், பலமாய் ஆட்டினாள்.

''சௌமி... நீ இப்படி சின்னக் குழந்தை மாதிரி பிஹேவ் பண்றதே... எனக்குள்ளே என்னென்னவோ பண்ணுது தெரியுமா? ஐ... லவ்... யூ.... சௌமி! நீ எனக்கு மட்டுமே சொந்தமானவ. உனக்கொண்ணு தெரியுமா? அன்னைக்கு ஆனிவர்சரி ஃபங்ஷன்ல எவனோ ஒரு தடியன் பேரென்ன வினோத்தா? உன்னை பெண் கேட்டு நின்னப்ப...அவனை ஷூட் பண்ணணும்போல கோபம் வந்தது. ஏனோ தெரியல... அப்படியொரு அஃபெக்ஷன் உன் மேல.''

அவன் வினோத்தை திட்டியதும் தாங்க முடியவில்லை அவளால்.

'என் வினோத்தை ஷூட் பண்ணிடுவியோ? உனக்குத் தெரியுமா? நானும் வினோத்தை லவ் பண்ணுவது. சொன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா உன்னால்? பேசாமல் இவனிடமே சொல்லி விடுவோமா? இந்த கல்யாணத்தை நிறுத்த இதுதான் சந்தர்ப்பம் ஆனால், அப்பா? அவர் எமோஷனல் டைப் ஊரைக் கூட்டி தன் மருமகன் என இவனை அறிவித்த பின்பு, என்னால் ஏற்படும் இந்த தலைகுனிவை தாங்கிக் கொள்வாரா?''

''ஏன் சௌமி ஒண்ணுமே பேச மாட்டேங்கறே? இந்த அட்மாஸ்பியர்ல பேச்சே வரலியா? அழகான பீச், அழகான பெண், அழகான ஆண் தனிமை... இதெல்லாம் என்னமோ பண்ணுதா? இன்னும் கிட்டே வா... சௌமி... ஒரு கிஸ் பண்ணு சௌமி!'' கண்கள் செருக... அவன் கேட்ட விதம்... அவள் முகத்தை இரண்டு

கைகளாலும் ஏந்தியபடி இன்னும் நெருக்கமாய் தன் முகத்தை கொண்டு போன விதம்....

தாளமாட்டாத வெறுப்போடு கண்களை மூடிக் கொண்டாள்.

''கடவுளே... எனக்கு தைரியத்தைக் கொடு. இவனைப் பிடிக்கவில்லை என்பதை பளிச்சென்று கூறி விட தைரியத்தைக் கொடு...''

''இதுக்கும் மௌனமா? சரி... நானாவது தரட்டுமா?''

சட்டென தன்னை அவனிடம் இருந்து பிடுங்கிக் கொண்டாள்.

''நோ... நோ... ப்ளீஸ்.''

''மண்டு!'' என்றபடி பாசமாய் அவள் தலையை தடவினான் சுதாகரன்.

''பயப்படாதே... கம்பெல் பண்ண மாட்டேன். ஆசையா வந்தேன். ஏமாத்திட்டே. நாளைக்கு பிஸினஸ் விஷயமா கோவா போறேன். திரும்ப ஒரு வாரமாகும். டெய்லி போன் பண்ணுவேன். தயவு செய்து போன்லேயாவது இந்த வெக்கத்தை கழட்டி பேசு. ம்...!'' மீண்டும் அவள் கன்னத்தை தொட்டு கிள்ளி... காரை கிளப்பினான்.

''**ந**டுவில இன்னும் ஆறுமாசமிருக்கு கல்யாணத்துக்கு. ஆனா, மண்டபம் கிடைக்க எவ்வளவு அவஸ்தையா இருக்கு தெரியுமா?''

''கிடைக்கலியாங்க?'' புவனேஸ்வரி கவலையாய் கேட்டாள்.

''புஷ்பலிங்கம் போய்க் கேட்டு இல்லேன்னு சொல்ல முடியுமா? ராகவேந்திர மண்டபம்தான் புக் பண்ணிட்டு வந்தேன்.''

''இந்த வேலையெல்லாம் நீங்களே செய்யணுமா? மானேஜர் கிட்டே சொன்னா செய்துட்டுப் போறார்.''

''நமக்கிருக்கிறதோ ஒரே பொண்ணு. அவ கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை நானே ஒவ்வொண்ணையும் பார்த்து



பார்த்து செஞ்சாதான் எனக்கு திருப்தி. ஆமா... சௌமி எங்கே? ஆளே காணோம்?''

''என்னங்க சொல்றது? சரியா சாப்பிடறதில்லே. எப்போ பார்த்தாலும் கவிழ்ந்து படுத்துக்கறா... முகத்திலே சிரிப்பேயில்லே.''

சற்று யோசித்தவர் ஏதோ பிடிபட்டது போல் புரிந்தவராய்... ''ஆரம்பத்துல அப்படித்தான் இருக்கும் போகப் போக சரியாப் போய்டும். நீ எதையும் கண்டுக்காம விடு. ஒண்ணும் பேசிக்காதே.''

''சரிங்க...'' என்றவள் ஒலித்த போனை எடுத்தாள்.

''இருக்கார்... ஒரு நிமிஷம்'' என்றவள் ரிசீவர் வாயைப் பொத்தி ''உங்க தம்பி'' என்றாள்.

வாங்கி பேசினார்.

''என்ன சிவா?''

''....''

''இதையெல்லாம் என்கிட்டே கேக்கணுமா? செய்யேன்பா.''

''....''

''அப்படியா? எங்கே... நீலாங்கரை பக்கமாவா? புது பங்களாவா? ஒக்கே... ம்... கொஞ்சம் இன்கம் டாக்ஸ் பிராப்ளம்லாம் இருக்கு. உம் பேர்லியே வாங்கிடு. ஆமாம்,ம்.... ஆச்சுப்பா... ராகவேந்திரா மண்டபம்தான் பிக்ஸ் பண்ணியிருக்கேன். கொஞ்ச நாளைக்கு ஆபீஸ் பக்கம் என்னை எதிர்பார்க்காதே. மயிலாடுதுறையில புது பிராஞ்ச் ஓபன் பண்ற வேலையையும் நீயே பார்த்துக்கப்பா... ப்ளீஸ்! கல்யாண பிஸியில இருக்கேன்.''

''.....''

''வேணாம்... நானே பார்த்துக்கறேன். நீ கம்பெனி வேலைகளை மட்டும் கவனி. கஷ்டப்படாதே.''

ரிசீவரை வைத்தவர் 'ஹா'வென கொட்டாவி விட்டு உடம்பை முறுக்கினார்.

''தூக்கமா வருது ஈஸ்வரி. ரெண்டு நாளா சரியா தூக்கமேயில்லே.''

டேபிள் மீது லாமினேட்டில் பளபளத்த ஆங்கில இதழ்களை பிரித்துப் பார்த்தார்.

''தூக்கம் வருதுன்னு... புக்கை படிக்கறீங்களே... போய்ப்படுங்க'' கணவனை அன்பாய் அதட்டி அவரை மாடிக்கு அனுப்பினாள்.

**சா**ப்பிட்டு முடித்து கையை கழுவியவர் புவனேஸ்வரி நீட்டிய துண்டால் துடைத்துக் கொண்டார்.

''லன்சுக்கு என்னை எதிர்பார்க்காதே ஈஸ்வரி. நிறைய வேலையிருக்கு சிவா வந்தான்னா... பிளாங்க் செக்ல கையெழுத்துப் போட்டு கப்போர்ட்ல வச்சிருக்கேன். கேட்டா எடுத்துக்குடு. சௌமி காலேஜுக்கு போய்ட்டாளா? என்கூட சேர்ந்து சாப்பிட்டு நாளாச்சு. சரியா என்கிட்டே கூட முகம் குடுத்து பேச மட்டேங்கறா. மனசுக்கு கஷ்டமா இருக்கு ஈஸ்வரி. அவ நல்லதுக்குத்தான் இதெல்லாம் செய்யறோம்னு புரிஞ்சுக்க மாட்டேங்கறாளே... ஹும்!'' பெருமூச்சு விட்டார். புஷ்பலிங்கம்.

''சார்.''

குரல் கேட்டு நிமிர்ந்தார்.

வாட்ச்மேன் மேகநாதன் நின்றிருந்தான். முகத்தில் கலவரம்.

''என்ன?''

''வாசல்ல ஏழட்டு பேர் ரொம்ப நேரமா உங்களை பார்க்கணும்னு நிக்கறாங்க.''

''வீட்ல வச்சு நான் யாரையும் சந்திக்கறதில்லேன்னு உனக்குத் தெரியாதா? யாரையும் பார்க்க... எனக்கு இப்ப நேரமில்லே... போக... போய்ச் சொல்லு?'' சீறினார்.



''சொன்னேங்க...'' யாரும் காதுல வாங்கின மாதிரி தெரியலே... ரொம்ப கோபமா கத்தறாங்க சார்.''

''கோபமா கத்தறாங்களா? ப்ளடி டாக்ஸ். என்ன வேணுமாம்? யாரந்த நாய்ங்க?''

''உங்க ஃபைனான்ஸ் கம்பெனியில பணம் போட்டவங்களாம் கம்பெனி அனுப்பின செக்கெல்லாம் பேங்க்லேர்ந்து திரும்ப வந்துடுச்சாம்...''

''என்ன....''

பெரிதும் அதிர்ந்து போனார் புஷ்பலிங்கம்.



## 6

**ஸ்**விட்ச் போட்டது போல் மடமட வென்று எல்லாம் நடந்து முடிந்துவிட்டன.

''என்ன... எப்படி... ஏன்... எதனால் நடந்தது? புரியவில்லை.

''பணம்... பணம்... பணமென்று அதிலேயே குறியாயிருக்க... சுற்றியுள்ள மனிதர்களை எப்படி புரிந்து கொள்ளாமல் போனேன்?''

பணம் வரும்போது அதற்கு இரண்டு கால்கள் போகும்போது நூறு கால்கள்.

துவண்டார்... அழுதார் புஷ்பலிங்கம்.

'எவ்வளவு நம்பினேன்? எப்பேர்ப்பட்ட உயர்ந்த கவுரமான பொறுப்புக்களை ஒப்படைத்து பெரிய மனிதனாக்கினேன்? அப்படிப்பட்ட என்னையா குழிதோண்டி இறக்கி விட்டாய் சிவராமா?'

புவனேஸ்வரிக்கு தன்னையே ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதிர்ச்சி அவளை ஒரு உலுக்கு உலுக்கி நையப்புடைத்து எடுத்து விட்டிருந்தது. கணவனுக்கு கூட ஆறுதல் சொல்ல முடியாதளவு அடிபட்டிருந்தாள்.

எப்போதும் வீட்டின் முன் மக்கள் கூட்டம் அத்தனை பேரும் சௌம்யா ஃபைனான்ஸில் பணம் போட்டு ஏமாந்தவர்கள். கல்லெறிந்து வீட்டின் கண்ணாடிகளை தூள் தூளாக்கியவர்கள் பூந்தொட்டிகளை உடைத்து நாசம் பண்ணியவர்கள். கார்களை அடித்து நொறுக்கியவர்கள் அதனாலேயே வீட்டிற்கு நான்கு போலீஸ்காரர்கள் பாதுகாப்புக்கு இருந்தனர்.

அம்பது கோடி! அவ்வளவும் பொதுமக்களின் பணம்! இன்று பத்து ரூபாய் போட்டால், நாளை நூறு ரூபாய் தருவார்கள் என்கிற நம்பிக்கையில், நப்பாசையில் போடப்பட்ட பணம். அத்தனையும் சௌம்யா ப்ளாட்ஸாக, காலி மனைகளாக, ஸ்பின்னிங் மில்லாக என 25 கோடிக்கு சொத்துக்களாக வாங்கி குவிக்கப்பட்டு இருந்தாலும், மீதி பணம் எங்கே போயிற்று என்றே தெரியவில்லை. பெயருக்கு லெட்டர் பேடில் புஷ்பலிங்கம் பேரில் இருந்தாலும், அனைத்துப் பொறுப்புக்களும், சிவராமன் வசமே இருந்தது. அதனால் நடந்த எதுவும் புஷ்பலிங்கத்துக்கு தெரிய வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. சிவராமனும் அவன் கூட்டாளியும் தலைமறைவாகி விட்டனர். எஞ்சியிருந்த சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்து விட்டது. சிவராமன் அகப்பட்டால், மீதி பணத்திற்கும் வழிபிறந்து விடும்.

புஷ்பலிங்கத்தை போலீசார் கைது செய்து பத்து நாள் காவலில் வைத்து... ஜாமீனில் விடுதலை செய்தது.

''செல்வங்களை விட மனிதனின் செல்வாக்கு உயர்ந்த தல்லவா?''

''இழந்த கவுரவம் மீண்டும் கிடைக்குமா? காறி துப்பியவர்கள் துடைக்கவா போகிறார்கள்?''

'அதை விட... அதை விட... என் குழந்தையின் திருமணம்.... பாதியிலேயே எல்லாம் தடைபட்டு விட்டதே.'

விஷயம் இன்னதுதான் என்று வெளியே கசிய ஆரம்பித்த மறுதினமே தன்ராஜிடமிருந்து போன் வந்தது.



''என்னய்யா... உம் பேரு இப்படி நாறிப் போயிருக்கு... சந்தனம்னு நெனச்சு சாக்கடையில காலெடுத்து வச்சிட்டோம். நல்லவேளை... எல்லாமே பேச்சுவார்த்தையோட நடந்திருக்கு. நிறுத்திடுய்யா... உன் சம்பந்தமே எனக்கு வேண்டாம்.''

''ஐயோ... சம்பந்தி அப்படியெல்லாம் அவசரப்பட்டு முடிவுக்கு வந்துடாதீங்க... நீங்க நினைக்கறாப்போல இதுல என் தப்பு எதுவுமில்லே எல்லாம்... பாழாப் போன என் தம்பியால வந்தது. அவன் கெடைச்சிடுவான். நிச்சயம் பணம் வந்துடும். அப்புறம்...''

''ஸ்ஸ்... கை தவறி மண்ல விழுந்த பொருளை திரும்ப எடுத்து துடைச்சி சாப்பிடற பழக்கம் எங்க பரம்பரையிலேயே இல்லே. அப்படி சாப்பிடறவனாத் தேடிப் பார்த்து உன் வீட்டு மகாலட்சுமியை ஒப்படைச்சிடு. எங்களுக்கு கவுரவம் முக்கியம். உம் பொண்ணு மேல உயிரா இருந்த எம்புள்ளேயே... சீச்சீ.... என்ன குடும்பம் அதுன்னு முகத்தை சுழிக்கிறான். அப்படி கொடி கட்டி பறக்கிற உன் குடும்ப கவுரவத்துக்கு ஏத்த சம்பந்தி கிடைக்காமலா போவார்?'' அதற்கு மேல் அவரும் பேசவில்லை. அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க. சக்தியும் இவருக்கில்லை.

சௌம்யாவிற்கு குழப்பமாய் இருந்தது.

'ஏன் இதுபோல் ஆனது? எதனால்? சித்தப்பா ஏன் இப்படி நம்பிக்கை துரோகம் பண்ணிவிட்டுப் போனார்? பாவம் அப்பா!' பரிதாபப்பட்டாள்.

இத்தனை கவலையிலும் ஒரு சந்தோஷம். திருமணம் நின்றுப் போய்விட்டதே. அப்பாடா என்றிருந்தது.

ஒரு வாரமாக அவளும் கல்லூரிக்குப் போகவில்லை. இவளை பார்ப்பவர்களெல்லாம் கிண்டலும், கேலியுமாய் பேசியதை கேட்டுக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை.

''ஊர் பணத்தை கொள்ளையடிச்சிட்டு எப்படி மினுக்கிக்கிட்டு வர்றா பார்.''

"வெக்கமாயில்லே... எந்த முகத்தை வச்சிக்கிட்டு வீட்டு வாசப்படிய தாண்டி வர்றா? வாட் எ ஷேம்?"

"அடிப்பாவி! எங்க அக்கா கல்யாணத்துக்காக அப்பா உழைச்சு ஓடாய் தேய்ஞ்சி எடுத்து வந்துப் போட்ட பணம்டி! நல்லாருப்பீங்களா? நாசமாய் போய்விடுவீங்க. உங்களையெல்லாம் குடும்பத்தோட மொத்தமா வச்சு பெட்ரோல் ஊத்தி கொளுத்தணும்டி" பெரிய மனுஷி போல் கலாவதி அவள் மேல் மண்ணை வாரித் தூற்றினாள்.

சௌம்யா அம்மா மடியில புதைந்து கொண்டாள்.

"நான் என்னம்மா பண்ணினேன்? என்னை ஏன் எல்லோரும் திட்டறாங்க? வெளியே போகவே பயமா இருக்கும்மா. கார் மேல கல்லெறியறாங்க. ஒரு கல்லு என் நெத்தியில கூட பட்டுடுச்சி. இதோ பார்... லேசா வீக்கம் தெரியல? கொஞ்சம் ரத்தம் கூட வந்துச்சும்மா."

"ஐயோ... கடவுளே....!" என்றபடி மகளை இறுக கட்டிப்பிடித்து அழுதாள்.

"போகாதேம்மா... இனிமே நீ வெளியே போகாதே."

புஷ்பலிங்கம் ஒரேயடியாய் மாறிப் போனார். ஷேவ் செய்யாத முகம் பத்து வயதை கூட்டிக் காண்பித்தது.

"என்ன செய்யலாம்? என்ன செய்தால் இழந்த கவுரவத்தை மீண்டும் பெறலாம்?"

'முடியுமா? சாத்தியமா?'

எண்ணினார். எதையெதையோ எண்ணினார். தனக்குத்தானே சுவற்றைப் பார்த்துப் பேசினார்.

கடைசியாய் அவர் அந்த முடிவுக்கு வந்தபின், அந்த முகம் பாறையாய் இறுகிப் போயிருந்தது.

இனி, என்ன நடந்தாலும் கவலையில்லை என்கிற தெளிவு.



அன்றுதான் பத்து பதினைந்து நாட்களுக்குப் பின் மனைவி பரிமாற... திருப்தியாய் சாப்பிட்டார்.

சௌம்யா சாப்பிட்டதும் மாடிக்குப் போய்... சிறிது நேரம் பாடப் புத்தகத்தை பிரித்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு உறக்கம் வர... உறங்கிப் போனாள்.

புவனேஸ்வரி கணவனருகே அமர்ந்தாள்.

"ஏதாவது தகவல் கிடைச்சுதாங்க? அந்த சண்டாளன் எங்கேயிருக்கான்னு தெரிஞ்சுதா? பாவிப் பயல எவ்வளவு நம்புனீங்க? பாம்புக்கு பால் வார்த்தீங்க... இன்னைக்கு விஷமா கக்கிட்டுப் போய்ட்டான்."

முகத்து பளபளப்பெல்லாம் காணாமல் போய்... இருள் கவ்வியிருந்தது புவனேஸ்வரியிடம்.

"அவனைப் பற்றி இனி நமக்கென்ன பேச்சு? போனதெல்லாம் நமக்கு கிடைக்கவே போறதில்லே."

"அப்ப என்னதாங்க பண்றது? ஒவ்வொரு நாளும் செத்து செத்துப் பிழைக்கறதை விட ஒரேயடியா செத்து போய்டலாம்" முந்தானையை வாயில் வைத்து அழ ஆரம்பித்தாள்.

"நீ சொல்றது ரொம்ப சரி. நானும் அந்த முடிவுக்குதான் வந்திருக்கேன்" என்றார் நிதானமாய்.

"எ... என்ன?" அதிர்ச்சியில் அழுகை நிற்க... வாயைப் பிளந்தாள்.

"உண்மைதான் ஈஸ்வரி. இதோ பார்.... எல்லாத்துக்கும் தயாராதான் வந்திருக்கேன்."

பாக்கெட்டிலிருந்து அந்த பாட்டிலை எடுத்து டீப்பாய் மீது வைத்தார்.

அழகான பச்சை நிற பாட்டிலினுள்ளே முத்து முத்தாய் மாத்திரைகள். வீரியமிக்க தூக்க மாத்திரைகள்.

''ஐயோ... நான் ஏதோ வாய்தவறி சொல்லிட்டேன். தப்பா சொல்லிட்டேன்.. மன்னிச்சுடுங்க... அதுக்காக...''

''வாழ்க்கையே தவறிப் போச்சும்மா.... எல்லாமே தப்பாய்டுச்சி. நம்மகிட்டே கைகட்டி, வாய் பொத்தி நின்ன பணமெல்லாம், நம்மள தலைகுப்புற கவிழ்த்திட்டு போய்டுச்சி. சம்பாதிக்கறது பெரிசில்லே. சம்பாதிக்கறவனுக்கு தலையை சுத்தி கண்ணு இருக்கணும். ஆடம்பரம் என் கண்களை மறைச்சிடுச்சி. இது போலி, இது நிஜம்னு உணர வைக்க இவ்வளவு பெரிய அடியா? வேற வழியே இல்லே ஈஸ்வரி. அரைக்காசுக்கு போன மானம் இனி ஆயிரம் கொடுத்தாலும் திரும்பி வராது. பாலைக் கொண்டு வா... கொட்டிக் கலக்கலாம். சௌம்யாவை எழுப்பி கூட்டிட்டு வா... அவளும் குடிக்கட்டும்.''

''அம்மா... தாயே சௌடேஸ்வரி... ஏன் எங்களை இப்படியெல்லாம் சோதிக்கறே? இங்கே பாருங்க... அந்த பாட்டிலை எங்கிட்ட குடுங்க. நான் சாப்பிடறேன். நீங்க சாப்பிடாதீங்க. என் குழந்தைக்கு குடுக்காதீங்க'' கையெடுத்து கும்பிட்டு அழுதவளை அணைத்துக் கொண்டார்.

''உன்னை மேல அனுப்பிட்டு நான் இங்கேர்ந்து என்ன பண்ணப் போறேன் ஈஸ்வரி? நான் முடிவெடுத்தாச்சு, உனக்கு விருப்பமிருந்தா... நீயும் வா.''

''வர்றேங்க... சத்தியமா வர்றேன் ஆனா, சௌம்யா, அவ என்ன பாவம் பண்ணினா?''

''நமக்கு மகளா பொறந்ததே பெரிய பாவம்தானே?''

''அவ வேணாங்க... அவ வாழட்டும். இளங்குருத்தை வேரோட பிடுங்காதீங்க.''

''எப்படிம்மா? எப்படி வாழ முடியும்? பெத்தவங்க உயிரோட இருக்கும்போதே வாழ முடியல... செத்த பிறகு அவ கதி இன்னும் மோசமாய்டாதா? சொந்தபந்தம் இந்த மாதிரி இக்கட்டான



நேரத்துல எட்டிக்கூட பார்க்கலே... யாரை நம்பி அவளை விட்டுட்டுப் போகச் சொல்றே ஈஸ்வரி?''

''ஏங்க... நான் ஒண்ணு சொன்னா கேப்பீங்களா? அந்த பையன் விநோத்துக்கு போன் பண்ணி...''

''எதுக்கு...? என்னை கெஞ்ச சொல்றியா? நான் மானஸ்தன் ஈஸ்வரி. என்னால யார்கிட்டேயும் முதுகு வளைச்சி நிக்க முடியாது. நாம செஞ்ச பாவபுண்ணியம் நம்மோட போகட்டும். அவ்வளவு அவமானப்பட்டுப் போனவன்... நிச்சயம் பழிவாங்க நினைப்பானே தவிர, பரிதாபப்பட மாட்டான். உன்னை விட எனக்கு அனுபவம் அதிகம். சௌம்யாவை அனாதையா விட்டுட்டு போக மாட்டேன். போ... மொதல்ல நீ போய் பாலை எடுத்துட்டு வா...'' குரலில் மெல்லிய கடுமை ஏறியிருந்தது. முகத்தில் தீவிரம். கண்களில் உறுதி.

துக்கம் நெஞ்சையடைக்க... செம்பு நிறைய பாலைக் கொண்டு வந்தாள். கண்ணீரும் கலந்திருந்தது. பாட்டிலை திறந்து மாத்திரைகளை கொட்டி கலக்கி, ஒரு டம்ளரில் ஊற்றி எடுத்துக் கொண்டு சௌம்யாவின் அறைக்குள் நுழைந்தார். பின்னேயே புவனேஸ்வரி.... நிற்காத கண்ணீருடன்.

லேசாய் வாய் பிளந்து, இரண்டு கைகளையும், முழங்கால் களுக்கிடையே வைத்து குறுகிக் கொண்டு குழந்தையைப் போல் உறங்கிக் கொண்டிருந்தாள் சௌம்யா!

புவனேஸ்வரியின் வயிற்றில் சொரேர் என்று அடிபட்ட உணர்வு கருப்பையே சுருண்டு கொண்டது. தன் மகளைப் பார்த்து புஷ்பலிங்கமே அழுதார். உடனே சுதாரித்துக் கொண்டார்.

''சௌமி... சௌமிம்மா...''

''ம்....'' என்று முனகினாள்.

''எந்திரியம்மா... பாலை குடிச்சிட்டுப் படு.''

''வேணாம் டாடி...'' கண்களை திறக்காமலேயே...

''டாடியே வந்து குடுக்கறேன்ல... எந்திரியம்மா...''

''தூக்கம் வருது டாடி... நாளைக்கு குடிக்கறேனே.''

''நாளைக்கு.''

புவனேஸ்வரிக்கு நெஞ்சையடைப்பது போலிருந்தது.

''சொன்னாக் கேக்கனும். எந்திரி சௌமி. குடிச்சிட்டு படுத்துக்கோ...''

''ஹூம்...'' என்று சிணுங்கியபடி எழுந்தமர்ந்தவள், அரைத் தூக்கத்திலேயே அந்த டம்ளரை வாங்கி உதட்டில் வைக்க... அந்த அக்கிரமத்தை அதற்கு மேல் பார்க்க முடியாது வெளியேறினர் பெற்றவர்கள்.

பாதி பாலை குடித்தவள்... அம்மா அப்பா வெளியேறியதும் மீதியை அப்படியே டேபிள் மீது வைத்து விட்டு படுத்தவளுக்கு... லேசாய் உடலுக்குள் கூறுபோட்ட வித்தியாசத்தை உணர ஆரம்பித்தாள். தூக்கத்தையும் மீறிய மயக்கம்.... கண்களை மூட வைத்தது.



7

**சௌ**ம்யா... கண் விழித்த போது யாருமே அருகில் இல்லை. 'கடக்கடக்'கென்று ஓடிக் கொண்டிருந்த ஃபேனின் சப்தமும், வெள்ளை சுவர்களும் மருந்து வாசமும்தான் உணர்வினைத் தொட்டது.

உலகில் உள்ள மொத்த கனமும் தலையில் வைத்தது போல் வலித்தது. கண்களை தொடர்ந்தாற்போல் சில விநாடிகள் கூட திறந்து வைத்திருக்க முடியவில்லை.

சில கணங்கள் ஏதும் புரியாமல் அலங்க... மலங்க விழித்தவள்... அந்த சுற்றுப்புற சூழ்நிலை முற்றிலும் வித்தியாசமாயிருக்க... யோசிக்க முயன்று தோற்றுப் போனாள்.



'நான் எங்கே இருக்கிறேன்? இது என் ரூம் இல்லையே...' எழ முயன்றவள் கையில் சுருக்கென்று வலிக்க... அப்போதுதான் பார்த்தாள் இடக்கையில் ரத்தம் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்ததை.

'என்னாயிற்று எனக்கு? மம்மி, டாடி எங்கே?'

மீண்டும் மெல்ல தலையை திருப்பி அறை முழுக்க நோட்டம் விட்டாள்.

சட்டென ஓரிடத்தில் நிலைபெற்றன விழிகள்.

தினமும் கிழித்தெறியப்படும் காலண்... காற்றில் மெல்ல துடித்துக் கொண்டிருந்தது.

புருவம் உயர்ந்தது.

'இன்றென்ன... 28 ந் தேதி...

'எப்படி சாத்தியம்? 24 தானே?'

''ஓ... தாங்க் காட் விழிச்சிட்டியா... சௌம்யா?'' வெள்ளைப்புடவை ஜாக்... நாற்பதை... வயது மதிக்கத்தக்க நர்ஸ் முகம் நிறைய சிரிப்பும், கனிவுமாய் வந்து கேட்டாள். இந்திராகாந்திபோல் ஒரு பக்கம் நரை. சௌம்யாவின் டெம்ப்ரேச்சரை பார்த்துவிட்டு... ஒரு இஞ்செக்ஷன் போட்டாள்.

38955
5008309

''சிஸ்டர்...''

''நா... நான்... இ... இன்னைக்கு என்ன டேட்?''

''ஏன் கேக்கறே? ட்வென்ட்டி எய்ட்''

''அப்ப... அப்ப... இத்தனை நாளும் நான் எப்படி?''

''............''

''சிஸ்டர்... எனக்கு என்னாச்சு?''

''யூ ஆர் ஆல்ரைட் சௌம்யா! ரொம்ப பேசக் கூடாது ரெஸ்ட் எடு.''

"ம... மம்மி... டாடிய பார்க்கணும்."

இந்த கோரிக்கையை எதிர்பார்த்தவள் சில விநாடிகள் மௌனித்தாள். சௌம்யாவின் தலையை கோதி விட்டு "ரெஸ்ட் எடு சௌம்யா! மம்மி டாடிய இங்கெல்லாம் அலவ் பண்ணமாட்டாங்க. இது இன்டென்சிவ் கேர் யூனிட். டாக்டர், நான் தவிர வேற யாரும் வரக் கூடாது."

"அப்படி என்னாச்சு எனக்கு?"

"நத்திங் சௌம்யா... உன்னை நீயே டிஸ்டர்ப் பண்ணிக்காதே."

"எனக்கு ரொம்ப குழப்பமாயிருக்கு சிஸ்டர்... எனக்கு ஆக்ஸிடன்ட் ஆயிடுச்சா?"

"இல்லம்மா... தூங்கு."

"அப்ப ஏன் ப்ளட்டெல்லாம் எனக்கு ஏத்தறீங்க?"

அவள் கேட்கும் கேள்விகள் தடுமாற வைத்தன.

"ஆமா... ஒரு சின்ன ஆக்ஸிடன்தான். அதனாலதான் ப்ளட்டெல்லாம் ஏத்தறோம். தூங்கும்மா... நீ இப்படி ஓயாம பேசிட்டிருந்தா... டாக்டர் என்னைத்தான் வந்து திட்டுவார்."

"சரி சிஸ்டர் ஆனா, எனக்கு மம்மிய பார்க்கணும் போல இருக்கே... அப்புறமா அழைச்சிட்டு வர்றீங்களா?"

அந்த வார்த்தை மனசை போட்டு கசக்கிப் பிழிய பரிதாபமாய் பார்த்தாள்.

"ம்... சரி... நீ தூங்கு!" என்றவள் விரைவாக வெளியேறி டாக்டரிடம் சென்றாள்.

**ஏ**னோ மாலை சூடிய அந்த போட்டோவில் தம்பதி சமேதராய் வீற்றிருந்த புஷ்பலிங்கத்தையும், புவனேஸ்வரியையும் பார்க்க, பார்க்க எந்தவித பரிதாப உணர்வும் ஏற்படவில்லை ஜனார்த்தனனுக்கு.



கண்மூடி சேரில் சாய்ந்து கைகளை கழுத்துக்கு பின்னால் கட்டிக் கொண்டு, தலையை சாய்த்துக் கொண்டவன் கண் முன் லலிதா வந்தாள்.

"உன் உரிமைய நீ நிறைவேத்திட்டே கண்ணா! அந்த ஆத்ம சாந்தியே போதும் எனக்கு" கண்ணீர் மல்க சந்தோஷமாய் வாழ்த்தினாள்.

சட்டென கலைந்தான் ஜனார்த்தனன்.

கண்களோரம் ஈரம்.

இந்த ஜனார்த்தனன்தான் புஷ்பலிங்கம், புவனேஸ்வரிக்கு ஈமக்கிரியை செய்தவன்.

நான்கு நாட்களுக்கு முன்பு மாலை தினசரியில் 2 -ம் பக்கத்தில் போட்டோவோடு வெளியாகியிருந்த செய்தியைப் பார்த்துதான் மேட்டுப்பாளையத்தில் இருந்து ஓடி வந்தான்.

'பிரபல தொழிலதிபர் புஷ்பலிங்கம் குடும்பத்துடன் தற்கொலை. ஒரே மகளின் உயிர் ஊசலாடுகிறது. அவமானம் தாங்க முடியாமல் இந்த முடிவு' என்று பத்தி பத்தியாய் செய்திகள்.

இத்தனை வருடங்களாய் திரைமறைவாய் வாழ்ந்து வந்த புஷ்பலிங்கத்தின் ஒரே மகன்... இன்று தன் உரிமையை நிலைநாட்ட, தன் இனிஷியலுக்குரியவரை சுட்டிக்காட்ட, தனக்கு கிடைத்த ஒரே சந்தர்ப்பத்தினை இழக்க விரும்பாமல் புறப்பட்டான்.

உடல்களை பெற்று எரித்தான்.

அவன் இதயமும் எரிந்தது.

ஜனார்த்தனின் அம்மா லலிதா குன்னூரில் தோட்ட வேலை செய்து வந்தவள். ஊட்டி தக்காளிப் போல் தளதளவென்றிருந்த லலிதாவை... அடிக்கடி நண்பனை பார்க்க வந்த புஷ்பலிங்கத்தின் கண்களில் விழுந்தாள்.

முறுக்கு உடம்பும், நறுக்கு மீசையும், நாகரீகமான பேன்ட் சட்டையும் லலிதாவை வசமிழக்க செய்தது.

புஷ்பலிங்கத்தின் சேட்டைகள், அவள் வயிற்றில் கேட்டை விளைவித்தது. இனி எதுவும் செய்ய முடியாது என்ற நிலையில் கரு ஸ்திரமாக... விபரம் அறிந்து அதிர்ந்துப் போன புஷ்பலிங்கம் பாய்ந்தார்.

லலிதாவை அவர் விரும்பியது நிஜம்தான். ஆனால் மனைவியாக ஏற்றுக் கொள்ள அவர் மனம் விரும்பியதில்லை. தோடர் இனத்தைச் சேர்ந்த பெண் அவள்.

'ஜாதி விட்டு ஜாதியில் இதுவரை தங்கள் பரம்பரையிலேயே யாருமே செய்து கொண்டதில்லை. என்னால் அப்படியொரு அவப்பெயரே வேண்டாம்' என்ற உயர்ந்த நோக்கோடு அவர் தாலிகட்ட மறுத்தார்.

வெங்கடேசன் கூட நண்பனுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறினார். 'பெண் பாவம் பொல்லாதது' என்றார்.

'இந்த விஷயத்தில் தலையிட்டு நம் நட்பை கெடுத்துக் கொள்ளாதே' என்று ஒரே போடாய் போட்டார். வெங்கட் அதோடு தன் பொஸிஷனைக் காப்பாற்றிக் கொண்டார்.

லலிதா அழவில்லை. சிரித்தாள் வெறுமையாக தன் அவசர புத்தியில் ஜனித்த உயிரை அழிக்க விரும்பவில்லை. புஷ்ப லிங்கத்திடம் வாழ்க்கையை கெஞ்சி பெற்று வாழ தன்மானம் இடம் தரவில்லை. ஜனார்த்தனனைப் பெற்றெடுத்தாள். அப்பனின்றி, ஆதாரமின்றி சுமந்து பெற்ற அவளை அவள் இனமே ஒதுக்கி வைத்தது. ஒரே தூரத்து உறவான மாமாவும் கைவிட, ஒரே மகனை கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கினாள். மேட்டுப்பாளையத்தில் குடியேறினாள். இதுதான் என்றில்லாது. எல்லா வேலையும் செய்தாள். நெற்றியில் குங்குமம் இல்லை. கழுத்தில் வெறுமை. கேட்பவர்களிடம் தானொரு விதவை என்றாள். ஒரு சிலர் நம்பாமல்



முதுகுப் பின்னே அவள் நடத்தையை விமர்சித்தனர். லலிதா எதற்கும் அசரவில்லை. எந்த கஷ்டத்திலும் அவள் புஷ்பலிங்கத்தை நாடியதில்லை. அவரும்... லலிதா என்ற பெயர் ஒரு சின்ன சலனத்தை கூட ஏற்படுத்தாது. மனதிலிருந்து அத்தனையும் துடைத்தெறிந்து... பிஸினஸில் சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தார். லலிதா... தைரியமாய் குழந்தையை பெற்றெடுப்பாள் என்றெல்லாம் அவர் எண்ணியே பார்க்கவில்லை. பெரிய மனிதரானார். பத்திரிகையில் ஒரு முறை அவர் போட்டோவை பார்த்தே... அவர் சென்னையில் இருப்பதைத் தெரிந்து கொண்டாள். அப்போதும் அவரைப் பார்க்க விரும்பவில்லை. சக்கையாய் உறிஞ்சி, உதறி விட்டுப் போன அவரின் கயமைத்தனம் அவளை வெறுக்க வைத்தது.

ஜனார்த்தனனை நன்றாய் படிக்க வைத்தாள். அவன் காதலித்த பவித்ராவையே திருமணமும் செய்து வைத்தாள். நான்கு வருடம் முன்பு மரணப் படுக்கையிலிருக்கும் போது மகனை அழைத்து பேசினாள்.

''உன்னிடம் ஒரு பெரிய உண்மையை மறைத்து விட்டேன் ஜனா. நான் ஏமாற்றப்பட்டேன் ஜனா. உன் அப்பா இன்னமும் உயிருடன்தான் இருக்கிறார். உனக்கு அப்பா இருந்தும் அந்த அன்பை பெற்றுத்தர முடியாத பாவ சூழலுக்கு தள்ளப்பட்டேன். இதோ... இந்த பையில் அவரைப் பற்றிய விபரமெல்லாம் இருக்கிறது. என்னுடன் அவர் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ, கடிதம் எல்லாமே இருக்கிறது. இதுவரை நான் ஒதுங்கியிருந்தது தப்போன்னு படுதுப்பா ஜனா. நான் போராடி ஜெயிக்காம... உன்னை தண்டிச்சிட்டேனோன்னு மனசு குறுகுறுன்னு இருக்குது. என்னோட தனிப்பட்ட குணத்துக்கு நானே கொடுத்துக்கிட்ட மரியாதையை... உன் எதிர்பார்ப்பு, ஏக்கங்களுக்கு கொடுக்கலியேன்னு வருத்தப்படறேன் ஜனா. என்னால முடியாததை நீயாவது செய். உன் பெயருக்கு முன்னாலிருக்கும் இனிஷியலுக்கு சொந்தக்காரர் அவர்தான் என்பதை உணர்த்து.

அப்பாவா இருந்து அவர் உனக்கு எதுவுமே செய்யலை. ஆனா, ஒரு தகப்பனுக்கு பிள்ளை செய்யும் தலையாய உரிமையை நீ விட்டுத் தராதே. அவருக்கு கொள்ளிப் போடும் கை உன் கையாகத்தானிருக்கணும். உரிமையை மட்டும் பெற்றுக் கொள். உடமைகள் வேண்டாம். அந்த மனிதரின் பாவப்பட்ட பணம் நமக்கு வேண்டவே வேண்டாம். உனக்கு அவரைப் பார்க்கணும்னு ஆசையிருந்தா... இப்பவே கூட போ...'' லலிதா விக்கித் திணறி சொல்லி முடிக்கும்போது... ஜனாவுக்கு தொண்டை அடைத்தது.

''என் அம்மா... ஸ்திரமான என் அம்மா அழுகிறாள். கண்டிப்பும், கறாராருமாய் இருந்தவளின் இதயம் இவ்வளவு சம்மட்டி அடிகளைப் பெற்றிருக்கிறதா? அப்பா... இன்னும் உயிரோடவா இருக்கிறார்? அப்பா... மனித இனத்தில் சேர்த்தியேயிராத ஒருவருக்கா நான் மகனாய் பிறந்தேன்? கடைசி வரை அந்த மனிதரின் முகத்தில் விழிக்கப் பிடிக்காமல் இருந்த அம்மாவின் உறுதியை தனக்குள்ளும் விதைத்துக் கொண்டான். அவரை பார்க்க வேண்டும் என்கிற ஆசை கொஞ்சமும் ஏற்படவில்லை.

அம்மா மீதுஅன்பும், மரியாதையும் அதிகம் கொண்ட ஜனா, அதன் பிறகு அவரைப் பற்றி அவளிடம் எதையும் கேட்கவில்லை. பிரபல தொழிலதிபர் புஷ்பலிங்கம்தான் தன் தந்தை என்றறிந்த பிறகு இன்னும் வன்மம் கூடியது.

ஏழ்மையில் உழன்று தன்னை ஆளாக்கிய தாய்க்கு சல்லிக்காசு கூட கொடுத்து உதவும் எண்ணமே இல்லாமல்... ஒட்டுமொத்தமாய் கை கழுவிவிட்ட பெரிய மனிதரின் மீது வெறுப்பின் அளவு கூடிக் கொண்டே போனது.

நெடுநாள் உயிருடன் இருக்கவில்லை லலிதா. நிறைவேறாத பல ஆசைகளுடன் சாம்பலாகிப் போனாள். அதைக் கூட புஷ்பலிங்கத்திற்கு தெரியப்படுத்த விரும்பவில்லை ஜனா.



இப்போது அவருக்கு கொள்ளிப் போட்டதுக் கூட தாயின் கடைசி ஆசை என்பதுடன்... தான் வழிதவறி பிறந்தவனில்லை. வேறு வழியே இல்லாமல் பிறந்தவன் என்பதை நிரூபிக்கவே! புதிதாய் அவன் வந்து நிற்கவும் உற்றார் உறவினர்கள் அசந்து போயினர். புஷ்பலிங்கத்தின் மறைமுக வாழ்க்கை அதிர்ச்சியைத் தந்தது. செத்துப்போன பின்பும் புறம் பேச சொன்னது. ஜனாவுக்கு அதில் திருப்தி. தாலியே இல்லாமல் சுமங்கலியாய் போய்ச் சேர்ந்த தன் தாயை நினைத்துக் கொண்டான்.

'உன் ஆன்மாவுக்கு நல்ல நிம்மதியை தந்து விட்டேன். சந்தோஷம் தானேம்மா?''

ஜனாவுக்கு வந்த வேலை முடிந்தது.

'பதினாறு நாள் காரியம் வரைக்கும் இங்கிருந்து செய்ய முடியாது. என் பிழைப்பை நான் பார்க்கணுமே' புறப்படத் தயாரானான்.

பங்களாவிற்கு சீல் வைத்து விட்டதால், சின்ன அவுட் ஹவுஸில்தான் காரியமும் நடந்தது. புஷ்பலிங்கம் உயிருடன் இருந்தபோது ஈசலாய் மொய்த்த உறவுக் கூட்டம் இன்று இல்லை. இரண்டாம் நாளே நெருப்பை கண்ட ஈக்களாய் பறந்து விட்டனர். ஜனாவும் கிளம்ப தயாரான போதுதான் அந்தப் பெண்ணின் நினைவும் வந்தது.

'சௌம்யா... சௌம்யாதானே அவள் பெயர்? புஷ்ப லிங்கத்தின் நாடறிந்த மகள். ஹாஸ்பிடலில் இருக்கிறாள் அல்லவா? போய்ப் பார்க்கலாமா?' ஒரு கணம் அந்த மனிதாபிமானமான எண்ணம் தோன்றியது.

முதுகுக்கு தலையணையை முட்டுக் கொடுத்து அமர்ந்திருந்த சௌம்யாவின் விழிகள் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தன. சட்சட்டென உற்பத்தியாகிக் கொண்டிருந்த கண்ணீரால் கண்கள் சிவந்து வீங்கிப் போய்க் கிடந்தன.

அவளின் தொண தொணப்பு தாங்க மாட்டாமல் அந்த நர்ஸ் வேறு வழியின்றி அந்த வெடிகுண்டை போட்டு வெடித்தே விட்டாள்.

"உங்கம்மா... அப்பா செத்துப் போய் இன்னியோட ஆறுநாள் முடிஞ்சிடுச்சி..." அதற்கு மேல் விவரித்த எந்த வார்த்தையும் சௌம்யாவை அடையவில்லை. கண்களை இருட்டிக் கொண்டு வர மயங்கியே போனாள்.

அதன் பிறகு இரண்டு நாட்களாய் கொடுத்த எதையும் சாப்பிடவில்லை.

"அம்மா... என்னை விட்டுட்டு போய்ட்டியாம்மா? எம்ப்பா நானில்லாம சாப்பிடக் கூட மாட்டீங்களே... இப்ப எனக்கு சாப்பிடக் கூட வழியில்லாம என்னை அனாதையா விட்டுட்டுப் போய்ட்டீங்களே! யாருமே இல்லாம நான் எப்படிப்பா இருப்பேன்? எனக்குன்னு யார்தான் இருக்கா? அந்த இளமனம் நாளையை பற்றிய பயமும், பெற்றோரின் இழப்பின் தாக்கமுமாய்... உருகி உருகி அழுதது.

இன்னும் ஒரிரு நாட்களில் ஹாஸ்பிடலை விட்டு போக வேண்டும்.

'எங்கே போவேன்? வெளியே போனாலே கல்லெறிய றாங்களே... அம்மா... பயமாருக்கும்மா' முழங்கால்களில் முகத்தைப் புதைத்து கேவினாள்.

"தட்... தட்..." சின்ன சப்தத்திற்கு நிமிர்ந்தாள் சௌம்யா!

வாசலில் அவன்.





8

**வ**ந்து நின்றவனை குழப்பமாய் பார்த்தாள்.

முகம் வெளிறி, வீங்கி, துவண்ட செடியாய், பரிதாபமாய் அவனைப் பார்த்த சௌம்யாவைப் பார்த்ததும் மனம் துடித்தது ஜனாவுக்கு.

அருகில் சென்றான்.

"என் பேர் ஜனார்த்தனன்."

"எ... எங்க ஃபைனான்ஸ்ல பணம் போட்டிருக்கீங்களா?" அந்த குரலில் ஒரு நடுக்கம்.

'எங்கே இவனும் வைடி பணத்தை' என்று சத்தம் போடுவானோ என்கிற பயம் அவளுக்கு.

"இல்லம்மா..." என்றான் மென்மையாக.

"பின்னே... ஏன் என்னை பார்க்க வந்தீங்க?"

"என் தங்கைய பார்க்க நான் வரக்கூடாதா?"

குப்பென அதிர்வலைகள் தாக்கின.

"த... தங்கையா?"

"ஆமாம் சௌம்யா! திகைக்காதே... நிஜத்தைச் சொல்கிறேன்" என்றவன் எல்லாம் சொன்னான். தன் அம்மாவுடன் புஷ்பலிங்கம் எடுத்துக் கொண்ட போட்டோவை காண்பித்தான்.

பயங்கர ஷாக். அப்பா மீது ஒரு நொடி வெறுப்பு வந்தது. ஆனால் அது மறுநொடியே காணாமல் போனது.

'ஆயிரம் தவறு செய்திருந்தாலும் இந்த உலகில் எனக்கென்று ஒரு உறவை விட்டுப் போயிருக்கிறார் அப்பா' அத்தனை வேதனையிலும் ஒரு நிம்மதி பிறந்தது.

"இப்படியொரு உறவு எனக்கு இருப்பதை நினைச்சா... ரொம்ப சந்தோஷமாயிருக்குண்ணா! ஏழெட்டு நாளா... என்னைப் பார்க்க யாருமே வரலே தெரியுமா?" குரல் கம்மியது.

''அதான்... இப்ப நானே வந்துட்டேனே.''

''ரொ... ரொம்ப தாங்க்ஸ்ண்ணா'' அவன் கைகளைப் பற்றி தன் முகத்தில் அழுத்திக் கொண்டாள். நனைந்தன கைகள்.

''மம்மி... கா... பி'' கண்களை திறக்காமலேயே குரல் கொடுத்தாள் சௌம்யா.

''பிரஷ் பண்ணிட்டு குடிப்பியா? இல்லே இப்படியேவா?'' புதிய குரல்.

'இது அம்மா குரல் இல்லையே.'

திடுமென விழித்து எழுந்தமர்ந்தாள்.

எதிரே பவித்ரா!

அண்ணி... ஜனாவின் மனைவி சின்ன சிரிப்புடன் டம்ளரோடு அருகே அமர்ந்திருந்தாள்.

வெட்கமும், வேதனையுமாய் பார்த்தவள் எழ முயற்சித்தாள்.

''எங்கே போறே? குடி...''

''ஸ... ஸாரி அண்ணி... தெரியாம...''

''என்ன தப்பு செஞ்சிட்டேன்னு ஸாரி சொல்றே? மொதல்ல காபிய குடிச்சிட்டு குளிச்சிட்டு வா. உனக்கு ஆப்பம் பிடிக்கும் தானே? அதுதான் டிபன் இன்னைக்கு'' சொல்லிவிட்டு போய் விட்டாள்.

மிகச்சிறிய ஓட்டு வீடு அது. மேட்டுப்பாளையத்தில் முள்ளம்பட்டி என்கிற சிறிய ஊர் ஏதோ ஒரு அரசு அலுவலகத்தில் குமாஸ்தா வேலை ஜனாவுக்கு பிடித்தமெல்லாம் போக இரண்டாயிரம் வரும். அதிலேயே வீட்டு வாடகை, பால், சாப்பாடு, மருத்துவ செலவு என்று சகலமும் அடக்கம் செய்தாக வேண்டும். இரண்டு குழந்தைகள். யூ.கே.ஜி.யும், ஒண்ணாவதுமாக படிக்கின்றன. இரண்டுமே பெண் குழந்தைகள்.



பவித்ரா மாநிறமாய், பூசினாற்போல், சினந்து பேசத் தெரியாமல், எப்போதும் ஒரு புன்னகையை உதட்டில் ஒட்டி வைத்திருந்தாள்.

சௌம்யாவை ஜனார்த்தனன் தன்னோடு அழைத்து வந்தபோது பாசத்தோடு வரவேற்றாளேயொழிய... ஏன் அழைத்து வந்தீர்கள்?' என்று ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை.

ஒரு பெட்ரூம், ஹால், சமையலறை, பாத்ரூம் இவைதான் அந்த வீட்டில், பெட்ரூமில் மட்டுமே ஃபேன் உண்டு. சௌம்யாவிற்கு அந்த அறையை ஒதுக்கி கொடுத்து மனைவி குழந்தைகளோடு ஹாலில் படுத்துக் கொண்டான் ஜனா.

காலையிலேயே சாப்பாடு சமைத்துதான் பழக்கம் பவித்ராவுக்கு. ஜனாவுக்கு காலையிலும் போட்டு, பகலுக்கும் அதையே டிபனில் அடைத்துக் கொடுத்து விடுவாள். இரவில் ஏதாவது ஒரு டிபன். சிக்கனமாய் குடும்பம் நடத்தி வந்தவள் சௌம்யாவிற்காக காலையிலும் டிபன் செய்ய ஆரம்பித்தாள்.

டைனிங்டேபிளில் ஸ்பூனில் சாப்பிட்டு பழகிய சௌம்யாவிற்கு தரையில் உட்கார்ந்து சாப்பிட கஷ்டமாக இருந்தது. தன்னை வெகுவாய் வளைத்து பழக்கப்படுத்திக் கொண்டாள். பவித்ராவுக்கு சின்ன சின்ன வேலைகளில் அவள் தடுத்தும் ஒத்தாசையாக இருந்தாள்.

பத்து நாட்கள் ஓடிப் போனது.

அமைதியான நள்ளிரவு. காற்றில் மரங்களின் ஸ்ஸ்... என்கிற பெருமூச்சு. லேசாய் குளிர... பெட்ஷீட்டை இழுத்துப் போர்த்திக் கொண்ட சௌம்யா... மெல்லிய பேச்சுக் குரல்கள் கேட்டு கண் விழித்தாள்.

ஹாலிலிருந்து அண்ணன் அண்ணி ஹஸ்கி வாய்ஸில் பேசிக் கொண்டிருந்தாலும் தெளிவாகவே காதில் விழுந்தது.

''இப்ப என்னங்க பண்றது?''

''எனக்கும் ஒன்னும் புரியல பவித்ரா. அவளை அந்த சூழ்நிலைல அனாதையா விட்டுட்டு வர மனசில்லாம அழைச்சிட்டு வந்தேன். ஆனா, மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு ஒண்ணுமே புரியல.''

''நமக்கு ஆண்டவன் தாராளமா நல்ல மனசை குடுத்திருக்கான். ஆனா அந்தளவு வசதியை தரல்லியே. பாவம் அவ... நல்லா வசதியா வாழ்ந்து பழக்கப்பட்டவ... ஹூம்...''

''....''

''நாளைக்கு இந்த வளையலை அடகு வச்சு கொஞ்சம் பணம் வாங்கி வாங்க. ரெண்டு மாசம் ஒப்பேத்திடலாம்.''

''அதுக்கப்புறம்?''

''.....''

''பக்கத்துல ஒரு எஸ்டேட்ல செக்ரட்டரி வேலை காலியாயிருக்காம். படிச்ச பொண்ணா கேக்கறாங்க. நம்ம சௌம்யாவை சொல்லலாமான்னு பாக்கறேன். தெரிஞ்சவர் மூலமா சேர்த்து விட்றலாம். ஆனா, இந்தப் பொண்ணு நம்மள தப்பா நெனச்சிடுமோன்னுதான்... கவலையாயிருக்கு...''

'நான்... தப்பா நினைக்க மாட்டேண்ணா' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்ட சௌம்யாவின் விழிநீர் காது மடலைத் தொட்டது.

'பாவம்... என்னால் இவர்களுக்கு எவ்வளவு சிரமம்?'

**அ**றிவால் பண்படுத்தப்பட்ட ஆயுதமே உறுதி. இது நாள் வரை ஒரு குழந்தையாய் அம்மா மடியில் தூங்கி. வெகுளியான கல்லூரிப் பெண்ணாய்... ஒரு வட்டத்துக்குள் மட்டுமே சுற்றி வந்த சௌம்யா மயக்கத்தில் இருந்து விழித்தவள் போல் யதார்த்தமான இந்த உலக வாழ்க்கைக்கு தன்னையும் பிணைத்துக் கொள்ள... கடந்து போன அனுபவமே கை கொடுத்தது. சௌம்யா... மாறி விட்டாள்.



மறுநாள் மிக கேஷுவலாக, சந்தேகம் வராமல் ஜனாவிடம் கேட்டாள்.

''அண்ணா... இங்கே எனக்கு ரொம்ப போரடிக்குது.''

''லைப்ரரியிலேர்ந்து புக்ஸ் எடுத்து வரவா.''

''ப்ச்... வேண்டாம்ணா...''

''பக்கத்து வீட்ல சொல்லி விடறேன்... டி.வி. பார்க்கறியா?''

''ம்ஹூம்... உருப்படியா எதையாவது செய்யணும் போலிருக்கு இங்கே எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா?''

ஜனா அவளைக் கூர்ந்துப் பார்த்தான்.

'நாங்கள் பேசியதை கேட்டிருப்பாளோ?'

''ஏம்மா... திடீர்னு இப்படியொரு பேச்சு?''

''திடீர்னு இல்லே... ஒரு வாரமா கேக்கணும்னு நினைச்சிட்டிருந்தேன். நான் இந்த உலகத்தைப் பற்றி தெரிஞ்சிக்க வேண்டியது இன்னும் நிறைய இருக்கு. வீட்டிலேயே அடைஞ்சு கிடந்தா... எப்படி முடியும்? உங்க வருமானத்துக்குள்ளே என்னதான் பட்ஜெட் போட்டு வாழ்க்கை நடத்தினாலும் விக்கிற விலைவாசிக்கு படியாது. போதாதுக்கு நான் வேற புது சுமை. பிராக்டிக்கலா யோசிச்சப்ப... நானும் வேலைக்கு போறதைத் தவிர வேற வழியே தெரியலை எனக்கு ப்ளீஸ்ண்ணா... எங்காவது ஒரு கணக்கெழுதற வேலையாவது வாங்கிக் குடுங்க.''

குழப்பம் தெளிந்து நிம்மதியாய் மூச்சு விட்டான்.

'நல்லவேளை... நாம் நினைத்தது போல் எதுவுமில்லை.'

''முயற்சிக்கிறேன்.'' என்றான் அவள் கன்னத்தை தட்டி!

**ஜ**னா மிகவும் ஆச்சர்யப்பட்டுப் போனான்.

'முன்னே போல் இல்லை சௌம்யா! வாழ்க்கையில் ஏற்பட்ட, நினைத்தே பார்த்திராத பலமான அடி அவளை ஒரு புரட்டு புரட்டி

எடுத்து விட்டிருந்தது. ஹாஸ்பிடலில் வழிதவறிய குழந்தையாய் தவித்த அந்த சௌம்யா... சத்தியமாய் இவளில்லை. பெற்றோர் இறந்த அதிர்ச்சியையே அந்த அனிச்ச மலர் தாங்கிக் கொண்டிருக்கும் போது அதை விட பெரிய துன்பம் வேறு வரவா போகின்றது? அடியும், அனுபவமும் சௌம்யாவின் முகத்தில் கூட ஒரு முதிர்ச்சியை தந்து விட்டிருந்தது. குறும்புத்தனம் முற்றிலுமாய் விடைபெற்று... பொறுப்பும், தன்னம்பிக்கையும் மிகுந்து தெளிவடைந்திருந்தது.

நூற்றுக்காணக்கான ஊழியர்கள் அவள் அப்பாவிடம் வேலை செய்த காலம் போய், இன்று அவளே வேறு ஒருவரிடம் வேலை கேட்டு புறப்பட்டு விட்டாள்.

பஸ்ஸை விட்டிறங்கி வளைவான மலைப்பாதைகள் ஏறிச் சென்றனர் ஜனாவும், சௌம்யாவும்.

இயற்கை சூழ்ந்த மலைப்பிரதேசம். சில்லென்ற காற்றில் யூகலிப்டஸின் வாசமும் கலந்திருந்தது. சௌம்யா ஒவ்வொன்றையும் ரசித்துப் பார்த்தபடி வந்தவளுள் ஒரு இனம் புரியா சங்கடம்.

இதே இடத்திற்கு ஏற்கனவே வந்தது போல் ஒரு உணர்வு.

''இந்த வேலை எனக்கு கிடைக்குமாண்ணா?''

''எஸ்டேட் முதலாளிக்கு நெருக்கமான நண்பர் நம்ம ஊர் பிரஸிடென்ட். அவரோட சிபாரிசு கடிதத்தோட போகும்போது உனக்கென்னம்மா கவலை?''

''ஏற்கனவே அப்பாய்ன்ட்மென்ட் ஆகியிருந்தால்?''

''இதுவரை பார்த்த எந்த கேன்டிடேட்டையும் அவர் செலக்ட் பண்ணலைங்கறது ஆறுதலான விஷயம்.''

''என்னையும் பண்ணலைன்னா?''



''வேற வேலைக்கு ட்ரை பண்ணலாம் ஏம்மா... எடக்கு மடக்காவே திங்க் பண்றே? நல்லதே நினை'' அன்பாய் கடிந்து கொண்டான்.

''இதுவரை நடந்ததெல்லாம் எடக்கு மடக்காதானே?'' சிரித்தபடி சொன்னாலும், அதில் ஒட்டியிருந்த சோகம் மனதை நெருடியது.

அலுவலகத்தை அடைந்தபோது, அலுவலகம் என்று சொல்வது தவறு... இயற்கை எழில் சூழ்ந்த பங்களா முன் சென்றபோது செக்யூரிட்டி வழிமறித்து விசாரித்து பின்னரே அனுப்பினான்.

வரவேற்பறையை ஒட்டி ஒரு சின்ன ஆபீஸ் அறை. சுற்றிலும் கண்ணாடி தடுப்பு. அதை ஒட்டிய மற்றொரு சிறிய அறையில் பெரிதாய் நோட்டை பிரித்து வைத்துக் கொண்டு கால்குலேட்டரை பட்பட்டென்று அழுத்தி துவம்சம் பண்ணிக் கொண்டிருந்தார். அம்பது வயது மதிக்கத்தக்க பொன்னுசாமி முதலாளியின் கணக்கு வழக்கைப் பார்ப்பவர்.

இவர்களைப் பார்த்து கண்ணாடி மீறி கண்கள் விரிய... விசாரித்தார்.

''உக்காருங்க... சார் வர அரைமணியாகும்.''

அரை மணி என்றது ஒரு மணி நேரமான பின் அழைப்பு வந்தது.

முதலாளி எந்த பக்கமாய் வந்தார்? அறையின் அந்தப் பக்கம் ஏதேனும் கதவு இருக்கிறதோ?

ஆச்சர்யப்பட்டனர்.

பதட்டமும், பயமுமாய் ஜனாவின் பின்னே சென்றாள்.

''வணக்கம்'' என்று கையெடுத்து கும்பிட்டவள் ரோலிங் சேரில் அமர்ந்திருந்தவனைப் பார்த்து முகம் மாறினாள்.



9

கருணையை இழந்துவிட்ட மனம் பாறையில் உருவான பூவைப் போன்றது. கிட்டத்தட்ட வினோத்தின் இதயம் கூட அப்படித்தான் மாறிப் போயிருந்தது.

எவளை தன்னுயிராய் நினைத்தானோ... அவளை உலகிலேயே தன்முதல் எதிரியாக கருத ஆரம்பித்திருந்தான்.

சௌம்யாவை அங்கு அவன் எதிர்பார்க்கவில்லை. பத்திரிகை மூலம் நடந்த சம்பவங்களை அவனும் அறிந்திருந்தான். உள்ளுக்குள் அவனுக்கும் மிருக குணம் இருந்தது. தன்னை ஒரு அடி அடித்தால்... திருப்பி நாலு அடி கொடுக்கும் அளவிற்கு பழிவாங்கும் எண்ணம் இருந்தது. அந்த செய்தியறிந்து அவன் சந்தோஷப்பட்டானேயொழிய... வருத்தப்படவேயில்லை.

'தேவைதான். ஊரை அடித்து உலையில் போட்டுக் கொண்டால் இதுதான் கதி' என்று நினைத்துக் கொண்டான்.

ஒரு கணம், ஒரே ஒரு கணம் ஹாஸ்பிடலில் இருக்கும் சௌம்யாவைப் போய்ப் பார்த்து வரலாமா? என்று தோன்றிய எண்ணத்தை உடனே அழித்தான்.

'நோ... கூடாது! வேறு எவனையோ மணக்க சம்மதித்தவள். என்னைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஓடியவள்... அவள் முகத்தில் விழிப்பதே பாவம். அவளை விட அழகாய், பணக்காரியாய் ஒரு பெண்ணை மணந்து அவள் முன்னே செல்ல வேண்டும். அதுவரை பார்க்கக் கூடாது' என்று சத்தியபிரமாணமே எடுத்து இருந்தான்.

அப்படிப்பட்ட எதிரி இன்று அவனிடம் வேலை கேட்டு வந்திருக்கிறாள். விடுவானா?

சௌம்யா பெரிதும் அதிர்ந்து விழுந்து விடாதிருக்க டேபிளை பிடித்துக் கொண்டாள்.



'இவனா?' உடல் கூசிப் போனது.

'ப்ளீஸ்... சிட்டவுன்.'

அந்த குரலில் ஏளனமா? கேலியா? எதுவும் புரியாமல் அவனையே பார்த்தாள்.

'உக்காருங்கன்னு சொன்னேன்'' மறுபடி அவன் அழுத்தி சொல்லவும்.

ஏற்கனவே உட்கார்ந்து விட்ட ஜனா அவள் கையை மெல்ல அழுத்தி கிசுகிசுத்தான்.

''உக்காரு சௌமி.''

படபடப்பை கட்டுப்படுத்தி அமர்ந்தாள்.

ஏதோ ஒரு பைலை புரட்டியபடி... அவ்வப்போது நிமிர்ந்து பார்த்து பேசினான்.

''உங்க பேரு என்ன?''

'உங்களுக்கு தெரியாதா வினோத்? பச்சை குத்தாமலே பதிஞ்சிபோன பெயரை இவ்வளவு சீக்கிரம் மறந்து விட்டீர்களா?'

''ஹலோ... மிஸ்... மிஸ்... தானே? இல்ல மிஸஸா? உங்க பேரு என்னன்னு கேட்டேன்.''

இப்போது அவனுடைய மனது தெளிவாகப் புரிந்தது. ஒரு காலத்தில் சின்ட்ரெல்லா தேவதையாய் அவன் இதயத்தில் வலம் வந்தவள்... இன்று அரக்கியாகி விட்டேன். அவனிடம் வேலை தேடி வந்ததை சாதகமாக்கி என்னை அவமானப்படுத்தும் நோக்கில் பேசுகிறான். தனக்கும், அவனுக்கும் சம்பந்தமே இல்லாதது போல் பேசுகிறான். இருக்கட்டும். இப்போது நான் உடைந்து போகக் கூடாது. தலைகுனியக் கூடாது. இதில் எதற்கு பயமும் பதட்டமும்? இங்கு நான் வேலை கேட்டு வந்தவள். பிச்சைக் கேட்டு அல்ல... கொடுப்பதும் கொடுக்காததும் அவன் விருப்பம் அதற்கேன் நான் தலைகுனிய வேண்டும்?

அவள் நிமிர்ந்தாள். நேருக்கு நேர் பார்த்தாள்.

அந்த முகம் அவளை சில நொடிகள் என்னவோ செய்தது. பளீரென்ற வெள்ளை நிறம். சற்றே பெரிய கண்கள். அன்பு மிளிர்ந்த கண்களுள் இன்று அலட்சியம் மேலோங்கியிருந்தது. தடித்த உதடுகள் கேலியாய் சுளித்தன. நீளமான மூக்கு அவனுக்கு. சௌம்யா அவனுடன் விளையாடிய காலங்களில் மூக்கைதான் பிடித்து திருகி விட்டு ஓடுவாள். கன்னங்களில் ரேஸர் மழித்ததில் பச்சை வாங்கியிருந்தது. ஜீன்ஸ்... இன் பண்ணிய ஷர்ட்டின் மேல் ஜெர்கின் அணிந்திருந்தான்.

'இவன் என்னுடைய வினோத் இல்லை.'

''ஐ'ம் சௌம்யா. மிஸ்... சௌம்யா.''

''ம்....'' லேசாய் தோளைக் குலுக்கிக் கொண்டான்.

''சார்... இவ என் சிஸ்டர் மெட்ராஸ்லேர்ந்து வந்திருக்கா. ரீஸண்டா எங்க பாரெண்ட்ஸ் இறந்துட்டாங்க. மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வேலைக்குப் போனா நல்லதுங்கற முடிவோட இங்கே வந்திருக்கா... உங்க ஆபீஸ்ல... செக்ரட்டரி வேகன்ட் இருக்குன்னு கேள்விப்பட்டோம். அதுக்காகத்தான் வந்தோம்.''

''நான் ஒண்ணும் இவங்க ஹிஸ்டரிய கேக்கலியே'' நச்சென்று அவன் அப்படி சொன்னதும் ஒரு மாதிரியாகி விட்டது ஜனாவுக்கு.

''ஸாரி... சார்! பை த பை.. இது பிரஸிடென்ட் கோபாலன் குடுத்த லட்டர்.''

''சிபாரிசா? உங்க சிஸ்டருக்கு தகுதியிருந்தா... இந்த வேலைக்கு சிபாரிசே தேவையில்லே. சொல்லுங்க... என்ன படிச்சிருக்கீங்க? அக்கவுண்ட்ஸ் தெரியுமா?''

''நல்லாத் தெரியும். பி.காம்.... பைனல் இயர் படிச்சிட்டிருக்கப்ப... மேற்கொண்டு படிக்க முடியாம படிப்பை நிறுத்திட்டேன்.''



''ஐ... ஸீ! மிஸ் சௌம்யா! இது முழுக்க முழுக்க... என்னை ஐ... மீன்... என்னோட ஷெட்யூலை கவனிக்கற வேலை. அடிக்கடி என்னோடவே எஸ்டேட்டுக்கு வரவேண்டியிருக்கும். ஹோட்டலுக்கு டின்னருக்கு போகும்போதெல்லாம் நீங்களும், வரவேண்டியிருக்கும். ஸம் டைம்ஸ் நைட்டு பத்து மணிக்கு மேல கூட கணக்கு வழக்கு பார்க்க வேண்டியிருக்கும் முடியுமா உங்களால?''

ஜனா திகைத்தான்.

சௌம்யா புன்னகைத்தாள்.

''முடியும் சார்.''

''ஓ'' ஆச்சர்யப்பட்டபடி ''ஓக்கே! தென் அவுட் ஹவுஸ்லேயே தங்கணும். சாப்பாடு வசதியெல்லாம் இங்கேயே...''

சௌம்யா எதையும் யோசிக்கவில்லை.

உடனே ''சரி'' என்றாள்.

ஜனா ரொம்ப ஆச்சர்யப்பட்டான்.

'ஒரு வயசுப் பெண் எப்படி இங்கு தங்கி அதுவும் இரவு நேரங்களில் கூட வேலை செய்ய முடியும்? எப்படி சம்மதித்தாள். இவன் பேசும் விதமே சரியில்லையே! இவள் எப்படி சமாளிக்கப் போகிறாள்?'

அண்ணனின் முகபாவனையைப் பார்த்து மென்மையாய் புன்னகைத்தாள்.

'என்னால முடியும்ண்ணா...' என்றது பார்வை.

''வெரிகுட்... இப்படிப்பட்ட நிபந்தனைக்கு பயந்தே யாரும் இந்த வேலைக்கு வரலை. உங்களுக்கு எந்த பயமும் இல்லையா?''

''பயப்படற அளவுக்கு இங்கே மிருகங்கள் இருப்பதாக தெரியவில்லை. அப்படியே இருந்தாலும். அவை என்னை

நெருங்காதபடி என்னை தற்காத்துக் கொள்ள முடியும் என்றும் நம்புகிறேன்.''

அவளுடைய பதில் வினோத்தை உசுப்பிற்று.

'பணக்காரத் திமிர் இன்னும் அடங்கலையா? அடக்கறேன். நான் பட்ட அவமானத்தை நீயும் படனும். அந்த வேதனையை நீயும் அனுபவிக்கனும். இவ்வளவு ஆன பிறகும் என்னிடமே வேலைக்கு வருவதன் உள்நோக்கம் எனக்கு தெரியாதா என்ன? நீ என்னதான் முயன்றாலும் மறுபடி என் மனதில் உனக்கு இடமில்லை' மோசமாய் எடை போட்டான்.

''நான் எப்போ வந்து ஜாய்ன் பண்ணட்டும்?''

''கமிங்... ப்ரைடே!''

''ஓக்கே சார்'' பவ்யமாய் வணங்கி விடைபெற்றனர்.

ஆனமட்டும் ஜனாவும், பவித்ராவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர். ம்ஹூம்... சௌம்யா மசியவில்லை. அந்த வேலைக்கு சென்றே தீருவேன் என்று வந்து விட்டாள்.

சௌம்யாவிற்கு இந்த அனுபவம் புதிது. இந்த வேலை புதிது.

ஏற்கனவே இருந்த பொன்னுசாமி போய் விட்டதால்... அந்த கணக்கு வழக்குகளை சௌம்யாவே பார்த்துக் கொண்டாள். அக்கவுண்ட்ஸ் படித்தவளாகையால் அந்த வேலை அத்தனை சிரமமாய் இல்லை.

தினசரி வினோத்தை பார்க்க வரும் எஸ்டேட் ஊழியர்கள், பிஸினஸ் நண்பர்கள் என யார் வந்தாலும் விசாரித்து... வினோத் விருப்பப்பட்டால் சந்திக்க அனுமதிப்பாள். வரும் போன் கால்களை அட்டெண்ட் பண்ணி பதில் கூறினாள். ஆரம்பத்தில் சற்று தடுமாற்றம் இருந்தது. நிஜம்தான். வினோத் அவளுக்கு பணிக்கென தனியறை கொடுத்திருந்தான். அவனாக அழைத்தால் ஒழிய, அவனை பார்க்க வருவதில்லை. எந்த செய்தியையும், இண்டர்காமில் கொடுத்து



விடுவாள். சில சமயம் அவன் ஏழு மணி வரைக்கூட ஆபீஸ் அறையில் அமர்ந்து பைல்களை பார்த்துக் கொண்டிருப்பான். பக்கத்து அறையில் எந்த வேலையும் இல்லையென்றாலும்.... அவளும் அமர்ந்திருப்பாள். அவன் வேலையை முடித்து விட்டு புறப்படும்போது தான் பார்ப்பான்.

''நேரமாச்சு... புறப்படலாம்'' என்று சொல்லி விட்டு அவள் பதிலுக்குக் கூட காத்திராமல்... மாடியேறி போய் விடுவான்.

சௌம்யா எதற்கும் துவண்டு போவதில்லை.

அந்த பங்களாவை விட்டு நாற்பதடி தொலைவில் அவுட் ஹவுஸ் இருந்தது. அவளுக்கு போதுமான அளவில் ஒரு ஹால், பெட் ரூம், கிச்சன், பாத்ரூம்... என்று தன் அண்ணன் குடும்பம் வசிக்கும் வீட்டை விட சற்றுப் பெரிதாகவே இருந்தது. ஃப்ரிட்ஜ், டி.வி. ஹீட்டர் வசதி என சகலமும் இருந்தது. வேளா வேளைக்கு வேலைக்காரி ஹாட்பேக்கில் சமைத்து எடுத்து வந்து வைத்து விடுவாள். மனசுக்குள் வினோத்திற்கு நன்றி கூறினாள்.

ஆனாலும் ஒரு வருத்தம். அவள் நெஞ்சில் நிழலாடிக் கொண்டேயிருந்தது.

வேலை கொடுத்தவன், இருக்க வீடும் கொடுத்து, உண்ண உணவும் கொடுப்பவன். யாருக்கும் கொடுக்காத வேலையை அதிக கேள்விகளை கேட்காமல் எனக்குக் கொடுத்தவன். என்னை பழிவாங்க வேண்டும் என்று நினைத்திருந்தால்... இந்த வேலையை கொடுக்காமலேயே பழிவாங்கியிருக்கலாம். நெஞ்சில் கொஞ்ச மேனும் பழைய அன்பு இல்லாமலா இருக்கும்? ஆயிரம்தான் துரோகியாய் இருந்தாலும், ஒரு வார்த்தை என் பெற்றோரின் இழப்பைப் பற்றி துக்கம் விசாரித்திருக்கலாமே. அந்தளவு கூடவா இங்கிதம் தெரியாது?

'என் மேல் என்ன கோபம் வினோத்? புயலில் அடிபட்ட கொடியாய் எப்படியோ தப்பித்து இங்கு வந்து சேர்ந்தேன்.

பாதுகாக்க வேண்டாம். காலால் நசுக்காமலாவது இருக்கலாமே. புண்பட்ட இதயம் எரிகிறது வினோத். ஆபீஸ் சம்பந்தப்பட்ட பேச்சை தவிர்த்து... நட்பாய் கூட ஒரு வார்த்தை என்னிடம் பேசக் கூடாதா?' தனிமையில் மருகினாள்.

இரவு நேரக் குளிர் ஒரேயடியாய் வெடவெடக்க செய்தது. தோட்டத்தில் பீய்ச்சியடித்த சோடியம் விளக்கொளியில்... பனி மேகங்களின் அணிவகுப்பு புகைப்படலமாய் எதிர்ப்பட்டவை களை உரசிச் செல்ல... ஜன்னல் வழியே அந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பது அவளுக்கு மிகவும் பிடிக்கும். சென்னை நகரத்து வாகனங்கள் வெளியிடும் புகைக்கும்... இந்த புகைக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்? சௌம்யாவிற்கு குன்னூரை மிகவும் பிடித்து விட்டது. அந்த பங்களாவும் சற்றே ஒதுக்குப்புறமாய் அமைந்திருந்தபடியால்... மனிதர்களின் நடமாட்டம் அவ்வளவாய் இன்றி இயற்கையின் கன்னித்தன்மை இன்னும் மாறாமல் இருந்தது.

ஆபீஸ் அறைக்கு பத்து மணிக்கு வந்தமர்வான். அந்த அறையில் அவனின் அப்பா, அம்மா போட்டோ அணையா விளக்கோடு, சந்தன மாலையோடு மாட்டப்பட்டிருந்தது. அறைக்குள் வந்ததும் வினோத் சில நொடிகள் போட்டோ முன் கண்மூடி பிரார்த்தித்த பிறகே சேரில் அமர்வான்.

'ஒருவேளை... இவர்கள் உயிரோடு இருந்திருந்தால் வினோத் இப்படி என்னை வெறுக்குமளவு விட்டிருக்க மாட்டார்களோ?' சௌம்யாவினுள் ஏக்கம் எட்டிப் பார்க்கும்.

'சே... நான் ஒரு மடைச்சி, நம்பிக்கையும், பணமும், கவுரமும் போய் விட்டால்.... மனிதன் பிணம்தான். இன்று சொன்னாலும், சொல்லாவிட்டாலும் நானொரு பிணம். அப்படிப்பட்ட பிணத்தை காதலிக்க வினோத் என்ன முட்டாளா? ரொம்பதான் பேராசைப்படுகிறேன்' தன்னையே தேற்றிக் கொண்டாள்.



அன்று! முதல்முதலாக பீல்டுக்கு அழைத்துச் சென்றான். ஜீப்பில் அவன் பக்கத்தில் அமர்ந்து செல்வதே சுகமான அனுபவமாக இருந்தது. இந்த நொடியே... இந்த சந்தோஷமான நொடியே... தான் அப்படியே காற்றில் கரைந்துப் போகக் கூடாதா என்றிருந்தது.

''அதோ... அந்த பில்டிங்க் தெரிகிறதே... அதுவரை என் எஸ்டேட்தான்.''

''இதோ... இங்கிருந்து அதுவரை உள்ளதெல்லாம் நம்மோட எஸ்டேட் தான் சௌமி'' எத்தனையோ வருடங்களுக்கு முன்பு, விபரம் புரிய ஆம்பித்த புதிதில் சிறுமியாய் அவள் தன் தந்தையுடன் இங்கு வந்திருந்த காலகட்டத்தில் இதே வினோத், தன் தோழி சௌம்யாவுடன், எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டியபோது கூறிய வார்த்தைகள் அவை.

அன்று... நம்மோடது.

இன்று... என்னோடது.

'கொடுத்ததை மறப்பதும்... பெற்றதை நினைப்பதும் நட்புக்கு அழகு நான் கொடுத்த உண்மையான நேசத்தை மறந்துவிட்டு அப்பாவால் உதாசீனப்பட்டதை மட்டுமே நினைவில் கொண்டு என்னை பழிவாங்குவதில் என்ன நியாயம் வினோத்?'

ஜீப்... ஒரு சரிவைத் தாண்டி நின்றது. மிக குறுகிய பாதை அது. எட்டிப் பார்த்தால்... கிடு... கிடு பள்ளம்... பசுமையாய்... வெண்போர்வை போர்த்திக் கொண்டு! ஏனிங்கு ஜீப்பை நிறுத்தினான்?

'ஒருவேளை என்னிடம் ஏதேனும் பர்ஸனலாய் பேசவா?' ஏகாந்தமான சுற்றுப்புற சூழ்நிலையில் மனம் ஆவலாய் எதிர்பார்த்தது.

வினோத் கையை பரபரவென தேய்த்து கன்னத்தில் வைத்து பாக்கெட்டில் இருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டை உருவி உதட்டில் வைத்து... லைட்டரால் அதன் முனையை சிகப்பாக்கி புகைக்க ஆரம்பித்தான்.

அவன் பார்வை எங்கோ நிலைப்பெற... அவன் தனிமையை கெடுக்க விரும்பாமல் சற்றுத் தள்ளி நின்று இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தபோது தான்... வளைவில் இருந்து ஒரு கார் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தது.

வினோத் இயல்பாய், மெதுவாய், பின்னோக்கி நடந்துக் கொண்டிருந்தான் வரும் ஆபத்தை உணராமலேயே!

கடைசி நொடியில் பார்த்து... பதறி... ஓடோடி வந்து வினோத்தை இழுத்து விட்டாள் சௌம்யா! இன்னும் படபடப்பு அடங்காமல் வினோத்தின் முகத்தைப் பார்த்தாள்.

ஆச்சர்யமும், பரவசமுமாய் ''தாங்க்ஸ் சௌம்யா'' என்று கூறுவான் என்று எதிர்பார்த்திருக்க...

அவன் தொட்டு இழுத்துவிட்ட வலது மணிக்கட்டை உயர்த்தி... ப்பூ என்று ஊதி... கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டு ஜீப்பில் ஏறி அமர்ந்தான் எதுவும் நடவாதது போல.

ரத்தமே சுண்டிப்போன அவமானம் தாக்க துளிர்த்த நீரை அடக்க முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு ஏறி அமர்ந்தாள் சௌம்யா!



10

**ப**னிப்புகை வேகமாய் ஊடுருவிச் சென்று கொண்டிருந்தது. கண்ணாடி ஜன்னல்களில் எல்லாம் அதன் முகத்தின் முத்துக்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அவனுக்கு ஓய்வு நாள். இரண்டாவது மாடியின் பால்கனியில் அமர்ந்திருந்த வினோத் பழையவைகளை அசை போட்டுக் கொண்டிருந்தான். இங்கிருந்துப் பார்க்க அவுட் ஹவுஸ் தெளிவாகத் தெரிந்தது. கதவில் பூட்டு.



சௌம்யா இரண்டு வாரத்திற்கு ஒரு முறையாவது தன் அண்ணன் வீட்டுக்குச் சென்று விட்டு திங்கள் அதிகாலை ஆஜராகி விடுவாள்.

அவன் அவளிடம் அலுவலக ரீதியாக மட்டுமின்றி வேறெதையும் பேசுவதில்லை. ஆறு மாதம் ஓடிவிட்டது. அவள் இங்கு வந்து.

சௌம்யாவினாலும், அவள் அப்பாவினாலும் ஏற்பட்ட அவமானம் தாங்காது தான் ஆண்பிள்ளை என்பதையும் மறந்து தனியறையில் வாய்விட்டு அழுததை எண்ணும் போது, இப்போது அவனுக்கு அசிங்கமாய் இருந்தது. அதற்கு காரணமானவளை துன்புறுத்திப் பார்க்கவேண்டும், அழ வைக்க வேண்டும் என்று எவ்வளவோ முயன்றான். ஆனால் என்ன கல் நெஞ்சமோ? அத்தனை அவமானங்களையும் உதாசீனங்களையும் பொறுத்துக் கொண்டு வலம் வருகிறாளே தவிர அழவே காணோம். அதுவே அவனை இன்னும் வெறிக்குள்ளாக்கிற்று.

அவளை நேருக்கு நேர் பார்க்கும் போதெல்லாம் தான் அவமானப்பட்ட சம்பவம் நினைவுக்கு வந்து மூக்கு நுனி சிவக்க வைக்கும். அன்று கூட பீல்டுக்குப் போகும் வழியில் அவனைக் காப்பாற்ற கையைப் பிடித்து இழுத்து விட்டதும், தன் கையை உதறி துடைத்துக் கொண்டதும், அதனால் அவள் முகம் சிறுத்துப் போனதும் கண்டு மனம் கும்மாளமிட்டது நிஜம். ஆனால் தனிமையில் யோசித்த போது தான் நடந்து கொண்டது கேவலமான செயல் என உணர்ந்தாலும், அவளிடம் அதற்காக மன்னிப்பு கேட்க விரும்பவில்லை.

ஜனார்த்தனன் பற்றி வினோத்துக்கு முன்பே தெரியும். வெங்கடேசன் எல்லாம் சொல்லியிருந்தார்.

'ஒரு நாள் லீவு என்றாலும் உடனே அண்ணனை பார்க்க ஓடி விடணுமா?' என்று கோபப்பட்டான்.

அந்த கோபத்திற்குக் காரணம் சௌம்யா மீதுள்ள அன்பு அல்ல. போரடிக்கிறது. அவளிருந்தாலாவது எதையாவது சொல்லி இதயத்தை காயப்படுத்தலாமே... அதற்குத்தான்.

சௌம்யா... அந்த மூக்குடைப்பு நிகழ்ச்சிக்குப் பிறகு இன்னமும் ஒதுங்கிப் போனாள்.

மலருக்கு ஆசைப்படும். இதயம்தான் முள்ளைக் கண்டு வருந்தும். வினோத்தின் அழகிய வெளிப்புறத் தோற்றத்திற்குள்ளே இப்படியொரு அரக்கன் ஒளிந்திருப்பது வேதனையை அளித்தது. அதனாலேயே இப்பொதெல்லாம் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அண்ணன் வீட்டுக்குப் போய் விடுகிறாள். ஆனாலும், அந்த வேலையை விட்டு ஒரேயடியாய் ஒதுங்கி போக முடியவில்லை. வினோத் அருகே இந்த மட்டுமாவது இருக்க முடிகிறதே என்ற ஆறுதல்... அவளுக்கு அவசியமாயிருந்தது.

ரொம்ப போர் அடித்தது. கை, கால்களை சோம்பல் முறித்து அந்த பீரோவை திறந்து பழைய ஆல்பங்களை எடுத்து புரட்ட ஆரம்பித்தான். அதில் நாலைந்து ஸ்டில்களில் சௌம்யா. வெங்கடேசன் குடும்பத்தோடு. தனியாக மற்றும் வினோத்தோடு. ஃபிராக்கில், புஷ்டியான ஆப்பிள் கன்னத்தில் குழிவிழ, சிரிக்க... பக்கத்தில் முன்பல் விழுந்து இன்னும் முளைக்காத பல்லை மறைக்க வாயைப் பொத்தி சிரித்தபடி வினோத்.

வினோத்தின் விரல்கள் அந்த போட்டோவை தடவியது.

''நோ... தொடாதே! நீ இவளைத் தொட அவள் அருகதை இல்லாதவள்.''

'உன் எதிரி! உன்னை விட பணக்காரன் மாப்பிள்ளையாய் கிடைத்ததும்... தூசு போல் உன்னை உதறியவள்.'

அவ்வளவுதான்.

அடுத்த கணம்... தன் பாக்கெட்டில் இருந்த பேனாவை எடுத்து சௌம்யாவின் மீது ஆவேசமாய் கிறுக்கினான்.



தன் சூட்கேஸைத் திறந்து அந்த போட்டோவை எடுத்தாள் சௌம்யா. பார்த்த மாத்திரத்தில் கண்ணில் முட்டிக் கொண்டு நின்றது நீர்.

''அம்மா... இன்னைக்கு உன் சௌம்யாவோட பிறந்தநாள்மா! காலையில் எழுந்ததும் கன்னத்துல முத்தம் கொடுத்து 'ஹாப்பி பர்த்டே' சொல்லி எழுப்புவியே... இந்த வருஷம் ஏம்மா அப்படி செய்யலை? அப்படியென்ன தொந்தரவு தர்றேன்னு என்னை மட்டும் இங்கே விட்டுட்டுப் போயிட்டீங்க?''

'டாடி, வருஷம் தவறாம எதையாவது ப்ரசென்ட் பண்ணுவீங்களே... இந்த வருஷம் உங்க மரணம்தான் எனக்கு பரிசா?' லேசாய் முதுகு குலுங்க அழுதவள் போட்டோவிற்கு முத்தம் கொடுத்து வைத்து விட்டாள்.

ஒவ்வொரு வருடமும், அவள் பிறந்தநாளை அமர்க்களப் படுத்திக் கொண்டாடுவார்கள். ஈஸ்வரி ஆயிரம் பேருக்கு அன்னதானம், ஊனமுற்ற பள்ளிகளுக்கு நன்கொடை என வாரி வழங்குவாள். அதனால்தான் ஆண்டவன் இவள் உயிரை மட்டும் காப்பாற்றி விட்டானோ?

எல்லா வேதனைகளையும், மீறிஒரு ஆறுதல், நேற்றைய பேப்பர்களின் தலைப்புச் செய்தியே இதுதான்.

'சௌம்யா ஃபைனான்ஸின் நிர்வாக இயக்குனர் சிவராமன் அகப்பட்டார். பத்து கோடி பணம் மீட்பு. மீதி பதினைந்து கோடி எங்கே?'

அதை படித்ததும் போன உயிர் திரும்ப வந்தது போலிருந்தது சௌம்யாவிற்கு.

மீட்கப்பட்ட பணம், கைப்பற்றப்பட்ட, புஷ்பலிங்கம் குடியிருந்த வீடு உட்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் விற்று டெபாசிட்தாரர்களுக்கு விரைவில் பணம் திரும்ப கொடுக்கப்படும் என்று மாநகர கமிஷனர் அறிக்கை வெளியிட்டு இருந்தார்.

சித்தப்பா மட்டும் இப்படி செய்யாதிருந்தால்... என் நிலை இப்படியாகியிருக்குமா? அநியாயமாய் என் பெற்றோரை பறிகொடுத்திருப்பேனா?

தன்னை மெல்ல ஆஸ்வாசப்படுத்திக் கொண்டவள் ஹேண்ட் பேகை திறந்து பார்த்தாள். மில்க் சாக்லேட் பட்டை பத்திரமாக இருந்தது.

அப்போது... கதவு தட்டப்பட்டது.

திறந்தாள்.

வேலைக்காரி பொன்னம்மா... ஹாட்பேக்கோடு நின்றிருந் தாள். வழக்கம்போல் உணவை கொண்டு வந்து டேபிளில் வைத்தாள்.

"தாங்க்ஸ் பொன்னம்மா."

"ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே? உடம்பு கிடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம்... ஒண்ணுமில்லே."

"கண்ணெல்லாம் சிவந்திருக்கேன்னு கேட்டேன். வேற எதுனா வேணும்னா சொல்லு எடுத்துட்டு வர்றேன். இன்னிக்கு வெங்காய அடையும், இட்லி சட்னியும்தான்."

"அது போதும் பொன்னம்மா."

போய் விட்டாள்.

**மு**ற்பகல் நேரம்.

தன் அலுவலக அறையில் சின்சியராய் எதையோ எழுதிக் கொண்டிருந்தவன்... அறை கதவு தட்டப்பட்டதும் "கமீன்...." என்று நிமிர்ந்தான்.

உள்ளே நுழைந்த சௌம்யாவிற்கு அந்த குளிரிலும் வியர்த்தது.

"ம்...." என்றபடி ஏறிட்டான்.



சாம்பல் நிற காட்டன் சேலை. அதே நிற ப்ளவுஸ். அவள் நிறத்தை பளீரென எடுத்துக் காட்டியது. தளர்வாய் பின்னிய கூந்தலில் மல்லிகைப் பூ வைத்திருக்க அந்த இதமான அழகு அவனை ஒரு உலுக்கு உலுக்க ஆடிப்போனான் வினோத்.

சௌம்யா அவனைப் பார்த்து மென்மையாய் உதடு பிரியாமல் புன்னகைத்தாள்.

கன்னத்தில் குழி.

அழகு என்பது சக்தி. புன்னகை என்பது அதன் கத்தி.

எங்கே அது தன்னை தாக்கி விடுமோ என்கிற பயம் எழ... "என்ன?" என்றான் விறைப்பாக.

சௌம்யா சாக்லேட்டை நீட்டினாள்.

"எதுக்கு?" வியப்பாய் பார்த்தான்.

"எனக்கு இன்னைக்கு பர்த்டே"

"ஓ...!" என்றான் கேலியாய்.

"உங்கம்மா, அப்பா செத்து எத்தனை மாசமிருக்கும்?"

"ஏழு."

"ஏன் இதை கேட்கிறான்?"

"இந்த ஏழு மாசத்துக்குள்ளே பர்த்டேயெல்லாம் கொண்டாடற அளவுக்கு மனசு தேறியாச்சா? வெரிகுட்!"

அதில் பொதிந்திருந்த அர்த்தம் உணர்ந்து துடித்துப் போனாள் சௌம்யா!

'எனக்கேன் இது தெரியாமல் போனது? இவன் கேட்பதில் எந்த தவறுமில்லை.'

"ஸ... ஸாரி..."

"இட்ஸ் ஒக்கே... அந்த சாக்லேட்டை அப்படி வச்சிட்டுப் போங்க..." என்றான் கையால் வாங்காமலேயே!

'ஹாப்பி பர்த்டே... என்று சொல்லக் கூடவா மனம் வரவில்லை வினோத்?' மனம் வெதும்பி திரும்பிப் போக...

"ஒரு நிமிஷம் மிஸ் சௌம்யா! அந்த கப்போர்ட்ல க்ரீன்லேன்ட் எஸ்டேட் ஃபைல் இருக்கும். அதை எடுத்துக் குடுத்துட்டுப் போங்க."

சௌம்யா கப்போர்டில் அவன் கேட்ட ஃபைலை தேட ஆரம்பித்தாள்.

அந்நேரம்...

போன் அலறியது.

வினோத் எழுதுவதில் தீவிரம் காட்ட... சௌம்யா ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"...."

"யெஸ் ஹூ ஆர் யூ?"

"...."

"ஒன் மினிட் ப்ளீஸ்..." என்றவள் ரிசீவர் வாயைப் பொத்தி... "ஸார்... கால் ஃப்ரம் மலேஷியா! யாரோ ஷர்மிலியாம்..."

"ஓ... காட்... ஷர்மிலியா?" பட்டென்று ரிசீவரை பிடுங்கி பேசினான்.

"ஷர்மிலியா? எப்படியிருக்கே டியர்?"

"....."

"எனக்கென்ன? ஐ'ம் ஆல்ரைட். ஆஸ்ட்ரேலியா போனியே... ட்ரிப் எப்படி இருந்தது?"

"....."

"உன்னோட வரணும்னு எனக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? நேரமில்லே... பிஸி ஷர்மி!"



சௌம்யா வினோத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'யாரிந்த ஷர்மிலி?'

"ஒரு நிமிஷம் ஷர்மி..." என்றவன் இவளைப் பார்த்து...

'மிஸ்... சௌம்யா... ஃபைலை அப்புறம் தேடிக்கலாம்... கொஞ்சம் பர்ஸனலாய் பேச வேண்டியுள்ளது. ப்ளீஸ்...' என்றான் தயவாய்!

சுளீரென சாட்டையால் அடிபட்ட வலியோடு வெளியேற... ஆனந்தமாய் பார்த்தான் வினோத்...

"வாங்கண்ணா..." என்று ஜனாவை ஆச்சர்யமாய் வரவேற்றாள் சௌம்யா!

இதுநாள் வரை அவள் இருப்பிடம் தேடி வராதவன் முதல் முதலாய் இப்போதுதான் வருகிறான்.

ஆச்சர்யம் தாங்கவில்லை அவளுக்கு.

"என்னண்ணா திடீர்னு? போன் பண்ணியிருந்தா நானே வந்திருப்பேனே..."

"ரொம்ப முக்கியமான... அதே சமயம் நல்ல விஷயம்.... அதையெல்லாம் போன்ல சொல்லக் கூடாதுன்னுதான் நேர்லேயே வந்தேன்."

"சஸ்பென்ஸ் வேண்டாம். சீக்கிரம் சொல்லுங்க."

"இந்த அண்ணன் வேற தாய் வயித்துல பொறந்திருந்தாலும்... உன் கூட பழகினது கொஞ்ச நாளே ஆனாலும் உயிரையே வச்சிருக்கேன்ங்கறது உனக்குத் தெரியும்தானே?"

"இப்படியெல்லாம் பேசி என்னை அழவைச்சி பார்க்கணும்னு வேண்டுதலா உங்களுக்கு? இதெல்லாம் சொல்லிதான் தெரியணுமா எனக்கு?" பொய்யாய் கோபித்தாள்.

"அம்மா, அப்பா இருந்திருந்தா... இந்நேரம் ஓஹோன்னு வாழ்ந்திருப்பே... இப்படி உன்னை வேலைக்கு அனுப்பி வைக்கறதே எனக்கு பிடிக்கலே தெரியுமா?"

''எனக்கு பிடிச்சிருக்கண்ணா''

''நான் சொல்லப் போற விஷயமும் உனக்கு பிடிக்கணும்.''

''இன்னும் விஷயத்துக்கே வரலியே...''

''வந்துட்டேன். நம்ம வீட்டு பக்கத்து தெருவிலேயே மல்லிகை டிபார்ட்மென்ட்டல் ஸ்டோர் இருக்கு தெரியும்ல?''

''ம்....''

''அதை மோகன்னு எனக்கு தெரிஞ்ச பையன்தான் நடத்திட்டு வர்றான்.''

''சரி....''

''வீட்டுக்கு ஒரே பையன். ஓரளவு வசதி. பைக் வச்சிருக்கான். சொந்த வீடு...''

''....''

''உன்னை அவன் பார்த்திருக்கான். ரொம்ப பிடிச்சுப் போய்... அவங்க அம்மா, அப்பாவோட வீட்டுக்கு வந்து, பொண்ணு கேட்டாங்க. எனக்கும் பிடிச்சிருக்கு. பவித்ராவுக்கும் இதுல ரொம்ப திருப்தி. பையன் கொஞ்சம் கறுப்புதானே தவிர, நல்ல லட்சணமாயிருப்பான். சீர், செனத்தி, நகை நட்டுனு எதையும் எதிர்பார்க்கல... உனக்கு விருப்பம்னா... முடிச்சிடலாம். நாளன்னிக்கு அவங்கள்லாம் நம்ம வீட்டுக்கு வர்றேன்னு சொல்லியிருக்காங்க. நீ இன்னைக்கே லீவு போட்டுட்டு வந்தா சௌகர்யமாயிருக்கும்''

''....''

''என்னம்மா.... ஒண்ணும் பதிலே இல்லே...''

''அண்ணா!'' என்றாள் அவள் குரல் அவளுக்கே கேட்காத அளவில் தேய்ந்து போய்.

''வேண்டாம்ணா...''



''என்ன வேண்டாம்ங்கறே? புரியுது. அம்மா, அப்பா செத்து ஒரு வருஷமாகாம நல்ல காரியம் நடக்க வேணாங்கறியா? பேசி முடிச்சிடுவோம். ஒரு வருஷம் முடிஞ்ச பிறகு கல்யாணத்தை முடிச்சிடலாம்.''

''இல்லேண்ணா... எனக்கு இப்ப கல்யாணமே வேணாம்.''

அதிர்ந்து விட்டான் ஜனார்த்தனன்.

''என்னம்மா சொல்றே? கல்யாணமே வேண்டாம்னா என்ன அர்த்தம்?''

''.....''

சௌம்யாவின் கைகளை பற்றிக் கொண்டான்.

''புரியுது சௌம்யா! எப்படியோ இருந்தவ... பெரிய பெரிய இடத்திலேர்ந்தெல்லாம் உன்னை மருமகளா அடைய நீ, நான்னு போட்டி போட்டிருப்பாங்க. ஆனா, இப்ப நான் பார்த்திருக்கிற மாப்பிள்ளை. அப்போது உன் வரையில் உன்னை நெருங்கக் கூட தகுதியில்லாதவனாயிருக்கலாம். ஆனா, யோசிச்சுப் பார் சௌம்யா. அப்போ போட்டி போட்டவங்கள்லாம் உன்னை சுத்தியிருந்த மாயையான அந்தஸ்திற்காகத்தான். வந்தாங்களே தவிர, அவங்கள்ல யாராவது ஒருவராவது இப்ப உன்னை கட்டிக்க முன் வருவாங்களா? முடியாது சௌமிம்மா! கொள்ளுன்னா... வாயை திறக்கிற குதிரை, கடிவாளம்னா... கப்சிப்னு வாயை மூடிக்கும் மனுஷங்களும் அந்த மாதிரிதான் சௌமி! நான் ஒரு சாதாரண மனுஷன். என்னால எந்தளவு முடியுமோ... அந்த வரைக்கும் தான் முயிற்சிக்க முடியும். இப்ப உன் நிலையை நினைச்சிப் பார். உனக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைச்சி தர வேண்டியது என்னோட கடமை. அதை நான் சந்தோஷமா நினைக்கிறேனே தவிர, சங்கடமா நினைக்கலை.... ப்ளீஸ்... சௌமி... ஒரு நல்ல முடிவை எடு''

சௌம்யாவினால் எவ்வளவு கட்டுப்படுத்தியும் விம்மலை அடக்க முடியவில்லை.

''ப்ளீஸ்ண்ணா... வேண்டாம்... கட்டாயப்படுத்தாதீங்க?''

''முட்டாள்தனமா பேசாதே. நான் சொன்னா உனக்குப் புரியாது. சொல்ல வேண்டியவங்களை வச்சு சொல்ல வைக்கனும். வேற வழி தெரியல. எப்படியாவது உனக்கொரு கல்யாணம் பண்ணி வைக்கணுங்கறத தவிர, வேறெந்த எண்ணமும் இப்ப எனக்கில்லே...'' என்ற ஜனா, வேகமாய் வெளியேறினான்.



## 11

சௌம்யா... இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஜனா, தன் கல்யாண விஷயத்தை வினோத் வரைக்கும் கொண்டு போவான் என்பது நினைத்தே பார்த்திராத ஒன்று.

ஒரு குற்றவாளிப் போல் தன்னை அவன் முன் உட்கார வைத்த ஜனா மேல் முதல் முறையாய் கோபம் வந்தது.

வினோத் சில கணங்கள் அவனையே பார்த்தவன் ஜனார்த்தனிடம் ''ஒரு அஞ்சு நிமிஷம் வெளியே இருங்க. நான் கன்வின்ஸ் பண்றேன்'' என்றான்.

ஜனா வெளியே போய் விட்டான்.

''ஓ.கே. மிஸ் சௌம்யா... எதுக்கு இந்த கல்யாணம் வேணாம்னு பிடிவாதம் பண்றீங்க?''

''....''

''சட்டுனு கீழே இறங்கி வர மனசு இடங்கொடுக்கலையா?''

புரியாமல் ஏறிட்டாள்.

''ஐ...மீன்... பெரிய பணக்கார மாப்பிள்ளைய உங்கப்பா உங்களுக்காக பார்த்திருந்தார். அவரோட கம்பேர் பண்ணா... உங்கண்ணன் பார்த்திருக்கும் மாப்பிள்ளை குசேலரா தெரியலாம். அத சொன்னேன்.''



''....''

''இப்படி அமைதியா இருந்தா என்ன அர்த்தம்? இப்போ உங்க தகுதிய நினைச்சிப் பாருங்க. அப்படிப் பார்த்தா உங்கண்ணன் பார்த்திருக்கிற வரன் உங்க தகுதிக்கு மீறியவர்னு உங்களுக்கே தெரியலையா? பேசாம கண்ணை மூடிக்கிட்டு சரின்னு சொல்றதுதான் புத்திசாலித்தனம்னு நான் சொல்வேன்.''

தகிக்க முடியாத ஒரு வெப்பம் சௌம்யாவின் நெஞ்சினுள்.

''இந்த மௌனத்தை நான் எப்படி எடுத்துக்கறது மிஸ் சௌம்யா! சம்மதம்னு எடுத்துக்கலாமா?''

கையெடுத்து கும்பிட்டாள் மனம் கனக்க.

''எனக்கொரு நல்ல வாழ்க்கை அமையணும்னு எங்கண்ணனை போலவே ரொம்ப பாடுபடறீங்க... அட்வைஸ் பண்ணீங்க! என் நிலையை நல்லாப் புரிய வச்சீங்க! ரொம்ப தாங்க்ஸ் சார்! உங்களை நான் ரொம்பவே மதிக்கறேன். ஆனா அதுக்காக விருப்பமேயில்லாம என்னால இப்படியொரு வாழ்க்கைக்கு உடன்பட முடியாது. மன்னிச்சுடுங்க'' அவ்வளவு மன வேதனையிலும் மிக பொறுமையாய் பதில் கூறினாள்.

கிராதகன்... அவளை இன்னமும் அறுத்து கூறு போடவே ஆசைபட்டான்.

''ஏன் உடன்பட முடியாது? எதனால விருப்பமில்லே? யாரையாவது இன்னமும் மறக்க முடியாம...''

''ப்ளீஸ்...'' சேரிலிருந்து எழுந்தவள் உதடுகள் துடிக்க அவனைப் பார்த்தாள். அந்த கண்களில் அடிபட்ட வலியின் வேதனை அதிகமாய் இருந்தது.

''இந்த விஷயத்தை இத்தோட விட்டுர்றது நல்லதுன்னு நினைக்கிறேன்'' என்று சொல்லி விட்டு வெளியே போய் விட்டாள்.

புகழும் கவுரமும் சிறப்பான சொத்து. அதை இழந்த பிறகுதானே... அதன் அருமை தெரியும். எல்லாவற்றையும் இழந்து நின்ற சௌம்யாவிற்கு அதன் இழப்பு விஸ்தாரமாய்த் தெரிந்தது.

வினோத் மீது அவளுக்குள்ள காதலை அவளின்றி வேறு யார் அறிவார்?

ஏனிப்படி மாறிப் போனான்? எதற்காக என் இதயத்தை கீறிப் பார்க்கிறான்? ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் என்னை அவமானப்படுத்துவதை ஒரு வேள்வியாகவே கொண்டிருப்பது புரிகிறது. ஆனாலும் உங்களை என்னால் மறக்க முடியவில்லையே! என்ன பண்ணுவேன்? கண்களை பற்றி வெப்பம் பரவி துளிர்த்தது.

தன் மனபாரத்தையெல்லாம் அந்த டைரியில் கொட்டி எழுதினாள். சௌம்யாவிற்கு சிறு வயதிலிருந்தே டைரி எழுதும் பழக்கம் உண்டு. தினசரி உறங்கும் முன் அன்றைய நிகழ்வுகளை ஒன்று விடாமல் எழுதுவாள். அதை எழுதி முடித்ததும் ஜனார்த்தனனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அன்றைய சம்பவத்தின் போது அவள் வீம்பாய் திருமணத்திற்கு மறுத்தது கண்டு அவனுக்கு கொஞ்சம் கோபம்தான். அவனை சமாதானப்படுத்த கடிதம் எழுதினாள்.

முகவாயில் கைகளை தாங்கி டெலிபோனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சௌம்யா! அது அலறப் போகும் ஓசைக் காகவோ, மூடிய அறைக்கதவு தட்டப்படும் சப்தத்திற்காகவோ காத்திருந்தாள்.

ஓட்டல் எவரெஸ்ட் அது!

வெலிங்டனில் இருந்த ஐந்து நட்சத்திர தகுதியை பேட்ஜ் குத்திக் கொண்ட ஓட்டல்.

ஒரு முக்கியமான வியாபார நண்பரை சந்திக்கவென்று சௌம்யாவுடன் வந்திருந்தான் வினோத். சந்தித்து, ஒப்பந்தங்கள் எழுதப் பெற்று... எல்லா வேலைகளும் முடிவடைய மாலை நான்கு மணியாகி விட்டது.



வந்திருந்த நண்பருக்கு காக்டெயில் பார்ட்டி தரும் எண்ணம் உதித்ததும்.... வேறு ஒரு பாருடன் கூடிய ஓட்டலுக்கு அழைத்து சென்றிருந்தான். எவரெஸ்டில் 'பார்' அனுமதிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல... சௌம்யா எதிரே... இந்த பார்ட்டி வேண்டாம் என்பதும் அவன் எண்ணம்!

அவன் அழைத்தான் என்பதற்காக காலையில் அவசரம் அவசரமாக ஒரு காபியை மட்டும் அருந்தி விட்டு டிபன் கூட சாப்பிடாது புறப்பட்டு விட்டிருந்தாள்.

பிஸினஸ் விஷயமாக அவர்கள் பேச... இவள் குறிப்பெடுத்து கடிதங்கள் தயாரிக்க... இடையில் அவளும் அவர்களும் சாப்பிட்டது இரண்டு முறை டீயும், பிஸ்கெட்டுகளும்தான். வந்திருந்த நண்பர் லஞ்ச் சாப்பிட மறந்து விட்டதால்... நாகரீமாய் இவர்களும் சாப்பிடாமலேயே இருக்க வேண்டியதாயிற்று.

இதோ வருகிறேன் என்று இவளை மட்டும் இந்த அறையில் விட்டு விட்டு போனவன் இரவு எட்டாகியும் வரவில்லை.

பசி வயிற்றை துவம்சம் பண்ணி இரைச்சலாய் ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருந்தது. இண்டர்காமில் உத்தரவிட்டு அறைக்கே கொண்டு வரச் சொல்லி சாப்பிடலாம்தான்.

ஆனால் வினோத் அதற்கும் ஊசியாய் தைக்கும் வார்த்தைகளை பிரயோகப்படுத்தி பேசுவான் என்கிற அச்சம் வந்து தாக்க... அமைதியாகி விட்டாள்.

ஒருவேளை... அவனும்... பசியோடவே வந்து இவளுடன் சேர்ந்து சாப்பிடும் எண்ணத்துடன் வந்தால்...? கேட்கவே வேண்டாம்... ஏன் வீண் வம்பு?

இவ்வளவு நேரமாகிவிட்டதே... ஒரு போன் பண்ணியாவது தெரிவிப்போம் என்ற மனிதாபிமானம் கூடவா இல்லாமல் போகும்? அப்படியெல்லாம் தெரியப்படுத்த நான் என்ன அவனுக்கு வேண்டியவளா? வேண்டாத பொருள் அல்லவா?

அதெப்படி... அத்தனையும் மறந்து போகும்? பழகிய நாட்கள் என்னுள் பசுமையாய் உறைந்து போயிருக்கும்போது அவனுக்கு மட்டும் எப்படி மறந்தது? ஒருவேளை... ஆண்கள் மனதே அப்படித்தானோ? அதுவும் அவன் என்னுடன் பழகியது, பேசியதெல்லாம் இளம்பிராயத்தில்... வாலிப வசந்தம் முன்னுரை எழுதுவதற்கு முன்பே! அதனால்... எல்லாமே விளையாட்டாய் எடுத்துக் கொண்டானா?

இல்லையே... அப்பாவிடம் பெண் கேட்டு வந்தானே! நினைக்காமலா... அவ்வளவு தூரம், அவ்வளவு தைரியமாய் கேட்க வந்தான்?

'வினோத்... அந்த அன்பெல்லாம் இப்போது ஏன் கல்லாய் இறுகி விட்டது? இதில் என் தவறென்ன வினோத்? இப்போதுள்ள தெளிவும், தைரியமும் எனக்கு அப்போது இருந்திருந்தால்... நிச்சயமாய் சுதாகரனை வேண்டாம் என்று விடாப்பிடியாய் மறுத்திருப்பேன் அப்போது ஒரு பயம், சிறுபிள்ளைத்தனமான எண்ணம், எதுவுமே தெரியாத வெகுளித்தனம்... எதுவுமே என்னால் பேச முடியாது போயிற்று வினோத்! சொன்னால் புரிந்து கொள்வீர்களா? இனி எடுபடாது. புது இடம் நோக்கி அவன் இதயம் பாய்ந்து விட்டது. யாரந்த ஷர்மிலி?

எல்லாம் காலம் கடந்து விட்டது.

பால் சிந்தி விட்டதே என்று இப்போது சிந்திப்பதில் எந்த பயனும் இல்லையே...

பல பல எண்ணங்கள்! கிடைத்த தனிமை... அவளையே குற்றவாளியாக்கி, விவாதித்துக் கொண்டிருக்க... வந்து சேர்ந்தான்... வினோத்!

அவன் வந்து சேர்ந்தபோது மணி ஒன்பது! விரைவாய் வண்டியோட்டி வந்திருப்பான் போலும்... தலை கலைந்து, கண்கள் லேசாய் சிவந்து, காற்றில் ஆல்கஹால் வாசமும் கலந்திருந்தது.



குடித்திருக்கிறானா?

கவலையோடு தலைகுனிந்து கொண்டாள்.

''சாரி மிஸ் சௌம்யா... அவரை... அவர் தங்கியிருக்கும் லாட்ஜில் டிராப் பண்ணிட்டு வர லேட்டாயிடுச்சு. கிளம்புங்க'' வந்ததும் வராததுமாய் பரபரக்க...

அவனை கேள்வியாய் பார்த்தாள். 'சாப்பிட்டீர்களா?' என்பது போல... அவள் பசி அவளுக்கு. பொன்னம்மா எட்டு மணியோடு வேலையை முடித்துக் கொண்டு போய் விடுவாளாகையால், பங்களாவுக்குப் போனாலும் சாப்பிட எதுவும் கிடைக்காது.

''என்ன பாக்கறீங்க? ரூம் பில்லெல்லாம் செட்டில் பண்ணியாச்சு. கிளம்புங்க.''

ஒரு வார்த்தை... ஒரு வார்த்தையேனும் சாப்பிட்டாயா! என்று கேட்டானா? ச்சை... என்றாகி விட்டது.

காரில் அமர்ந்து... இருப்பிடம் போய் சேரும் வரை எதுவுமே பேசாதவன், காரை விட்டிறங்கும்போதுதான் கேட்டான்.

''சாப்பிட்டீங்களா?''

சௌம்யா அமைதியாய் அவனை பார்த்துவிட்டு பதிலேதும் கூறாது அவுட் அவுஸ் நோக்கி நடக்க... முதல் முறையாய் தன் மேல் கோபம் வர... சிறிது நேரம் சௌம்யாவை பரிதாபமாய் பார்த்திருந்து விட்டு போய் விட்டான்.

சிறிது நேரத்தில் கதவு தட்டப்படும் சப்தம்! அப்போதுதான் ஒரு டம்ளர் தண்ணீரை குடித்துவிட்டு படுக்கையில் விழுந்திருந்தாள்.

'யார்?' என எண்ணியபடியே கதவை திறந்தவள் வாய் மூட மறந்தாள். வினோத்!

''வா... வாங்க....''

''இருக்கட்டும். நீயென்ன சின்னக் குழந்தையா? ஓட்டல்ல பேரர்கிட்டே சொல்லியிருந்தா ரூமுக்கே கொண்டு வந்திருப்பான்.

அது கூட தெரியாதா உனக்கு? சாப்பிட்டு இருப்பியோன்னு நினைச்சி... நானும் கேக்காம கூட்டிட்டு வந்துட்டேன். ஐ'ம் சாரி. இந்தா பிரிட்ஜ்ல பிரெட்டும், ஜாமும் இருந்துச்சு. எடுத்துட்டு வந்தேன். சாப்பிடு..."

இதென்ன கனவா, நனவா? திகைத்துப் போனாள். நிஜமாகவே இது வினோத்தானா?

என்னை ஒருமையில் அழைக்கிறான். நான் பசியோடு இருப்பது தெரிந்ததும், மெனக்கெட்டு வீட்டிலிருந்து பிரெட், ஜாம் எடுத்து வந்து தருகிறான். இது... இது என் வினோத் தான்!

பசி முழுக்கவே அடங்கி விட்டிருந்தது. அவன் தந்தவைகளை பெற்றுக் கொண்டு பரவசப்பட்டாள். வாடிய பயிருக்கு ஒரு துளி மழையெனினும்... நிமிர்ந்து விடுமே!

போய் விட்டான் வினோத்.

ஆனால் சௌம்யாவால் அந்த நொடியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட முடியாமல் அப்படியே நின்றிருந்தாள்.

ஆனால்... நேற்றிரவு நடந்ததெல்லாம் அத்தனையும் மாயை! வினோத் மாறவே இல்லை என்று இதயம் சுருங்கி போக செய்யும்படி மறுநாள் நடந்து கொண்டான்.

காலையில் எழும்போதே... லேசாய் தலைவலித்தது. இருக்க... இருக்க... உடம்பெங்கும் சூடு பரவியது. நல்ல டெம்ப்ரேச்சர்!

சௌம்யா... மிகுந்த சிரமத்துடன்தான் தன்னை தயார்படுத்திக் கொண்டு வந்தாள்.

வந்ததும்... வராததுமாய்... அந்த பேப்பரை தன் முகத்தில் வீசியெறிவான் என்று அவள் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

"எந்த ஞாபகத்திலே... இங்கே வேலை பார்க்கறீங்க? சிம்ஸன்லேண்ட் மார்க் எஸ்டேட்டுக்கு அனுப்ப வேண்டிய லெட்டரை... சியர்புல் எஸ்டேட்டுக்கு அனுப்பி வச்சிருக்கீங்க...



இதனால... எனக்கு வர வேண்டிய ஆர்டர், எதிர்பார்ட்டிக்கு போயாச்சு. எனக்கு நஷ்டம் எவ்வளவு தெரியுமா? முப்பது லட்சம்! நான் ஒண்ணும் பணத்தை கொள்ளையடிச்சிட்டு வரலே... கஷ்டப்பட்டு உழைக்கிற காசு இது! ஏதோ வாழ்ந்து கெட்ட குடும்பத்திலேருந்து வந்தீங்களேங்கறதுக்காகத்தான் எந்தவித எக்ஸ்பீரியன்சும் இல்லேன்னாலும், வேலை போட்டு கொடுத்தேன். அதுக்கு பதிலா... எனக்கு பட்டை நாமத்தை போட்டுட்டீங்க... ஆர்... யூ... ஹாப்பி நவ்?" கழுத்து நரம்பு விடைக்க கத்தினான்.

பயந்து போயிருந்தாள் சௌம்யா!

"ஸ... ஸாரி சார்" குரல் பிசிறடித்தது.

"பேசாதீங்க... எதையாவது நொண்டி சாக்கு சொல்லி செஞ்ச தப்பை மூடி மறைக்கப் பார்க்காதீங்க! இதெல்லாம் எனக்குப் பிடிக்காது."

"....."

"என்ன பண்ணுவீங்களோ... ஏது பண்ணுவீங்களோ, எனக்கு தெரியாது. கைவிட்டுப் போன ஆர்டர் எனக்கு வந்தாகணும். கொஞ்ச நஞ்சமில்லே மிஸ் சௌம்யா! முப்பது லட்சம், தர்ட்டி லாக்ஸ்! அவ்வளவு பணமும் உங்க அஜாக்கிரதையால, அனுப்ப வேண்டிய நேரத்துல லெட்டரை உரியவங்களுக்கு அனுப்பாததால... கைமீறிப் போயாச்சு. இந்த உலகத்துல பணமில்லேன்னா யார் மதிக்கறா? பந்தம், பாசம், நட்பு, காதல் எல்லாமே பணத்தை பார்த்துதானே வருது.... மாறிப் போகுது. இதை நான் உங்களுக்கு சொல்லித்தான் புரிய வைக்கணும்னு இல்லே... உங்களுக்கே தெரியும்... போங்க... நேர்லேயே போய் பேசி, எனக்கு அந்த ஆர்டரை வாங்கித் தராம இங்கே வரக் கூடாது" கடுமையான வார்த்தைகள், விஷம் தோய்க்கப்பட்ட அம்புகள்.

தொய்ந்து போயிருந்தாள் சௌம்யா!

"என்னையா அங்கு போகச் சொல்கிறீர்கள் வினோத்? அந்த எஸ்டேட் ஓனர் பெண்கள் விஷயத்தில் ஒரு மாதிரி என்று தெரிந்த

பிறகும் என்னையா அந்த சிங்கத்தின் குகைக்கு போகச் சொல்கிறீர்கள்? சரி... போகிறேன். நான் நேசித்த வினோத்திற்கு முக்கியமாய் தேவையான பணத்திற்காக... நானே போகிறேன். நான் தவறு செய்திருப்பதாய் நம்புகிறீர்கள்! இதை ஒரு தண்டனையாக நினைக்கிறீர்கள். நான் தவறு செய்திருப்பவளானால் அந்த தண்டனை எனக்கு கிடைக்கட்டும்.''

''எப்படியாவது அந்த ஆர்டரோடு நான் வருகிறேன்'' திரும்பி நடந்தாள்.

''ஒரு நிமிஷம்... என் காரையே எடுத்துப் போங்க'' என்று கார் சாவியை நீட்டப் பெற்றுக் கொண்டாள்.

காலையில் பளிச்சென்று புறப்பட்டிருந்த சூரியன் திடீரென்று என்ன நினைத்தானோ கண்களை மூடிக் கொண்டான். குன்னூர் இரவைத் தொடாமலேயே இருட்டிக் கொண்டது. சிறிது நேரத்தில் தூறலாய் தொடங்கிய மழை, விசிறி... விசிறி அடிக்கத் தொடங்கியது. காற்றும் கூட சேர்ந்து கொள்ள பேயாட்டம் ஆடியது.

சௌம்யாவிடம் அப்படி நடந்து கொண்டது சரியா? என தனக்குத் தானே கேள்விக் கேட்டுக் கொண்டிருந்த வினோத் தடுமாறிக் கொண்டிருந்தான்.

சிறிய அஜாக்கிரதை! அதற்காக நான் அப்படியெல்லாம் பேசியது சரியா? எல்லாவற்றிற்கும் பொறுமையாய் கேட்டுக் கொண்டிருந்தாளே... இதுவே வேறொருத்தியாய் இருந்தால்... நீயுமாச்சு... உன் வேலையுமாச்சுன்னு போயிருப்பாள்... இவள் ஏன் போகவில்லை?

பணத் தேவை! சம்பாதித்தே ஆக வேண்டிய கட்டாய நிலை! அதுதான் காரணமா? அவசரப்பட்டு அனுப்பி விட்டேனே! அந்த முத்துகிருஷ்ணன் ஒரு மாதிரியாச்சே. அவளுக்கு ஏதாவது ஒன்று ஆகி...

சேச்சே... அப்படியெல்லாம் ஆகாது! ஆகக் கூடாது.



ஆனால் சௌம்யாவிற்கு ஆபத்து வேறு ரூபத்தில் வந்து விட்டிருந்தது.

அந்த செய்தி போனில் வந்தபோது... இடிந்து போனான் வினோத்.



## 12

குன்னூர் மலைப்பாதையில் நிலச்சரிவு ஏற்பட்டு... சௌம்யா சென்ற கார் அவளோடு உருண்டு, சௌம்யா மட்டும் ஒரு புதரில் தூக்கியெறியப்பட்டு கார் சிதைந்து போய்...

அந்த வழியாய் வந்த ஒரு லாரி டிரைவர் போலீசுக்கு தகவல் சொல்ல... சௌம்யாவை மீட்டு ஹாஸ்பிடலில் சேர்த்து அவள் பேகிலிருந்த வினோத்தின் விசிட்டிங் கார்டு மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டது.

நெஞ்சை பிடித்துக் கொண்டான்.

''சௌம்யா... சாரி சௌம்யா... கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று புரியாமலே பேசி, மழை என்றும் பாராது உன்னை நான் கொடூரமாய் அனுப்பி வைத்தது தவறு. கடவுளே... அந்தப் பெண்ணுக்கு எதுவும் நேரக்கூடாது. எந்த ஆபத்தும் வரக்கூடாது. காப்பாற்று... அவளை எப்படியாவது காப்பாற்று!

அரக்கபரக்க கிளம்பியவன்... உடனடியாக சௌம்யாவின் அண்ணனுக்கு தகவல் தர வேண்டியது அவசியம் என்பதை உணர... அப்போது தான் உறைத்தது. ஜனார்த்தனனின் முகவரியே தன்னிடம் இல்லையென்பதை. சௌம்யாவிற்கு அவரிடமிருந்து கடிதங்கள் வந்திருக்கலாம். அதில் முகவரி இருக்கலாம்.

உடனே அவுட்அவுஸ் சென்றான். தன்னிடமிருந்த மற்றொரு சாவியின் மூலம் பூட்டைத் திறந்து உள்ளே சென்று ஆராய்ந்தான்.

நேர்த்தியாய் இருந்தது அறை! பரபரப்பாய் டிராயரை திறந்து தேடியவன் கண்களில் பட்டது அது!

அரை மணி நேரம், தான் வந்தவன் நோக்கமே மறந்து போக ஸ்தம்பித்து போயிருந்தான் வினோத்!

**த**லையில் பலமான அடி! நல்லவேளை உயிருக்கு எந்த ஆபத்துமில்லை. ஆனால் சுயநினைவு பெற 48 மணி நேரம் ஆனது. அந்த இரண்டு நாட்களும் வினோத் துடித்த துடிப்பு அவனுக்குத்தான் தெரியும். அவன் வேண்டாத தெய்வமில்லை. ஜனா ஹாஸ்பிடலிலேயே பழியாய் கிடந்தான்.

''சௌம்யாவுக்கு ஏதுமில்லையே டாக்டர்? அவள் உயிரோடு எழுந்து நடமாடுவாளா டாக்டர்?'' என்று எதிர்படும் டாக்டர்களையெல்லாம் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தான்.

குற்ற உணர்வு நெருஞ்சி முள்ளாய் குத்தியது வினோத்தை.

'பாவி... எல்லாம் என்னால்தானே? ஏனிப்படி அரக்கத்தனமாய் நடந்து கொண்டேன்?'

கிழிந்த நாராய் கண்மூடி கிடந்த சௌம்யாவை பார்க்கும் போதெல்லாம் மனதை பிசைந்தது.

ஏழெட்டு வேலைக்காரர்கள் இருக்க... குபேரன் வீட்டு செல்ல மகளாய்... வெள்ளித்தட்டில் சாப்பாடு, அதுவும் கைநோகுமே என்று அம்மா ஊட்டி விட.. வளர்ந்த செல்வ மகள் இன்று... இப்படி?

சௌம்யா கண் திறந்து... இவனைப் பார்த்ததும் கேட்ட முதல் கேள்வி.

''காருக்கு ஒண்ணும் ஆகலியே சார்?'' என்பதுதான்.

''உன் உயிரை விடவா எனக்கு கார் முக்கியம்?'' வினோத் ஆறுதலாய் அவள் கையை தட்டிக் கொடுத்தான். நான்கு நாட்களுக்கு பிறகு அவளை கோயம்புத்தூரில் நல்ல நர்ஸிங் ஹோமில் சேர்த்து பணத்தை தண்ணீராய் வாரியிறைத்து... அவளை பத்தே நாளில் தேற்றினான். நேரே அங்கேயிருந்து ஜனார்த்தனன் அவளை மேட்டுப்பாளையத்துக்கு கூட்டிச் சென்று விட்ட பின்புதான்... வெறுமையை உணர ஆரம்பித்தான்.



சௌம்யா... மீண்டும் இங்கே வருவாளா... மாட்டாளா? என்ற கேள்வி அடிக்கடி எழுந்து அரித்தது.

**ச**ரியாய் ஒரு மாத இடைவெளிக்குப் பிறகு ஜனா தடுத்தும் கூட பிடிவாதமாய் மீண்டும் வேலைக்கு வந்தாள். முன்பை விட இளைத்து வெளுத்துப் போயிருந்த சௌம்யாவை நிமிர்ந்து பார்க்கவே என்னவோ போலிருந்தது. அவள் எதிரே வராமல் விலகிப் போனான். எந்த வேலையாயிருந்தாலும் போனிலேயே விபரம் கூறி முடித்துக் கொண்டான்.

அவனுடைய செய்கை சௌம்யாவிற்கு நன்கு புரிந்தது. தன் தவறுக்கு வருந்தும் குணமாவது மிச்சம் இருக்கிறதே... என்று கொஞ்சம் சந்தோஷப்படவே செய்தாள்.

மாலை மணி ஆறு!

கைகளை நெட்டி முறித்து பைல்களை ஒழுங்காய் அடுக்கி வைத்து விட்டு ஹேண்ட் பேகை தோளில் மாட்டிக் கொண்டு எழுந்தாள்.

புறப்பட்ட நேரத்தில்...

''ஒரு நிமிஷம்'' என்று எதிரில் வந்து நின்றான் வினோத்.

''இஃப்யூ டோன்மைண்ட்... எனக்காக ஒன் அவர் ஸ்பெண்ட் பண்ண முடியுமா?''

''வொய்நாட்...?'' என்றாள் எந்தவித எதிர்பார்ப்புமின்றி சின்னப் புன்னகையோடு.

அடிபட்டு, அடிபட்டு மரத்துப் போன இதயமல்லவா அவளுடையது? எதிர்பார்ப்பு எங்கிருந்து வரும்?

''என்னோட ஜவுளிக் கடை வரைக்கும் வர முடியுமா ப்ளீஸ்?''

''எதுக்காகன்னு தெரிஞ்சுக்கலாமா சார்?''

''எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தருக்கு பிரசென்ட் பண்ணனும், நல்லதா ரெண்டு பட்டுப்புடவை செலக்ட் பண்ணித் தர முடியுமா?''

இதயம் கனக்க அவனைப் பார்த்தாள்.

'என்னை துன்புறுத்திப் பார்க்க இது ஒரு புது அஸ்திரமா வினோத்? யாரோ ஒரு வேண்டிய பெண்ணுக்காக புடவை எடுக்க என்னைத்தான் அழைக்கணுமா? வேதனையை வெளிப்படுத்தாது மென்மையாய் புன்னகைத்தாள்.

''வாங்க... போகலாம்.''

காரின் முன்கதவைத் திறந்து அவள் அமர்ந்த பின் மறுபுறம் இவன் ஏறி அமர்ந்தான்.

வழக்கத்திற்கு மாறாக எதையெதையோ பேசியபடி வந்தான். ஆனால் சௌம்யாவின் கவனம் இதில் ஒட்டவில்லை. அதை வினோத் கவனிக்கத் தவறவில்லை.

ஆனந்தம் பட்டு சென்டர்!

குன்னூரிலேயே மிகப் பெரிய ஜவுளிக்கடை அதுதான்!

கடை முதலாளி வாசலுக்கு வந்து வரவேற்றார். ஏற்கனவே பலமுறை வந்திருப்பான் போலும்... பர்சனலாய் குசலம் விசாரித்தார்.

சூடாய் மசாலா டீ தருவிக்கப்பட்டது.

சௌம்யா பட்டுப்புடவை பிரிவிற்கு வந்தாள். புடவை செலக்ட் பண்றதில் எல்லாம் அவ்வளவு கில்லாடி இல்லை சௌம்யா! சொல்லப் போனால் ஜனா மேட்டுப்பாளையத்துக்கு அழைத்து வந்த பின்பு தான் புடவையே கட்ட ஆரம்பித்தாள். கண்ணெதிரே பிரித்துப் போடப்பட்டிருந்த பட்டுப்புடவைகளைப் பார்த்ததும் பெண்களுக்கே உரிய ஆசை தலை தூக்கியது. மறுகணம் அந்த ஆசையின் தலையில் ஒரு குட்டு குட்டி அமர வைத்தாள்.

விலையுயர்ந்த பட்டு வகைகள்... நெஞ்சையள்ளும் நிறங்கள்.. டிசைன்கள்.



நாலைந்து கலரை தேர்வு செய்து அவனிடம் காட்டினாள்.

''இது பிடிச்சிருக்கா? அவங்க என்ன கலர்?''

''கிட்டத்தட்ட உங்க கலர்தான். இப்ப நீங்க எடுத்திருக்கிற அஞ்சு புடவையும் நல்லாருக்கு. அஞ்சுக்கும் பில் போட சொல்லுங்க.''

அறுபதாயிரத்திற்கு செக் கொடுத்தான்.

அங்கிருந்து ஒரு நகைக்கடைக்கு அழைத்து வந்தான். ஒரு பெண்ணுக்கு வேண்டிய அத்தனை நகையும் அவனே பார்த்து தேர்ந்தெடுத்தான்.

கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய்!

அங்கும் ஒரு செக்கை வீசி விட்டு புறப்பட்டான்.

காரினுள் அமர்ந்து செலுத்தினான்.

''இவ்வளவும் யாருக்குன்னு நீங்க கேக்கவேயில்லையே'' வினோத் கேட்க, வெளியில் நிலைப் பெற்றிருந்த பார்வையை அவன் பக்கம் திருப்பினாள்.

''உங்களிடம் வேலை பார்க்கும் ஒரு சாதாரண பி.ஏ. நான். என் லிமிட்டை மீறக் கூடாதில்லையா சார்?''

பற்கள் தெரியாமல் சிரித்தான்.

''பரவாயில்லை... எப்படியும் என் பர்த்டே... அன்னைக்கு தெரியத்தானே போகுது?''

''.....''

''இது அத்தனையும் என் வருங்கால திருமதிக்கு.''

''.....''

இதயத்திலிருந்து ஒரு நரம்பை விலுக்கென்று உருவியது போல் வலித்தது.

''ஓ... மை அட்வான்ஸ் கங்க்ராட்ஸ் சார்'' வலிய புன்னகைத்தாலும் இதயத்தில் ரத்தம் வடிந்தது.

''தாங்க்யூ... உங்க இடம் வந்தாச்சு... இறங்கிக்கறீங்களா?''

'குரலில் என்ன ஒரு எகத்தாளம்?'

சட்டென கதவைத் திறந்து இறங்கி... திரும்பிப் பாராமல் நடந்தாள் கண்ணீரோடு!



13

பிறந்த நாளுக்கு ஒரு வாரமிருக்க அந்த பங்களாகளை கட்டத் தொடங்கியது. தந்தை இறந்த பின் இது போன்று ஆடம்பரமாய் பிறந்த நாளை கொண்டாடுவதை விட்டிருந்தவன் இப்போதுதான் மறுபடி விமரிசையாய் கொண்டாவிருக்கிறான். இதில் இன்னொரு சிறப்பும் அடிஷனலாய் சேர்ந்திருந்தது. பிறந்தநாள் மட்டுமின்றி... வினோத்தின் திருமண அறிவிப்பு நிகழ்ச்சியும் சேர்ந்து நடைபெறவுள்ளது. அனைத்து தொழிலாளர்களுக்கும் அன்றைக்கு சம்பளத்துடன் விடுமுறை விடப்படவுள்ளது.

பங்களா நிறைய புதிது புதிதாய் முகங்கள், தூரத்து சித்தப்பா, மாமா, அத்தை என்று ராணிப்பேட்டையிலிருந்து வண்ணாரப் பேட்டை வரையுள்ள உறவினர்கள் குழுமியிருந்தனர்.

''மிஸ்... சௌம்யா... நீங்க பாட்டுக்கு வேலை முடிஞ்சதும் கிளம்பிடாம கொஞ்சம் இந்த ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டால் சந்தோஷப்படுவேன்.''

''ஷ்யூர் சார்.''

''உங்க அண்ணன் குடும்பத்தையும் பங்ஷனுக்கு வரச் சொல்லுங்க''

'நானே வரப் போவதில்லை.'



''ஆகட்டும் சார்.''

''ஆகட்டும்னு வார்த்தையோட சொன்னாப் போதாது. உங்க அண்ணனோட ஆபீஸ் போன் நம்பர் குடுங்க... நானே இன்வைட் பண்றேன்.''

ஆச்சர்யமாய் பார்த்தாள்.

'அந்தளவு இங்கிதம் தெரிந்தவனா? பரவாயில்லை... இப்போதெல்லாம் வார்த்தைகளில் அத்தனை உஷ்ணம் தெறிப்பதில்லை. புது மாப்பிள்ளை ஆகப் போகும் தெம்பு.'

சௌம்யா வியந்து கொண்டாள்.

''பரவாயில்லை சார்! அந்தளவு சிரமப்பட வேண்டாம். நானே அழைச்சிட்டு வந்திடறேன்.''

''ஓகே சௌம்யா! டெகரேடிங், லைட் மியூசிக், இதுக்கெல்லாம் பக்காவா அரேன்ஞ் பண்ண வேண்டியது, உங்க பொறுப்பு.''

''குறையில்லாம பார்த்துப்பேன்.''

''ஏன் டல்லா தெரியறீங்க சௌம்யா? நல்லா சாப்பிடுங்க...'' என்று கரிசனமாய் ஒரு வார்த்தையையும் உதிர விட்டு, கம்பீரமாய் பாண்ட் பாக்கெட்டில் ஒரு கைவிட்டு மறுகை விரலில் கார் சாவியை சுழற்றியபடி சென்ற அவனின் பரந்த முதுகையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்கள் குபுக்கென பொங்கியது.

'இவன் கைப்பற்றி வலம் வர வேண்டியவள் அவன் வீட்டு காரியங்களை எடுத்துச் செய்யும் பணிப்பெண்ணாக அல்லவா போய் விட்டேன்?'

அவள் ஒரு முடிவுடன்தான் இருந்தாள்.

எவ்வளவோ ஏச்சுப் பேச்சுக்களைத் தாங்கிக் கொண்டாள். வினோத் தன் வருங்கால மனைவியை எல்லோர் முன்பும் அறிமுகப்படுத்தப் போகும் வைபவத்தை மட்டும் தாங்கிக் கொள்ளும் சக்தி சத்தியமாய் அவளுக்கு இல்லை.

இனி... அங்கு அவளுக்கு வேலையும் இல்லை. கோப தாபமெல்லாம் மறந்து என்றாவது ஒருநாள் அவன் அவளுடைய வினோத்தாக, பழைய வினோத்தாகவே உருப்பெறுவான் என்று ஊசி மேல் தவமிருந்ததெல்லாம் வீணாய் போன பிறகு... இனி என்ன இருக்கிறது இங்கே? இப்படியெல்லாம் நினைப்பதே அசிங்கம்தான். ஆனால் அவன் மீது அவள் கொண்டுள்ள காதல் அர்த்தமுள்ளவை. ஆழமானவை. ஆனால் இப்போது அதற்கு அர்த்தமேயின்றி அவள் நெஞ்சுக்குழிக்குள்ளேயே புதையப் போகிறது.

இது வெளிப்படுத்தா காதல்!

நட்பு என்ற வட்டத்திற்குள் விளையாடியவர்களினூடே காதல் புகுந்து விட்டது. அவர்களுக்கே வாலிப படியில் காலடி வைத்த பிறகு தானே தெரியும்? அந்த படியில் நின்று இதுவரை பேசியதில்லை. பார்த்ததுமில்லை. பார்த்ததும் பேசியதும் ஒரு சண்டையில். அது இன்றுவரை நீடிக்கிறது. சமயமும் சந்தர்ப்பமும்தான் எப்படியெல்லாம் சதி பண்ணுகிறது? எண்ணி... எண்ணி பெருமூச்செறிந்தவள் சூட்டாக திருச்சிக்கு எஸ்.டி.டி. போட்டு பேசினாள்.

''**பொ**ன்னம்மா... சார் எங்கே?'' ஹாலில் எதிர்ப்பட்டவளைக் கேட்டாள் சௌம்யா.

''மாடியில அவங்க அத்தையம்மாவோட ரூம்ல பேசிக்கிட்டிருக்காரு.''

''எந்த் ரூம்?''

''இடதுபக்கமா... ரெண்டாவது...''

சௌம்யா மாடியேறிப் போனாள். உள்ளிருந்து சிரிப்பும் கிண்டலும் கேலியுமாய் ஒரே சத்தம்.

கதவை மெல்ல தட்டினாள்.



32955
5008309

''கம் இன்.''

உள்ளே நுழைந்தாள்.

கழுத்து மடிப்பில் பதுங்கியது போக ரெட்டை வடம், ஒற்றை வடமென மீதி நகைகள் பிதுங்கித் தெரிய... வெற்றிலைக் காவி பற்கள் காட்டி பலமாய் சிரித்துக் கொண்டிருந்தாள் வினோத்தின் அத்தை அம்பிகா. சுற்றிலும் ஆண்களும் பெண்களுமாய் உறவுக் கூட்டம்.

ஒருகணம் சிரிப்பை மறந்து, வந்து நின்ற சௌம்யாவைப் பார்த்து அசந்து போனாள் அம்பிகா.

''அம்மாடி... எப்பேர்ப்பட்ட தேவ அழகு?''

''யாரு வினோத் இது?''

''என்னோட பி.ஏ.''

''நம்ம முரளிக்கு இவளை முடிச்சா என்ன?'' முரளி அவளின் நாத்தனார் மகன்.

''ஏம்மா... உங்கம்மா அப்பா எங்கே இருக்காங்க?''

''அத்தை... அதையெல்லாம் அப்புறம் விசாரிச்சுக்கலாம்... சொல்லுங்க சௌம்யா! என்ன விஷயம்?''

''ஏம்மா சௌம்யா... பி.ஏ.ங்கறே... உனக்காவது தெரியுமா? இவனோட வருங்கால மனைவி யாருன்னு கேட்டா... சொல்லவே மாட்டேங்கறான். எங்கே பதுக்கி வச்சிருக்கானோ? பிறந்தநாள் அன்னைக்குத்தான் காட்டுவேன்னு பிடிவாதம் பண்றான்'' அத்தையம்மாள் குறுக்கே புகுந்து கேட்க...

''ப்ச்... ஏன் அத்தை... சம்பந்தமேயில்லாம அவங்ககிட்டே கேட்டுக்கிட்டு உங்களுக்கே சொல்லாதப்ப... இவங்களுக்கு மட்டும் சொல்லியிருப்பேனா?'' வினோத் எரிச்சலாய் அதட்ட...

இதயத்திலிருந்து இன்னொரு நரம்பும் விலுக்கென்று உருவப்பட்டது.

'ஒரு மூன்றாம் மனுஷியாய்க் கூட என்னை இவன் நினைத்தே பார்க்கவில்லை.'

"சொல்லுங்க சௌம்யா... என்ன விஷயமாய் வந்தீங்க?"

"அந்த மியூசிக் பார்ட்டி கொஞ்சம் முரண்டு பிடிக்கறாங்க சார்! மதுரையிலேர்ந்து வர்ற டிராவல் சார்ஜ், லாட்ஜ்ல தங்கற எக்ஸ்பென்சஸ் எல்லாத்தையும் நம்ம தலையிலேயே கட்டறாங்க. ஒரு பெரிய அமவுண்ட்ட எதிர்பார்க்கறாங்க... வேற மியூசிக் ட்ரூப்பை அரேன்ஞ்ச் பண்ணலாமா?"

"என்ன விளையாடறீங்களா? நிகழ்ச்சிக்கு இன்னும் நாலு நாள்தான் இருக்கு. இப்பப் போய் யாரைப் பிடிப்பீங்க? ஜீவன்தாரா ட்ரூப்.... ரொம்ப பேமஸான ட்ரூப்."

"ஆனாலும் அவங்க ரொம்ப அதிகமா எதிர்ப்..."

"டூ யூ வாட் ஐ ஸே? லட்சமே ஆனாலும் அவங்க புரோக்ராம்தான் எனக்கு வேணும். சப்பை ட்ரூப்பெல்லாம் வச்சு... வர்றவங்க மூடை கெடுத்துடக் கூடாது. பை த பை ஓட்டல் புளூ மவுண்ட்டன்ல அஞ்சு ரூம் புக் பண்ணச் சொல்லியிருந்தேனே... பண்ணியாச்சா? நாளைக்கு முக்கியமான கெஸ்ட்டெல்லாம் வர்றாங்க."

"பண்ணியாச்சு சார்."

"சரி... வேற?"

"நத்திங் ஸார்!" என்றவள் திரும்பிப் போக...

"ஏம்மா... பொண்ணு கொஞ்சம் நில்லு! உன் சொந்த ஊரு எது?"

"அத்தை ப்ளீஸ்... உருப்படியா வேற வேலையைப் பாருங்க... நீங்க கிளம்புங்க... சௌம்யா..." என்று கறாராய் கூற... போய் விட்டாள்.



"ஏண்டா வினோத்! அந்தப் பொண்ணு மேல அப்படி எறிஞ்சி விழறே?"

"வேற எதையாவது பேசுங்க. காமினிக்கு மூணாவதா பெண் குழந்தைதானே பிறந்தது?" பேச்சை மாற்றினான்.

**வி**யக்க வைக்கும் இயற்கையின் வனப்புகள். தொடரோட்டமாய் பச்சை மலைத் தொடர். அங்கங்கே மல்லிகைப்பூ சூடிக் கொண்டது போல் பனிக்கவசம்.

சௌம்யாவை இவை எதுவும் ஈர்க்கவில்லை. எங்கோ வானில் ஒற்றையாய் பறந்து கொண்டிருந்த பறவையின் மேல் பார்வை பதிந்திருந்தது. சுத்தமாய் மனசே சரியில்லை. உயிர் தன்னை விட்டு பிரியப் போகிறதோ... என்பதொடு அவஸ்தை எதிலும் பிடிப்பின்மை.

இன்னும் ஓரிரு நாள்தான். மொத்தமாய் வினோத்தையும், இந்த எஸ்டேட்டையும் பிரியப் போகிறோம் என்பதே... இதயத்தை ரம்பமாய் அறுத்தது.

வாழ்க்கையில் கடந்து போன நாட்களில் நினைத்தே பார்த்திராத சம்பவங்களும், சோகங்களும் வேதனைகளும் கண்முன் விரிந்தன. கண்கள் கரகரவென சுரந்தன.

பைனாகுலர் வழியாக தன் அறை ஜன்னலிலிருந்து பொழுது போகாமல் சுற்றுப்புறங்களையும், பூக்களையும் பறவைகளையும் பார்த்துக் கொண்டிருந்த வினோத்து. கு சௌம்யாவின் சோகமான உருவம் தெரிய துணுக்குற்றான்.

ஒரு யூகலிப்டஸ் மரத்தின் அருகே அசோக வனத்து சீதையாய் அவள் அமர்ந்திருந்ததும், அழுது கொண்டிருந்ததும் கண்டு வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான்.

**நா**ளை பிறந்தநாள்! பங்களா முழுக்க சீரியல் விளக்கு அலங்காரங்கள். இயற்கையும் செயற்கையும் கைகுலுக்கிக்

கொண்டிருந்தது. தொழில் ரீதியான நண்பர் என்று மலேசியாவிலிருந்து நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் வந்திறங்கியிருந்தது. ஏற்கனவே ரிசர்வ் செய்யப்பட்ட ஓட்டலில் தங்க வைக்கப்பட்டனர். அதில் குன்னூர் குளிரையும் பொருட்படுத்தாது ஷார்ட்ஸ் போன்ற ஏதோவொரு உடையில் இருந்தாள் ஒரு இளம்பெண் மிக அழகாய் இருந்தாள்.

அங்கிருந்தவர்களின் அத்தனை பேர் கண்களும் அவள் மீதே இருந்தது.

இவள்தானா? வினோத்தின் மனம் கவர்ந்த பைங்கிளி இவள்தானா? அம்மாடியோவ்... என்ன அழகு?

அத்தையம்மா, பொன்னம்மா கூட இப்படித்தான் நினைத்தனர்.

'இந்தப் பெண்தானா? ஷோகேஸில் வைத்து அழகு பார்க்கலாம் குடும்பம் நடத்த தகுதி பெறுமா? என்ன டிரஸ் இது? உடம்புல முக்காலே மூணு வீசம் திறந்து காட்டிக்கிட்டு. இதையா சஸ்பென்ஸ், சஸ்பென்ஸ்னு மூடி வச்சு பாம்பாட்டி வித்தைக் காட்டினான்? ப்பூ' சப்பென்று போய்விட்டது.

அன்று பகல்!

வினோத் பொன்னம்மாவிடம் காச்மூச்சென்று சத்தம் போட்டான்.

''எதுவா இருந்தாலும் வேணுமா, வேணாமான்னு கேட்டுட்டு குடுத்திருக்கணும். அவ சிக்கனே சாப்பிட மாட்டா! மட்டன்தான் தர்றியேன்னு சாப்பிட்டு இப்ப வயித்து வலியில அவஸ்தைப்படறா! வீட்டுக்கு வந்தவங்களை பார்த்துக்கற லட்சணம் இதுதானா? ச்சை... ஏன் அத்தை... வீட்டுக்கு பெரியவங்க. நீங்கதான் கொஞ்சம் பார்த்து செய்யக் கூடாதா?''

''வாடாப்பா! கடைசியில என் தலைதான் கிடைச்சுதா? நாய்க்கு எங்கே அடிபட்டாலும் காலை தூக்கிட்டுதான் ஓடுமாம். அதுபோல இருக்கு! அதுக்கெல்லாம் நான் ஆளில்லே... என்னை



கவனிச்சுக்கவே எனக்கு நேரம் போதல... வேணும்னா அவளுக்காக தனியா ஒரு ஆளை போட்டுக்க'' அம்பிகா வெடுக்கென்று பேசி விட்டு உள்ளே போய் விட்டாள்.

அவள் ஆத்திரம் அவளுக்கு! அம்பிகாவுக்கு மூன்று பெண்கள். முதலிருவரை கரை சேர்த்தாயிற்று. மூன்றாவதாய் மிஞ்சிய பத்மினி... எல்லாப் பெண்களையும் விட கூடுதல் லட்சணங்களைப் பெற்றவள்தான். ஒன்று விட்ட அண்ணன் மகனான வினோத்திற்கு எப்படியாவது தன் மகளை கட்டி வைக்க ஆன மட்டும் முயற்சிகள் செய்தாள். வினோத் அசையவில்லை. 'என் மகளிடம் இல்லாத அழகு இந்த வெளிநாட்டுக்காரிகிட்டே மட்டும் என்ன இருக்கு? அப்படிப்பட்ட இவளுக்கு சேவகம் பண்ண நானா கிடைத்தேன்?' ஆதங்கமாய் பொருமினாள்!

ஆத்திரம் தலைக்கேறியது வினோத்திற்கு. அதை வெளிப்படுத்த இது நேரமில்லை என்பதை உணர்ந்தவனாய் மாடிக்குப் போய் ஷர்மிலியை சமாதானப்படுத்த ஓடினான்.

உடனே டாக்டருக்கு போன் பண்ணி வரவழைத்த விதம். அவன் பதற்றம், கவலை... இவை எல்லாமே பளிச்சென உணர்த்தியது... ஷர்மிலி தான் அவன் சகதர்மினி என்று.

மாலை ஆறு மணியளவில் செளம்யாவை போனில் அழைத்தான் வினோத்.

''கொஞ்சம் மாடிக்கு என் ரூமுக்கு வந்துட்டு போங்க.''

சென்றாள்.

அறைக்கதவு திறந்தே இருந்தது. கட்டில் மேல் வினோத்.... அவன் பக்கத்தில் நெருக்கமாய் ஷர்மிலி! பகலெல்லாம் வயிற்று வலியால் அவதிப்பட்ட களைப்பு முகத்தில் மிச்சமிருந்தாலும் பளிச்சென்றிருந்தாள். கட்டில் மேல் பரப்பி வைக்கப்பட்டிருந்த நகைகளை ஒவ்வொன்றாய் எடுத்துப் போட்டு அழகுப் பார்த்துக் கொண்டும் புடவைகளை பிரித்து ரசித்துக் கொண்டும்... ''ஒ லவ்லி

வினோத். எல்லாமே ரொம்ப அழகாயிருக்கு'' என்று ஆர்வ மிகுதியால் அவன் கன்னத்தில் முத்தமிட்டு சிரித்தாள்.

உடம்பு முழுக்க பற்றியெரிந்தது செளம்யாவுக்கு. தன்னை வெகுவாய் அடக்கி... கதவை மெல்ல தட்டினாள்.

''வாங்க செளம்யா.''

''ஷர்மிலி... இது செளம்யா... நான் சொன்னேனே... அவங்கதான். என்னோட பி.ஏ.''

'என்னைப் பற்றி இவளிடம் என்ன சொல்லியிருப்பான்? இவள் அப்பன் ஒரு ப்ராடு. வினை விதைத்து வினை அறுத்தவன். அவளுடைய ஒரே மகள்தான் செளம்யா! எனக்கு எத்தனையோ கெடுதல் செய்திருந்தும், போனால் போகட்டுமென்று இவளுக்கு வேலை போட்டுக் கொடுத்தேன் என்றா?'

''ஹலோ கிளாட் டு மீட் யூ! ஐ'ம் ஷர்மிலி ஃப்ரம் மலேஷியா'' கையை பிடித்து குலுக்கினாள்.

மெல்ல சிரித்து வைத்தாள் செளம்யா!

''வினோ... உங்களைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கிறார்.''

'உங்களைப் பற்றி சொல்லாமலேயே எனக்கு எல்லாமே தெரியும்.'

''ஏன்... ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க?'' ஷர்மிலி கேட்க...

''விடு... ஷர்மி! அவங்க கொஞ்சம் மூடி டைப்! எந்த பிரச்சினையுமில்லையே செளம்யா.. எல்லாமே நல்லபடி ஏற்பாடு பண்ணியாச்சா?''

''ஆச்சு சார்.''

''தாங்க்ஸ்... எனக்கு கூட இருந்து செய்ய என் பாரெண்ட்ஸ் இல்லே... நீங்களும் இல்லேன்னா நிஜமா திணறித்தான் போயிருப்பேன். தாங்க்யூ ஸோ மச் செளம்யா! ஏன் டல்லா



இருக்கீங்க? எதையும் மனசுல போட்டு குழப்பிக்காம... நல்லா தூங்கி ரெஸ்ட் எடுத்துக்கிட்டு, நாளைக்கு ப்ரெஷ்ஷா வாங்க ஆமா, உங்க அண்ணன் ஃபேமிலி இன்னும் வரலே போலிருக்கே?''

''நா... நாளைக்கு வருவாங்க சார்.''

''அப்ப சரி... நீங்க போகலாம்.''

செளம்யா தன்னறைக்கு வந்தவள் நீளமாய் கடிதம் எழுத ஆரம்பித்தாள்.



## 14

ஜனா... செளம்யாவை ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

''என்னம்மா ஆச்சு?'' ஏன் திடீர்னு வேலையை ரிசைன் பண்ணிட்டு வந்துட்டே?''

''ஒண்ணுமில்லேண்ணா... எனக்கு பிடிக்கல. அவ்வளவுதான். இன்னும் மூணு மணி நேரத்துல நான் திருச்சிக்கு கிளம்பறேன். என் பிரெண்ட் கோகிலா மூலமா... அவங்க மாமாவோட கம்பெனியிலேயே எனக்கொரு ஜாப் ரெடி பண்ணியிருக்கா. உடனே போய் ஜாயின் பண்ணியாகணும்''

''உன் விருப்பம் எதுவோ அதை செய்! தடுக்கலே. ஆனா வந்ததும் வராததுமாய் புறப்படுணும்னா எப்படிம்மா?''

''அதானே! ஏன் செளம்யா... உடனே அரக்க பரக்க கிளம்பணுமா? ஒரு அஞ்சு பத்து நாளாவது இருந்துட்டு போகக் கூடாதா? ஒரேடியா மெலிஞ்சுப் போயிருக்கே... ஏம்மா உடம்புக்கு என்ன பண்ணுது?'' பவித்ரா கேட்டதும், அழுகை பீறிட்டு வர முயன்றது.

''ஐயோ... ஒண்ணுமேயில்லண்ணி! இப்ப என்ன... திருச்சிக்கு போய் ஜாயின் பண்ணிட்டு சேர்ந்தாற் போல பத்து நாள் லீவு எடுத்துக்கிட்டு வந்திடறேன்... சரியா?''

சமாதானமேயின்றி சம்மதித்தனர்.

குளித்து சாப்பிட்டு சிறிது நேரம் படுத்து மறுபடி பகலானதும் கிளம்பி விட்டாள் சௌம்யா...

"கோயம்புத்தூர் வரை நானும் வரட்டுமா சௌமி?" ஜனா கேட்டான்.

"ஏண்ணா? நான் என்ன சின்னக் குழந்தையா? தனியா உலகத்தையே சுத்தி வர்ற தைரியம் எப்பவோ வந்தாச்சு. பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் வந்தாலே போதும்" என்றபடி கையில் சூட்கேஸ் எடுத்துக் கொண்டாள். ஜனா அதை தான் வாங்கிக் கொண்டான்.

மேட்டுப்பாளையத்திலிருந்து கோயம்புத்தூர் புறப்பட்ட பஸ்சில் ஏறி அமர்ந்தாள். பஸ் புறப்பட்டது.

"கவனமாய் போய் வாம்மா" என்ற ஜனாவின் மனம் காரணமின்றி அரித்தது.

கோயம்புத்தூர் ரெயில்லே ஸ்டேஷனை அடைந்தவள் அங்கிருந்து திருச்சிக்கு செல்ல தயாராக நின்றிருந்த புளூ கார்டன் எக்ஸ்பிரஸில் ஜன்னலோட சீட்டில் அமர்ந்து சௌம்யா கண்களை மூடிக் கொண்டாள்.

நெஞ்சிலும் கண்களிலும் கனம் ஏறியது.

**மா**சுபடாத விடியற்காலை காற்று பூமியோடு விளையாடி கிளிர்ச்சியூட்டிக் கொண்டிருந்தது. அதிகாலையில் எழுந்து குளித்து முடித்து காரில் ஷர்மிலியோடு சௌடாம்பிகை கோவிலுக்கு சென்றான் வினோத்! கார் அவுட் அவுசை கடந்தபோது கதவு பூட்டியிருப்பதை கவனிக்கத் தவறவில்லை.

'எங்கேனும் போயிருப்பாள்' சாதாரணமாகவே நினைத்துவிட்டு விட்டான்.



மணி எட்டானபோது ஷர்மிலி, உறவினர்கள் புடைசூழ சாப்பிட்டான். அமர்க்களமான விருந்து. மாலையில்தான் நிகழ்ச்சி என்றாலும், அவனின் நண்பர்கள், நேரிலும் போனிலும் காலையிலிருந்தே வாழ்த்துக்களை கூறத் தொடங்கியிருந்தனர். தன்னுடைய எஸ்டேட் பணியாளர்களுக்கு அன்று விடுமுறை விட்டிருந்தான். அவர்களும் வந்து குழுமி விட்டனர். தங்களின் எஜமானியம்மாவை பார்க்க அவர்களுக்கும் ஆசையிருக்காதா என்ன? பங்களாவை ஒட்டி ஷாமியானா பந்தல் விரித்து... பிளாஸ்டிக் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

மணி பத்தானபோதுதான் அதுவரை சௌம்யா கண்ணிலே படவில்லையே என்கிற ஆச்சர்யம் தாக்க பொன்னம்மாவிடம் "சௌம்யாவிற்கு டிபன் கொடுத்தாச்சா?" என்று கேட்டான்.

"இல்லீங்களே... அவங்க போயிட்டாங்களே."

"வாட்? என்ன சொல்றே நீ? எங்கே போனா?" உடம்பு அதிர்ந்தது வினோத்திற்கு.

பொன்னம்மா அவனின் அதட்டலுக்கு ஓரடி பின்னேறினாள்.

"நேத்து நைட்டு ஒரு கவரை குடுத்து... இதை சார்கிட்டே குடுத்துடுங்க... நான் விடிகாலைல ஊருக்குப் போறேன். பங்ஷனுக்கு அண்ணனை கூட்டிட்டு வரணும்னு சொல்லிட்டு, இதுல முக்கியமான பொருள் ஒண்ணு இருக்கு. அதனால இதை நிதானமா நிகழ்ச்சியெல்லாம் முடிஞ்ச பிறகு நைட்டோ, இல்ல மறுநாளோ குடுத்துடுன்னாங்க. ஏம்மா அப்ப நீயே இதை அவர்கிட்டே குடுத்துடலாமேன்னேன். ஒரு வேளை, என்னால நாளைக்கு வர முடியாமக் கூட போகலாம்னு சாதாரணமா, சிரிச்சிக்கிட்டே தான் சொன்னாங்கய்யா."

"ஸ்டாப்... யுவர் ப்ளடி வர்ட்ஸ்! போ... முதல்ல அவ குடுத்த கவரை எடுத்துட்டு வா."

அடுத்த நிமிடம் எடுத்து வந்து கொடுத்தான்.

தன் கைகள் நடுங்குவதை உணர்ந்தான் வினோத். பிரித்ததும்... கனமாய் வந்து விழுந்தது வீட்டு சாவி! அது எதையோ உணர்த்த 'பாவி' என்று முணுமுணுத்தபடி அவசர அவசரமாய் பிரித்து படித்தான்.

*'அன்பிற்கினிய வினோத்திற்கு!*

*இப்படி அழைக்க எனக்கு உரிமையில்லைதான். ஆனால் இன்றளவும் உங்கள் மீது நான் கொண்டுள்ள அன்பில் எள்ளளவும் மாற்றமில்லை என்பதால் இப்படி அழைப்பதில் தவறே இல்லை என்று நினைக்கிறேன். என் மனதை வெளிப்படுத்த இதுவரை எனக்கு சந்தர்ப்பமே ஏற்பட்டதில்லை. உங்களை நான் எந்த வகையிலும் குறை சொல்ல முடியாது. என் அப்பா உங்களை அவமானப்படுத்தியபோது என் இதயம் வெடித்து சிதறியது எனக்கு மட்டுமே தெரிந்த உண்மை. அந்த சம்பவத்தால் என்னை வெறுக்க ஆரம்பித்து விட்டீர்கள்! மலரும் முன்பே மொட்டு கருகிப்போனது என் துர்திர்ஷ்டம்! ஆனால் ஒன்று மட்டும் சத்தியமாய் சொல்கிறேன். நடந்த எந்த சம்பவத்திற்கும் நான் பொறுப்பில்லை. எனக்கு ஏற்பாடு செய்யப்பட்டதும் கட்டாய் திருமணம்தான்! சிறு வயது முதலே உங்கள் மீது எனக்கு ஏற்பட்ட அன்பு இன்று காதல் என்றளவில் கட்டுக்கடங்காமல் உயர்ந்து விட்டது. அஸ்திவாரம் பலமென்பதால் என்னால் கலபத்தில் மறந்து இயல்புக்கு வர முடியவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலை என்னை வயிற்றுப் பிழைப்பிற்காக இங்கு வந்து சேர்த்து விட்டது. சந்தோஷமாய் பணிபுரிந்தேன். அப்போதும் நீங்கள் என்னை எதிரியாகத்தான் பாவித்தீர்கள். வார்த்தை*



*களால் துன்புறுத்தினீர்கள். மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொண்டேன். அதில் என் வினோத்திற்கு ஒரு நிம்மதியும், சந்தோஷமும் கிடைக்கும் போது... நானும் சந்தோஷமாகவே ஏற்றுக் கொண்டேன். ஆனால் பல வருடங்களாக என் இதயத்திற்குள் கட்டி வைத்த கோட்டை தகர்த்தெறியப் போகும் வைபவத்தை தாங்கி கொள்ளும் சக்தி எனக்கில்லை. உங்களை நினைத்துப் பார்க்கக் கூட இப்போது எனக்கு அருகதை இல்லையென்றாலும் பெண்ணல்லவா? ரத்தமும் சதையும் இணைந்து உருவாக்கப்பட்ட உணர்ச்சி வடிவமான பெண்தான் நானும். கடந்து போன நாட்கள் என்னை மனதளவில் உரமேற்றியிருந்தாலும் இதை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அரைக்காசுக்கு போன மானம், ஆயிரம் கொடுத்தாலும் வரப் போவதில்லை என்று என் அப்பா அடிக்கடி சொல்வார். என்னிடம் இப்போது அன்பை தவிர, பணமோ, கௌரவமோ, புகழோ ஏதுமில்லை. இப்படி ஒன்றுமேயில்லாமல் உங்களை நினைப்பதே பேராசைதான். ஷர்மிலி, உங்களுக்கு எல்லா வகையிலும் ஏற்ற அன்பான, அழகான பெண்! நல்ல சுபநிகழ்ச்சி நடக்கும்போது... என் கண்ணீர் இந்த வீட்டு நிலத்தில் பட வேண்டாம். போகிறேன். பழகிய நாட்கள் போதும்... இந்த பாவி மகள் உயிர் வாழ! உங்கள் நல்வாழ்விற்காக இந்த ஏழை மனம் பிரார்த்தித்துக் கொண்டே இருக்கும் விடைபெறட்டுமா சார்?''*

**மாறா அன்புடன் சௌம்யா!**

''சௌ...ம்...யா!'' உதடுகள் உணர்ச்சி வேகத்தில் காற்றை மட்டுமே வெளியிட, தலையில் அடித்துக் கொண்டு துடித்தான்.

'பாவிப்பெண்... அவசரப்பட்டுட்டியே! உன் ரூமில் உன் டைரியை ஏதேச்சையாகப் பார்த்து, படித்து அப்போதே புரிந்து கொண்டேனே உன் காதலைப் பற்றி! இன்றைய வைபவத்தில் எல்லோர் முன்னிலையிலும் 'இவள்தான் என் மனைவி' என்று அறிமுகப்படுத்தி, உன் அழகான முகத்தில் வெளிப்படப் போகும் இன்ப அதிர்ச்சியைக் காணத்தானே... இந்த பிறந்தநாளையே கொண்டாட ஏற்பாடு செய்தேன்? என் தலையில் இடியை இறக்கி விட்டுப் போய் விட்டாயே... அவசரக்காரி.'

ஷர்மிலி அங்கு வந்தாள். வினோத்தைக் கண்டு திகைத்துப் போனாள்.

'வாட் ஹாப்பண்ட் வினோத்? ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

வினோத் தளர்வாய், குரல் பிசிற சொல்லி முடிக்க... ''ஓ... காட்'' என தலையை பிடித்துக் கொண்டாள்.

"இப்ப என்ன பண்றது வினோ? நான் அப்பவே சொன்னேன்... இதிலெல்லாம் சஸ்பென்ஸ் வேண்டாமென்று! இப்பப்பார்... நம்ம பிரண்ட்ஷிப்பை வேற விதமா எடுத்துக்கிட்டுப் போயிட்டா! ஓகே... இப்படியே சிலை மாதிரி நின்னுக்கிட்டே இருக்கறதில் எந்த அர்த்தமும் இல்லே. உடனே மேட்டுப்பாளையம் போகலாம் அவளோட பிரதர் வீடு அங்கதானே இருக்கு?''

''அதிர்ச்சியில... இது எனக்கு தோணலை பார்! அவ அங்கதான் இருப்பா! ஈவினிங்குள்ளே என் சௌம்யா இங்கே வந்தாகணும் ஷர்மி'' குரல் தழுதழுத்தது. ஷர்மிலி அவன் தோளை இதமாய் அழுத்தி ஆசுவாசப்படுத்தினாள்.

ஷர்மிலியும் அவனும் காரில் ஏறி அமர, தரையை தேய்த்து விட்டு புறப்பட்டது வேகமாய்!



அத்தையும் பொன்னம்மாவும் இன்னும் பிற முகங்களும் போகும் அவர்களை புரியாமல் பார்த்தனர்.

அங்கு வினோத்தை எதிர்பாராத ஜனா தடுமாறிப் போனான்.

''சௌம்யாவை பார்க்கணும்.''

''அவ... அவ... இல்லீங்களே... என்னாச்சு? ஏன் இப்படி அவசரமா... உள்ளே வாங்க... ப்ளீஸ்... எனக்கு பகீர்னு இருக்கு''

''ப்ளீஸ்... அதெல்லாம் இப்ப சொல்ல நேரமில்லே. வந்து சொல்றேன். அவ இருக்கிற எடத்தை மட்டும் சொல்லுங்க.''

சொன்னான்.

''ஆனால், அவ திருச்சி போறது மட்டும்தான் தெரியும். எந்த கம்பெனி... என்ன அட்ரஸ்னு எதுவும் தெரியாதே! அவ எதுவுமே சொல்லலை. ஒரு மாதிரி இருந்தா... இப்ப நீங்க வந்திருக்கிற அவசரத்தைப் பார்த்தா எனக்கு பயமா இருக்கு! அவ ஏதாவது தப்பான முடிவுக்கு போயிருப்பாளோன்னு பயமா இருக்கு...'' ஜனா அரண்டு போயிருந்தான்.

வினோத் வாட்சை பார்த்தான். மணி ஒன்று! புளூ கார்டன் எக்ஸ்பிரஸ் இரண்டு மணிக்குத்தான். பிடித்து விடலாம்.

இதயம் தடதடக்க... மீண்டும் காரை புயலாய் சீற விட்டான்.

செக்கிங்... டிராபிக் ஜாம்... அது இதென்று அவன் ரெயில்வே ஸ்டேஷனை அடைவதற்கு முன் புளூகார்டன் எக்ஸ்பிரஸ் புறப்பட்டு போய் இருபது நிமிடங்களாகி விட்டிருந்தது.

மூக்கு விடைக்க, முகம் சிவந்து ஸ்டீரியங் மீது கவிழ்ந்து கொண்டவனின் கண்களை நனைத்தது இதயத்தின் வெப்பம்.

''சௌம்யா... உன்னை நான் தவற விட்டு விடுவேனா? எங்கிருக்கிறாய் சௌமி? நிஜமாகவே திருச்சிக்குத்தான்

செல்கிறாயா? அல்லது திரும்ப வர முடியாத ஊரை நோக்கி போய்க் கொண்டிருக்கிறாயா? பாவி நான்... அருகில் இருந்தபோது அருமை தெரியாது... இப்போது வானில் பறக்க விட்டு தேடிக் கொண்டிருக்கிறேன்."

ஷர்மிலி அவன் முதுகை தட்டினாள்.

"என்ன ஆயிடுச்சுன்னு இப்படி உடைஞ்சு போறே? எடு... திருச்சி வரைதான் போய் பார்த்து விடுவோமே."

அவனும் மீண்டும் ஒரு உத்வேகம் எழ... காரை கிளப்பினான். ஆனால் அது பிடிவாதமாய் உறுமி விட்டு அடங்கியது.

'சை... பெட்ரோல் காலி'

ஷர்மிலி உடனே ஒரு டாக்ஸியை அழைத்தாள்!

மீண்டும் பயணம்!

அந்த பெட்டி முழுக்க காச்மூச்சென்ற சப்தம்! ஏதோ கல்யாணத்திற்கு போகும் கும்பல் போலும் பட்டும் தங்கமுமாய்... ஜொலிக்க.... நண்டு, சிண்டு முதல் பெரியவர்கள் வரை வளவளத்துக் கொண்டிருந்தனர்.

சௌம்யாவிற்கு தலையை பாரமாய் அழுத்துவது போலிருந்தது. எதிலும் மனம் ஈர்க்கப்படாமல் உணர்வு ஒடுங்க, கண்களை இன்னும் அழுந்த மூடிக் கொண்டாள்.

"ஏய் காவ்யா... சும்மாயிரு... கழுத்திலெல்லாம் கை வைக்கக்கூடாது" முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்மணி தன் கழுத்தில் கை வைத்து செயினை இழுத்துக் கொண்டிருந்த ஐந்து வயது பெண் குழந்தையை அதட்டினாள்.

"கழட்டிக் கொடு... எனக்கு வேணும்."



"கழுதைக்கு எதெதை கேக்கறதுன்னே விவஸ்தையில்லாமப் போயிடுச்சி! விளையாட இதென்ன பொம்மையா? மெல்லிய திருகிடுவேன். வாய், கை மூடிக்கிட்டு பேசாம உட்கார்."

"எனக்கு வேணும்... வேணும்... கழட்டிக் குடு" அந்தக் குழந்தை மேலும் அடம்பிடிக்கப் பட்டென்று முதுகில் ஒன்று வைத்தாள். வீறிட்டு அழ ஆரம்பித்தாள்!

பைபாஸ் ரோட்டில் டாக்ஸி விரைந்து சென்றது. மறுபக்கம் புளுகார்டன் பாம்பு போல் நெளிந்து சென்று கொண்டிருந்தது. நாலைந்து ஸ்டேஷனில் டாக்ஸி சென்று நிற்பதற்குள் எக்ஸ்பிரஸ் வந்து சென்று விட்டிருந்தது. இப்போதும் அடுத்த ஸ்டேஷனுக்குள் நுழைந்து விட்டாலும் பிடிக்க முடியாது. டாக்ஸி சுற்றி வளைத்து போவதற்குள் கிளம்பிவிடும்.

"சௌம்யா எங்கிருக்கிறாய்?" விரைந்து கடந்த ஜன்னலில் தெளிவில்லாத பல முகங்கள்.

அப்போது...

"சனியன் வேகல அடங்குதா பார்? தொண்டை தண்ணி வத்திப் போறவரைக்குள் கத்தி சாகு... போ" தொடையில் நறுக்கென்று கிள்ளி... அழுகையை இன்னும் அதிகப்படுத்த, சௌம்யா நெற்றிப் பொட்டை அழுத்திக் கொண்டாள்.

"நீ என்ன சொன்னாலும் சமாதானமாகாது. அந்த செயினை கழட்டி ரெண்டு நிமிஷம் கழுத்துல போட்டு வை! இந்த வயசுலேயே இவ்வளவு நகைப் பைத்தியமா? தாங்காதுடியம்மா" குழந்தையின் பாட்டி சொன்னதும்...

வேறு வழியின்றி, தன் கழுத்திலிருந்து கழற்றி அதன் கழுத்தில் போட்டதும் சட்டென அழுகை நின்றது.

''ஐய்...'' கண்ணீரை கூடத் துடைக்காது அந்தக் குழந்தை நகையைப் பார்த்து பரவசப்பட்டது.

''எனக்குக் கல்யாணம்... பாட்டி எனக்கு கல்யாணம்.''

''அஞ்சு வயசிலேயேவா? பண்ணிடுவோமா? மண்டபத்திலேயே யாரையாவது மாப்பிள்ளையப் பார்த்து முடிச்சிடுவோம்'' பாட்டி கிண்டலடிக்க... உறவுக் கூட்டம் மொத்தமும் குபீரென சிரித்ததில் கம்பார்ட்மெண்டே அதிர்ந்தது.

அனைவரும் சிரித்ததில் வெட்கம் எழ, அந்த வெட்கம் தொடர்ந்த சிரிப்பில் வெறுப்பாய் மாற ஆரம்பித்தது.

ஸ்டேஷனை தொட்டது புளூ கார்டன்! கல்யாண கும்பலிலிருந்து ஓரிருவர் இறங்கி... பிளாட்பாரத்தில் விற்ற சாப்பாட்டுப் பொட்டலங்களை கைநிறைய வாங்கிக் கொண்டு ஏற, மீண்டும் தன் ஓட்டத்தை தொடங்கியது எக்ஸ்பிரஸ்.

அந்த விநாடியில் பிளாட்பார டிக்கெட் வாங்க கவுண்டரை நோக்கி ஓடினான் வினோத்!

''வினோ... எக்ஸ்பிரஸ் மூவ் ஆயிடுச்சி'' ஷர்மிலி பதைப்பாய் கூற... அப்படியே ஒரு தூணில் சாய்ந்து விட்டான். ஓடி வந்ததில் மூச்சிரைத்தது.

''கமான்... டாக்ஸி வெயிட்டிங்கில் இருக்கு... வா போகலாம்.''

''ஷர்மி... எனக்கு கொஞ்சம் கொஞ்சமா நம்பிக்கை போய்க்கிட்டே இருக்கு. சௌமியா நான் உயிரோட...''

சட்டென்று வாயைப் பொத்தினாள். ''பார்ப்போம்... நிச்சயமாய் பார்ப்போம்... வா'' கையைப் பிடித்து இழுக்க...

அப்போது....



''பேசாம உன் பொண்ணுக்கு இவனை பிடிச்சி கல்யாணம் பண்ணி வச்சிடு'' அழுக்காய் ஒரு பிச்சைக்காரனை ஜன்னல் வழியே சுட்டிக் காட்டி பேசவும், மீண்டும் குபீரென சிரிப்பலைகள்.

உறுத்துப் பார்த்த காவ்யா... யாருமே எதிர்பாராத அந்த நொடியில் கழுத்தில் கிடந்த பத்து சவரன் இரட்டை வட சங்கிலியை கழற்றி ஜன்னலுக்கு வெளியே தூக்கியெறிய... கம்பார்ட்மெண்டே அல்லோலகலப்பட்டது.

''ஐயோ... ஐயோ... சனியனே என்ன காரியம் பண்ணிட்டே? பத்து பவுன்... என் பத்து பவுன் போச்சே.''

''எமனே... சோறு திங்கறியா? வேற எதுனாச்சும் திங்கறியா? இப்ப என்ன பண்றது'' ஆளாளுக்கு போட்டு அடிக்க... அந்த வீம்புக்கார குழந்தையின் அழுகை உச்சஸ்தாயியை தொட்டது.

சௌமியா சுறுசுறுப்பாய் செயல்பட்டாள். அபாய சங்கிலியை பிடித்து இழுக்க... எக்ஸ்பிரஸ் நின்றது.

வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்த விநாடி, ''வினோ... அங்கே பார்... எக்ஸ்பிரஸ் நின்னுடுச்சி'' ஷர்மிலி கத்த... கிட்டத்தட்ட வெகுதூரம் போய் விட்ட புளூகார்டனை நோக்கி குதிரையைப் போல் தண்டவாளத்திலேயே ஓட ஆரம்பித்தான். ஷர்மிலி அவன் பாய்ச்சலுக்கு ஈடு கொடுக்க முடியாது அப்படியே நின்று விட்டாள்.

பயணிகள் என்ன ஏது என்று கொஞ்சம் கொஞ்சமாய் கீழேயிறங்க... தண்டவாளத்தில் வெடிகுண்டு வச்சிட்டாங்களாம்... இப்படியொரு வதந்தி பரவ ஆரம்பித்தது.

எதிர்ப்பட்டவர்களை இடித்துத் தள்ளி... ஒவ்வொரு கம்பார்ட்மெண்டாய் ஏறி இறங்கி தேடிய வினோத்தின் கண்களுக்கு அந்த பூ முகம் தென்பட்டது. தாவிப் போய் ஏறி...

''சௌமி...'' என்றான் மூச்சிரைக்க! உசுப்பியது போல் திரும்பியள் திறந்த வாயை மூடவில்லை.

என்ன ஏது என்று அறியுமுன்பே தவிப்புடன் அவளை இழுத்து அணைத்து புலம்பினான்.

''பாவி... கொஞ்ச நேரத்துல என்னை எப்படியெல்லாம் தவிக்க விட்டுட்டே... ஏன் சௌமி?'' அவன் உதடு அவள் கன்னத்தில் உரசியது.

வாய் வார்த்தையே வராது... சௌம்யா இன்னமும் அதிர்ச்சியிலிருந்து மீளாது... படபடப்புடன் அவன் நெஞ்ச கதகதப்பில் சிறைப்பட்டிருந்தாள்... சிறு குழந்தைபோல்!

அதுவரை அழுது கொண்டிருந்த காவ்யா.... அவர்களை பார்த்து அழுகையை நிறுத்தி வெட்கத்துடன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்!



# உயிரே உன்னை அழைக்கிறேன்



1

கிழக்கு வானில் குங்கும கீற்றலாய் விடியலின் கையெழுத்து காகங்களின் கரைசல்கள் துவங்கி விட்டன. பெண்களின் அன்றைய நாளின் ஆரம்பத்திற்கு பிள்ளையார் சுழியாய் சரக், சரக்கென வாசல் பெருக்க ஒரு விடியல் ஆரம்பமாகிக் கொண்டிருந்தது.

கனத்த லெதர் பேகை இடது தோளுக்கு மாற்றி அந்த ஒற்றையடி பாதையில் இறங்கினான் தினகரன்.

அம்மா அப்போதுதான் எழுந்திருப்பாள் போலும். தலை கலைந்து சேலை கசங்கி, கொட்டாவி விட்டபடி வாசல் கதவை திறக்கவும், தினகரன் வந்து நிற்கவும் நேரம் சரியாக இருந்தது.

சடுதியில் கவுரியம்மாளின் முகம் சந்தோஷத்திற்குத் தாவியது.

''தம்பீ... வா.. வா...! என்னங்க... இங்கே வாங்களேன். யார் வந்திருக்கான்னு வந்து பாருங்க. நம்ம தினகரன் பட்டணத்திலேர்ந்து வந்துட்டானுங்க...!''

நிமிஷத்தில் வீடு பரபரப்பானது.

அப்பா நீலாம்பரன் மனைவியின் குரல் கேட்டு படுக்கையை விட்டு எழுந்து விட்டார். அண்ணன் சேகரும், தங்கை ஜானகியும் கூட மாடியிலிருந்து இறங்கி வந்து தினகரனை சூழ்ந்து கொண்டனர்.

''பிரயாணம் சுகமா இருந்துச்சா...?''

''ஏன் தினா நிச்சயதார்த்தத்திற்கு வரலை?''

''அண்ணா... மெட்ராஸ்லேர்ந்து எனக்கு என்ன வாங்கி வந்திருக்கீங்க?''

''அடடா... வந்ததும், வராததுமா இது என்ன தொண தொணப்பு? வராதவங்க வந்திருக்காங்க... அவரை மொதல்ல அலுப்பு தீர குளிக்க விடாம...'' நீலாம்பரனின் குரலில் இருந்த தொனி கேலியா, கோபமா என்று உணர முடியவில்லை.

தினகரன் அப்பாவின் அருகில் சென்றான்.

''உங்க கோபம் புரியுதுப்பா! அண்ணனோட நிச்சய தார்த்தத்திலே கலந்துக்க வரலைன்னுதானே வருத்தம்? நான் என்னப்பா பண்ணட்டும்? சரியா, அன்னைக்கு பார்த்து எனக்கு எக்ஸாம். நான் ஊருக்கு கிளம்பணும்னா கூட ஒரு நாள் முன்னாடியே கிளம்பணும். வந்த வேகத்திலே திரும்ப மெட்ராஸ் போனாலும் எக்ஸாம் டைமுக்கு போய் சேர முடியாது. அப்படி இப்படின்னு கணக்கு பார்த்தா இந்த செமஸ்டர்ல மூணு எக்ஸாம் எழுத முடியாது. அப்பறம் இவ்வளவு நாள் நான் உங்களையெல்லாம் பிரிஞ்சி ஹாஸ்டல்ல தங்கி படிச்ச படிப்புக்கு அர்த்தமே இல்லாம போயிடும்ப்பா! இப்ப என்ன? கல்யாணம் நானில்லாம நடந்திடுமா?''

''என்னமோ தஸ்ஸு புஸ்ஸுன்னு சொல்றே.. ஒண்ணும் புரியல. சரி... சரி... உள்ளார போ... குளிச்சிட்டு சாப்பிடு!''

''அண்ணா கேட்டேனே... எனக்காக என்ன வாங்கி வந்தே?'' ஜானகி மீண்டும் அவனை சீண்டினாள்.



''அருமையான புத்தகம் ஒண்ணு! எம்.எஸ். உதயமூர்த்தி எழுதினது. படிச்சுப் பார்!''

ஜானகியின் முகம் அஷ்டகோணலாகியது.

''என்னது... புக்கா? ஸ்கூல்ல படிக்கறது போதாதா? நான் என்ன அதையா கேட்டேன்?''

''ஏன்டா? எதையாவது வளையல், கம்மல்னு வாங்கி வர்றதை விட்டுட்டு புக்கை வாங்கி வந்திருக்கியே... அவ வயசுக்கு பொருத்தமில்லாம...?''

''அப்பா ஐந்துல வளையாதது.. ஐம்பதுல வளையாது. ஜானகியை நான் தன்னம்பிக்கையுள்ள பெண்ணா பார்க்கணும். சராசரி எல்லா பொண்ணுங்களையும் போல அடுப்படியே உலகம்னு இருந்துடக் கூடாது. அதோட ஆரம்ப அஸ்திவாரம்தான் இது!'' தினகரன் மென்மையாய் எடுத்துச் சொன்னான்.

''ஜானகி... நீ உள்ளே போய் வேலையை கவனி! இவன் சொல்றது எனக்கே அடி வயத்தை கலக்குது. பொண்ணு பொண்ணாவே வளரட்டும். எந்த தன்னம்பிக்கையும் வேணாம். தும்பிக்கையும் வேணாம்.''

''என்னப்பா நீங்க? நைட்டெல்லாம் தூங்காம பஸ்சுல வந்த தினாவுக்கு அலுப்பா இருக்கும். எதுவா இருந்தாலும் அப்புறம் பேசிக்கலாமே'' சேகர் தினகரனுக்காக வக்காலத்து வாங்க.. அண்ணனின் கையை பாசம் பொங்க பற்றிக் கொண்டான்.

''போதும்... போதும்மா... சாப்பிட்டதே மூச்சு முட்டுது. இன்னும் வச்சிக்கிட்டே இருந்தா, வயித்தில எடமிருக்கணுமே!'' கவுரியம்மாள் தினகரனை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள்.

''என்ன தம்பி அநியாயமா இருக்கு? இந்த வீட்டிலேயே வயித்துக்கு வஞ்சனை பண்ணாம நல்லா சாப்பிடற புள்ளையே நீதான். இப்ப என்னடான்னா... ஆறு இட்லிக்கே அலர்றே?''

தினகரன் வாய் விட்டு சிரித்தான்.

''அதொன்னுமில்லேம்மா.. ஹாஸ்டல் காண்டீன்ல உப்பு சப்பில்லாம சாப்பிட்டு, சாப்பிட்டு பசியே மறந்து போச்சு. வயிறும் அடைஞ்சு போச்சு. அதுவும் நல்லதுக்குத்தான் இப்பவே சாப்பாட்ல கட்டுப்பாடா இருந்தாதான்.. எல்லாமே கட்டுக்குள் வரும்மா..''

கையால் முகவாயைத் தாங்கிக் கொண்டு மகனையே பார்த்துக் கொண்டிருந்தாள் கவுரியம்மாள்.

''என்னம்மா அப்படி பாக்கறே?''

''நீ ரொம்ப மாறிட்டே தினா!''

''ஆமாம்மா.. விளையாட்டுப் பிள்ளை தினகரனா இல்லாம கல்வியறிவும், அனுபவமும் என்னை ஒரு பொறுப்புள்ள மனுஷனா, சமுதாயத்தை தொலைதூர சீர்நோக்குப் பார்வையோட பார்க்கற மனுஷனா மாத்திட்டுதுங்கறது நிஜம்தான்!''

''அதெல்லாம் விடு! மேற்கொண்டு என்ன பண்ணப் போறே? ஏதாவது வேலைக்கு எழுதிப் போட்டியா?''

''வேலைக்கா? கைவசம் தொழில் இருக்கப்ப எதுக்கு வேலை?''

''என்னப்பா சொல்றே?''

''நம்ம பூமியில விவசாயம் பண்ணப் போறேன். புதுவகை உரங்களையும், விதைகளையும் பயன்படுத்தி...''

''நிறுத்து... நிறுத்து... என்னடாப்பா சொல்றே? நீ விவசாயம் பண்றதுக்கா பட்டணத்துல இத்தனை வருஷம் படிக்கப் போட்டோம்! அப்பா காதுல விழுந்துச்சோ, வீடு ரெண்டுபடும். உன் புத்தி ஏன் தம்பி இப்படி போகுது?''

''நான் இன்னும் எவ்வளவோ சீர்திருத்தங்களை பண்ணனும்னு நினைச்சிருக்கப்ப இந்த ஒரு சின்ன விஷயத்துக்காக அலர்றியேம்மா...'' கவலைப்பட்டான். பேச்சை மாற்ற எண்ணி 'அம்மா' என்றான்.

''ம்...''



''அண்ணனுக்கு முகூர்த்த தேதி குறிச்சாச்சா?''

''ஆச்சு...வர்ற ஆவணியில...'' சொன்னவள் பெருமூச்சு விட்டாள்.

''என்னம்மா? கல்யாண சேதி... இதைப் போய் விசனமா சொல்றே?''

''உங்கிட்ட சொல்றதுக்கென்ன தினா? இந்த சம்பந்தத்துல யாருக்கும் இஷ்டமில்லேப்பா!''

''என்ன?'' திடுக்கிடலோடு பார்த்தான்.

''ஆமாம்பா... ஏன்தான் அந்தப் பொண்ணை நம்ம சேகருக்கு பார்த்தோமோன்னு ஆகிப் போச்சு.''

''புரியும்படியா சொல்லேன்ம்மா!'' பரபரத்தான்.

''அந்தப் பொண்ணுக்கும், நம்ம சேகருக்கும் ஆறேழு பொருத்தம் தான் பொருந்தியிருக்கு. சரி, பொண்ணு லட்சணமா கொஞ்சம் படிச்சிருக்காளே, ஓரளவு சீர், செனத்தி செய்றாங்களேன்னு ஒப்புக்கிட்டோம். ஆனா, அப்புறம்தான் ஒவ்வொண்ணா நடக்க ஆரம்பிச்சது.''

''.........''

''முதல்முதலா பொண்ணு பார்த்திட்டு வந்த மறுநாளே உங்க சின்ன தாத்தா இறந்திட்டார். நீ கூட வந்துட்டுப் போனியா... சரி, விதி, வயசான கட்டைன்னு நாங்களும் பெரிசு பண்ணிக்கலை. இப்ப.. நிச்சயதார்த்தம் ஆன அன்னிக்கு நைட்டே அந்தப் பொண்ணோட ஒன்னுவிட்ட பெரியம்மா பொண்ணு உடம்புக்கு நெருப்பு வச்சிக்கிட்டதாம். பயந்து போய் அரசலூர்ல ஒரு பெரிய ஜோஸியர் கிட்டே ரெண்டு பேர் ஜாதகத்தையும் காண்பிச்சோம்.

'வடக்கையும், தெற்கையும் இணைக்கப் பாக்கிறீங்களே அந்த பொண்ணோட ராசியில ஏழரை நாட்டு சனி ஆரம்பம். அவ நுழைச்சா... ஆமை நுழையற மாதிரின்னு' அடிச்சி சொல்லிட்டார். நிச்சயமும் ஆகி விட்டது. இந்த நேரத்தில எப்படி அந்த பொண்ணை

வேணாங்கறது? நாளைக்கு பஞ்சாயத்துன்னு கூடினா... நாம தலைகுனிஞ்சி நிக்கணுமே! எப்பவும் நிமிர்ந்தே பார்த்து பழக்கப்பட்ட உங்கப்பாவால இதை தாங்கிக்க முடியுமா? நெருப்பை முழுங்கின மாதிரி நாங்க மெல்லவும் முடியாம, விழுங்கவும் முடியாத தவிக்கிறோம்ப்பா!''

அதிர்ந்து போயிருந்தான் தினகரன்.

'எப்பேர்ப்பட்ட மூடநம்பிக்கை? ஒரு பெண்ணை குழியில் தள்ளி மண்ணைப் போட்டு மூடி உயிரோடு கொல்லும் காட்டுமிராண்டித்தனம்?'

''அம்மா! இந்த ஜோசியம், அது இதுன்றது வேலையத்தவன் செய்ற வேலை! பணம் பிடுங்க இந்த மாதிரி கள்ளத்தனம் நாட்ல பெருகிப் போச்சு. அரசாங்கம் கூட ஏதாவது கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டவோ, தொழில் தொடங்கவோ, இது மாதிரியான ஜோசியன்கிட்ட கைகட்டி நின்னு நேரம் குறிக்கிற அவலம் இந்தியாவில் மட்டுந்தான் இருக்கு. நான் ஒண்ணு கேக்கறேன் பதில் சொல்றியா?

பக்கத்து தெருவில இருக்கிற பரமசிவம் ஊருக்கே ஜோசியம் சொல்றவர்தானே? அவரோட பெரிய பொண்ணு கல்யாணமாகி மூணாவது மாசமே புருஷனை பறிகொடுத்துட்டு வந்தாளே.. அது ஏன்?''

''அவ போறாத நேரம்... விதி!''

''அந்த விதிய ஜோசியம் மூலமா பரமசிவம் ஏன் தெரிஞ்சிக்கலை? உங்களுக்கெல்லாம் வினயமா எடுத்துச் சொல்லி காசை பறிக்கிறவருக்கு.. தன் பொண்ணோட தாலி பறிபோறது தெரியாதாம்மா? புரியுதா? ஜோசியமெல்லாம் கட்டுக்கதை. எதெது எப்பப்ப நடக்கணுமோ... அதது அப்பப்ப நடந்துதான் தீரும். நல்லதும் சரி, கெட்டதும் சரி... என்னம்மா புரிஞ்சுதா?''

''புரியறாப்பல இருக்கு!'' யோசனையில் ஆழ்ந்தாள்.



''தட்ஸ் குட்!'' சந்தோஷித்தான் தினகரன்.

''சரிம்மா... நான் அண்ணிய பார்க்கணும். சின்ன வயசல பார்த்தது. இப்ப நினைவில்லே...''

''வெறுங்கையோட போகாதே! நான் கொஞ்சம் பலகாரம் தரேன், எடுத்துட்டுப்போ! கூட நம்ம பால்காரன் சங்கரனை கூட்டிட்டுப் போ! அவனுக்கு வீடு தெரியும்.''

''நான் என்ன சின்னக் குழந்தையா? இந்த பூங்குடி கிராமத்துல இருக்கற சந்து பொந்துகூட எனக்கு அத்துப்படி! வரட்டுமா?''

''இரு... இரு..'' என்றவள் தெருவில் இறங்கி எட்டிப் பார்த்துவிட்டு சொன்னாள். இப்ப போ... தெருவில யாருமில்லே!''

தினகரன் உள்ளுக்குள் உலர்ந்து போனான்.

''சகுனமா? ம்ஹூம். நீ மாறவே மாட்டேம்மா!'' வெளியில் வந்தான்.

கண்ணுக்கெட்டும் வரை பசுமை! வயலில் தென்றல் தீண்டும் போது இசைக்கு ஆடும் பெண்களைப் போல் ஒரே மாதிரி தலையாட்டிய நெற் பயிரின் அழகை எதற்கு ஈடாக சொல்ல முடியும்?

எதிர்பட்ட அறிந்த, தெரிந்த முகங்களின் விசாரிப்புகளை பவ்யமாய் சினேகமாய் தலையாட்டிப் பெற்று மரியாதையோடு பதில் சொன்னான்.

இடிந்து, பொத்தல் பொத்தலான கூரையோடு... நாளை மழை பெய்தால் தாங்குவது கடினம் என்பது போல் டீபி நோயாளியாக காட்சியளித்த பள்ளிக் கூடத்தில் மூக்கொழுகும் மாணவச் செல்வங்கள். மதியம் போடப் போகும் சாப்பாட்டிற்காக எப்போது மணியடித்து தொலைப்பார்கள் என்று காத்திருந்தனர்.

தினகரன் அந்தக் காட்சியை பார்த்து நொந்து கொண்டான். தன் சீர்தூக்கும் பட்டியலில் இந்த பள்ளிக்கூடத்தையும் சேர்த்தான்.

தினகரன் பிறந்து வளர்ந்தது பூங்குடி கிராமத்தில்தான். பள்ளி இறுதியாண்டை பக்கத்து டவுனில் படித்தான். எம்.காம். பட்டப்படிப்பை சென்னை பிரஸிடென்சி கல்லூரியில் படித்தான். நல்ல நட்பு கூட்டங்களும் என்.எஸ்.எஸ். போன்ற சமூக சேவைக்காக கல்லூரி சார்பாக பல கிராமங்களுக்குச் சென்று சாலைகளை செப்பனிடுதல், தூய்மையை வலியுறுத்துதல், கல்வியின் அவசியம், இரத்த தானம் செய்தல் என தினகரனின் இதயம் ஒரு லட்சிய வாலிபனாக உருவாக அடித்தளம் போட்டன. தன்னால் எல்லாவற்றையும் செய்ய இயலாவிட்டாலும் நல்ல ஆசிரியர்களைக் கொண்டு சிறந்த கல்விக் கூடத்தை உருவாக்க வேண்டும். மதிய உணவிற்கென்றே பள்ளிக்கு வருவதை மாற்றி, மதியை பெருக்கிக் கொள்ள வரவைக்க வேண்டும். அதுமட்டுமின்றி, தான் படித்த படிப்பு வீணாகாமல் பல புதிய யுக்திகளை கையாண்டு எல்லாவற்றிற்கும் மேலாக, சல்லிக்காசு கூட வரதட்சணை என்று வாங்காமல் ஒரு ஏழைப் பெண்ணை மணந்து கொள்ள வேண்டும் என்று ஒரு பட்டியலே போட்டு வைத்திருந்தான்.

அந்த வீட்டை சமீபித்தான்.

பொன்னம்பலமும், தாட்சாயிணியும் வீட்டு வாசலில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவர்கள் இவனைப் பார்த்ததும் பரபரப்பாய் எழுந்து நின்றனர்.

"வாப்பா... தாட்சாயிணி அந்த மடக்கு நாற்காலிய கூடத்துல விரிச்சுப் போடு. தம்பி... இன்னைக்குத்தான் பட்டணத்துல இருந்து வந்தீங்கன்னு கேள்விப்பட்டேன். பரீட்சை நல்லா எழுதினீங்களா? அதனாலதான் நிச்சயத்துக்கு வரலீங்களா?" பொன்னம்பலம் காவியேறிய பற்கள் பளீரிட தினகரனை வரவேற்றார்.

"நீங்க எப்படியிருக்கீங்கய்யா?"

"எனக்கென்னப்பா கொறை? சவுக்கியமாத்தான். இருக்கோம். இதோ... பூரணிய அவங்கம்மா, அப்பா... இனிமே நீதான்



இவளுக்கு எல்லாமேன்னு கையில பிடிச்சு கொடுத்தது இப்போதான் நடந்தது போலிருக்கு. பன்னெண்டு வருஷம் ஓடிப்போச்சு. அவளை ஒரு நல்ல எடத்துல ஒப்படைக்கணும்னு பழியா கிடந்தோம். நாங்க எதிர்பார்த்துக்கும் மேலே உங்க வீட்டு சம்பந்தம் கிடைச்சிடுச்சே இதைவிட வேறென்ன தம்பி வேணும்? கல்யாணம் முடிச்ச கையோட நானும், இவளும் ராமா, கோவிந்தான்னு புனிதத் தலங்களுக்கு கிளம்பிடுவோம்!" ஒரு சின்ன விசாரிப்புக்கு விளக்கமாய், பொறுமையாய் அவர் சொன்ன பதில் தினகரனுக்கு நெகிழ்ச்சியை உண்டாக்கியது. கிராமத்து வெள்ளை மனசல்லவா?

தாட்சாயிணி அம்மாள் அதற்குள் ஒரு பெரிய பித்தளை டம்ளர் நிறைய இளநீரை நிரப்பி அவனிடம் நீட்டினாள்.

நிறைவாய் குடித்து முடித்தவன் சுற்று முற்றும் பார்த்தான்.

"என்ன தம்பி தேடறீங்க? பூரணியதானே?" தாட்சாயிணி குறும்பாய் கேட்க... வெட்கப்பட்டான்.

"ஆமாங்க... அம்மா இந்த பலகாரத்தை குடுத்துட்டு வரச் சொன்னாங்க" தயக்கமாய் சொன்னான்.

"அதுக்கேன் தம்பி இவ்வளவு தயக்கம்? அவ உங்க வீட்டுப் பொண்ணு. தாட்சாயிணி பூரணிய எழுப்பி அழைச்சிட்டு வா என்ன இந்த நேரத்தில தூங்கறாளேன்னு ஆச்சர்யப்படறீங்களா? கொஞ்சம் உடம்பு சரியில்லே. நேத்து தோப்புல மாங்காய் பறிக்க மரத்துல ஏறி இருக்கா. அவளுக்கு உயரத்திலேர்ந்து எதைப் பார்த்தாலும் மயக்கம் வரும். அப்படித்தான் தலை கிறுகிறுத்து தொப்புன்னு கீழே விழுந்துட்டா.."

"ஐயய்யோ.. அப்புறம் என்ன ஆச்சி?"

"பதறாதேப்பா! உங்கண்ணிக்கு ஒன்னும் ஆகலை. லேசா சிராய்ப்பு! விழுந்த எடத்துல சருகுகள் நிறைஞ்சிருந்ததால அடி எதுவும் படலை. பயத்துல காய்ச்சல்தான் வந்திட்டது" கிழவர், நமுட்டாக சொல்லி விட்டு சிரித்தார்.

'எவரெஸ்ட் கூட ஏற ஆரம்பிச்சிட்டாங்க பெண்கள். இவள் மரத்துல ஏறக்கூட பயப்படுறாளே? நம் குடும்பத்துக்கு ஏற்ற குலவிளக்குதான்!'

மெல்லிய கொலுசு சப்தம் கேட்க.. நிமிர்ந்தான்.

சாதாரண கைத்தறி புடவை கட்டி தோள் வரை இழுத்துப் போர்த்தியிருந்தாள். களைப்பாய் தெரிந்தாலும் களையான முகம். மாநிறம். கூடுதல் கவர்ச்சியைத் தந்தது. அவசர அவசரமாய் முகம் அலம்பி பவுடர் போட்டிருக்கிறாள் போலும். தாடையோரம் அப்பிக் கிடந்தது. சின்னதாய் சாந்து பொட்டு. எண்ணெய் வைத்து வழிய வாரி பின்னல் இடை தாண்டி நின்றது. அளவான உயரம். இன்னும் கொஞ்சம் சதை போட்டால் அந்த உயரத்திற்கு சரியாய் இருக்கும் என்று தோன்றியது. அவனை நிமிர்ந்து நொடிக்கும் குறைவான நேரத்தில் ஒரு பார்வையை வீசினாள்.

ஒரு கணம்தான்.

அந்த பெரிய விழிகளில் தெரிந்த மருட்சியும், குழந்தைத் தனமும் அவனை என்னவோ செய்தது.

''என்ன வயசிருக்கும் இவளுக்கு? சேகருக்கு முப்பத்தி மூணு வயசாகுதே! பொருத்தமாய் இருப்பாளா? மிஞ்சி போனால் பதினெட்டுதான் இருக்கும்.''

''என்ன தம்பி? உங்கண்ணிக்கிட்டே ஒண்ணும் பேச மாட்டீங்களா?''

'இந்தக் கிழம் சரியான நக்கல் பிடிச்ச ஆசாமி!'

''நா.. நான் வர்றேங்க... உடம்பை பார்த்துக்குங்க. அப்புறம்... நிறுத்தினான்.

பூரணி நிமிர்ந்து பார்த்து புருவம் உயர்த்தினாள்.

''அடுத்த முறை மரம் ஏறும்போது... குட்டையான மரமா பார்த்து ஏறுங்க'' என்று கூற,



வெட்கத்தில் சிரித்த பூரணியின் முகம் பவுர்ணமி நிலவைப் போல் பளீரிட்டது.



2

''உங்கம்மா என்னமோ சொல்றாளே... நிஜமா தினா?'' குனிந்து விட்டு டவலால் தலையை துவட்டிக் கொண்டிருந்தவன் அப்பாவைப் பார்த்ததும் டவலை உடம்பில் போர்த்திக் கொண்டான்.

'அம்மா என்ன சொன்னாங்கப்பா..?''

''விவசாயம் பண்ணப் போறியாமே... நிஜமா?''

''.....''

''அதுமட்டுமில்லாம... நம்ம ஊருக்கு பஸ் ஸ்டாண்ட் கட்ட பிச்சைக்காரன் மாதிரி கும்பலை சேர்த்துக்கிட்டு நிதி திரட்டறியாம்... ஆல மரத்தடியில பசங்களுக்கு பாடம் சொல்லித் தர்றியாம். இதெல்லாம் என்ன? இதுக்குத்தான் நான் ஆயிரம் ஆயிரமா கொட்டி படிக்க வச்சேனா? அதுக்கு எட்டாவதோட படிப்பை நிறுத்திப் போட்டிருப்பேனடா? ஏதோ நம்ம குடும்பத்திலேயே நீ கொஞ்சம் புத்தியோட, ஆர்வமா படிக்கிறியேன்னு தான்.. வீணாக்கிடக் கூடாதுன்னு பெரிய படிப்பை படிக்க வச்சேன். எதுக்கு? சேத்துல எறங்கி உழறதுக்கும், உண்டி குலுக்கி பிச்சையெடுக்கிறதுக்குமா வெள்ளையும், சொள்ளையுமா ராஜா மாதிரி உடுத்தி, சுத்தற சேர்ல உக்காந்து முதலாளி மாதிரி கையெழுத்து போடுவியேன்னுதான்... புரியுதாடா?'' நீலாம்பரனின் குரலில் அதட்டல் இருந்தது.

''அ... அப்பா! விவசாயம்ங்கறது கேவலமா? நம்ம குடும்பமே அதை தானப்பா பண்ணுது? அது கேவலம்னா நீங்க செய்வீங்களா? அதுமட்டுமில்லேப்பா... இந்த காலத்துல எம்.காம்.ங்கறது வெறும் பத்தாவது படிப்பு மாதிரி ஆகிப் போச்சு. வேலை கிடைக்கறது... அதுவும் நீங்க கனவு காண்ற மாதிரி கிடைக்கறது ரொம்ப கஷ்டம்ப்பா! அந்த மாதிரி வேலைக்கு போனாலும் நான் மீண்டும்

வெளியூருக்குத்தான் போகணும். திரும்ப உங்களையெல்லாம் பிரியணும்.''

''அதெல்லாம் தெரியுமடா! என்னமோ பொம்பளைபுள்ள மாதிரி பிரியறதுக்கு அழறே! இதோ பார்... நீ ஒண்ணும் வேலைய தேடி அலைய வேணாம். காளிமுத்து தெரியுமில்லே! என் பால்ய கால நண்பன். மெட்ராஸ்லதான் சோடா கம்பெனி வச்சிருக்கான். அவனுக்கு ஒரே பொண்ணு தான். உன்னை அவன் சமீபத்துல பார்த்திருக்கான். பிடிச்சிப் போய் தன்னோட மாப்பிள்ளையாக்கி சோடா கம்பெனிக்கும் முதலாளியா ஆக்கிடணும்னு ஆசைப் படறான். யாருக்குடா கிடைக்கும் இப்படியொரு அதிர்ஷ்டம்? நான் நினைச்சதெல்லாம் நடக்கப் போகுதடா தினா. சேகர் கல்யாணம் முடிஞ்ச கையோட உன் கல்யாணத்தையும் முடிச்சிடணும்!''

தினகரனுக்கு வியர்த்துப் போனது.

''அ....ப்...பா!''

''சரி... சரி.. நிறைய ஜோலியிருக்கு நான் மாங்குடி வரைக்கும் போகணும். கல்யாணத்துக்கு இன்னும் சரியா முப்பத்தஞ்சு நாள்தான் இருக்கு. பட்டுக்கோட்டையில கேசவன்னு ஒரு ஆச்சாரி இருக்கார். தெரியுமில்லே..? கல்யாணப் பொண்ணுக்கு ஏழு பவுன்ல ஒரு ஆரம் செய்ய ஆர்டர் குடுத்திருந்தேன். அதை வாங்கிட்டு வந்திடறியா? பத்து மணிக்கு ஒரு பஸ் இருக்கு. அதுல போனா.. காரியம் முடிச்சிட்டு பொழுது சாயறதுக்குள்ள திரும்பிடலாம். என்ன நான் சொல்றது?''

''அ... ச... சரி... சரிப்பா!''

'காலேஜில சங்கீதம் கூட கத்துக்கிட்டியா? நல்லா பாடறியே!'' என்றார், நீலாம்பரன் கிண்டலாய்.

மனுஷனுக்கு வார்த்தைக்கு வார்த்தை கிண்டலடிப்பதென்றால் திருநெல்வேலி அல்வா சாப்பிடறது மாதிரி. சமயத்துக்கு விளையாட்டுப் போல் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றி பேசுவார்.



எதிர்த்து ஒரு வார்த்தை பேச முடியாது. அத்தனை கண்டிப்பு. கறார் பேர்வழி.

தினகரன் திகைப்பிலிருந்து இன்னும் மீளவில்லை.

''என்ன சொல்கிறார் அப்பா? திடுதிப்பென்று என்னிடம் ஒரு வார்த்தை கேட்காமல் இவரென்ன முடிவெடுப்பது? இதற்கெல்லாம் தலையாட்டினால் என் லட்சியங்கள்? குழிதோண்டி புதைப்பது தானா? லட்சியமில்லாத வாழ்க்கை மரணத்திற்கு சமம். எந்த உழைப்புமின்றி சட்டென்று கிடைத்து விடும். பணத்தில் என்ன திருப்தி கிடைத்து விடப் போகிறது? அந்தப் பணக்கார பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையா கிடைக்காது?

நோ.. நான் இதற்கு ஒப்புக் கொள்ள மாட்டேன். பிறந்தோம்... வளர்ந்தோம். சராசரியாய் என்னவோ வாழ்ந்து முடித்தோம் என்கிற சமாச்சாரமே என் வாழ்வில் இருக்கக் கூடாது. நான் பிறந்ததற்கு ஒரு அர்த்தம் உண்டு என்பதை அப்பாவே உணரும்படி நாம் எதையாவது செய்தே ஆகணும். அப்பா வீட்டை விட்டே துரத்தினாலும் சரி, அந்த சோடா கம்பெனி முதலாளிக்கு ஒரு கும்பிடு, அவரின் ஒரே செல்ல மகளுக்கும் ஒரு கும்பிடு.'

முடிவெடுத்தாலும் மனபாரம் இறங்கி லேசானது போல் இருந்தது. டிரஸ்சை மாட்டிக் கொண்டு பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தான்.

அந்த கிராமத்தின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்ப்பது விஸ்தாரமாய் பரந்து விரிந்திருந்த பெருமாள் கோவில்தான். எந்த புண்ணியவானோ... அதை கட்டும்போது கூடவே திருமணம் நடத்துவதற்கு தேவையான மேடையும், ஆயிரம் பேர் உட்கார வசதியான ஹாலுமாய் கட்டிவிட்டிருந்தார். கிராமத்தில் எந்த வீட்டில் என்ன நல்ல காரியம் நடக்க வேண்டும் என்றாலும் அங்குதான் நடக்கும். மணமேடையில் பூரணி அலங்கரிக்கப்பட்ட அம்மன் சிலையாய் அமர்ந்திருந்தாள். மணப்பெண்ணுக்கே உரிய பயமும், பதட்டமும் அவள் முகத்திலும் குடிகொண்டு இருந்தது.

புரோகிதர் பொறுமையாய் நினைவுக்கு வந்த மந்திரங்களை சொல்லிக் கொண்டிருந்தார். பொன்னம்பலமும், தாட்சாயிணியம்மாளும் தங்களுடைய நெடுநாள் கடனை நிறைவேற்றப் போகும் பூரிப்போடு வந்தவர்களை வரவேற்று கொண்டிருந்தார்.

அதற்குள் பின் கட்டில் இலை போட்டு வடை, கேசரி, பொங்கல் என பரிமாறிக் கொண்டிருந்த வாசனை பலரை இருப்பு கொள்ள விடாமல் செய்தது.

"தினா!" இங்குமங்கும் ஓடியாடி காரியங்களை கவனித்துக் கொண்டிருந்தவன் அப்பா கூப்பிட்டதும் திருப்பினான்.

"என்னப்பா?"

"பனங்குடியிலிருந்து நம்ம உறவுக்காரங்க இன்னும் வரலியேடா! முகூர்த்த நேரம் நெருங்குது!"

"வந்துட்டே இருப்பாங்க. டெம்போ ஏற்பாடு பண்ணியிருக்கேன். இந்நேரம் ஊருக்குள்ளே வந்திட்டிருப்பாங்க. வீணா, மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க." அவன் சொல்லி முடிக்கவில்லை. மண்டபத்தை நோக்கி மூச்சிரைக்க ஓடி வந்தான் கலியன். அதே ஊரைச் சேர்ந்த பள்ளிக்கூட வாட்ச் மேன்.

"அய்யா.. அய்யா.."

அவன் ஓடி வந்த வேகம், முகத்தில் பரவியிருந்த கலக்கம்.. நீலாம்பரனை ஒரு கலக்கு கலக்கியது.

"என்ன கலியா? நெருப்பு பிடிச்சிக்கிட்ட மாதிரி ஓடி வர்றே?"

"நம்ம ஊருக்கு எமன் வந்திட்டான்யா! எப்படி சொல்வேன்? நடக்கக் கூடாதது நடந்து போச்சே?" முகத்தில் அறைந்து கொண்டு பதறினான்.

"முதல்ல விஷயத்தை சொல்லுடா! பகீர்னு இருக்கு" இதற்குள் அவன் அழுகுரல் கேட்டு மண்டபத்தில் அமர்ந்திருந்தவர்களில் பாதி பேர் எழுந்து வெளியே வந்தனர்.

"என்னவாம்?"



"என்ன ஆச்சு?"

"ஏன் அழறான்?"

"கல்யாணம் நின்னு போய்டுமா?" ஆளாளுக்கு பேசினர்.

கலியன் முகத்தை துடைத்துக் கொண்டான்.

"பனங்குடியிலிருந்து கல்யாணத்துக்காக இருபது, முப்பது பேர் டெம்பா வண்டியில வந்திட்டிருந்தாங்க. ஊர் கோடியில இருக்கிற அந்த பாழடைஞ்ச கிணத்தில வண்டி பிரேக் பிடிக்காம சுவரை ஒடைச்சிக்கிட்டு விழுந்துடுச்சி."

"ஐயோ... அப்புறம்?" கவுரியம்மாள் நெஞ்சில் மையப் பகுதியில் அதிர்ந்தாள்.

"நாலைஞ்சு பேரைத் தவிர எல்லாரும் போய்ட்டாங்கம்மா." ஓவென மீண்டும் அலற.. கூட்டத்தில் சலசலப்பு.. விசும்பல்.

"என்ன அநியாயம் இது?"

"நடக்கக் கூடாததெல்லாம் நம்ம ஊர்ல நடக்குதே!"

"இன்னும் என்னென்ன நடக்கப் போகுதோ!"

"இருபது, முப்பது பேர் ஒரே நேரத்தில செத்துட்டாங்கன்னா இது சாமி குத்தம்தான்."

"சாமியுமில்லே... பூமியுமில்லே! அத்தனை பேரும் இந்த கல்யாணத்துக்கு வந்தவங்க... கொடூரமா செத்துப் போயிருக்காங்கன்னா.. அதுக்கு யார் காரணம்?"

"புரியலியே.."

"அதோ உக்காந்திருக்காளே அன்னபூரணி! அவதான்யா! அவ ஜனன ராசியும் சரியில்லே... ருதுவான நேரமும் சரியில்லே. சின்ன வயசுலேயே அப்பனையும், ஆத்தாளையும் முழுங்கிடுச்சி. இப்போதைக்கு சொந்த பந்தம்னு சொல்லிக்க அத்தையும், மாமாவும்தான். அது மட்டுமில்லே. நம்ம சேகருக்கு இவளை முடிக்கலாம்னு பேச்சுவார்த்தை நடத்திட்டிருந்தப்பவே அவங்க

வழியில யாரோ மண்டையப் போட்டுட்டாங்களாம். அப்பவே பேச்சுவார்த்தையோட நிப்பாட்டியிருக்கலாம். இப்ப பாரு.. இருபது பேரை முழுங்கிட்டு பூனையாட்டம் உக்காந்திருக்கா!''

''இதுக்கு என்னதான் பரிகாரம்?''

''எலஞ்சக் குடியில கூட இந்த மாதிரி ஒரு துக்கிரி பொண்ணு இருந்தாளாம். அப்படிப்பட்டவங்களுக்கு கல்யாணமே செய்யக் கூடாது. தீ மிதிச்சி அம்மனோட உக்கிரத்தை தணிக்கறதோட... சாகற வரைக்கும் கன்னியா இருந்து சுத்தபத்தமா பூஜை செய்துட்டு வரணும். அதுதான் ஊருக்கு நல்லது. அதைப் போல பூரணியும் பரிகாரம் செய்யணும்!''

''இந்த கல்யாணம் நடக்கும்னு நினைக்கிறீங்களா?''

''அது நீலாம்பரனோட அதிர்ஷ்டத்தை பொறுத்து இருக்கு'' ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி பேச... நீலாம்பரன் இறுகிப் போய் நின்றிருந்தார். தினகரனுக்கு நாடி நரம்புகள் துடித்தன.

'பாவிகள்... நாக்கு இருக்குன்றதுக்காக... இஷ்டத்திற்கு பேசுகிறார்களே.. மனிதர்கள் நல்லவைக்கு துணை போவதை விட அநீதிக்கு பக்க பலமாய் நிற்க தயங்கவில்லையே! இவர்கள் பெற்ற பெண்ணிற்கு இப்படியொரு அவலம் ஏற்பட்டால் இப்படித்தான் நியாயம் பேசுவார்களா?'

''முகூர்த்த நேரம் நெருங்குது. மாப்பிள்ளையை வரச் சொல்லுங்கோ!'' ஐயரின் குரல் ஓங்கி கேட்டது. வாசலில் நடக்கும் சம்பவங்கள் எதையும் அறியாமல் பூரணி நிலம் நோக்கி தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தாள்.

''நிறுத்துங்க.. இந்த கல்யாணம் நடக்காது!''

நீலாம்பரனின் குரல் கணீரென்று ஒலிக்க.. திறந்த வாய் மூடாத அதிர்ச்சியோடு குலுங்கிப் போய் அப்பாவை பார்த்தான் தினகரன்.

''அ... அப்பா... ஏம்ப்பா?''

''உனக்கொன்னும் புரியாது.. நீ சும்மாயிரு..''



''ஐயோ... என்னங்க... ஏன் திடீர்னு இப்படி கல்யாணத்தை நிறுத்தறீங்க?'' பொன்னம்பலம் அழாத குறையாய் அவர் கைகளை பற்றிக் கொண்டார்.

''......''

''ஊர்ல நல்லதும் நடக்கும். கெட்டதும் நடக்கும். அவங்க விதி... இப்படியாகிப் போச்சு. அதுக்காக மணவறை வரைக்கும் வந்த பொண்ணுக்கு தாலி கட்டாம கீழிறக்க கூடாதய்யா... நல்ல காரியத்தை தள்ளி போடாதீங்கய்யா'' தாட்சாயிணியம்மாள் கதறினாள்.

''தள்ளிப் போடலே... முறிச்சிக்கறோம். இந்த சம்பந்தமே எங்களுக்கு வேண்டாம்!''

''ஏங்கய்யா! நாங்க சீர் செனத்தியில ஏதும் குறை வச்சோமா? ஒண்ணுரெண்டு கூட போட சொன்னாலும் போட்டுடறோம்.''

''சீர் எடுத்துட்டு வர்றவ சீதேவியா இருந்தா பரவாயில்லே. மூதேவியாயில்லே இருக்கு. இந்த ஊரையே மொத்தமா முழுங்கி தண்ணி குடிக்கிறதுக்குன்னே பொறந்திருக்கிற எமனுக்கு என் வீட்ல எடமில்லே!''

''ஐயா.. புள்ளைய பெத்துட்டோம்ங்கறதுக்காக என்ன வேணாலும் பேசிடாதீங்க. உங்களுக்கும் கல்யாண வயசுல ஒரு பொண்ணிருக்கு!'' தாட்சாயிணி தாங்க முடியாத ஆத்திரத்தில் கத்தியதும், பொன்னம்பலம் அவளை அடிக்க கையை ஓங்கினார்.

''வாயை மூடுடி கழுதை! யார் கிட்டே என்ன பேசறோம்னு புரிஞ்சி தான் பேசறியா? ஐயா.. அவ அப்படித்தான் பட்டுனு பேசிடுவா... ஆனா மனசிலே ஒண்ணுமிருக்காது. தயவு செஞ்சு மத்தவங்க பேசறதை பெரிசா எடுத்துக்கிட்டு எங்க பூரணியோட வாழ்க்கைக்கு நெருப்பு வச்சிடாதீங்க. தாய் - தகப்பனில்லாத பொண்ணு. இந்த அவமானத்தை அவ தாங்கிக்க மாட்டா! அரளி சாப்பிட்டு செத்துடுவாய்யா!''

''போகட்டும்... அப்படியாவது ஊர் உருப்படட்டும்'' நீலாம்பரன் எகத்தாளமாய் சொல்ல, தினகரன் அப்பா முன் வந்தான்.

''அ... ப்.. பா.. நீங்களா இப்படி பேசறீங்க?''

''தினா... நீ இதுல தலையிடாதே!''

''இவ்ளோ நேரமும் உங்க பேச்சைக் கேட்டுத்தான் ஒதுங்கியிருந்தேன். இப்ப நீங்க பேசின பேச்சை பொறுக்க முடியாமத்தான் தலையிடறேன். வண்டியில பிரேக் பிடிக்காம விபத்துல இத்தனை பேர் செத்தது பெரிய துக்கம்தான். அதுக்காக? ஏன் கல்யாணத்தை நிறுத்தனும்? அந்த டிரைவர் கவனக் குறைவா இருந்ததாலதான் இந்த உயிர் பலிகள். பூரணியால் அல்ல!''

''சபாஷ்! நான் படிக்க வெச்ச படிப்பு இன்னிக்கு என் முன்னாலேயே கைசொடுக்கி பேசச் சொல்லுதா?''

''தயவு பண்ணி இதுல படிப்பை இழுக்காதீங்க! நான் திமிர்ல பேசல. மனிதாபிமானத்தினால பேசறேன். அம்மா நீயும் சும்மாயிருக்கியேம்மா... சொல்லும்மா... அப்பா பேசறது முறையில்லை.. தர்மமில்லைன்னு நீயாவது எடுத்துச் சொல்லும்மா... ப்ளீஸ்..''

''நான் மொதல்ல அவருக்கு பொண்டாட்டி அப்புறம்தான்டா உனக்கு அம்மா.. அவருக்கு முன்னாடியே நீ பொறந்திட்டியா? அவருக்கே புத்தி சொல்ற அளவுக்கு பெரிய மனுஷனாயிட்டியா? பட்டணம் போய் இததான் கத்துக்கிட்டு வந்தியா?'' கவுரியம்மாள் கண்களில் கோபம் மின்ன அதட்டினாள்.

துவண்டு போன தினகரன் சேகரிடம் வந்தான்.

''அண்ணா! இவங்களை விடுங்க! அந்த காலத்து மனுஷங்க சகுனம் சாஸ்திரம், சம்பிரதாயம்னு தங்களை தாங்களே குழி தோண்டி புதைச்சிக்கிறவங்க. நாம அப்படியில்லே. பாவம்ண்ணா! அந்த பொண்ணை பார்! இந்த நிமிஷம் வரைக்கும் உன்னை புருஷனா நினைச்சி கற்பனையா பல சந்தோஷங்களை அனுபவிச்சி... உனக்காக காத்திருக்கு. இவங்க பேச்சைக் கேட்டு



அந்த பொண்ணோட வாழ்க்கையை நாசம் பண்ணாதீங்கண்ணா. உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன்.''

சேகர் தினகரனின் தோளில் கை போட்டு ஆறுதலாய் தட்டிக் கொடுத்தான்.

''அப்பா.. நம்ம நல்லதுக்குத்தான் செய்வார்ங்கற நம்பிக்கை எனக்கிருக்கு தினா! இதெல்லாம் உனக்கு புரியாது. நீ சின்னவன், இதுல தலையிட்டு பிரச்சனையை உண்டு பண்ணாதே!''

சட்டென்று அவன் கைகளை தட்டி விட்டான்.

''ச்சீ... என்ன மனுஷ ஜென்மங்க நீங்க? நாலுகால் பிராணிக்கு இருக்கிற மனசாட்சியும், பொறுப்பு உணர்ச்சியும் கூட உங்களுக்கு இல்லையா? இவளோ நேரம் மனுஷன்னு நினைச்சி... உங்ககிட்டே கெஞ்சினேன் பாருங்க... என்னை... என்னை சொல்லணும் முதல்ல...'' என்றவன் ஆவேசம் தணியாமல் உள்ளே சென்றான்.

இன்னமும் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தவளைப் பார்த்து உருகிப் போனான். கண நேரம் கண் மூடி யோசித்தவன்... ''பூரணி..'' என்று முதல் முறையாய் அவளை பெயர் சொல்லி அழைக்க... மெதுவாய் நிமிர்ந்து பார்த்தாள்.

திடுக்கிட்டுப் போனான் தினகரன்.

கண்களில் நீர் கரைகட்டி மினுமினுத்தது.

'எல்லாமே கேட்டு விட்டாளா?'

''என் மேல நம்பிக்கை இருந்தா... நான் சொல்றதைக் கேளு! நமக்கு இந்த மனசாட்சி இல்லாத ஜாதி ஜனம் வேண்டாம். நடந்ததெல்லாம் மறந்துடு. உன்னை இந்த நிமிஷமே நான் மனப்பூர்வமா மனைவியா ஏத்துக்கறேன். அதுவும் நீ சம்மதிச்சா...'' அவன் சொல்லி முடிக்கவில்லை. அப்படியே அவன் காலைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

''என்ன அக்கிரமம் இது? அண்ணனுக்கு பார்த்த பொண்ணை தம்பி கட்டிக்கிறானாம். சே! என்ன மானங்கெட்ட பொழப்பு! சேகர்

தாலி கட்டியிருந்தா இவ அண்ணியா இருந்திருப்பா. அண்ணிங்கறவ இன்னொரு தாய்க்கு சமம்! அப்படிப்பட்டவ கழுத்துல இவன் தலி கட்டப் போறானாம்... த்தூ..!'' எதுவோ ஒரு கிழம் தத்துவம் பேசியது.

''டேய்ய்... தினா... மரியாதையா எறங்கிவா!'' நீலாம்பரன் மேடை நோக்கி ஆக்ரோஷமாய் வந்தார். கூடவே உறவுக் கூட்டமும் தொடர்ந்தது.

தினகரன் துரிதமாய் செயல்பட்டான் தேங்காய் மீதிருந்த மஞ்சள் கயிறை எடுத்து பூரணியின் கழுத்தில் மூன்று முடிச்சை போட்டு முடித்தான்.

பெத்தவங்களை பகைச்சிக்கிட்டு ஊர் பெரியவங்க பேச்சை மதிக்காம, அனுமதியில்லாம, தெய்வ குத்தமா பொறந்திருக்கிற இந்த பூரணி கழுத்தில தாலி கட்டினதுக்காக நீலாம்பரனின் இளைய மகன் தினகரனையும், இறந்து போன ரங்கராஜனின் பொண்ணான பூரணியையும்...

''நிறுத்துங்கய்யா...! என்ன சொல்லப் போறீங்கன்னு எனக்கு தெரியும். ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப் போறீங்க. அப்படித்தானே? நீங்க என்னய்யா எங்கள ஒதுக்கி வைக்கிறது? நான் ஒதுக்கி வைக்கிறேன். இந்த ஊரை, ஒரு பொண்ணை மதிக்கத் தெரியாத புழுக்களோட புழுக்களா நாங்களும் இந்த சாக்கடையில நெளிய விரும்பலே! எடுத்துச் சொன்னா புரிஞ்சிக்கிறதுக்கு கொஞ்சமாவது மனசில ஈரம் இருக்கணும். ஆனா பாறையில ஈரத்தை எதிர்பார்த்தது என் முட்டாள்தனம். நாங்க போறோம்!''

தினகரன் கணீரென சொன்னதைக் கேட்ட மொத்த கூட்டமும் வியப்பால் வாய் பிளந்தது.

பஞ்சாயத்து தலைவர் தொண்டையை செருமிக் கொண்டார்.

''இவங்க ரெண்டு பேரையும் ஒதுக்கி வைக்கிறது மட்டுமில்லே. இவங்களுக்கு உதவி செய்தாலோ, பேசினாலோ அவங்களும் தண்டிக்கப்படுவார்கள்.''



பொன்னம்பலமும், தாட்சாயிணியும் கண்ணீர் சிந்த தினகரனைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டபடி ஆசீர்வதித்தனர்.

தினகரன் தன்னைப் பெற்றவர்களிடம் போனான். கையெடுத்து வணங்கியவனைப் பார்த்ததும் முகத்தை திருப்பிக் கொண்டனர்.

''நா... நாங்க போறோம்ப்பா!''

''........''

''அ... அம்மா... நீயாவது என்னை புரிஞ்சிக்கம்மா!''

''.....''

''அண்ணா... நம்ம குடும்பம் செய்யவிருந்த பெரிய பாவத்தை தடுத்து நிறுத்தினது தப்புன்னா, ... நீங்கள்லாம் குடுக்கற இந்த தண்டனையை மனசார ஏத்துக்கறேன்...''

''.........''

''ஜானகி... வரட்டுமா? இந்த அண்ணன் எதையாவது வாங்கி வருவான்னு இனி எதிர்பார்க்க மாட்டேயில்லே! ஏன்னா... உங்களை பொறுத்தவரை நான் செத்துப் போயிட்டேன். அப்படித்தானே?'' தழுதழுப்பாய் பேசினான்.

''வா.. பூரணி...''

கனத்த மனச்சுமையோடு பூரணி தினகரனின் பின் தொடர்ந்தாள்.



3

சூரியனுக்கு என்ன கோபமோ? அன்று முழுக்க யார் முகத்திலும் விழிக்கவில்லை. எல்லாமே சோம்பலமாக இயங்கிக் கொண்டிருந்தது. முன்தினம் பெய்த மழையில் இலைகளில் பற்றிக் கொண்டிருந்த தண்ணீர் முத்துக்கள் தாளமுடியாத சோகத்தில் கீழே விழுந்து சிதறிக் கொண்டிருந்தன.

முருங்கை மரத்து கிளையில் கட்டியிருந்த தன் கூட்டை அலகால் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த காக்கை.. விசுக்கென்று எழுந்து காற்றில் திடுக்கிட்டு பறந்தோடியது.

பூரணி சமைத்து வைத்த உணவை மூடி வைத்து விட்டு ஜன்னலருகே அமர்ந்து தெருவை பார்த்தாள்.

"இவர் ஏன் இன்னும் வரவில்லை?"

பக்கத்து வீட்டில் மணி மூன்று என்று கடிகாரம் பலத்த ஓசையுடன் அறிவிக்க... கவலை இன்னும் கூடியது.

"காலையில கூட எதுவும் சாப்பிடாமல் ஓடினாரே?" கிட்டத்தட்ட ஒரு மாதம் ஓடிவிட்டது.

சென்னைக்கு வந்து ஒரு லாட்ஜில் தங்கி.. அவசர அவசரமாய் இந்த ஓட்டு வீட்டை வாடகைக்கு பிடித்து சமையலுக்கென பாத்திரம் பண்டம் வாங்கி... எல்லாமே தினகரன்தான் பார்த்துப் பார்த்து செய்தான். அவனின் தடங்களில்லாத ஆங்கிலப் பேச்சு எளிதில் ஒரு டெக்ஸ்டைல்ஸ் ஷோரூமில் சூப்ரவைசர் வேலையை பெற்று தந்தது. குறைந்த சம்பளம் தான் ஆனால், அதுவே போதுமானதாய் கட்டு செட்டாய் குடும்பம் நடத்தினாள் பூரணி.

இன்னும் அவர்களுக்குள் சரளமாய் பேச்சு வார்த்தைக் கூட ஏற்பட வில்லை.

காரணம் தயக்கம்.

அவன் மனதிலோ, அவள் மனதிலோ எந்த நெருடலும் இல்லை. ஆனால் அன்று திருமணத்தின் போது யாரோ ஒரு கிழவன் இவர்கள் உறவு முறையை தாய் மகன் ஸ்தானத்தில் வைத்து பேசி காறித் துப்பியதுதான் இன்னும் வலித்தது.

அந்தக் காயம் இவளுக்கு இன்னும் இருக்குமோ? நெருங்கினால் தப்பாக நினைப்பாளோ? என்று மடத்தனமாய் சந்தேகம் எழ... அதே மடத்தன எண்ணம் அவளுள்ளும் ஓடியது. விளைவு! இருவரிடையே ஒரு வேண்டாத மவுனத்திரை விழுந்தது.

அருகிலிருந்து பரிமாறுவாள். அவசியமானதை பேசுவாள். இரவானதும் இருந்த ஒரே அறையில் ஒடுங்கிக் கொள்ள, இவன் வராந்தாவில் படுப்பான். இரண்டு உள்ளங்களிலும் அலையலை



யாய் உணர்வுகள் கொப்பளித்தாலும், மூடி திறக்காத சோடா போல் அவை உள்ளுக்குள்ளேயே அமிழ்ந்து கிடந்தன.

அன்று...

வரும் போது கையில் மல்லிகைப் பொட்டலத்துடன் வந்தான்.

'ஏன் லேட்? வேளைக்கு ஒழுங்கா சாப்பிட்டாத்தானே..' என்று கேட்க நினைத்தும் ஊமையாகிப் போனாள்.

"இந்த பூவை.. சா.. சாமி படத்துக்குப் போடு."

'உனக்காகத்தான் வாங்கி வந்தேன்னு சொல்ல எனக்கு ஏன் இப்படி நடுங்குது?"

'எனக்குன்னு ஒரு முழம் பூவை எப்ப வாங்கித் தரப் போறீங்க? ஏனிந்த அவஸ்தை? எதுக்காக தாலி கட்டணும்? என்னை மனைவியா மனசால ஏத்துக்க முடியாதப்ப ஏன் கட்டிக்கணும்? சொந்த பந்தங்களை பகைச்சிக்கிட்டு வந்ததும் என்ன வாழ்ந்துக் காட்டிட்டீங்க? என்னால் தானே எல்லாம்?' பொங்கி வந்த விழி நீரை அடக்க முடியாமல் முந்தானையை வாயில் பொத்தி உள்ளே ஓடினாள்.

ஸ்தம்பித்து விட்டான் தினகரன்.

"பூ.. பூரணி..என்ன? என்னம்மா ஆச்சு? ஏன் அழறே?" அந்த கரிசனமான பேச்சை தாங்கிக் கொள்ள முடியாது கேவல் வெடித்தது.

தவித்துப் போனான்.

"என்ன ஏதுன்னு சொல்லாம அழுதா... நான் என்னன்னு புரிஞ்சிக்கறது? என்னம்மா... ஊர் ஞாபகம் வந்துடுச்சா?"

இல்லையென தலையாட்டினாள்.

"வேற?"

"என்னால நீங்க பட்ட கஷ்டம் போதும். பெத்தவங்களையும் உற்றவங்களையும் ஒதுக்கி, என் கழுத்தில் அவசர அவசரமா தாலி கட்டியும்... உங்களால நிம்மதியா இருக்க முடியலியே? அந்த நேரத்துக்கு என்னை காப்பாத்தணுமேங்கற எண்ணத்தில எனக்கு

தாலி கட்டினீங்களே தவிர, உங்க மனசில இடம் பிடிக்க எனக்கு கொடுத்து வைக்கலீங்களே... உங்க நல்ல மனசுக்கு நீங்க எப்படியோ இருக்கணும். ஆனால், விட்டுருங்க.. நான் எங்கேயாவது போய்டறேன். நீங்க ஊருக்கே போய்டுங்க. அம்மா, அப்பா கால்ல விழுந்து செஞ்சது தப்புன்னு மன்னிப்பு கேளுங்க... வேற ஒரு கல்யாணம் பண்ணிட்டு நிம்மதியா இருங்க!'' பூரணி கண்களை துடைக்க, துடைக்க அது பாட்டுக்கு சுரந்து கொண்டேயிருந்தது.

தினகரனுக்கு எல்லாமே பளிச்சென புரிந்தது. அவள் மனதைப் பற்றி தான் போட்ட தப்புக்கணக்கு உறைக்க, நெகிழ்வோடு அவளை நெருங்கினான்.

''என்னை மன்னிச்சிடு பூரணி! நான் இது நாள் வரை உன்னை புரிஞ்சிக்காம... இருந்துட்டேன். அந்தப் பூவை இப்படிக் கொடு!'' வாங்கி அதை அவள் கூந்தலில் சூடினான். அவ்வளவு நீள கூந்தலுக்கு ரெண்டு முழ ஜாதி எங்கேயோ ஒட்டிக் கொண்டிருந்தாலும் நெஞ்சில் கும்மாளம் திக்குமுக்காட அவள் தோளை அணைத்து தன்பக்கம் திருப்பினான்.

பன்னீரில் மிதந்த திராட்சை கணக்காய் பூரணியின் கருவிழிகள் இங்குமங்கும் அசைந்து நம்ப முடியாத ஆச்சரியத்தில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பற்றிக் கொண்டிருந்த அவன் கரங்களை எடுத்து கண்களருகே வைத்து ஒற்றினாள். மகிழ்ச்சி பொங்க! உள்ளங்கள் இரண்டும் ஒன்று சேர்ந்த ஆனந்த அதிர்ச்சியில் தேகங்கள் சிலிர்த்தன. தினா கைகளுக்குள் அவள் முகத்தை சிறைப்படுத்தி தன் முகத்தை அருகே கொண்டு சென்றான்.

''விழுந்துடப் போறீங்க... போதும் இறங்குங்க'' பூரணி பதட்டமா கத்தினாள்.

தினகரன் அவள் கத்தலை லட்சியம் செய்யாமல், சிரித்தபடியே முருங்கைக் கீரைகளை பறித்து போட்டுக் கொண்டிருந்தான். அந்த வீட்டு வாசலில் பெரிய முருங்கை மரமொன்று இருந்தது.



மருந்துக்குக் கூட ஒரு காய் காய்க்காது. ஆனால், கீரை அத்தனை ருசியாக இருக்கும். வாரத்துக்கு இரண்டு, மூன்று முறை தினாவுக்கு சமைத்தாக வேண்டும். நுனி கிளைகளில் பறித்து, பறித்து வெறும் குச்சிகளே நீண்டிருக்க.. உயரமான கிளைகளில் இருந்து பறிக்க வாகாய் மரத்து மீதே ஏறிவிட்டான். எந்த நேரமும் விழுந்து விடுவானோ என்று பயந்தபடியே அவனை பார்த்து கெஞ்சிக் கொண்டிருந்தாள் பூரணி.

''போதும் மாமா... பார்த்து இறங்குங்க..''

''ஏன் பூரணி அலர்றே? மிஞ்சிப் போனா இருபதடி இருக்குமா? அப்படியே விழுந்தாதான் என்ன? உயிரா போயிடும்?''

''இப்படியெல்லாம் பேசறதா இருந்தா... இனி நான் இந்த கீரையை சமைக்கப் போறதில்லே!'' முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்.

''அட, என் பூரணிக்கு கோபம் கூட வருதே! நிஜமா சொல்றேன். இப்டி கோபப்படறப்ப.. இந்த மூக்கு லேசா விடைச்சிக்கிட்டு, கண்களை உள்ளடக்கி பாக்கறப்ப... ரொம்ப அழகா இருக்கேடா!''

''போதும்.. ரொம்ப அளக்காதீங்க. அழுதா கூட நீ ரொம்ப அழகா இருக்கே... கண்லேர்ந்து விழற தண்ணி பாதரச முத்து மாதிரி இருக்குன்னு கப்ஸா விடுவீங்க..''

''அடடே... நல்லா பேசறியே... பூரணி! ம்... இந்த பூனையும் பால் குடிக்குமான்னு நினைச்சா... கள்ளையே குடிக்கிறியே... நீ ஏன் எட்டாவதோடு படிப்பை நிறுத்திட்டே?''

''நம்ம கிராமத்திலே... பொண்ணுங்க எட்டாவது படிச்சு முடிக்கிறதே பெரிய விஷயம் மாமா. பெரியவளாயிட்டா.. யாரு வெளியே படிக்க அனுப்பறா?''

''அப்ப... எட்டாவது படிச்சி முடிச்ச பிறகுதான் வயசுக்கு வந்தியா?''

''என்ன.. என்ன?'' என்றபடி திரும்பினாள் பூரணி.

''எட்டாவது முடிச்ச பிறகுதான் வயசுக்கு...'' கப்பென அவன் வாயை பொத்தினாள் பூரணி.

''சே... என்ன அசிங்கமால்லாம் பேசறீங்க?'' முகம் சிவந்து போனது.

''இதுல என்னடா அசிங்கம்? ஒரு பூ மலருதுன்னா.. அது எவ்ளோ பெரிய அழகான விஷயம்? அதுபோலதான் ஒரு பொண்ணு வயசுக்கு..''

''கடவுளே.. போதுமே உங்க ஆராய்ச்சி... சின்ன குழந்தை மாதிரி அதையே பேசிக்கிட்டு..''

தினகரன் குறும்பாய் சிரித்தபடி அவள் கழுத்தைக் கட்டி கொண்டு கன்னத்தில் முத்தமிட்டான்.

''இதுக்குத்தான் பூரணி! எந்த க்ரீமோட உதவியும் இல்லாம... இந்த கன்னம் சட்டுன்னு சாந்தை குழைச்சி பூசின மாதிரி சிவந்து போறதை பார்த்துக்கிட்டே இருக்கணும் போலிருக்கு. பூரணி... அதுக்குத்தான் உன்னை சீண்டி பாக்கறேன்.''

கணவனின் வாயால் 'தான் அழகி' என்று புகழப்படும் இன்பத்தை விட பெண்களுக்கு உலகில் வேறு பெரிதான இன்பம் ஏதுமில்லை.

தனக்குள் எழுந்த கர்வத்தில் தினாவின் கழுத்தை வலிக்காமல் மெதுவாய் கடித்தாள்.

''ஆபீசுக்கு லீவு போட்றவா?'' தினா காதருகே கிசுகிசுத்தான்.

''ஏன்?'' என்றாள் வியப்பால் விழிகள் அகல.

''மூடு மாறிப் போச்சு!'' அவள் இடுப்பை இழுத்தணைத்தான்.

''நல்லாருக்கே கதை. விடுங்க மாமா... கிளம்புங்க'' சிரித்தபடியே விடுவித்தான்.

''இதுவரைக்கும் நான் உன்னை எங்கேயும் வெளியே அழைச்சிட்டு போனதில்லே. அடுத்த வாரம் திருப்பதி போகலாமா



பூரணி? சனிக்கிழமை போய் ஞாயிறு திரும்பிடலாம். ஒரு நாள் லீவு போட்டா போதும்!''

''ஐய்யோ திருப்பதியா?''

''ஏன் அலர்றே?''

''வேணாங்க?'' மருட்சியுடன் மறுத்தவளை புரியாமல் பார்த்தான்.

''ஏன் பூரணி?''

''அது.. அது ரொம்ப உயரத்திலே.. மலை மேல இருக்கும். எனக்கு பயமாயிருக்குங்க...''

''அட தேவுடா! என்ன நீ இப்படி பயந்து சாவறே? உயரத்திலேர்ந்து பூமியை பார்! எவ்ளோ அழகா, அற்புதமா இருக்கும் தெரியுமா? இப்பெல்லாம் லேடீஸ் பஸ் ஓட்டறாங்க. ஏன், ஏரோப்ளேனே ஓட்டறாங்க. நீ ஏம்மா இப்படி பயப்படறே? எல்லாத்துக்கும் தன்னம்பிக்கை அவசியம். என்னால இது முடியும்னு நினைச்சிக்கிட்டே காரியத்திலே இறங்கினா சக்ஸஸ்தான். பாதியில படிப்பை நிறுத்தினது தப்பு. நீ இன்னும் படிக்கணும். நான் உன்னை டுடோரியல்ல சேர்த்து விடறேன். மொதல்ல எஸ்.எஸ்.எல்.சி.ய முடி. அதுக்கப்புறம் ப்ளஸ்டூ, டிகிரின்னு முடிச்சி, டைப்ரைட்டிங், கம்ப்யூட்டர் கோர்ஸ்னு ஒவ்வொண்ணா முடிச்சி... என் பூரணிய நான் ஆபீஸ்ல உக்கார வச்சி பார்க்கணும்!''

''போங்க மாமா... நீங்களும் உங்க கற்பனையும்!''

''கற்பனைன்னு என் ஆசைக்கு முட்டுக்கட்டை போடாதே. நிச்சயம் நீ படிக்கணும். வில்-பவர் உள்ள பூரணியா... வானத்திலே பிரகாசிக்கிற பவுர்ணமியா நான் உன்னை பார்த்தே ஆகணும். இப்ப பேச நேரமில்லே. ஆபீஸ் போயிட்டு வந்து நைட்டு பேசிக்கறேன். வரட்டா?'' செல்லமாய் அவள் கன்னத்தை நிமிண்டி விட்டுப் போனான்.

ஆனால், இரவு அவன் திரும்பி வரும்போது ஒரு புதிய பிரச்சினையை கையோடு கொண்டு வந்தான்.



4

சடுதியில் காணாமல் போன நட்சத்திரங்களை பார்த்து வியந்தாள் பூரணி. காயப் போட்ட வைக்கோல் போராய், அங்குமிங்குமாய் மேகக் குவியல்கள். திடீரென்று ஒன்று சேர்ந்து எந்நேரமும் வானத்தை அழ வைக்கலாம். ஊதக்காற்று சில்லென்று மேனியை தடவி சிலிர்க்க வைத்தது.

பூரணி இடது பக்கம் திரும்பி தினகரனை பார்த்தாள். அவன் இன்னமும் யோசனையுடன் மோட்டு வளையை பார்த்துக் கொண்டிருந்தான்.

காலையில் அவன் பூரணியின் மேல்படிப்பு பற்றி கூறி விட்டு போனது, நீரு பூத்த நெருப்பை விசிறிவிட்டுப் போனது போல் அவளுள் கனன்று கொண்டிருந்தது நிஜம். இயல்பாகவே அவளுக்கு கற்பூர புத்தி. நிறைய படிக்க கொள்ளை ஆசை! ஆனால் அதையெல்லாம் உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள். அத்தையும், மாமாவும் என்னதான் தாயில்லா பெண் என்று ஊட்டி வளர்த்தாலும், சமயத்தில் வார்த்தைகள் அவர்களை மீறி தடித்து வந்து விழுவதுண்டு.

இவள் படிப்பதே சுத்தமாக அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்னும்போது, எட்டாவது படித்ததே அதிசயம். அதுவும் அந்த ஊர் மாநகராட்சி பள்ளியில் எட்டாவது வரை வகுப்பு இருந்தது. அதற்கு மேல் படிக்கணும் என்றால் டவுனுக்குப் போய், பணம் கட்டித்தான் படிக்கணும் என்பதால்.. அந்த ஆசைக்கு முற்றும் போட்டு விட்டாள். இப்போது தினகரன் அவளை படிக்க வைக்க வேண்டும் என்று தன் ஆசையை வெளிப்படுத்தியதும் மேலுக்கு பிகு பண்ணிக் கொண்டாலும் படிக்கப் போகிறோமே என்கிற எண்ணமே அவள் தலையில் கொம்பு முளைக்க வைத்தது. அவனாக பேச்சை ஆரம்பிப்பான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவன் ஆபீசில் இருந்து வந்தது முதல் ஏதோ யோசனையுடன் இருந்தான்.



''மாமா!''

''ம்'' என்றான் அசையாமலேயே.

''ஏதும் பிரச்சினையா?''

''சேச்சே..''

''பின்னே ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?''

''பூரணி''

''என்ன மாமா?''

''நான் உன்கிட்டே அடிக்கடி சொல்வேனே... என் ஆசைகள் ஸ்கூல் கட்டணும்.. அது இதுன்னு..''

''ஆமாம்''

''அதுக்கெல்லாம் நிறைய பணம் தேவைப்படும் இல்லையா?''

''ம்..''

''அந்த பணத்துக்கு ஒரு வழி பொறந்திடுச்சி பூரணி.''

''என்ன சொல்றீங்க மாமா?''

''உன்னை ராணி மாதிரி நம்ம ஊர்க்காரங்களுக்கு முன்னாடி நிறுத்துவேன். என் லட்சியம், கனவெல்லாம் ஒவ்வொண்ணா நிறைவேத்தப் போறேன்... அதுக்குரிய காலம் வந்திட்டது.''

''புரியவே இல்லை... கொஞ்சம் கூட...''

''சொல்றேன்... சொல்றேன். எங்க கடை கஸ்டமர் ஒருத்தர் எனக்கு ரொம்ப க்ளோஸ் ஆகிட்டாரு. அவரு ஏஜெண்ட்டாம். இங்கேர்ந்து சவுதிக்கு ஆள் அனுப்புறவராம். நான் அவருக்கு நல்ல பழக்கம் என்பதால் எல்லோர்கிட்டேயும் வாங்கறதை விட, பாதி பணம் குடுத்தாலே போதுங்கறார். அங்கே செவன் அப் கம்பெனியில சேல்ஸ்மேன் வேலையாம். பாஸ் போர்ட், விசாவெல்லாம் அவரே ரெடி பண்ணிக்கிறாராம். நெருக்கி பிடிச்சி ஒரு நாப்பதாயிரம் ஏற்பாடு பண்ணிட்டேன்னா, மாசம் சுளையா இருபதாயிரம் சம்பளம். போட்ட பணத்தை ரெண்டே மாசத்தில் எடுத்திடலாம். ரெண்டு வருஷ அக்ரிமெண்ட்!''

''......''

''என்ன பூரணி பேசாம இருக்கே?''

''ரெண்டு வருஷமா என்னை பிரிஞ்சி இருப்பீங்களா மாமா?'' தொண்டையடைக்க கேட்டாள்.

தினகரன் ஒருகணம் எதுவும் பேசத் தோன்றாமல், அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''அசடு.. எனக்கு மட்டும் கஷ்டமாயிருக்காதா? என்ன பண்றது பூரணி? வாழ்நாள் முழுக்க கஷ்டப்படறதை விட ரெண்டு வருஷம் மனசையும், உடம்பையும் கல்லா நினைச்சி காலத்தை கடத்திட்டோம்னா.. அதுக்கப்புறம் நமக்கு எந்த பிரச்சினையுமில்லேம்மா, அதுக்குள்ளே நீ படிச்சிட்டிரு. பின்னால என்னோட கனவுகளுக்கு நீ பக்க பலமா இருப்பே..''

''உங்களை பிரியறதுன்னா, கற்பனைக்கூட பண்ண முடியலைங்க.''

''அதையெல்லாம் நினைக்காதே! உன் தினாவோட ஆசைகளை லட்சியங்களை நினைச்சிப்பார். எதுவுமே சிரமம் தெரியாது. ப்ளீஸ் பூரணி!'' அவன் கெஞ்சலாய் கேட்க... தாங்க முடியாமல் அவன் மார்பில் முகம் புதைத்து விம்மினாள்.

''இப்படியெல்லாம் என்கிட்ட கெஞ்சற அளவுக்கு நான் விலகிப் போயிட்டேனா?''

''யப்பா! இந்தப் பொம்பளைங்களே இப்படித்தான். எதையாவது தூண்டித் துருவி குற்றம் கண்டுபிடிச்சிடுவீங்களே... சிரிம்மா... சந்தோஷமா என்னை போய் வான்னு சொல்லு!''

முகத்தை துடைத்துக் கொண்டு சிரிக்க முயன்றாள்.

''பணத்துக்கு என்னங்க பண்றது?''

''முதலாளிகிட்டே வட்டிக்கு கடன் கேக்கலாம்னு இருக்கேன்.''

''கடனா? அதெல்லாம் வேணாம். நகையெல்லாம் எதுக்கு இருக்கு.''



''என்ன பூரணி சொல்றே? உன்னோட நகைங்களையா?''

''ஏன் என் நகை, உன் நகைன்னு பிரிச்சி பேசறீங்க?''

''அம்மாடி... உடனே அழ ஆரம்பிச்சிடாதே! உனக்கு ஆசையா போட்ட நகையாச்சேன்னு சொன்னேன்.''

''இப்ப மட்டும் என்ன? உங்க ஆசைய நிறைவேத்தத்தானே விக்கப் போறோம். உங்க ஆசை வேற! என் ஆசை வேறன்னு இருக்கா மாமா?''

''இப்படி நீ பேசப் பேச...''

''பேச பேச..?''

''சவுதி போற ஐடியாவையே விட்றலாமான்னு தோணுது. எப்பவும் உன் முகத்தை இமைக்காம பார்த்துக்கிட்டு உன் பேச்சை கேட்டுக்கிட்டு இருக்கணும் போலிருக்கு.''

''அதெல்லாம் வேணாம் மாமா! இப்படியொரு பிள்ளைய பெற உங்க அம்மா ரொம்ப புண்ணியம் பண்ணி இருக்கணும்.''

''ம்.. நீயும் பெத்துக்கோயேன்.. உன்னை மாதிரி அஞ்சு, என்ன மாதிரி அஞ்சுன்னு! வீடெல்லாம் கலகலன்னு நம்ம வீடே ஒரு நர்சரி மாதிரி!''

''உங்களுக்கு குழந்தைன்னா ரொம்ப ஆசையா?''

''குழந்தை மேல ஆசைப்படாதவங்க யாரு இருக்கா? நாம நம்ம குழந்தைங்க மேல நம்ம கருத்துக்களை திணிக்காம, சுதந்திரமா வளர்க்கணும். டாக்டரா, வக்கீலா, என்ஜினீயரா, விளையாட்டு வீரனா, எழுத்தாளனா, இப்படி ஒவ்வொரு.. ஃபீல்டுலேயும் அவங்க கொடிகட்டி பறக்கணும் பூரணி!'' அவன் கண்களில் ஆசை மின்னியது.

பொங்கி வந்த சிரிப்பை மறைக்க வாயில் கையை வைத்து மூடினாள்.

''ஏய்... ஏன் சிரிக்கிறே?''

''இன்னும் செடியே வளரலை. அதுக்குள் பூ, காய், கனின்னு எவ்ளோ பெரிய கற்பனை என் மாமாவுக்கு..''

''ம்... இந்த செடி எனக்கு கனி தராதா என்ன?'' என்ற தினகரன் அவள் கண்களுக்குள் தொலைந்து போன தன் உயிரைத் தேடி.. இறுக அணைத்தான்.

மேலும் ஒரு மாதம் ஓடிப்போக... தினகரன் சவுதி அரேபியா போவதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் செய்து முடித்தான். பூரணியின் மேனியிலிருந்த ஒரு சில நகைகளை தவிர எல்லாவற்றையும் விற்று பணமாக்கினான். நாட்கள் நெருங்க.. நெருங்க அடிவயிற்றில் நெருப்பு கப்பென பற்றியது. வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கணவன் மனம் புண்படக் கூடாதே என்கிற எண்ணத்தில் துளியும் காட்டிக் கொள்ளாமல் சிரித்தபடி வளைய வந்தாள்.

அவள் முகம் பார்த்து கொஞ்ச நஞ்ச கலக்கமும் காணாமல் போனது தினகரனுக்கு.

'இவளை தனியே விட்டுப் போகிறோமே என்கிற பயமே வேண்டாம்! பூரணிக்குள் நெருப்பும், இரும்பு போன்ற துணிவும் இருக்கிறது. அவள் எதையும் சமாளித்துக் கொள்வாள்' என்கிற நம்பிக்கை அவனுக்கு தெம்பளித்தது.

கடைசியாய்... அவன் புறப்படும் நாள் வந்தே விட்டது.



5

வாசலில் ஆட்டோ காத்திருந்தது.

தினகரன் காலடியில் சிறிய சூட்கேஸ் மட்டுமே!

எதையாவது வாய் திறந்து பேசினால், அழுது விடுவாமோ என்கிற பயத்தில் பூரணி வாயே திறக்கவில்லை. மொத்தமாய் துணியை சுருட்டி நெஞ்சு குழிக்குள் அடைத்து வைத்தது போல் இருந்தது.



32955
5008309

''ஏர்போர்ட்டுக்கு வா...'' [illegible] அழைக்கவில்லை. வருகிறேன் என்று பூரணியும் [illegible]. அங்கு வந்து தாங்கள் அடக்கி வைத்திருக்கும் உணர்வுகள் கட்டவிழ்ந்து விட்டால்?

''மறக்காம வாரம் ஒரு லெட்டர் போடணும்!''

''அதெல்லாம் தாங்காது. தினமும் எழுதுவேன்.''

''சனிக்கிழமையாவது எண்ணெய் தேய்ச்சி குளிக்க மறக்காதீங்க.''

''....''

''ரொம்ப உடம்பை வருத்திக்காதீங்க மாமா! நேரத்துக்கு சாப்பிட்டு தூங்கணும். அங்கே சட்டதிட்டங்களெல்லாம் ரொம்ப கடுமையா இருக்குமாமே! அநாவசியமா எந்த விஷயத்திலேயும் தலையிடாதீங்க!''

''என்னைப் பத்தியே பேசறியே பூரணி! உன்னைப் பத்தி எதையாவது சொல்லேன். ரெண்டு வருஷத்துக்கு தாங்கற மாதிரி.. என் இதயத்தில் பூட்டி எடுத்துக்கிட்டு போற மாதிரி சொல்லேன் பூரணி..'' என்றான் கரகரப்பாய்.

அந்த வார்த்தைகள், குரலில் இருந்த உருக்கம், கெஞ்சிக் கேட்ட பரிவு. எல்லாமுமாக சேர்ந்து அவள் மூடி வைத்திருந்த அணையை திறந்துவிட... ஓவென அலறியபடி அவன் மார்பில் சாய்ந்தாள்.

''ஏய்.. ஏய்... இங்கே பார்.. பூரணி.. என்னைப் பாருடா..'' அவள் முகவாயை நிமிர்த்த முயற்சித்தான்.

''தாங்க முடியலை மாமா! உங்களை பிரிஞ்சி ரெண்டு வருஷம் எப்படி இருக்கப் போறேன்னே புரியலை..''

''பூரணி, பாரும்மா... எல்லாமே நம்ம சந்தோஷத்துக்காகத் தான் சொல்லு... இந்த பயணத்தில உனக்கு மனப்பூர்வ சம்மதமில்லேன்னா சொல்லிடு. கேன்சல் பண்ணிடலாம். இங்கேயே இருந்துடறேன். உன் விருப்பம்தான் எனக்கு முக்கியம்.''

சடுதியில் தன்னை நிதானத்திற்கு கொண்டு வந்தாள்.

"ஐயோ.. வேணாம்.. மாமா.. நா.. நான் அழலை. நீங்க கவலைப்படாம போய் வாங்க!"

"அப்ப எனக்கொரு ப்ராமிஸ் பண்ணு!"

"என்ன மாமா" புருவம் மேலேறியது.

"இனி எக்காரணம் கொண்டும் நீ அழக் கூடாது. பிரளயமே ஏற்பட்டாலும் என் பூரணி துவளக் கூடாது."

பூரணியின் கண்களில் ஒரு ஒளி. தன் கணவனை பெருமை பொங்க பார்த்தாள்.

"அழமாட்டேன் மாமா! சத்தியமா இனி அழவே மாட்டேன். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் என் கண்ணீரை வீணாக்க மாட்டேன். நான் உங்க மனைவிங்க. உங்க துணிச்சலும், தன்னம்பிக்கையும் பாதியாவது எனக்கும் இருக்குமில்லையா? என்னைப் பத்தி கவலைப்படாம போயிட்டு வாங்க. பாம்பே போய் சேர்ந்ததும் எனக்கு லெட்டர் போடுங்க."

"இப்பத்தான் எனக்கு நிம்மதியா இருக்கு பூரணி" என்றவன் அவளின் இடுப்பை வளைத்து அணைத்து முத்தமிட்டு விலகினான்.

அந்த முத்தம்தான் அவளுக்கு இடும் கடைசி முத்தம் என்பதை யார் தான் அறிவார்?

ஆட்டோவில் ஏறிப் புறப்பட்டவனை கண்ணிலிருந்து மறைந்த பின்பும் அவன் போன திக்கையே நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு தன்னுயிர் கூட்டை விட்டு பறந்துப் போனது போல உடல் லேசானது போன்ற உணர்வு.

உள்ளே வந்தவள் அப்படியே சுவற்றில் சாய்ந்து கொண்டாள்.

'இரண்டு வருடம்!'

'அவரில்லாமல் எப்படி கடத்தப் போகிறேன்? எந்த தைரியத்தில் அனுப்ப சம்மதித்தேன்?' நினைக்க நினைக்க கண்கள்



செருகியது. பார்வை நழுவியது தரையிலிருந்து பூமி விலகியது. பிடிப்பின்றி அவள் உடல் தரையில் விழுந்தது.

எவ்வளவு நேரம் மயங்கிய நிலையிலேயே கிடந்தாளோ? அவள் தெளியும் போது தன்னைச் சுற்றிலும் இருட்டை உணர்ந்தாள். தடுமாறி எழுந்தமர்ந்த போது தலை கிறுகிறுத்தது.

'என்ன ஆனது எனக்கு? வீடெல்லாம் ஏன் இருட்டாய் இருக்கிறது?" கேள்வி மேல் கேள்வி எழ சிரமப்பட்டு எழுந்து விளக்கை ஏற்றினாள்.

'அட.. மணி ஏழாகி விட்டதா? அவர் கிளம்பும் போது ஐந்து மணியல்லவா? இரண்டு மணி நேரம் தான் மயக்கத்திலா இருந்தேன்? அவர் அருகில் இருந்திருந்தால்... அனாதை போல் மயங்கிய நிலையிலேயே இருந்திருப்பேனா?" கணவனின் பிரிவு அவளை இம்சித்தது.

'ஏழு மணிக்கு விமானம் புறப்படும் என்றாரே! இந்நேரம் அவர் வானத்தில் பறந்து கொண்டிருப்பாரா?'

வெளியே வந்து பார்த்தாள். தெற்கு மூலையில் பச்சையும் சிவப்புமாய் மினுக் மினுக்கென விளக்கெரிய தூரத்திலிருந்து வந்து கொண்டிருந்த விமானத்தை இமைக்காமல் பார்த்தாள் அவள். தலைக்கு நேரே பறந்த போது சின்னக் குழந்தையைப் போல் டாட்டா காட்டினாள்.

எழவே சோம்பலாயிருந்தது.

யாருக்காக இப்போதே எழுந்து, அரக்க பரக்க சமைக்கப் போகிறேன்? அரை மணிநேரம் படுக்கையிலேயே புரண்டு புரண்டு படுத்தவளின் அடிவயிற்றிலிருந்து ஒரு இனம் புரியாத சங்கடம் எழுந்து உட்கார்ந்தும் குமட்டிக் கொண்டு வர - பாத்ரூம் நோக்கி ஓடினாள்.

வாந்தி!

உடம்பிலிருந்து தண்ணீரெல்லாம் வாய் வழியே வந்து விட்டபின் தொய்ந்து போனாள்.

'என்ன ஆச்சு? ஏன் இப்படியெல்லாம் ஆகிறது. யாரிடம் போய் கேட்பேன்? டாக்டரிடம் போகலாமா? ஆமாம்... டாக்டர் எங்கேயிருக்கிறார்? எனக்கு ஒன்றுமே தெரியாதே!'

திக்கு தெரியாத காட்டில் கண்ணை கட்டி விட்டது போல் தவித்துப் போனாள்.

ஐந்து நிமிடந்தான்.

'பிரளயமே ஏற்பட்டாலும் என் பூரணி துவளக் கூடாது' தினகரனின் குரல் காதருகே ஒலிக்க.. மயிர்க்கால்கள் குத்திட்டன.

மறுகணம்... சுறுசுறுப்பாய் இயங்கினாள். குளித்து முடித்து சேலையை அணிந்து கொண்டு, தெரு முனையில் இருந்த ரிக்ஷாவில் ஏறி ''அருகிலிருக்கும் எந்த கிளீனிக்கிற்காவது போங்க!'' என்றாள்.

பானுமதி கிளினிக்!

டாக்டர் சந்திரா இவளை முழுக்க பரிசோதித்து விட்டு முகம் மலர ஏறிட்டார்.

''நீ தாயாக போறேம்மா! இப்போ ரெண்டு மாசம்''குப்பென ஆயிரம் பூக்கள் ஒரு சேர மலர்ந்தது.

மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனாள்.

''நா... நான்.. அம்மா.. குழந்தை..எனக்கு..''

டாக்டர் சந்திரா பூரணியின் முதுகை அன்பாய் தடவிக் கொடுத்தாள்.

''ரொம்ப எமோஷனல் ஆகாதே! உன் உடம்பு ரொம்ப வீக்காயிருக்கு. மன்த்லி ஒன்ஸ் எங்கிட்டே செக்கப்புக்கு கண்டிப்பா வரணும். இதுலே எழுதியுள்ள டானிக்கெல்லாம் அவசியம் வாங்கி சாப்பிடு..''

பூரணிக்கு எதுவுமே காதில் விழவில்லை.

அவள் நினைவெல்லாம் தினகரனிடம் போயிருந்தது.



''என்னங்க.. நீங்க அப்பா ஆகப் போறீங்க! இந்த சந்தோஷத்தை இப்பவே.. இந்த கணமே உங்களோட பகிர்ந்துக் கணும் போலிருக்கு. வயித்தில் இருக்கிற சிசு டாக்டரா, வக்கீலா, எழுத்தாளரா? எந்தத் துறையில் ஆளாக்கப் போறீங்க மாமா''

அதற்கடுத்து வந்த நாட்களில் எல்லாம் அவள் கனவுலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

வெயிலில் கண்கள் கூசியது.

தெருமுனையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். வளைவில் சைக்கிளை மிதித்துக் கொண்டு போஸ்ட்மேன் வருவதைப் பார்த்ததும் பூரணியின் செல்கள் பரபரத்தன.

இவள் வாசலில் நின்றிருப்பதைப் பார்த்ததும் அவரே முந்திக் கொண்டார்.

''இன்னைக்கும் உங்களுக்கு லெட்டர் எதுவும் வரலைம்மா!'' என்றார் கரிசனமிகுதியுடன்.

கூம்பிப் போன புஷ்பமாய் தளர்ந்து போனாள் பூரணி.

''மாமா ஏன் லெட்டரே போடவில்லை? அவர் போய் இருபது நாளாகி விட்டதே! இதுநாள் வரைக்கும் லெட்டர் போடாமலா இருப்பார்? தினத்திற்கும் எழுதுவேன் என்றாரே! அப்படியே போஸ்டல் டிபார்ட்மென்டில் தவறினாலும் எல்லா கடிதங்களுமா தவறிவிடும்? ஒருவேளை... ஒரு வேளை அவருக்கு ஏதும்..?''

''ச்சட்! மற.. நினைக்காதே! அப்படி அபத்தமாய் நினைக்காதே. உன் தினாவிற்கு எதுவும் ஆகாது. அவர் யாருக்கும் எந்த தீங்கும் செய்யாதவர். கடவுள் அத்தனை கல்நெஞ்சுக்காரர் இல்லை. வரும்... கடிதம் வரும். நிச்சயம் அவரிடமிருந்து தகவல் வரும். போன இடத்தில் வேலை பளுவோ என்னவோ? புது இடம், புது சூழ்நிலை, பழக்கமில்லா உணவு, புதிய இடத்தில் தன்னை பொருத்திக் கொண்டு எழுதுவார்!' தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

ஆனால்..!



## 6

பம்பாய்!

ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்த தினகரனோடு ஏழெட்டு பேர். அனைவரும் கண்களில் கனவுகளோடும் வேட்கையோடும் ஆடுகளைப் போல அந்த ஏஜெண்ட் ருத்ரதேவன் பின்னாடி நடந்தனர்.

இரவு நேர பம்பாய் ஜிகுஜிகுவென கண்ணைப் பறிக்கும் விளக்கொளியுடன் அலங்கார பெண்ணாய் ஜொலித்தது.

எங்கு பார்.. அரே.. புரே.. என்று ஹிந்தி. மைதா மாவில் செய்தது போன்ற வெள்ளை வெளேர் நிறம். பைஜாமா குர்தா, சல்வார் கமீஸ்...

புதிய உலகத்தில் அடியெடுத்து வைத்து விட்டோமோ என்கிற வியப்பு இவர்களுக்கு.

ருத்ரதேவன் 'சாந்த விஹார்' என்று போர்டு மாட்டியிருந்த ஒரு லாட்ஜிக்கு அழைத்துச் சென்றான்.

''ஆல்... ஆஃப் யூ பிரெண்ட்ஸ். இன்னைக்கும், நாளைக்கும் நீங்க இங்கே ஸ்டே பண்ணுங்க. உங்களுக்கு எல்லாம் நாளன்னிக்குத்தான் சவுதிக்கு ஃப்ளைட். சில வேலைகள் பாக்கியிருக்கு. அதை முடிச்சிட்டு வந்திடறேன். பாஸ்போர்ட் எல்லாம் பத்திரமா இருக்குல்ல? அ.. இப்படியே தனியா விட்டுட்டு போறேனேன்னு உங்களுக்கு எல்லாம் சந்தேகம் வரலாம். அது நியாயமான சந்தேகம். இதோ என் விசிட்டிங் கார்டு. இதுல என் ரெசிடென்ஸ் அட்ரஸ், ஆபீஸ் அட்ரஸ் எல்லாமே இருக்கு.''

ஆளுக்கொரு கார்டை விநியோகித்தான்.

அதில் ஆபீஸ் அட்ரஸ் சென்னையிலும், வீட்டு அட்ரஸ் நுங்கம்பாக்கத்திலும், உத்திரப்பிரதேசத்திலும் இருந்தது. லேசாய் முளைவிட்டு இருந்த சந்தேகத்தைப் பிடுங்கி எறிந்து அவரவர் நிம்மதியாய் மூச்சுவிட.. ருத்ரதேவன் முகம் மலர்ந்தார்.



''நான் நாளை காலைல பத்து மணிக்கு வந்து பார்க்கறேன். ஏதாவது அவசரம்னா... இதோ இந்த நம்பருக்குப் போன் பண்ணுங்க.. இது என் அக்கா வீட்டு நம்பர். மாதுங்காவிலதான் இருக்கு. அங்கதான் தங்கி இருப்பேன். ஓக்கே ஃப்ரெண்ட்ஸ்.. குட் நைட்!''

ருத்ரதேவன் போய் விட்டார்.

ஓரிருவர் தவிர அனைவரும் படுக்க போய்விட்டனர்.

தினகரன் ஒரு நொடியும் தாமதிக்காமல் பேப்பரையும், பேனாவையும் எடுத்தான்.

''என்னுயிர் பூரணிக்கு!

உன் நினைவுகளோடு நான் நல்லபடியாக பாம்பே வந்து சேர்ந்தேன்..''

நீளமாய் நாலைந்து பக்கங்களுக்கு அன்பையும் தாபத்தையும் கலந்து எழுதி... முத்து முத்தாய் முகவரி எழுதி ஒட்டி பத்திரமாய் பெட்டிக்குள் வைத்துக் கொண்டான்.

'நாளை போஸ்ட் பண்ணிடனும்.'

நிம்மதியாய் உறங்கினான். கலர் கலராய் கனவுகள். அழகாய் நாலு குழந்தைகளின் நடுவில் கைகோர்த்தபடி பூரணியும், தினகரனும் சந்தோஷித்து சிரித்துக் கொண்டிருந்தனர்.

இருட்டு வெளிச்சத்துக்கு வழிவிட்டு விலகியது.

சேவல் கூவாமலேயே அந்த லாட்ஜில் பொழுது விடிந்தது.

அனைவரும் குளித்து சாப்பிட்டு முடித்துவிட்டு ருத்ரதேவனுக்காக காத்திருந்தனர்.

அந்த குரூப்பில் தினகரனும், கேசவன் என்பவரையும் தவிர, யாருமே அதிகம் படித்தவரில்லை. சவுதியில் செவன் ஆப் கம்பெனியில் சேல்ஸ்மேனாக இவர்கள் இருவரையும் மற்றவர்கள் பியூன் அட்டெண்டர் என்று வேலைக்கு ஏற்பாடு செய்து விட்டதாக ருத்ரதேவன் கூறியிருந்தார்.

பம்பாய் வெயில் தகித்தது. அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தவர்கள் நேரம் ஆக.. ஆக... இருப்புக் கொள்ளாமல் தவித்தார்கள்.

ருத்ரதேவன் ஏன் இன்னும் வரவில்லை

பத்து மணிக்கெல்லாம் வருவேன் என்றாரே?

''சரி... இப்ப என்ன? அக்கா வீட்டில் இருப்பேன். அவசிய மென்றால் போன் பண்ணுங்கள்..'' என்று நம்பர் கொடுத்தாரே!

தினகரன்தான் போன் செய்தான்.

''க்யா?'' என்றது எடுத்த உடன் ஒரு முரட்டு குரல்.

''ஐயம் தினகரன். கேன் ஐ ஸ்பீக் டு மிஸ்டர் ருத்ரதேவன்.''

''ஸாரி.. ராங் நம்பர்!..'' பட்டென்று எதிர்முனையில் ரிசீவர் அறைந்து வைக்கப்பட்டது.

மறுபடி மறுபடி அந்த எண்ணுக்கு போன் செய்தான். இவன் தொல்லை தாங்காத அந்த சிங்.. தகாத கெட்ட வார்த்தையில் இந்தியில் பொரிந்து வைத்தான்.

திக்பிரமை பிடித்துப் போன தினகரனுக்கு காய்ச்சல் வருவது போலிருந்தது. மெல்ல விஷயத்தை மற்றவர்களிடம் சொன்னதும் தீ பற்றிக் கொண்டது போல் அலறினார்கள்.

''கடவுளே.. ஏமாத்திட்டானா? எப்படி என் வீட்டு வாசலை மிதிப்பேன்? வீட்டை அடகு வச்சி பணம் குடுத்தேனே!''

''என் பொண்டாட்டி கழுத்துல இருந்த தாலியக் கூட விட்டு வைக்காம வித்து எடுத்துட்டு வந்த பணமாச்சே!''

''இவனை விடக் கூடாது போலீஸ்ல போய் கம்ப்ளைண்ட் கொடுக்கலாம்.

''மொதல்ல ஏர்போர்ட்டுக்குப் போய் நமக்கு டிக்கெட் ரிசர்வ் பண்ணியிருக்கா பார்ப்போம்.''

வந்தபோது இருந்த உற்சாகமும், கனவுகளும் தொலைந்து



போய்.. எதிர்காலம் பூதாகரமாய் விஸ்வருபமெடுத்து நின்றது. நினைவுக்கு வந்த தெய்வங்களையெல்லாம் துணைக்கு அழைத்து வேண்டியவர்களை அந்த தெய்வங்கள் காப்பாற்றவில்லை.

ஏர்போர்ட்டில் ரிசப்ஷனிஸ்ட் உதடு நோகாமல் பேசிய வெண்ணெய் தடவிய ஆங்கில வார்த்தைகள் தந்த செய்தி ஹார்ட் அட்டாக்கை வரவைத்தன.

இவர்கள் பெயரில் எந்த டிக்கெட்டும் ரிசர்வ் செய்யப்படவில்லை. கோவிந்த், தாளமாட்டாமல் கதறிவிட்டான். என்னவோ.. ஏதோவென்று கூட்டம் இவர்களை சுற்றி நிற்க.. சுதாரித்துக் கொண்ட தினகரன், அவர்களை வெளியே அழைத்து வர பெரும்பாடுபட வேண்டியிருந்தது.

மனிதனுக்கு எது எந்த நேரத்தில் நிகழும் என்று சொல்லவே முடியாது. இவன் இப்படிப்பட்டவன் என்று தெரிந்து கொள்ள இதயத்தை ஆண்டவன் முகத்தில் வைத்திருக்கக் கூடாதா? உலகம் இயங்க மனிதர்களை படைத்து.. அவர்கள் துன்பப்பட்டு மடிய இதுபோன்ற இரக்கமற்ற அரக்கர்களையும் படைத்து.. ஏனிந்த சித்து விளையாட்டு?

இருக்கிறவன் இல்லாதவனிடம் அடித்து பிடுங்கி சீரும் சிறப்புமாக வாழும்போது - இறைவன் இருக்கின்றானா என்கிற மாபெரும் விடை காணா கேள்வி எழுந்து மனதை குடைவது நியாயம்தானே? பாவம் செய்தவன் பாதாளத்திற்கு போவதற்கு பதில் சிம்மாசனம் போட்டு சந்தோஷமாய் வாழ்வதை பார்க்கும் போது கேள்வி எழாமல் என்ன செய்யும்?

தர்மம் தோற்று அதர்மம் வென்று வருகின்ற நிலை இப்போது காற்று போல் பரவி வருகிறதென்றால் இவ்வுலகிற்கு முடிவு வெகுதூரமில்லை.

தாங்க முடியாத அதிர்ச்சியோடு அறைக்கு வந்த உடன் கருணாகரன் என்கிற வாலிபன் எலிபாஷாணத்தை வாங்கி காப்பியோடு கலந்து பருகி - உயிரை மாய்த்துக் கொள்ள துணிய..

நுப்பும் நுரையுமாய் இழுத்துக் கொண்டு கிடந்தவனை பார்த்து.. பதறி, உடனடியாக ஹாஸ்பிட்டலில் சேர்த்து பிழைக்க வைத்தனர்.

அந்த ஏழு பேரும் புயலில் அகப்பட்ட படகாய்... ஒரு வழியும் புலப்படாமல் அலைபாய்ந்தனர். ருத்ரதேவனை எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

தோய்ந்து போன ஏமாற்றத்துடன் அவரவர் தங்கள் ஊருக்கு திரும்பிப் போயினர். தினகரனும், கேசவனும் மட்டும் எப்படியாவது அவனை கண்டுபிடித்தே தீருவது என்கிற வேட்கையுடன் அலைந்தனர். ஓரிருவர் பம்பாயை விட்டு அசையவில்லை.

வந்து பத்து நாட்களாகியும் தினகரன் தான் எழுதி வைத்த கடிதத்தை போஸ்ட் செய்யவே மறந்து விட்டது மட்டுமின்றி.. அந்த துயரத்தில் பூரணியின் நினைவு கூட அமிழ்ந்து போய் விட்டு இருந்தது.

இத்தனை ஏமாற்றியவன் விசிட்டிங் கார்டில் கொடுத்த விலாசமும் பொய்யாகத்தான் குடுத்திருப்பான். இருந்தாலும் எதற்கும் போய் பார்த்து விட்டு வரலாமே... என்கிற நப்பாசையுடன் இருவரும் உத்திரப்பிரதேசம் வந்தனர். அங்கு பேரிடியொன்று காத்திருந்தது.

அப்படியொரு முகவரியே அங்கில்லை. கற்பனையில் வடித்த ஓவியம் போல் ருத்ரதேவன் படைத்த தெருவும்.. வீடும் கற்பனையே!

முதன் முறையாக பொலபொலவென்று உள்ளே உதிர்ந்து போனான். கண்கள் துளிர்த்தன. வாழ்க்கையில் உயர வேண்டும். ஊரார் முன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். கல்வியைப் போதிக்க பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டதெல்லாம் தப்பா? எப்படி இவனிடம் ஏமாந்து போனேன்? படித்தும் முட்டாளாய் என் கண்ணை மறைத்தது எது?

'ஐயோ.. என் பூரணி இதையெல்லாம் அறிந்தால் துடிப்பாளே...

பூரணி!



மைகாட்!

'நான் அவளுக்கு கடிதம் எழுதினேனே.. போஸ்ட் பண்ணினேனா? இல்லையா? எப்படி மறந்து போனேன்? ஒவ்வொரு நாளும் என் கடிதம் வராமல் துடித்துக் கொண்டிருப்பாளே... கடவுளே எனக்கு பணமும் வேண்டாம். ஒரு மண்ணும் வேண்டாம். இறக்கைகளை மட்டும் கொடு. என் பூரணியிடம் தாமதிக்காமல் போய் சேர்ந்து விடுகிறேன். அவள் மடியில் தலைவைத்து படுத்தால்... என் சோகங்கள் பஞ்சாய் பறந்து விடாதா?' பைத்தியக்காரன்போல் தனக்குத்தானே பேசிக் கொண்டு அவன் அலைய... அவனுடன் மௌனத்தை துணைக்கழைத்து பெருந்துயருடன் பொம்மை போல் நடந்து வந்து கொண்டிருந்தான் கேசவன்.

தினகரனை ஓரிடத்தில் நிற்கச் சொல்லி விட்டு கேசவன் இயற்கை உந்துதலால் ஒரு கட்டிடத்தின் சந்தில் நுழைந்தான்.

அப்போதுதான்-

அது நிகழ்ந்தது.

பூமி கிடுகிடுவென ஆடியது. கண்ணெதிரே நின்றிருந்த கட்டிடங்கள் பொலபொலவென சீட்டுக் கட்டுப் போல சரிந்து விழுந்தன. கேசவனை அந்த கட்டிடங்கள் அப்படியே மூடிக் கொண்டன. எங்கும் மனிதக் குரல்கள். மரண ஓலங்கள்.

சில கணங்கள்தான்! எல்லாமே நடந்து முடிந்து விட்டன. தினகரனின் தலைக்குள் ஒரு வெள்ளைப் படலம் போர்த்திக் கொண்டது. சுற்றிலும் ஒரு இருட்டு பரவியது. மயங்கிப் போனான்.

அடுத்து வந்த நிமிஷங்களில் போலீசும், டாக்டர்களும், கேமராவுடன் பத்திரிகையாளர்களும் குவிந்தனர். விழிப்பு வந்த போது தினகரனுக்கு எதுவுமே புரியவில்லை.

'என்ன நடக்கிறது? என்ன செய்கிறார்கள்? நான் ஏன் இங்கிருக்கிறேன்? ஆமாம்.. நான் யார்? காலடியில் கிடந்த சூட்கேசை எடுக்கக் கூட மூளை உத்தரவிடாமல் இருக்க.. இலக்கின்றி நடக்க ஆரம்பித்தான் தினகரன்.

எவ்வளவு நேரம்... எவ்வளவு தூரம் நடந்தானோ? இப்போது அவன் போய்க் கொண்டிருந்தது குறுகலான ஒரு ரோட்டில் தூரத்தில் இரண்டு கொள்ளிக் கண்கள் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தன.

படுவேகத்துடன் வந்த அந்த அம்பாசிடர் அடித்த ஹாரன்.. அவனை எட்டவில்லை. அவன் பாட்டுக்கு வந்து கொண்டேயிருக்க.. என்னதான் சடர்ன் பிரேக் போட்டு காரை நிறுத்தினாலும் அவனை மோதி விட்டுத்தான் நின்றது!



## 7

வயிற்றில் ஒன்றுமில்லையென்றாலும் இந்தப் பாழாய்ப் போன வாந்தி எங்கிருந்துதான் வருகிறதோ? சரியாய் சாப்பிடாததாலும், தூக்கமின்மையாலும் முள்ளாய் குத்திக் கொண்டிருந்த கவலையாலும் பூரணியின் கண்களின் கீழ் கருவளையங்கள் வரைந்து விட்டிருந்தது.

''மாமா, எங்கேயிருக்கிறீர்கள் மாமா? எங்கே தான் இருக்கிறீர்கள்?'' மனம் ஓயாமல் புலம்பிக் கொண்டேயிருந்தது.

நான்கு மாதங்கள்!

நான்கு மாதங்கள் ஓடி விட்டது? நாட்களை எண்ணிப் பார்த்தாலே.. அடி வயிறு 'பகீர்' என்றது. எங்கெங்கோ.... யார் யாரையோ விசாரித்துப் பார்த்தாள்.

ம்ஹூம்! ஒன்றும் தெரியவில்லை. தினகரன் வேலை செய்த ஷோருமிற்குச் சென்று முதலாளியைப் பார்த்தாள்.

திடீரென்று வேலையை உதறிவிட்டுப் போன திறமைசாலியான தினா மீது அவருக்கு கோபம் இருந்தது. அந்த எரிச்சலையெல்லாம் பூரணி மீது காட்டினார்.

''அவனை நானா சவுதிக்கு அனுப்பினேன்? அறிவிருக்கா உனக்கு என்கிட்டே வந்து அவர் எப்போ வருவாருன்னு



கேக்கறியே! லட்சம் லட்சமா சம்பாரிச்சு கொண்டு வந்து மடியில கொட்டுவான்னு ஆசைப்பட்டு அனுப்பி வச்சேல்ல... காத்திரு.. மடிகொள்ளாம கொண்டு வந்து கொட்டுவான்.''

அவமானத்தில் உதடு கடித்து பரிதாபமாய் நிற்பவளை இரக்கம் இன்றி விரட்டினார்.

''போ... போ... வியாபார நேரத்தில் வந்து என் வேலையை கெடுக்காதே போய் போலீஸ்ல ஒரு புகார் கொடு!''

அந்த வாக்கை வேதவாக்காய் நினைத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு போனாள்.

அவளை ஏற இறங்க ஒருமுறை பார்த்த எஸ்.ஐ...

''என்ன வயசிருக்கும்?'' என்றார்.

''இருபத்தி நாலு!''

''உன்னைக் கேட்டேன்.''

''ப... பதினெட்டு.''

''ம்... கிராமத்துக் கிளியா? கூட யாரும் வரலியா? அம்மா... அப்பா... ?''

''இல்லை.''

''திருட்டுக் கல்யாணமா? கருப்பமா இருக்கியா?'' அசிங்கமாய் சிரித்து சம்பந்தமில்லா கேள்விகள் வர... பொறுமையிழந்தாள் பூரணி.

''ஐயா... நான் இங்கே புகார் குடுக்க வந்திருக்கேன். சவுதிக்கு போன என் புருஷன் கிட்டேர்ந்து நாலு மாசமா தகவல் எதுவும் வரலை. அவருக்கு என்ன ஆச்சின்னு விசாரிச்சி சொல்லுவீங்கன்னுதான் உங்ககிட்ட வந்தேன். தயவு செஞ்சு தேவையில்லாம எதையெதையோ கேட்டு நேரத்தை வீணடிக்காதீங்க! கையெடுத்து கும்பிடறேன்!'' அழுத்தம் திருத்தமாய் அவள் பேசியதை கேட்டு சிலகணம் அதிர்ந்து போன எஸ்... ஐ... 'இது சாதாரண கிராமத்துக் கிளியில்லை. வெட்டுக்கிளி. வாலாட்டினால் நிச்சயம் ஒட்ட

நறுக்குவாள்' என்றெண்ணியவர்... அஸ்வராசியமாய் கேட்டு கொண்டு... ''சரி... சரி... போ! அநேகமா அவன் செத்துப் போயிருக்க மாட்டான். அப்படி இருந்தா உடனே தகவல் குடுத்துடுவாங்க... ஒருவேளை எவளையாவது இழுத்துக்கிட்டு ஓடியிருப்பானோ? என்னவோ இந்த காலத்துல யாரைத்தான் நம்ப முடியுது?''

காதை பொத்திக் கொண்டாள்

'கடவுளே... இந்த ஆள் என்ன வார்த்தையெல்லாம் பேசுகிறார்? புகாரும் வேண்டாம்... புண்ணாக்கும் வேண்டாம். என் புருஷனை நானே கண்டு புடிச்சிக்கிறேன்' என்று முடிவு செய்தவள் மறுகணம் ஸ்டேஷனை விட்டு வெளியேறினாள்.

ஒரு டம்ளர் தண்ணீரைக் கொண்டு எரியும் வயிற்றை அணைக்கப்' பார்த்து தோற்றாள். தாகம் அடங்கவில்லை. கட்டாந்தரையில் அப்படியே படுத்துக் கொண்டாள்.

யாரிடம் போய் உதவி கேட்பது? இந்த சென்னை எனக்கு அந்தளவு பழக்கமில்லையே. ஊருக்கு மாமா, அத்தைக்கு கடிதம் எழுதிப் பார்த்தாள். அந்த கடிதம் அவளுக்கே திரும்பி வந்தது.

''ரொம்ப நாட்களாக காசியாத்திரை போகணும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் போய் விட்டிருப்பார்கள் போலும்'' விரக்தியுடன் கண்களை மூடிக் கொண்டாள்.

''ஆண்டவா... எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு துன்பங்கள்? சிறிய வயதிலேயே பெற்றவர்களை பறித்து... மற்றவர்கள் குடி கெடுக்க வந்த மூதேவியாய் எல்லாரும் பாவிக்கும்படி சம்பவங்கள் நடத்தி... மணவறை வரை வந்து திருமணத்தை நிறுத்தி கடவுள் போல் வந்து எனக்கு உயிர் கொடுத்த என் அன்பு தினாவை இப்படி கண்ணில் காட்டாமல் அலைக்கழித்து... இன்னும் என்னென்ன கஷ்டங்களை பாக்கி வைத்திருக்கிறாய்.''

''என்ன பூரணி தூக்கமா?'' கதவைக் கூட தட்டாமல் லொடக்கென்று உள்ளே நுழைந்தாள் அன்னம்மாள் வீட்டு சொந்தக்காரி.



''வாங்கம்மா...'' சட்டென எழுந்தமர்ந்தாள்.

''ஹூம்...'' பெருமூச்சு விட்டாள்.

''ஆண்டவனுக்கு இரக்கமே இல்லயடியம்மா... இருந்தா இப்படியெல்லாம் நடக்குமா? ஆமா... இப்படி மல்லாக்கப் படுத்துக் கிடக்கறியே... வயித்தில ஆறுமாச கொழந்தைய வச்சுக்கிட்டு அப்படி படுக்கலாமா? ஒருக்களிச்சு தான் படுக்கணும்.''

மெல்ல சிரித்துக் கொண்டாள் பூரணி.

'இதையெல்லாம் சொல்லி புரியவைக்க எனக்கென்று யார்தான் இருக்கிறார்கள்?'

''சாப்ட்டியா பூரணி? அடுப்பே எரியல போலிருக்கே! பட்டினி கிடக்காதே... நிச்சயம் உன் புருஷன் வருவான். உனக்காக இல்லாவிட்டாலும், வயத்து புள்ளைக்காவது சாப்பிடு!''

''சரிம்மா...''

அன்னம்மாள் எதையோ சொல்லத் தயங்கினாள்.

''வந்து... பூரணி... நான்...''

'சே... எப்படி மறந்து போனேன்? வீட்டு வாடகை தரவேண்டுமே!' உடம்பில் கிடந்த ஒன்றிரண்டு நகைகளை விற்றுத்தான் இதுவரை சமாளித்து வந்தாள்.

'இனி என்ன பண்ண போகிறேன்?' முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டவளுக்கு மூக்குத்தி தட்டுப்பட்டது.

''அம்மா... நாளைக்கு கண்டிப்பா வாடகை பணம் கொடுத்திடுவேன். நானே எடுத்திட்டு வந்து தந்துடுவேன். நீங்க கூட வரவேணாம்.''

''இல்லம்மா... வாடகை வேணாம். அதை சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.''

''என்னம்மா சொல்றீங்க?''

''வீட்டை விக்கிறதா என் புருஷன் முடிவு பண்ணி கைநீட்டி அட்வான்சும் வாங்கிட்டார். என் ரெண்டு புள்ளைங்களும் கல்யாணமான கையோட பாரின் போய்ட்டாங்கள்ல? ராமேஸ்வரத்தில எங்களுக்கு சொந்தமான நெலமும், வீடும் இருக்கு. அதான் எல்லாத்தையும் வித்துட்டு ஊரோட போய் சேர்ந்துடறதா இருக்கோம். இன்னும் ஒரு இருபது நாளைக்குள்ளே காலி பண்ணினா சரியா இருக்கும். இப்படி சொல்றதுக்கு எனக்கே சங்கடமாத்தான் இருக்கு. நான் என்ன பண்ணமுடியும் பூரணி? நீயே சொல்லு!''

பூரணி பரிதாபமாய் பார்த்தாள்.

'இருந்த ஒரே ஆதரவு. இதையும் விட்டு எங்கே போவ? என் மாமா என்னை தேடி வரும்போது இங்கே தானே வருவார்? நான் காலி பண்ணி போய்விட்டால்... அவர் எங்கே போய் தேடுவார்?' இடிந்து போனாள்.

''ஹூம்... நான் வர்றேம்மா... மனசில எதையும் வச்சுக்காதே!'' அன்னம்மாள் போய் விட்டாள்.

ஒரு வழியும் புலப்படவில்லை.

'ஓட... ஓட விரட்டிக் கொண்டு வரும் துன்பத்தை எவ்வளவு தூரத்திற்கு போய் சமாளிக்கப் போகிறேன்?'

ஆனது ஆகட்டும் என்று கணவனை தேடும் பணியோடு வீட்டையும் தேட ஆரம்பித்தாள்... வயிற்றிலும் மனதிலும் சுமையோடு.

அவள் ஒருத்திக்கு இருக்க வீடு கேட்டால், முந்நூறு, நானூறு என்று வாடகை சொன்னார்கள். அந்தளவு கொடுத்து கட்டுப்படியாகாது. அதனால் குடிசைகள் நிறைந்த பகுதியில் சேரிப் பக்கமாய் தேட ஆரம்பித்தாள். அந்த இடமும், சுற்றுப்புறமும் குமட்டின. ஆனாலும் வேறு வழியின்றி சகித்துக் கொண்டு ஒரு வீட்டை பிடித்தாள்.



சமைக்க... குளிக்க, படுக்க... எல்லாமே ஒரே அறை கொண்ட குடிசையில் தான் வாசலில் மட்டும் ஒரு திண்ணை களிமண்ணால் போடப்பட்டிருந்தது.

அடுத்த வாரமே இருந்த கொஞ்ச நஞ்ச பாத்திர பண்டங்களை ஒரு ரிக்ஷாவில் வைத்து ஏற்றி வந்து குடியேறி விட்டாள்.

அன்னம்மாளுக்கு வருத்தம் தான்.

''இனியாவது ஆண்டவன் உனக்கு சந்தோஷத்தை கொடுக்கட்டும். நீ கவலைப்படாதே... இந்த வீட்டை வாங்கறவர்கிட்ட உன்னைப்பத்தி சொல்லி வைக்கிறேன். உன் புருஷன் இங்கே வந்தா... தகவல் சொல்லச் சொல்றேன்.''

''ரொம்ப நன்றிம்மா!'' கை கூப்பினாள்.

''உன்னைப் பார்த்தாலே பயமா இருக்குடி. எலும்பும் தோலுமா இருந்தா பிரசவத்தை எப்படி தாங்கிக்கப் போறே? நடக்கிறது நடந்துதான் தீரும். வயித்துப் புள்ளைய கொஞ்சம் நெனச்சுப் பாரும்மா. வயித்துக்கு வஞ்சனை பண்ணாதே. உன்னோட் கஷ்ட நஷ்டத்தை உன்னோடவே வச்சுக்க பூரணி. இன்னும் உலகத்தையே பார்க்காத சிசுவை பட்டினி போடாதேம்மா!''

மேடிட்ட வயிற்றை தடவிக் கொண்டாள்.

'என் கண்ணே! பட்டினி கிடக்கறியா? பசிக்குதாம்மா? என்ன செய்யப் போகிறேன்? இருக்கிற பணத்தைக் கொண்டு அரை வயிற்றுக்கு சாப்பிட்டால் கூட இருபது நாளைக்கு கூட வராதே... அதுக்கப்புறம்?

வீட்டு வாடகை, சாப்பாடு, பிரசவம், துணிமணி... இதற்கெல்லாம் என்ன செய்வது?' மலைப்பாய் இருந்தது. பெட்டியை திறந்தாள்.

ஒரு லுங்கியும், சட்டையும் மடித்து வைக்கப்பட்டிருந்தது. எடுத்தாள்.

அது தினகரன் கடைசியாய் இவளிடம் விடைபெற்று செல்லுமுன் உடைமாற்றும் போது கழற்றிப் போட்ட துணிகள். அதில் இன்னும் தினகரனின் வாசமிருந்தது. மனது பாறாங்கல்லாய் கனக்கும் போதெல்லாம் அதை எடுத்து மார்போடு சேர்த்து அணைத்துக் கொள்வாள். கொஞ்சம் ஆறுதலாய் தெம்பாய் இருக்கும். தினாவே வந்து அவள் நெஞ்சில் தலை வைத்திருப்பது போல் உணர்வாள்.

இப்போதும் அதைத்தான் செய்தாள்.

"என் தெய்வமே... எனக்கு ஒரு வழியும் புலப்படலியே! மாமா... எங்கே இருக்கீங்க? நீங்களும் என்னை கைவிட்டுட் டீங்களே? தனி மரமா நிக்கறேனே... யாருமே இல்லையே..." கண்கள் கலங்கின.

"என்ன பூரணி இது? அழமாட்டேன்னு சத்தியம் பண்ணிட்டு இப்படி அழுதா என்ன அர்த்தம்? என் வார்த்தைக்கு மதிப்பு அவ்ளோதானா?"

"ஐயோ... இல்ல மாமா... என்னை மறந்து அழுதுட்டேன். எனக்கு உங்களை விட்டா வேற யாருங்க இருக்கா? நீங்க தானே என் தெய்வம். நானா உங்க பேச்சை மதிக்கலை?"

"அப்ப இனி அழக்கூடாது!"

"ம்ஹூம்... அழமாட்டேன்."

"அப்ப எதை நினைச்சும் கலங்கக் கூடாது. எல்லாமே நம்ம கையில தான் இருக்கு. ஒரு வேலைய தேடிக்க... சொந்த கால்ல நிக்க பழகிக்க. நான் சீக்கிரம் உன்னைப் பார்க்க ஓடோடி வந்துடுவேன். சரியா?"

"நீங்களே சொல்லிட்ட பிறகு... தினகரனின் உடைகளை அணைத்தபடியே உறங்கிப் போனாள்.

"ஐயா... இங்கே வேலை காலியாயிருக்கா?"

"இல்லம்மா... போய் வா!"



"சார்... நான் கொஞ்சம் படிச்சிருக்கேன். இங்கே சேல்ஸ் கேர்ள் தேவைன்னு போர்டு போட்டிருக்கு. எனக்கு அந்த வேலை கிடைக்குமா சார்?"

முதலாளி பூரணியை ஏற இறங்க பார்த்தார்.

பரிதாபமான தோற்றம். நைந்து போன உடை, மேடிட்ட வயிறு இப்படிப்பட்ட தோற்றமுடைய பெண் அதிநவீன ஷோரூமில் சேல்ஸ் கேர்ளாக நிற்கவைத்தால் என்ன ஆகும்? கடினமான வார்த்தைகளால் அவளை மேலும் காயப்படுத்த விரும்பாத முதலாளி இதமாய் சொல்லியனுப்பினார்.

"தவறுக்கு மன்னிக்கணும்.! வேலைக்கு ஆள் தேர்ந்தெடுத்தாச்சு பையனை விட்டு இந்த 'ஆள் தேவை' போர்டை கழற்றச் சொன்னேன். மறந்துட்டான். இந்தாம்மா... இந்த பத்து ரூபாவை வச்சுக்க... களைப்பா தெரியறே... பக்கத்துல கூல்ட்ரிங்ஸ் கடை இருக்கு. ஏதாவது வாங்கி குடிச்சிட்டுப் போம்மா!"

உதட்டை கடித்து, வெடித்து வந்த அழுகையை கட்டுப் படுத்தினாள்.

பிச்சையா? தினகரனின் மனைவிக்கு பிச்சையா? இந்த நல்ல மனிதர் கருணை உள்ளத்தோடு கொடுத்தாலும் இதுவும் பிச்சைதானே?

"நன்றி சார்! உங்க உதவிக்கு நன்றி. பணம் வேண்டாம் வர்றேங்க..." தளர்வாய் அடுத்த கட்டிடத்துக்குப் போனாள்.

அது பெரிய பாத்திரக்கடை, ஈ மொய்ப்பதுப் போல் கூட்டம்.

"ஐயா... நான் எட்டாவது வரைக்கும் படிச்சிருக்கேன். கணக்கு நல்லா தெரியும். இங்கே ஏதாவது கணக்கெழுதற வேலை இருந்தா... போட்டுக் கொடுங்கய்யா..."

வாயில் வெற்றிலை சிவப்பு மின்ன அவளை கண்களால் எடை போட்டவர் அசிங்கமாய் சிரித்தபடி... "கணக்கு எழுதற வேலை இல்லை. கணக்கு பண்ற வேலை வேணும்னா தர்றேன்."

அவன் சொன்னது முழுக்க புரியவில்லை என்றாலும் அபத்தமாய் சொல்கிறான் என்பது மட்டும் புரிய... திரும்பிப் பார்க்காமல் நடந்தாள்.

கடைசியில் அந்த ஆண்டவனுக்கு கொஞ்சமாவது இரக்கம் இருந்திருக்க வேண்டும்.

ஒரு புக் சென்டரில் விற்பனைப் பிரிவில் அறுநூறு ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது.

அதுவே லட்சக்கணக்கில் லாட்டரியில் கிடைத்தது போல் மகிழ்ந்து போனாள். பஸ்ஸிற்கே ஒரு பகுதி கனிசமாய் கரைய, சிக்கனமாய் செலவு செய்ய ஆரம்பித்தாள். பிரசவத்திற்காக ஒரு பகுதியை சேமித்தாள். மீதி பணத்தில் வாடகை போக... இரவில் மட்டுமே அடுப்பெரியும் மீதியான சாதத்தை காலையில் தண்ணீர் விட்டு சாப்பிட்டு அரக்க பரக்க ஓடுவாள். மதியத்தில் பட்டினி. அந்த நேரத்தில் தத்துவார்த்தமான புத்தகத்தை எடுத்துப் படிக்க உட்கார்ந்து விடுவாள்.

பூரணியின் தன்னம்பிக்கையும், தைரியமும், எதையும் எதிர்கொள்ளும் மனோதிடமும் வளர ஆரம்பித்தன.



8

நள்ளிரவு இரண்டு மணி!

கண்களின் மேல் நூறு டன் எடையுள்ள பொருளை வைத்திருப்பது போல் கனம். எவ்வளவு முயன்றும் இமைகளை பிரிக்க முடியவில்லை..

கை கால்களை அசைக்க முடியவில்லை. வலி... வலி... ஒரு இடம் பாக்கியில்லாமல் வலித்தது. உடலின் வலியின் எதிர்ப்பை எப்படி வெளிப்படுத்துவது என்று புரியாமல், ம்ம்... ம்ம்... என்று முனகினான். முனகல் சப்தம் கேட்டு... அருகிலேயே ஈஸிசேரில் படுத்திருந்த சுப்ரஜா கண்விழித்தாள். அவள் முகம் பளீரென மலர்ந்தது.



''மாஜி.... மாஜி... ஜல்தி ஆவோ! ஏ ஆத்மிகோ ஹோஷ் ஆகயா...!''

அவள் குரல் கேட்டு பக்கத்து அறையிலிருந்து ஓடி வந்தார் ஒரு வயதான பெண்மணி.

வெள்ளை துணி தலைவரை போர்த்தியிருக்க... முகத்தில் அசாத்தியமான ஒளி. கருணை பொங்கும் கண்கள்.

''பார்த்தியாம்மா.... அவர் கை, காலெல்லாம் அசையுது பார். முனகல் கூட வருது பார்'' குதிக்காத குறையாய் துள்ளிய சுப்ரஜாவிற்கு மிக இளம் வயது. சுடச்சுட இப்போது தான் படித்து முடித்து டாக்டர் பட்டம் வாங்கியவள்.

அந்த வயதான பெண்மணி அவள் கன்னத்தில் செல்லமாய் தட்டி, ''இலாஜ் கௌன் தேக்கா? மை லட்கி ஹோ!'' (மருத்துவம் பார்த்தது யார்? என் மகளாச்சே!) என்றார் பூரிப்புடன்.

சுப்ரஜா அவனருகே அமர்ந்தாள்.

மெல்ல அவன் இமைகளை பிரித்துப் பார்த்தாள். கண்ணின் கருவிழிகள் இங்குமங்கும் எதையோ தேடிக் கொண்டிருந்தன.

அவன் கன்னத்தில் மென்மையாகத் தட்டினாள். கை கால்களை பிடித்து அமுக்கி விட்டாள். அவன் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க.. பிரயத்தனப்பட்டு கண்களை திறந்தான். கலக்கம் பரவ... அறை முழுவதையும் கண்களை சுழல விட்டவன் கடைசியில் சுப்ரஜாவின் முகத்தில் பார்வையை பதியவிட்டான்.

''ஹலோ... தரத் ஹை க்யா? தொடா கோஷிஷ் கர்கே பைட்டியே...'' திருதிருவென விழித்தான்.

(வலி இருக்குதா? எழுந்து உட்கார முயற்சிப்பீங்களா?)

இந்தி புரியவில்லையோ?

''ஹலோ... ஆர் யூ ஆல்ரைட்? கமான்... ஸ்பீக் அவுட் மிஸ்டர்... நீங்க யாரு? எங்கேர்ந்து வர்றீங்க?'' ஆங்கிலத்தில் கேட்டாள்.

''மீ... மீ...? ஐ டோன்ட் நோ! நான் யார்? நான் யார்? எனக்கு ஒண்ணுமே புரியலையே... ஆ...'' புலம்பினான் தினகரன்.

சுப்ரஜாவின் முகம் வெளிறியது.

''என்ன சொல்கிறார் இவர்? காட்...! அடிபட்ட அதிர்ச்சியில் பழைய நினைவுகள் தவறிவிட்டதா? இதென்ன புதுக்குழப்பம்?''

''சொல்லுங்க ப்ளீஸ்... நான் யார்? என் பேரென்ன? நான் எங்கிருக்கிறேன். எப்படி இங்கே வந்தேன்? தயவு செய்து சொல்லுங்களேன்!'' கிணற்றில் விழுந்து தவிப்பவனைப் போல் அரற்றினான்.

அவன் பேசும் தமிழ் சுப்ரஜாவிற்கு புரியவில்லை.

'ஸோ... இவன் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவன்.'

சுப்ரஜா ஆதரவாய் அவன் கையில் தட்டி கொடுத்தாள்.

''காம் டவுன் மிஸ்டர்! எல்லாம் சரியாய் போய்டும். அம்மா... இவருக்கு இப்ப குடிக்க சூடா ஏதாவது இருந்தா தேவலை.''

''எடுத்துட்டு வர்றேம்மா!'' சுப்ரஜாவின் அம்மா நயனாதேவி சமையலறை நோக்கி போனாள்.

**பா**ல்கனியில் அமர்ந்து ரோட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் தினகரன்.

மனிதர்கள்... மனிதர்கள்!

காலில் வெந்நீரை கொட்டிக் கொண்ட தினுசில் ஓடிக் கொண்டிருக்கும் மனித வெள்ளம் அண்ணாந்து பார்த்தால் சுளுக்கிக் கொள்ள செய்யும் கட்டிடங்கள். அதில் இயங்கும் அலுவலகங்கள். ஆகவே எப்போதும் அந்த பகுதியில் நெரிசல் இருக்கும்.

அவர்களையெல்லாம் பார்க்க பார்க்க மண்டைக்குள் வண்டு குடைந்தது தினகரனுக்கு.

இவர்களெல்லாம் யார்? இதில் யாராவது ஒருவர் என்னை அறிந்தவர்களாக இருக்க மாட்டார்களா? என்னை எனக்கு



அடையாளம் காட்ட யாரும் உதவ மாட்டார்களா? என் பேரென்ன? அம்மா, அப்பா யார்? சொந்த பந்தங்கள் யார்? என்னை யாரும் தேடி வரமாட்டார்களா? அனாதையா நான்? இதென்ன விநோதம்? நான் யாரென்று எனக்கே தெரியாத ஒரு அவலநிலை ஏன்? தலையை கைகளால் தாங்கி... அண்ணாந்து கண்களை மூடிக் கொண்டான்.

''ம்ஹூம்... இது ரொம்ப தப்பு. இப்படி நெர்வஸ்ஸா இருந்தா உடம்புக்கு நல்லதில்லே. சாப்பிடீங்களா? போரடிச்சுதுன்னா இதோ... ரோடு முனையிலே என் டிஸ்பென்சரி. அங்க வந்து இருங்களேன். பொழுது போகும்!'' சுப்ரஜா அவனருகே வந்து நின்றாள்.

இப்போது தான் டிஸ்பென்சரியிலிருந்து வந்திருப்பாள் போலும். களைத்துப் போய் தெரிந்தது முகம். ஆனால் அதுகூட அந்த பளீரிட்ட முகத்திற்கு தனி சோபையை தந்தது. செங்கருப்பு நிறத்திலிருந்த அடர்த்தியான கூந்தல் தோள் வழியே புரண்டுக் கொண்டிருந்தது.

''டாக்டர்...! நா... நான் எப்படி உங்களுக்கு நன்றி சொல்லப் போறேன்னே தெரியலை. தெருவோரம் கிடந்தவனை வீட்டில் கொண்டு வந்து ஒரு வாரமா... பகல் இரவுன்னு பார்க்காம கண்விழிச்சி என்னை எழுப்பி உக்கார வச்சதுமில்லாம... இன்னமும் உங்க வீட்டிலேயே இருக்க வச்சு பார்த்துக்கறீங்களே... லாட் ஆஃப் தாங்க்யூ டாக்டர்.''

''தாங்க்ஸெல்லாம் சொல்லி... என்னை ரொம்ப தூரம் தள்ளி வச்சிடாதீங்க சார். நீங்க என் கார்லதான் அடிபட்டு விழுந்தீங்க. உங்களை காப்பாத்த வேண்டியது என் கடமையில்லையா? உங்களை நாங்க பாரமா நினைக்கலை. எனக்கு ஒரே ஒரு அண்ணன் மட்டும்தான் பேரு மனீந்தர். அமெரிக்காவுல மனைவி, குழந்தைகள்னு செட்டில் ஆயிட்டான். அம்மாவுக்கு என் கல்யாணத்தை முடிச்சிட்டு அமெரிக்கா போய்டறதா பிளான். அப்படித்தான் ஒரு வரன் பார்த்திருந்தாங்க. அவரும் டாக்டர் தான்.

அவரை நேர்ல சந்திச்சு, பிடிச்சிருந்தா பண்ணிக்கலாம்னுதான் அன்னைக்கு நான் கார்ல வந்திட்டிருந்தேன். அப்பத்தான் எதிர நீங்க செலுத்தப்பட்டவர் மாதிரி... நான் ஹார்ன் அடிச்சும் உணராம... வந்திட்டிருந்தீங்க. என்னதான் சடர்ன் பிரேக் போட்டாலும் கார் உங்கமேல மோதிடிச்சு!'' என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

''அப்புறம்... அந்த வரனோட பேசினீங்களா?'' அவன் ஆர்வமாய் கேட்டதும்... அவனை ஆழமாய் ஒரு பார்வை பார்த்து குனிந்து கொண்டாள்.

''இல்லை! முதல்முதலா போகும் போதே காரியத் தடை. அந்த மாப்பிள்ளை வேணாம்னு அம்மா சொல்லிட்டாங்க!''

''ப்ச்... எல்லாமே என்னாலதானே? ஸாரி... ரியலி ஐ... ஃபீல் வெரி ஸாரி டாக்டர்.''

''கால் மீ சுப்ரஜா!'' என்றாள் மென்மையாக சிரித்தபடி.

''அதெப்படி டாக்டர்?''

''நான் உங்களை பேஷன்ட்டா நினைக்கலை! ஃப்ரெண்டா நினைக்கிறேன்.''

''தாங்க் யூ... பட், நீங்க என்னை சார்னு கூப்பிடறது மட்டும் சரியா?''

''ஓக்கே! இனி அப்படி கூப்பிடலை. மிஸ்டர் எக்ஸ்னு சொல்றதும் சரியில்ல... பேசாம நானே உங்களுக்கொரு பேர்வைக்கட்டுமா?''

''ஓ...!'' என்றான் ஆர்வமாய்.

''ம்... பரத்...! பரத்னு கூப்பிடட்டுமா? உங்களுக்கு பிடிச்சிருக்கா?''

''பரத்! வெரி நைஸ்...''

''அப்புறம்... நான் நாளைக்கே 'இந்து'ல உங்களை பத்தி விளம்பரம் குடுக்கப் போறேன். அதைப் பார்த்து உங்க ரிலேடிவ்ஸ் வருவாங்கல்லியா?''



''தாங்க் யூ டாக்டர்!''

''ம்... சுப்ரஜா!''

''பழகணும் இல்லையா? அதுவரைக்கும் இந்த தப்பை பொறுத்துங்குங்க!''

பேப்பரில் அவன் போட்டோவோடு தகவல் வந்தும் பார்க்க வேண்டிய எவர் கண்களிலும் அந்த செய்தி படவில்லை என்பது தான் விதியின் விளையாட்டு.

சுப்ரஜா அவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

''பரத், உடைஞ்சு போய்டாதீங்க. நீங்க ஃப்ளுயன்ட்டா... இங்லீஷ் பேசறீங்க. ஸோ... யூ ஆர் எஜுகேட்டட். ஹிந்தி தெரியலை. தமிழ் பேசறீங்க. அதனால் நீங்க நிச்சயம் நார்த் இன்டியனா இருக்க முடியாது. ஏதாவது ஒரு விஷயத்துக்காக சவுத் இன்டியாவிலேர்ந்து இங்கே வந்திருக்கலாம். அப்படின்னா... உங்க உடமைகளோட தானே வந்திருப்பீங்க? அதிலிருந்து ஏதாவது தெரியலாம். அதெல்லாம் எங்கே?''

''தெரியலையே... எதுவுமே நினைவில் இல்லையே...'' பரிதாபமாய் விழித்தான்.

''நோ... நோ... இப்படி வெக்ஸ் ஆய்டக் கூடாது. ரிலாக்ஸ் கண்டுபிடிச்சிடலாம்.'' அவன் தலையை கோதிவிட்டாள் சுப்ரஜா.

அதற்கடுத்து வந்த நாட்களில் தினகரன் சுப்ரஜாவிடம்.

''நான் நாளைக்கே புறப்படலாம்னு இருக்கேன்'' என்றான்.

''எங்கே?'' அவள் விழிகளில் வியப்பு.

''தெரியலை. ஆனா, போய்த்தானே ஆகணும்? எவ்வளவு நாளைக்கு நான் இங்கே இருக்க முடியும்?''

''ஓஹோ... இங்கே உங்களுக்கு என்ன சங்கடம்?''

''.......''

''புரியுது... இங்கே பாருங்க பரத்! உங்களுக்கு எந்த காம்ப்ளக்ஸூம் இருக்க கூடாதுங்கறதுக்காக சொல்றேன். சூரத்ல எங்களுக்கொரு கம்பெனி இருக்கு. சின்னதுதான். பிளாஸ்டிக் சம்பந்தப்பட்ட பொருட்களை தயார் பண்றது. எங்கப்பா திடீர்னு இறந்து போய்ட்டதால... அதை மூடிட்டோம். அண்ணனும் அமெரிக்காவை விட்டு வர தயாரா இல்லை. உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா.. நீங்க அதை திரும்ப ஓபன் பண்ணி மேனேஜ் பண்ணுங்க. வீக்லி ஒன்ஸ் அங்கே போனா போதும். வெளில எங்கேயும் தங்க வேண்டாம். இந்த வீட்லேயே மாடி ரூம்ல தங்கிக்கலாம்.''

''சுப்ரஜா...'' என்றான் நம்ப முடியாத ஆச்சரியத்தோடு.

''என்னை நம்பி பெரிய பொறுப்பையெல்லாம் கொடுக்கறீங்களே சுப்ரஜா... நா... இதுக்கு... எப்படி?'' பேசவே திணறிப் போனான்.

சுப்ரஜா மென்மையாய் புன்னகைத்தாள்.

சுப்ரஜா க்ளீனிக்கிற்கு போயிருந்தாள். இரவு செலவு கணக்குகளை சரிபார்த்து கொண்டிருந்தான் தினகரன். இந்த நாலைந்து மாதங்களில் கணிசமான லாபத்தை தன் அயராத உழைப்பின் மூலம் உருவாக்கியிருந்தான். அந்த லாபத்தை முதலீடாக்கி புதிய மிஷின்களை வாங்கிப் போட்டிருந்தான். சிறியதாய் காட்டன் மில் ஒன்றையும் துவக்கியிருந்தான். பதினைந்து பேர் என்றிருந்த வேலையாட்களின் எண்ணிக்கை ஐம்பதாக உயர்ந்திருந்தது. சுப்ரஜாவும் அவள் தாயாரும் வெகுவாய் மகிழ்ந்து போயினர்.

அவன் மீது நயனாதேவி பாசமழையே பொழிந்தாள்.

தினகரனுக்காக காபி போட்டு மாடிக்கு கொண்டு வந்தாள் நயனாதேவி.

''கொஞ்ச நேரமாவது ரெஸ்ட் எடுத்துக்க கூடாதாப்பா? எப்பவும் வேலை... வேலைதானா? இந்தாப்பா... மொதல்ல இந்த



காபிய குடிச்சிடு'' அவளின் இந்தி புரியாவிட்டாலும் அன்பாய் என்னவோ கடிந்து கொள்கிறாள் என்பது மட்டும் புரிந்தது.

மவுனமாய் சிரித்தபடி காபி கோப்பையை வாங்கி பருகினான். காலி கோப்பையை கொடுக்க நிமிர்ந்தவன் அலறாத குறையாய் நயனாதேவியை தாங்கிப் பிடித்தான்.

அந்தம்மாவுக்கு முகமெல்லாம் வியர்த்து, வலியால் உதட்டை கடித்து மார்பில் கைவைத்து அழுத்தியபடி, கால்கள் தடுமாற தள்ளாடி கொண்டிருந்தாள்.

''என்னம்மா? என்ன ஆச்சு?''

''வலி... நெஞ்செல்லாம் வலிக்குது பரத். அடைக்குது. சுப்ரஜாவை...''

''இதோ... ஒரு நிமிஷத்தில கூட்டிட்டு வந்துடறேன்'' தினகரன் நாலு கால் பாய்ச்சலில் தெரு முனையிலிருந்த சுப்ரஜா டிஸ்பென்சரியை குறி வைத்து ஓடினான்.

அவன் ஓடிவந்த வேகத்தில் படியில் எக்குதப்பாய் கால் வைத்து குப்புற விழுந்து நெற்றியில் புடைத்துப் போனது. கால் சட்டை விரலின் நகம் சக்கையாய் பெயர்ந்து ரத்தம் குபுகுபுவென கொப்பளித்தது.

தினகரன் அதை லட்சியமே செய்யாமல் சுப்ரஜாவை அழைத்து வந்தான்.

பதறிப் போன சுப்ரஜா அம்மாவுக்கு முதலுதவி செய்து படுக்க வைத்தாள். அவள் போட்ட இன்ஜெக்ஷனுக்கு வலி காணாமல் போக... நிம்மதியாய் உறங்கினாள் நயனாதேவி.

நன்றி ததும்ப தினகரனை பார்த்து கையெடுத்து கும்பிட்டாள் சுப்ரஜா.

''ஐயோ... என்னங்க இது?''

''நீங்க மட்டும் இல்லேன்னா... நான் என் அம்மாவை இழந்திருப்பேன் பரத்'' என்றவளின் கண்கள் எதேச்சையாக தரையை பார்க்க பதறிப் போனாள்.

"என்ன பரத் இது?"

"ஓடி வரும்போது கால்ல அடிபட்டுடுச்சு."

"ப..ர..த்" இன்னும் நெகிழ்ந்து போய் அவன் காலடியில் அமர்ந்தாள். அவள் மதிப்பில் தினகரன் உயர்ந்து நின்றான்.

காயத்தை துடைத்து மருந்து போட்டவளின் மனதினுள் புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஒன்று நுழைந்தது.

அவள் காரை கிளப்பியபோது நேரம் இரவு பதினொன்று அவசரமாய் ஒரு பேஷன்ட்டை பரிசோதிக்க வந்தவளுக்கு உடனே கிளம்ப முடியவில்லை. நோயாளி ஆபத்தான கட்டத்தை தாண்டும் வரை காத்திருந்து புறப்பட்டாள்.

ஐந்து நிமிடம் கூட சென்றிருக்காது. கார் சிணுங்கி விட்டு அடங்கிப் போனது.

"ஓ... காட்! பெட்ரோல் இல்லையா? என்ன முட்டாள் தனம் பண்ணி விட்டேன்? 'பேஷன்ட் சீரியஸ்' என்று போன் வந்ததும் பெட்ரோல் கூட போடாமல் வந்து விட்டேனே!"

சுப்ரஜா சுற்றிலும் பார்வையை ஓடவிட்டாள்.

கும்மென்ற இருட்டு. புறநகர் பகுதி என்பதால் எப்போதோ ஒருமுறை மட்டுமே வாகனங்கள் தலைகாட்டின. மரங்கள் இருபுறமும் அடர்ந்திருந்ததால்... காற்றில் பச்சை வாசம் கலந்திருந்தது. சுவர்க்கோழியின்... ஙீ என்ற சப்தம் விடாமல் கேட்டது. காரின் ஹெட்லைட்டை போட்டு விட்டு இறங்கி நின்றாள்.

"எவ்வளவு நேரம் இங்கேயே நிற்க முடியும்? ஏதேனும் கார், ஆட்டோ கிடைத்தால் கூட போய்விடலாமே! நான் இன்னும் வரவில்லை என்று அம்மா தவித்து போவாளே! 'துணைக்கு வருகிறேன்' என்ற பரத்தை கூட மறுத்து விட்டு வந்தது மதியீனம். ச்சே!" தன்னையே நொந்து கொண்டாள்.

"டேய்! சூப்பர் ஃபிகருடா... கலக்கல் கட்டை!"



காதில் மோதிய குரலால் திடுக்கிட்டு திரும்பினாள் சுப்ரஜா. திடீரென்று இரண்டு ஆண்கள் முளைத்திருந்தனர். சத்தியமாய் அவர்களின் முகத்தில் எள்ளளவும் நல்லத்தனம் இல்லை. உதறியது சுப்ரஜாவிற்கு.

"தொட்டுடுவோமா?" அடுத்தவன் இளித்தான். சிகரெட்டை காலடியில் போட்டு நசுக்கியவன் அவள் தோளில் கை வைத்து முந்தானையை இழுத்தான்.

"ஹெல்ப்... ஹெல்ப்..." தன் சக்தியெல்லாம் திரட்டி அடித்தொண்டையில் கத்தினாள். அந்த முரடனின் கையை கடித்தாள். கூரிய நகங்களால் முகத்தை காயப்படுத்தினாள். அவர்களோ, கோபமும் மோகமுமாய் செயலில் வேகத்தைக் கூட்டி ஒதுக்குப் புறமாய் இழுத்துச் சென்று அவளை களைக்க ஆரம்பித்த போது... தூரத்தில் ஏதோ வண்டி வரும் வெளிச்சம்.

அவர்களிடமிருந்து திமிறிக்கொண்டு தன்னை விடுவித்து நடுரோட்டில் கையை அசைத்தபடி ஓடிவந்தாள்.

"ஹெல்ப்... ப்ளீஸ் ஹெல்ப் மீ...!"

அந்த ஸ்கூட்டர் அவளருகே நின்றது. அந்த காமுகர்கள் இருவரும் ஒரே ஓட்டமாய் ஓடிப்போனார்கள்.

"சுப்ரஜா" அழைத்த குரலுக்கு உடம்பு சிலிர்க்க உற்றுப் பார்த்தாள்.

"ப..ர..த்!" அதிர்ச்சியும், மகிழ்ச்சியுமாய் கூவியவள் சட்டென்று தன் கைகளை மார்புக்கு குறுக்கே மறைத்து கொண்டாள். வெட்கமும், வேதனையும் கண்ணீரை வரவழைத்தது. தினகரனால் சூழ்நிலையை புரிந்து கொள்ள முடிந்தது.

அவள் தன் ஆடையை சரிபண்ணிக் கொண்டு காரை பூட்டிவிட்டு அவனருகில் வந்தாள்.

"நம்ம நாட்டுக்கு, பேருக்கு ஒரு சுதந்திரத்தை குடுத்தாங்களே யொழிய... நிஜமான சுதந்திரம் இன்னும் வரலை. அசட்டு

தைரியத்துல இனிமே இப்படி நைட்ல வெளியே போற வேலைய வச்சுக்காதீங்க. இன்னும் ஆளைக் காணோமேன்னு பயந்து போய் வந்தா... தைரியமான இந்த டாக்டரம்மாவை... தைரியமாய் ரெண்டு பேர்...''

''போதும்... கிண்டல் வேண்டாம். தப்பு... தப்பு... தப்பு! கன்னத்தில் போட்டுக் கிட்டாச்சு. முதல்ல வண்டிய எடுங்க'' செல்லமாய் கோபித்துக் கொண்டு ஸ்கூட்டரின் பின்னே அமர்ந்த சுப்ரஜா அவன் தோளில் கைவைத்த போது... இருவருக்குமே ஷாக்கடித்தது.

**சு**ப்ரஜாவினுள் போராட்டம். பரத்தை பார்த்த கணத்திலிருந்தே... அவள் தன்னை கொஞ்ச கொஞ்சமாய் இழந்து கொண்டிருந்தாள். அவன் யார்... என்ன என்றே தெரியாத புதிரால்... தன் மனதை பூட்டியே வைத்திருந்தாள். ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் பரத்தை பற்றிய அபிப்பிராயத்தை உயர்த்தி காட்டியபோது 'இவனை விட சிறந்தவன், நல்லவன் எனக்கு துணையாய் கிடைக்க மாட்டான்' என்ற எண்ணம் தூக்கலாகிய நேரத்தில்... நேற்றைய இரவு சம்பவம்... அவள் மனதை முழுவதுமாய் திறக்க வைத்தது.

இமைக்காமல் அவனையே பார்த்தாள்.

''என்னங்க அப்படி பாக்கறீங்க?''

''நீங்க மட்டும் வராம இருந்திருந்தா... நேத்தே நான் தற்கொலை பண்ணிக்கிட்டிருப்பேன்...''

''சேச்சே... அப்படியெல்லாம் பேசக்கூடாது.''

''இந்தாங்க...!'' ஒரு சின்ன வெல்வெட் பெட்டியை நீட்டினாள்.

''என்னது?''

''நவரத்தின மோதிரம்.''

''யாருக்கு?''

''உங்களுக்குதான்...!''



''எதுக்கு? நேற்றைய நிகழ்ச்சிக்கான நன்றிக்கடனா?''

''ம்ஹூம்... அம்மா ஆசைப்பட்டு உங்களுக்காக ஆர்டர் கொடுத்து செஞ்சது. இன்னைக்குத்தான் சமயம் பார்த்து வந்தது. மறுக்காம வாங்கிக்குங்க!''

தினகரன் கூச்சத்தோடு அவளை பார்த்தான்.

''எனக்கு பெரிய பெரிய பரிசெல்லாம் கொடுக்கறீங்களே சுப்ரஜா... நா... இதுக்கு... எப்படி?'' பேச்சு முழுதாக வர மறுத்தது.

''மை ஆப்கே லியே... தேனே தயார் ஹூம்... லேகின் யே பவுத் சாதாரண ஹை...''

''ப்ளீஸ்! எனக்கு இந்தி புரியல. இங்லீஷ்லேயே சொல்லுங்களேன்.''

''ம்ஹூம்... நேரம் வரும்போது சொல்றேன். இப்போதைக்கு புரியாம இருக்கிறதே நல்லது'' சுப்ரஜா சொல்லிவிட்டு அர்த்த புஷ்டியோடு புன்னகைத்தாள். அதில் வெட்கமும் கலந்திருந்தது.

நாட்கள் வேகமாய் நகர்ந்தன.

தினகரன் சுப்ரஜாவோடும், அவள் தாயாரோடும் சகஜமாய் பழகினாலும்... அவனைப் பற்றிய கேள்விக்குறி அவளை அரித்தது.

சோர்ந்து போய் கிடந்தவனை கட்டாயப்படுத்தி வெளியில் தன்னுடன் அழைத்துச் சென்றாள் சுப்ரஜா.

**அ**ன்று!

ஆக்ராவிலிருக்கும் தாஜ்மகாலுக்கு அழைத்துச் சென்றிருந்தாள்.

அந்த பளிங்கு மாளிகையின் அலாதியான அமைதி... மனதை என்னவோ செய்தது.

''இது என்னன்னு தெரியுதா பரத்? ஒப்பற்ற காதலின் நினைவுச் சின்னம். கல்யாணமாய்ட்ட பின்னாலும் ஒரு புருஷன் தன் மனைவி மீது இந்தளவு அன்பு வச்சிருக்க முடியுமாங்கறத நினைக்கிறப்ப பிரமிப்பா இருக்கு! இதெல்லாம் சாத்தியமா? அப்படிப்பட்ட

அன்பை எனக்கு வரப்போறவர் வரப்பிரசாதமா கொண்டு வரணும்னு பேராசைப்படறேன். அப்படி நடக்குமா பரத்?'' அவள் குரலில் ஆவலும், ஏக்கமும் போட்டி போட்டது.

''ஏன் நடக்காது? அன்பும், மாறா காதலும் ஷாஜகானுக்கு மட்டும் தான் சொந்தமா? மத்த ஆண்களுக்கும் இருக்காதுங்கறது உங்க எண்ணமா சுப்ரஜா?''

''மத்தவங்களை விடுங்க... உங்களுக்குள் அந்த மாறா அன்பு இருக்குதா? அது எனக்கு கிடைக்குமா?'' என்றாள் நெகிழ்ந்து போய்... குரலடைக்க.

''சு...ப்...ர...ஜா...'' அதிர்ந்து போனான்.

''யெஸ் பரத்! மை ஆப் கோ பியார் கர்த்தி ஹூம்! ஐ லவ் யூ! ஆண்டவனே பார்த்து எனக்கு அனுப்பி வச்ச உங்களை நான் என் மனசுக்குள்ளே பூட்டி வச்சு ரொம்ப நாளாகுது. அதை... இப்ப... இந்த புனிதமான இடத்தில வெளிப்படுத்திட்டேன். உங்களுக்கு பிடிக்கலைன்னா வேண்டாம். வேற பேசலாம்!'' அவள் முகத்தில் தீவிரம் இருந்தது.

''இல்ல... சுப்ரஜா... நான்... வந்து... யார்னே...''

''யூ... ஆர் மை பெட்டர் ஆஃப்! எனஃப்! இதுக்கு மேல எதுவும் போட்டு குழப்பிக்க வேண்டாம். முதன் முதலா என் மனசுக்குள்ளே நுழைஞ்ச ஒரே ஆள் நீங்க தான். அங்கே வேற யாருக்கும் இடமில்லை. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்கிறவ நான்!''

திடீரென்று அவனை செங்கோட்டை மீது தூக்கி உட்கார வைத்தது போலிருந்தது.

'அவள் தன் மனதை வெளிப்படுத்தியதும் மேலுக்கு மறுத்தேனே தவிர, உள்ளே என் இதயம் எவ்வளவு கும்மாளம் போட்டது? இத்தனை அழகும், அறிவும் வாய்ந்த பெண் என்போல் அட்ரஸ் இல்லா ஒருவனுக்கு கிடைப்பது சாத்தியமா? இது விதியின் விளையாட்டா? எங்கோயிருந்து வந்து இங்கு நினைவிழந்து



இவளால் உயிர் பிழைத்தது மட்டுமின்றி ஒரு உறவுக்கும் சொந்தக்காரனாக்க முனைகிறாளே... எப்பேர்ப்பட்ட பெண்!' மனம் சிலாகித்தது.

''இந்த மவுனத்துக்கு என்ன காரணம் பரத்?'' தவிப்போடு கேட்டாள்.

''உங்க வீட்ல இதுக்கு...?''

''ம்...அம்மாகிட்டே பேசிட்டுதான், அவங்க ஓக்கே சொன்ன பிறகு தான் உங்ககிட்டே பேசினேன். அம்மாவுக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு!''

''நிஜமாவா?''

''ம்...''

''பரத்...''

''ம்...''

''ஐ லவ் யூ!''

''நா...நானும்...''

''ப...ர...த்...!'' மகிழ்ச்சி தாங்க மாட்டாமல் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''வாயை திறங்க...''

''எதுக்கு? எல்லா பல்லும் பத்திரமாதான் இருக்கு!''

''ஹி...ஹி... சிரிச்சாச்சு. போதுமா? சகிக்கலை உங்க ஜோக். முதல்ல வாயை திறங்க...'' ஸ்வீட்டை எடுத்து அழுத்தினாள்.

''ஹேய்... என்ன இது?''

''குட் நியூஸ்... ஆகஸ்ட் 28 நல்ல நாளாம். அன்னைக்கே நம்ம கல்யாணத்தை வச்சிக்கலாம்னு அம்மா பிரியப்படறாங்க! என்ன சொல்றீங்க டியர்? உங்க வசதி எப்படி?''

''ஒரு ஆம்பிளையப் பார்த்து கேக்கற கேள்வியா இது?'' குரலில் கிண்டல் தெறித்தது.

அவன் சொன்னது புரியவே சில நிமிடங்களாக...

''ச்சீய்...'' என்று செல்லமாய் அவன் மார்பில் குத்தினாள்.



9

ஆகஸ்ட் 28.

மேகங்கள் ஒன்று கூடி பேசி ஒப்பாரி வைக்க தயாராகின. பூரணி துவைத்துப் போட்ட துணிகளை கொடியில் இருந்து உருவி... மடித்து வைத்தாள்.

இரண்டு நாட்களாக காய்ச்சல் அடித்ததில் சோறு சமைக்கவில்லை. நாலு குடிசை தள்ளியிருந்த டீக்கடையில் டீயும், பன்னும் வாங்கி சாப்பிட்டு படுத்து விட்டாள்.

படுத்ததும் மூச்சு முட்டுவது போலிருக்க... எழுந்து உட்கார்ந்தாள்.

எட்டு மாத வயிறு பம்மென்று வீங்கியிருந்தது.

குழந்தையின் அசைவை உணர முடிந்தது.

'மாமா... நம் குழந்தை பிறப்பதற்குள்ளாவது வந்து விடுவீர்களா? என்னை எட்டி உதைக்கிறது மாமா. நீங்கள் வந்து செல்லமாய் ஒரு அடி அடியுங்களேன். அம்மாவுக்கு வலிக்கும் அமைதியாய் இரு என்று.'

'ம்ஹூம்... நீங்கள் உங்கள் குழந்தைக்குத்தான் பரிந்து பேசுவீர்கள். எனக்கு வலித்தால் என்ன? அது உள்ளே கையை காலை ஆட்டி உதைப்பதில் உங்களுக்கு மகா பெருமையாச்சே!'

தனக்குத்தானே கற்பனையில் பேசிக் கொண்டவள் கண்கள் சட்டென்று கலங்கியது.

'எங்கே இருக்கிறீர்கள் மாமா. நான் வேண்டாமென்று ஒதுக்கி விட்டு போய் விட்டீர்களா? இப்படியெல்லாம் நினைக்கக் கூடாதுதான். ஆனா இப்படி சந்தேகப்படாமலும் இருக்க முடியலையே மாமா. என்னதான் உங்களால் தைரியமும், திடமும்



பெற்று தனியே நின்று சமாளித்தாலும், உங்கள் நினைவு, என்னை வாட்டுகிறதே... நானும் பெண்தானே மாமா.'

'கடவுளே... என் மாமாவை எந்த நிலையிலும் சுகமாய் வைத்திரு' தாலியை கெட்டியாய் பற்றிக் கொண்டாள். அவள் கைகள் நடுங்கின.

வெளியே இடி இடித்தது.

கதவை கதவு என்று சொல்வது கூட தவறு. தட்டி எனப்படும் மூங்கிலால் செய்யப்பட்ட மறைப்பை சார்த்தி வைக்க எழுந்தாள். சரியாய் சார்த்த முனைந்த போதுதான் திண்ணையின் மேல் அந்த உருவத்தை பார்த்தாள்.

வயதான மூதாட்டி ஒருத்தி... உடம்பை குறுக்கி கோழிக் குஞ்சாய் சுருண்டு படுத்துக் கிடந்தாள். குளிருது போலும்.

'பாவம்' என்று முணுமுணுத்தபடி வந்து படுத்தாள் பூரணி.

சடசடவென்று மழையின் பேரிறைச்சல்.

பூரணிக்குள் இனம் புரியாத சங்கடம். அடிவயிற்றில் குடிமுத்தது போல் ஒரு வலி எழுந்து மறைந்தது. இருக்க... இருக்க... அந்த வலி வயிறு முழுக்க பரவியது. மூச்சு வாங்கியது. படுக்கவும் முடியாமல், உட்காரவும் முடியாமல் துடித்தாள்.

'என்ன ஆயிற்று எனக்கு? ஐயோ... என் குழந்தை' அம்மா... ஐயோ... வலியில் கண்கள் செருக தீனமாய் அலறினாள்.

மழை பெய்யும் சப்தத்தில்... எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து கேட்பது போல் அவள் குரல் கேட்க, திண்ணையில் படுத்திருந்த ராஜம்மா விழித்துக் கொண்டாள்.

சுற்றுமுற்றும் பார்த்தாள்.

'சத்தம் எங்கிருந்து வருகிறது?'

''அம்மா... வலி... தாங்க முடியலையே...''

சுருக்கம் விழுந்த கண்கள் மேலும் யோசனையில் சுருங்கிப் போயின.

'இந்த வீட்லேர்ந்துதான் வருது. மூடி இருக்குதே... போய் பார்க்கலாமா?'

அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே... சத்தம் அதிகமாகியது. அதற்கு மேல் உட்கார முடியாமல் திறந்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

அங்கே ஒரு இளம்பெண் பிரசவ வலியால் துடிப்பதைப் பார்த்து பதறிப் போனாள்.

''அம்மாடி... தாயே... என்னாச்சும்மா? பனிக்குடம் உடைஞ்சிருச்சி போலிருக்கே? வீட்ல வேற யாரும் இல்லையா? கடவுளே... இந்த பேய் மழையில் டாக்டரை போய் எப்படி கூப்பிடறது? தாயி... சமயபுரம் மாரியாத்தா... இந்த பிரசவத்தை நல்லபடியா நடத்திக் கொடும்மா''

''தாங்க முடியலையே...'' காலை உதைத்துக் கொண்டாள். கண்ணீர் காதுகளில் இறங்கியது.

டாக்டரைக் கூப்பிட அவகாசம் இல்லை என்பதை உணர்ந்தவள் பரபரப்பாய் செயல்பட்டாள். அடுப்பை பற்ற வைத்து சுடு தண்ணீர் வைத்தாள்.

வலியால் துடித்த பூரணியின் அருகே அமர்ந்தாள் ராஜம்மா.

அரை மணி நேர போராட்டத்துக்குப் பின் அந்த ஆண் குழந்தை இந்த பூமியை தொட்டது.

ராஜம்மா அந்தக் குழந்தையை சுத்தப்படுத்தி படுக்க வைத்தாள். மழையின் தீவிரம் கொஞ்சம் குறைந்திருந்தது. பூரணி மயக்கத்தில் இருந்து விடுபட்டாள். எல்லாமே நினைவுக்கு வர சில கணங்கள் தேவைப்பட்டன. பரபரப்பாய் வீட்டை சுத்தப்படுத்திக் கொண்டிருந்த ராஜம்மாதான் முதலில் கண்களில் விழுந்தாள். வாடிய முல்லைச்சரமாய் படுத்துக் கிடந்தவளால் எழுந்திருக்க முடியவில்லை.

''ஆயா...'' என்றழைத்தாள்.



''என்ன தாயி... முழிச்சிக்கிட்டியா?''

''நல்ல நேரத்துக்கு தெய்வம் மாதிரி வந்து உதவினே. என் உயிர் உள்ளவரைக்கும் இதை மறக்க மாட்டேன் ஆயா.''

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதே தாயி! ஆமா, வீட்ல உன்னைத் தவிர வேற யாருமே இல்லையா?''

விரக்தியுடன் ஒரு சிரிப்பை மட்டும் பதிலாக தந்தவள் நினைவு வந்தவளாக... ''ஆயா... குழந்தை... என் குழந்தை எங்கே? ஆணா, பெண்ணா?''

''சிங்கக் குட்டிதான். புள்ளை ராசாவாட்டம் இருக்கான்'' குழந்தையை அவள் அருகில் படுக்க வைத்தாள்.

ஒரு பெரிய பன்னீர் புஷ்பம் போல் குழந்தை இருந்தான். ஆசை ஆசையாய் மடியில் தூக்கி வைத்துக் கொண்டவள்... வைத்த கண் எடுக்காமல் பாசம் பீறிட.... பார்த்தாள்.

அப்பாவைப் போலவே தலை கொள்ளாமல் கருகருவென சுருண்ட முடி. கூர்மையான நாசி. துருதுரு கண்கள் சற்றே பருத்த கீழுதடு. கையை அசைத்து அழ ஆரம்பித்தது.

''அம்மாவை பார்க்கணும்னு ரெண்டு மாசம் முன்னாடியே வந்து பொறந்துட்டியா கண்ணா?'' என்றவள் அப்போதுதான் கவனித்து பதறினாள். ''ஐயோ... இதென்ன?'' குழந்தையின் கால்களிரண்டும் சூம்பிப் போய் மரக்கட்டை போல் கிடந்தது.

''ஆயா... என்ன இது? ஏன் கால் இப்படி இருக்கு?'' குரல் நடுங்கியது பூரணிக்கு.

''மனசை தளர விடாதேம்மா... வயித்துக் கொழந்தைய வச்சுக்கிட்டு சரியா சாப்பிடாம இருந்திருப்பே... சத்து கொறைச்சல் காரணமா சில குழந்தைங்க இப்படி பொறக்கறது உண்டு. குறை பிரசவம் வேற. மத்தபடி பையன் ராஜாவாட்டம் இருக்கான்'' ராஜம்மா பூரணியின் தலையை கோதி ஆறுதல் சொன்னாள்.

'வீல்' என அலறினாள் பூரணி.

''என் குழந்தைக்கா? என் தினகரனோட பிள்ளைக்கா கால் ஊனம்? ஆண்டவா உனக்கு இரக்கமே இல்லையா? எனக்குத்தான் எதையும் தராம பறிச்சிக்கிட்டே... என் புள்ளையோட காலை கூடவா பிடுங்கிக்குவே? இரக்கமில்லாத கல்லே... ஐய்யோ... என்ன செய்வேன்? என் மாமா... இந்த பிள்ளையப் பார்த்தால் துடிச்சுப் போய்டுவாரே?'' நெற்றியில் அறைந்து கொண்டாள்.

''அழாதேம்மா... பச்சை உடம்புக்காரி... இப்படி அழுதா ஜன்னி கண்டுடும்... சொல்றதை கேளு தாயீ!''

''பாரு ஆயா! இந்த புள்ளை என்ன தப்பு பண்ணிச்சி? எப்படி நடக்கும் எம்புள்ள? மத்தவங்களை பார்த்து பார்த்து உருகிட மாட்டானா ஆயா!''

''பாரம்மா... மொதல்ல அழுகைய நிறுத்து. பிற்காலத்துல எந்த குறையுமில்லாம வாழப்போறான்மா உம்புள்ள. அதனாலதான் இப்பவே கஷ்டத்தை அனுபவிச்சிடறான். கவலைப்படாதே தாயீ! கடவுளால முடியாததை இப்பல்லாம் விஞ்ஞானம் முடிச்சிக் காட்டுது. ரெண்டு வயசாகட்டும். இதுக்குன்னு ஒரு ஸ்கூல் இருக்கு. ரெண்டு மூணு நாள் அங்கே பெருக்கற ஆயா வரலேன்னு நான் போய் வேலை செஞ்சேன். அங்கே சேர்த்துட்டா... படிப்போட இந்த மாதிரி கால்களுக்கு பயிற்சிக் கொடுத்து நடக்க வச்சிடுவாங்க. மாசாமாசம் கொஞ்சம் பணம் கட்டினாலே போதும். எல்லாமே அவங்களே பார்த்துப்பாங்க...''

''நிஜமாவா?'' பூரணியின் கண்களில் நம்பிக்கையில்லை.

''இதுல பொய் சொல்லி என்ன ஆகப் போகுது? புள்ளை பசியில அழறான் பாரு.''

குழந்தையை நெஞ்சார அணைத்துக் கொண்டு உருகினாள்.

''என் கண்ணே! அம்மா உன்னை இப்படியே விடற மாட்டேம்ப்பா! என் உடம்புல கடைசி சொட்டு ரத்தம் காயற வரைக்கும் உழைச்சி... உன்னை தலை நிமிர்த்தி நடக்க வைக்கிறேன் ராஜா. உங்கப்பா ஆசைப்பட்டது போல பெரிய பெரிய



படிப்பெல்லாம் படிக்கவச்சு காட்டலே நான் பூரணி இல்லேடா'' பூரணியின் கண்களில் ஒரு அசாத்திய உறுதி.

''இனிவரும் ஒவ்வொரு நிமிஷமும் என் புள்ளைக்காக செலவழிப்பேன் ஆயா! அவனை இந்த சமூகத்தில் ஒரு உயர்ந்த நிலைக்கு உயர்த்திக் காட்டுவேன்.''

''இப்பத்தாம்மா... எனக்கு சந்தோஷமா இருக்கு சரி மழை விட்டிருச்சி! நான் வரட்டுமா தாயீ?''

''ச்சட்!'' எத்தனை பெரிய சுயநலக்காரி நான்? என்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்து விட்டு, உயிர் கொடுத்த இவளைப் பற்றி எதுவும் கேட்கவில்லையே...''

''ஆயா... நீங்க யாரு? எங்கிருந்து வர்றீங்க? ஒண்ணுமே சொல்லலையே...''

''அது ஏம்மா புதுசா ஒரு கஷ்டம் உனக்கு? வீட்டுக்கு வீடு வாசப்படி! வயசாகிப் போச்சு. இனி என்ன இருக்கு எனக்கு? கிடைச்சத சாப்பிட்டு... எங்கேயாவது சுருண்டுக்குவேன். என்னைப் பத்தி சொல்ல வேற ஒண்ணுமே இல்லம்மா'' என்றாள் விரக்தியாக.

அம்பது வயசுக்கு மேலிருக்கும். அதிகமாய் நரைக்கவில்லை. களைப்பிலோ, கவலையிலோ... கண்களின் கீழ் சுருக்கங்கள் ஆனாலும் அதில் உறுதியிருந்தது.

பூரணி அவளை பரிதாபமாய் பார்த்தாள்.

''சொல்லுங்க பரவாயில்லை. உங்களுக்கும் கொஞ்சம் மன பாரமாவது கொறையும்.''

ராஜம்மாவின் கண்களில் கரகரவென நீர் பொங்கியது.

''உன்னை மாதிரி ஒரு பெண்ணை பெத்திருந்தாக் கூட நாளைக்கு செத்தா தலைமாட்ல உக்காந்து அழுவும். ஆனா மூணும் புள்ளையா பெத்துப் போட்டேன். நல்லா அருமை பெருமையாகத்தான் வளர்த்தேன். நிலம், நீச்சுன்னு கவுரவமாகத் தான் வாழ்ந்தேன். என் ராசா பொட்டுன்னு கண்ணை மூடிட்டப்பத்

தான் இந்த உலகத்தையே புரிஞ்சிக்கிட்டேன் தாயீ! கழுத்து புருஷன்தான் போயிட்டார். வயித்து புருஷன்களாவது காப்பாத்து வானுங்கன்னு நம்பிக்கையோட இருந்தேன். புள்ளைங்க என்னை பந்தாடிட்டானுங்கம்மா. பத்து மாசம் சுமந்தவளுக்கு சோறு போட்றதுல கூட கணக்கு பார்க்க ஆரம்பிச்சிட்டான்ங்க. ஒரு மாசம் பெரியவன் கிட்ட, அடுத்த மாசம் இன்னொருவன்கிட்டே மறுமாசம் சின்னவன் கிட்டேன்னு என் வயித்துப்பாட்டை பங்கு போட்டுக்கிட்டானுங்க. இருந்த வீட்டையும், நிலத்தையும் விக்கச் சொல்லி சண்டையும் போட்டானுங்க. எனக்கெதுக்கும்மா அதெல்லாம்? வித்துப் பிரிச்சி குடுத்துட்டேன். அப்புறம் என்ன இருக்கு இந்த கிழவிகிட்ட? பொண்டாட்டி பேச்சை கேட்டு என்னை நாயை விட கேவலமா நடத்தினாங்க. கொஞ்சம் விட்டா நாலு ஆணி, ஒரு கோணிய கொடுத்து தெருவில் கிடந்துக்கன்னு விரட்டினாலும் விரட்டுவாங்கன்னு புரிஞ்சது. அந்த பழிபாவம் என்னால என் புள்ளைங்களுக்கு வரணுமா? வாழ்ந்து அனுபவிச்சாச்சு. ஒதுக்கறாங்கன்னு தெரிஞ்சதா? கவுரவமா ஒதுங்கிடணும். அதுதான் முறை வந்துட்டேன். ரெயிலேறி திருச்சியிலேர்ந்து வந்துட்டேன். என்னால மத்தவங்க கஷ்டப்படறதோ, சங்கடபடறதோ நடக்கக் கூடாது. இன்னும் இருக்கப் போறது கொஞ்சகாலம். அதை எப்படியோ கடத்திட்டு வர்றேன் எங்கேயாவது கல்யாண வீட்லேயோ, கருமாதி வீட்லேயோ கவுரவம் பார்க்காம பாத்திரம் கழுவுவேன். வயிறு நெறய சாப்பாடு போட்டு, கையில அஞ்சோ, பத்தோ குடுப்பாங்க. ரெண்டு மூணு நாளைக்குத் தாங்கும். ஆனா பிச்சை எடுக்கலை தாயீ... கிடைச்சா சாப்பிடுவேன்... என் உழைப்பை கொடுத்துதான்.''

பிரமிப்போடு பார்த்தாள் பூரணி.

'வயதான காலத்தில், இப்படியொரு கஷ்டமா? எப்படி தாங்கிக் கொள்கிறாள்?' கையெடுத்து கும்பிடணும் போலிருந்தது.

''அப்புறம் புள்ளைங்க உன்னை தேடலையா?'' வாய் விட்டு சிரித்தாள ராஜம்மா!



''பாவம்... இருக்கற வேலையில... என்னை தேட மறந்திட்டு இருப்பானுங்க! சரி வரட்டுமா? ரொம்ப பேசாதே... களைச்சி போயிருக்கே... நல்லா தூங்கி ஓய்வெடு!''

''ஆயா...''

''என்னம்மா?'' போனவள் திரும்பினாள்.

''நீ எங்கேயும் போக வேணாம். என்னோட இருந்துடு!''

''என்னம்மா சொல்றே?''

''சும்மா இல்லே! நான் வேலைக்குப் போறேன். நீ வீட்ல குழந்தைய பார்த்துக்க. உனக்கு நான் துணை. எனக்கு நீ துணை கிடைக்கறது கொஞ்சமானாலும் அரை வயிறு சாப்பிட்டாக் கூட மனசு நிறைஞ்சிடாதா? என்னைவிட்டு போய்டாதே ஆயா!'' கெஞ்சலாய் கேட்டாள்.

சில கணங்கள் யோசித்த ராஜம்மா... அவள் சொன்னது சரியென பட... பூரணியின் அருகில் வந்து தலையை கோதினாள்.

''எங்கே... பிளாட்பாரத்தில நாதியத்த பொணமா செத்துப் போய்டுவேனோன்னு பயந்திருந்தேன். அந்த ஆண்டவன் வயசான காலத்துல எனக்கொரு பொண்ணை குடுத்திருக்கான்'' என்றாள் கண்கள் பனிக்க.

''ஆயா!'' அவள் கையை இறுகப் பற்றிக் கொண்ட பூரணியினுள் ஒரு பதிய ரத்தம் உற்பத்தியாயின.



## 10

அரசியல்வாதிக்குக் கூட பயப்படாமல், சலாம் போடாமல் கடமையே கண்ணாக வேலை செய்யும் ஒரே ஆள் மிஸ்டர் காலம்தான்.

நாள் பாட்டுக்கு திரும்பி பார்க்காமல் ஓடிக் கொண்டே யிருந்தது.

பூரணி ரொம்பவே மாறிவிட்டாள். யாருக் காகவும் அஞ்ச மாட்டாள். செய்யும் வேலைக்காக

வெட்கப்பட மாட்டாள். உறுதியும், திடமும் அவளிடம் முன்பை விட அதிகமாகவே குவிந்திருந்தது. வாழ்க்கையில் பட்ட அடிகள், ஏமாற்றங்கள் அவளை ஒரு நிலைபடுத்தி விட்டது.

பிரச்சினையில்லாத வாழ்க்கையில்லை. கண்கள் என்றிருந்தால் கண்ணீர் வந்துதான் தீரும். மனிதன் என்றிருந்தால் கஷ்டங்கள் வந்துதான் தீரும். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையில் ஆனாலும் எல்லோருமே ஏதாவதொரு கோணத்தில் அல்லல்பட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். மனிதன் பிறக்கும் போது வெறும் கல்லுதான். சோதனைகளும், துன்பங்களும்தான் அவனை செதுக்கி அழகாக்கிறது. அந்த வகையில் பூரணியின் அகம் அற்பத அழகோடு ஜொலித்துக் கொண்டிருப்பது நிஜம். ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவள் மாறவே இல்லை.

என்ன காரணமோ, ஏது காரணமோ? தினகரன் அவளை விட்டு சென்றது எதனாலோ? இதயம் முழுக்க வியாபித்து நின்ற அவள் உயிர் தினகரன் என்றாவது ஒரு நாள் நிச்சயம் தன்னை தேடி வருவான். இதுநாள் பட்ட துன்பங்களெல்லாம் கரைந்து போகும்வரை அவன் மடியில் விழுந்து அழ வேண்டும். அந்த நாளுக்காகத்தான் காத்திருந்தாள்.

'என்னுயிரே... எப்போது வரப் போகிறீர்கள்?' சுவற்றில் தினகரனும் பூரணியும் தோளோடு தோள் இடிக்க... ஸ்டுடியோவில் எடுத்துக் கொண்ட போட்டோவை பார்த்து நாள்தோறும் இந்த கேள்வியை கேட்க தவறுவதில்லை.

''பூரணி நேரமாகலையாம்மா? இப்ப வேன் வந்துடும். அதுக்குள்ள முகுந்துக்கு டிரஸ் பண்ணி விட்டாதானே சரியார்க்கும்!'' ராஜம்மா குரல் கொடுத்தாள்.

சிந்தனையில் இருந்து மீண்டாள் பூரணி.

''இதோ.. பண்ணிடறேன் ஆயா'' பரபரப்பாய் செயல்பட்டாள்.

மூன்று வயது முகுந்தை அருகே இருந்த சின்ன ஸ்டூலில் உட்கார வைத்தாள்.



ராஜம்மா சொன்னது போலவே உடல் ஊனமுற்றோர்க்காக நடத்தப்படும் பள்ளியில் தன் மகன் முகுந்தனை சேர்த்து விட்டிருந்தாள். வருடம் ஆயிரம் ரூபாய் தவிர, மாதம் முன்னூறு ரூபாய் செலுத்த வேண்டும். புக்ஸ், யூனிபார்ம், தொடை வரை ஸ்டீல் தகடுடன் கூடிய ஷு எல்லாமே பள்ளி நிர்வாகமே தந்தது. ஸ்கூல் வேன் வீட்டிற்கே வந்து அழைத்துச் செல்லும். பயிற்சி தந்த பலன் தவழக் கூட முடியாத முகுந்த் சுவற்றை பிடித்து நடக்க ஆரம்பித்தான்.

முகுந்த் பிறந்து இரண்டு மாதங்களில் அவள் மீண்டும் அதே புக் சென்டருக்கு வேலைக்கு சென்றபோது பெரிய ஏமாற்றமே மிஞ்சியிருந்தது.

அதொன்றும் அரசுப் பணி அல்லவே! விடுமுறை கழியும் வரை இவளுக்காக அந்த சீட்டை பாதுகாத்து வைத்திருக்க. அந்த முதலாளிக்கு தேவை உடனடியாக ஒரு சேல்ஸ் கேர்ள். வராததால், வேறொரு பெண் அமர்த்தப்பட்டு விட்டாள்.

ஆனாலும் அவள் தோய்ந்து போய் விடவில்லை. முன்பை விட முனைப்போடு வேறு வேலை தேட ஆரம்பித்தாள். ஆனால், அவளுக்கு முன்பாக வரிசையில் நின்றிருந்து வேலை தேடியது ஒரு கூட்டம். 'இப்போது ஒரு வயிறு இல்லை. மூன்று வயிறுகளுக்காக சம்பாதித்தாக வேண்டும். என் குழந்தையை நடக்க வைக்க எப்படியாவது சம்பாதிக்க வேண்டும்.

தேடினாள்... தேடினாள்... தேடிக் கொண்டேயிருந்தாள்.

கடைசியில் சாப்பிடக் கூட ஒரு குவளை கஞ்சியின்றி... குழந்தைக்கு கொடுக்க ஒரு சொட்டு பால் இன்றி அழ... ஆயாசமாய்.. பஞ்சடைத்த கண்களோடு மூலையில் சுருண்டு படுத்திருந்த போதுதான் பயம் அடிவயிற்றை பிசைந்தது.

'எனக்காக வேண்டாம் கடவுளே! இந்த இரண்டு ஜீவன்களை காப்பாற்றவாவது எனக்கொரு வேலையை பெற்றுக் கொடு' என்று மனமுருக வேண்டியதற்கு பலன் இருந்தது.

அதே தெருவில் கடைகோடியில் இருந்த புஷ்பாதான் சமயத்திற்கு கை கொடுத்தாள். அவள் சித்தாள் வேலை செய்பவள். அவள்தான் சொன்னாள்.

''பேசாம என்னோட வேலைக்கு வாயேன். நொண்டிப் புள்ளையையும் கூட ஒரு கிழவியையும் வச்சுக்கிட்டு நீ கம்பெனி கம்பெனியா ஏறி இறங்கினா கலெக்டர் வேலையா போட்டு குடுக்கப் போறான்? உனக்கு ஆட்சேபனை இல்லேன்னா... என்னோடவா! மேஸ்திரிக்கு தாராளமான கை. ஒரு நாள் கூலி நாப்பது, அம்பது கிடைக்கும். ஜல்லி ஒடைக்கணும்னா... அதுக்கு தனி கூலி. நாலு காசு பார்க்கலாம். என்ன சொல்றே? என்ன... கொஞ்சம் கஷ்டமான வேலைதான். அதெல்லாம் பார்த்தா... வயித்துப் பாட்டுக்கு பதில் சொல்லணுமே...!''

பூரணி எதையும் யோசிக்கவில்லை. சமயத்துக்கு வந்து உதவிய அகிலாண்டேஸ்வரியாகவே புஷ்பாவை நினைத்தாள்.

''வருகிறேன்'' என்று கூறி விட்டாள்.

''உன் புருஷன்கிட்டேர்ந்து எதுவும் தகவல் வந்ததா?'' பொழுது போகாமல் வாயை கிளறினாள் புஷ்பா.

''வரும்!'' ஒரே வார்த்தையில் பதிலளித்து விட்டு போய் விட்டாள் பூரணி. வாரம் ஒரு முறை... அவள் குடியிருந்த பழைய வீட்டிற்கு போய்வர தவறுவதில்லை.

''என் புருஷன்கிட்டேர்ந்து ஏதாவது லெட்டர் வந்ததுங்களா?'' என்று இவள் உள்ளக்கிடக்கையோடு அந்த வீட்டு கதவை தட்டி கேட்க... கேட்க... ஒரு நாள் எரிந்து விழுந்தார் வீட்டை வாங்கியவர்.

''ஏன் இப்படி அடிக்கடி வந்து உயிரை எடுக்கறே? இதப்பார்... இனி இப்படி வந்து தொல்லை குடுக்கற வேலையெல்லாம் வச்சுக்காதே! உன் புருஷன்கிட்டேர்ந்து வந்தாலும் சரி. வேற யார்கிட்டேர்ந்து வந்தாலும் சரி... நேரா போஸ்டாபீஸ்லேயே போய் விசாரிச்சுக்க! ஆமா... சொல்லிட்டேன்...?'' கதவை அறைந்து சார்த்தி விட்டார் அந்த பெரிய மனிதர்.



பூரணி உழைக்க தயங்கவில்லை. ஆரம்பத்தில் தலைநிறைய செங்கல்லையும் சிமெண்ட்டையும் சுமந்து செல்ல மிகவும் சிரமப்பட்டாள். சிமெண்ட் கலவையில் கால் பட்டு, பட்டுக் கால்களில் வெடிப்பு ஏற்பட்டு ரத்தம் வந்தது. காய்ச்சல் வந்தது. ஆனாலும் லீவு போட மாட்டாள். ஒரு நாள் வருமானம் போய் விடுமே. ஆகவே, அதையெல்லாம் பொருட்படுத்தாமல் போனாள்.

''அம்மா... ரொம்ப அழுத்தாதே... வலிக்குது!'' முகுந்த் மழலை குழற சொன்னதும் திடுக்கிட்டு மீண்டாள்.

''என்ன ராஜா சொல்றே?''

''உன் கை கல்லு மாதிரி இருக்கும்மா... தொட்டாலே வலிக்குது!'' சிணுங்கிய முகுந்தை வாரியணைத்துக் கொண்டாள்.

''நிஜமாகவே நீ எண்ணெய் தேய்ச்சி விடறியா என்ன?'' தினகரன் கிண்டலாய் கேட்க... பூரணி வியப்பாய் பார்த்தாள்.

''பின்னே என்ன பண்றேனாம்? பாருங்க என் கையை!'' எண்ணெயில் மினுமினுத்த அவள் கைகளை விரித்துக் காட்ட அதைப் பிடித்து அப்படியே கன்னத்தில் பதித்து அழுத்தினான்.

''அதெப்படி பூரணி. உன் கை இவ்ளோ மெத்து மெத்துன்னு பன்னு மாதிரி இருக்கு? இத்தனைக்கும் வீட்டு வேலையெல்லாம் செய்யறதுக்கு கொஞ்சமாச்சும் ரப்பா இருக்கணுமே! என் கைய பார்! எத்தனை முரட்டுத்தனமா இருக்கு? நீ என் முதுகில எண்ணெய் தேய்க்கறது ரோஜாப் பூவால தொடறமாதிரி இருக்கு!''

''என் மாமாவுக்கு இதயம் ரோஜாப்பூவை விடவும் மென்மையா இருக்குதே... அதை விடவா என் கை உசத்தி?'' பெருமை பொங்க கூறியவளை இழுத்தணைத்து முத்தமிட்டான் தினகரன்.

''பூரணி... வேன் வர்ற சத்தம் கேக்குதும்மா... நானும் இட்லிய டிபன் பாக்ஸ்ல வச்சிட்டேன்.''

மீண்டும் தன்னை இழுத்துப் பிடித்து நிகழ் காலத்திற்கு வந்தாள்

''இனிமே... வலிக்கிற மாதிரி தொடமாட்டேன் கண்ணா!'' உணர்ச்சி மிகுதியில் கண்கடைோரம் அருவி.

''அம்மா... உனக்கும் கை வலிக்குதாம்மா?'' முகுந்த் தன் பிஞ்சு கரத்தால் அம்மாவின் கையை பற்றிக் கொண்டு கேட்டான்.

''நீ இப்படி கேக்கறதுக்காகவே எங்கேயாவது அடிபட்டுக் கிட்டு வரணும் போலிருக்கு கண்ணா.''

''ஏம்மா... இப்படியெல்லாம் அபசகுனமா பேசறே?'' ராஜம்மா கடிந்துக் கொண்டாள்.

''முகுந்த்... நீ நல்லா படிக்கணும். எல்லாரும் மூக்கில் விரலை வெக்கற மாதிரி எல்லாத்திலேயும் முதல்ல வரணும். செய்வியாடா கண்ணா?''

''ஓ... நான் நல்லா படிக்கற பையன்னு மிஸ் என் முதுகில தட்டி வெரிகுட் பாய்னு சொன்னாங்கம்மா. நான் ஒரு ரைம் சொல்லட்டா?''

''சொல்லு... சொல்லு!'' ஆர்வமானாள்.

''காட் ப்ளெஸ் மம்மி...

காட் ப்ளெஸ் டாடி...

ஹெல்ப் மீ ஆல்வேஸ்...

ட்டு கீப்தெம் ஹாப்பி...''

பூரணிக்கு சந்தோஷத்தில் கண்கள் பொங்கின.

''ஆயா... பார்த்தியா... எம்புள்ள... எவ்ளோ அழகா இங்லீஷ்ல பேசறான் பாரு. ஹய்யோ... என் கண்ணே பட்டுடும் போலிருக்கு!''

முகுந்த் அரிசி பற்கள் மின்ன அம்மாவின் சந்தோஷம் கண்டு வெட்கத்தில் சிரித்தான்.

பீய்ங்க்... பீய்ங்க்...

ஹார்ன் அடிக்கும் சப்தம்.



''பை மம்மி... ஆயா... டாட்டா?'' முகுந்த் சுவற்றை பிடித்துக் கொண்டு... ஓட முயற்சித்து முடியாமல் தடுமாறி விழுந்து... மீண்டும் அவனே எழுந்து நடந்து வேனை அடைந்தான்.

அதைப் பார்த்த பூரணியின் இதயம் ஒரு கணம் துடிக்க மறந்தது.



11

தினகரன் டேபிள் லாம்ப்பை எரிய விட்டு ஃபைல் பார்த்துக் கொண்டிருந்தான்.

கட்டிலில் படுத்திருந்த சுப்ரஜா எழுந்து வந்து அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

திரும்பிப் பார்த்தவன் ''என்ன சுப்ரஜா?'' என்றான்.

''டைம் என்ன?''

''லெவன் தர்ட்டி!''

''இன்னமும் ஃபைலையே பார்த்துக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்?'' செல்லமாய் முதுகில் அடித்தாள்.

''ரொம்ப அவசரமான மேட்டர்னு அர்த்தம்.''

''சே... என்னைவிட அந்த ஃபைல் ரொம்ப முக்கியமா போய்ட்டதா?''

''அடடா... என் செல்லக்குட்டிக்கு கோபம் வந்திடுச்சா?''

''பின்ன வராதா?''

''சாரிம்மா... நிஜமாவே ரொம்ப அவசரமான மேட்டர்...''

''இதப்பாருங்க. ஆபீஸ் வேலைய ஆபீசோட முடிச்சிக்கணும். வீடு வரைக்கும் கொண்டு வரக்கூடாது. நாம ரெண்டு பேரும் ரிலாக்ஸ்டா பேசி எவ்ளோ நாளாயிடுச்சி தெரியுமா? உங்களுக்கு அந்த மில்லை கவனிக்கறதே பெரிய பாடாயிடுச்சி. எனக்கு பேஷன்ட்டை கவனிக்கிறதுக்கே டைம் சரியா போயிடுது. அபூர்வமா... இன்னைக்கு கொஞ்சம் நேரம் கிடைச்சிருக்கு... அப்பவும் ஃபைலையே கட்டிட்டு அழுங்க!''

''ஓக்கே... ஓக்கே! மூடி வச்சாச்சு! சரி... இப்ப பேசு...!'' என்றவன் கையை வளைத்து அவள் தோளில் போட்டு அருகே இழுத்தான்.

சுப்ரஜா காதல் மிகுதியோடு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''என்னமோ தெரியலை பரத்! நீங்க எப்பவும் என் கூடவே இருக்கணும்னு ஆசைப்படறேன். சமயத்தில் மில்லே கதின்னு நீங்க சின்ஸியரா இருந்தாக்கூட ரொம்ப கோபம் வருது. என் பரத், என்னோட இருக்க வேண்டிய நேரங்களை முழுங்கிடுதே... பேசாம மில்லை இழுத்து மூடிடலாமான்னு யோசிக்கிறேன் பரத்!''

''ஸில்லி... நான் உன்னோட பரத் சுப்ரஜா! உன்னை விட்டு நான் எங்கே ஓடிடப் போறேன். டாக்டர்னுதான் பேரு. பேசறதெல்லாம் பட்டிக்காட்டு பொண்ணுங்க மாதிரி. ஆனாலும் நீ இப்படி வெகுளியா பேசறது தான் எனக்கு ரொம்ப பிடிக்குது சுப்ரஜா!''

''சொல்ல மறந்திட்டேனே பரத்! அம்மா இன்னைக்கு எஸ்.டி.டி.யில பேசினாங்க!''

''அட... நான் இல்லாம போனேனே? என்னவாம்? அமெரிக்காவில் இருந்து வரவே மனசில்லையாமா? என் பொண்டாட்டிய பார்க்க எப்ப வரப்போறாங்களாம்?''

''ம்... மூணாவதா ஒரு பெண் குழந்தைய பெத்துப் போட்டாத்தான் வருவாங்களாம்!''

''அதுக்கென்ன... நாளைக்கே பெத்துக்கலாம்.''

''ச்சீ... ரொம்ப மோசம். நாளைக்கே எப்படி பெத்துக்கறதாம்?''

''முயற்சி திருவினையாக்காதா?'' என்றான் தினா அவள் இடுப்பை கிள்ளி!

''அப்பா வலிக்குது... வரவர ரொம்ப அசிங்கமா பேசறீங்க! என்னமோ இப்பத்தான் கல்யாணமான மாதிரி. ஏழு வருஷமாயிடுச்சி. ஞாபகமிருக்கா? அஞ்சு வயசுல ஒண்ணு, மூணு வயசுல ஒண்ணுன்னு ரெண்டு பிள்ளைக்கு அப்பா ஆனதாவது



நினைவிருக்கா புது மாப்பிள்ளைக்கு?'' சுப்ரஜா அவன் அடர்த்தியான மீசையை இரண்டு கையாலும் பிடித்து செல்லமாய் இழுத்தாள்.

''ஏய்... என்ன நீ? என்னை கிழவன்றியா? ஐ'ம் ஸோ யங்! சும்மா இருந்தவனை இழுத்து வச்சு பேசி, மூடை கிளப்பிட்டு அது ஞாபகமிருக்கா? இது ஞாபகமிருக்கான்னு கேட்டா என்ன அர்த்தம்? உன்னை...!'' அவள் கன்னத்தை குறி வைத்து குனிந்தான்.

அந்த அன்பும், ஆர்ப்பாட்டமான காதல் விளையாட்டும் அடுத்த சில நாட்களில் வந்த... பூகம்பத்தில் காணாமல் போயின.



12

தினகரனின் கையை எடுத்து தன் வயிற்றின் மீது வைத்தாள் சுப்ரஜா!

''என்னன்னு புரியுதா பரத்?''

''வயிறு பஞ்சு மாதிரி மெத்து மெத்துன்னு இருக்கு!''

''ஹூம்... டோன்ட் ப்ளே! ஐ'ம் சீரியஸ். வயித்துல உங்க மூணு மாச பொண்ணு அப்பாவை எப்போ பார்க்க வரலாம்னு கேக்கறா!'' அப்படி சொல்லி முடிப்பதற்குள் அந்த வெள்ளை வெளேர் முகம்... அந்தி சூரியன் போல் செம்மை பூசி தகதகத்தது.

''பாப்ரே...'' சடாரென துள்ளி எழுந்து உட்கார்ந்தான்.

''ரியல்லி?''

''ம்... இதிலென்ன பொய்?''

''ஒண்ணு மட்டும் நல்லா புரியுது...'' தினகரனின் குரலில் குறும்பும் குதூகலமும் பொங்கி வழிந்தது.

''என்ன பரத்?'' அவன் மார்பு முடிகளை களைந்தபடி...

''முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்!''

''யூ... யூ... டர்ட்டி ராஸ்கல்! ஆப்... பவுத் பத்மாஷ் ஹை!'' (நீங்க ரொம்ப மோசம்) அவன் மார்பில் செல்லமாய் குத்தியபடி... மார்பிலேயே முகத்தை கவிழ்த்துக் கொண்டாள்.

இப்போதெல்லாம் அவனால் சரளமாய் ஹிந்தியில் பேச முடிந்தது. அவன் பேசும் தமிழ் சுப்ரஜாவிற்கும் புரிந்தது.

''எத்தனையோ வேலையாட்கள் இருக்கப்ப... நீங்கதான் போகணுமா பரத்?'' பத்தாவது முறையாக கெஞ்சினாள் சுப்ரஜா.

''ப்ளீஸ் அன்டர்ஸ்டான்ட் மீ! நம்ம மில் நல்லபடியா நடக்கணும்னா... நல்ல மெட்டீரியல்ஸ் அவசியம். இப்பல்லாம் யாரையும் நம்ப முடியலை டியர். ஏற்கனவே ஒரு முறை நம்ம சரக்கு ரிடர்ன் வந்துடுச்சே... நினைவில்லையா? ஏன்? நம்ம ஆளுங்க மட்டமான மெட்டீரியல்ஸை கலந்து செஞ்சிருக்காங்க. நாம எல்லா முக்கியமான பொறுப்பையும் அவங்க கிட்டயே ஒப்படைச்சிடக் கூடாது. இந்த விஷயத்திலே நாமதான் கேர்ஃபுல்லா இருக்கணும். இதோ இருக்கிற மெட்ராஸ்க்குத்தானே போறேன். எண்ணி அஞ்சாவது நாள். என் சுப்ரஜா முகத்திலதான் முழிப்பேன். ஐ ப்ராமிஸ்!''

''என்னமோ போங்க... எனக்கு இதில் கொஞ்சமும் இஷ்டமில்லை. வீணா உடம்பை கெடுத்துக்கறீங்க!''

''நீதான் வீணா மனசைப் போட்டு குழப்பிக்கறே. கார்லேயே போய்ட்டு கார்லேயே வரப்போறேன். இதிலென்ன கஷ்டம்? வரட்டுமா டியர்?'' இக்னீஷியனை உசுப்பி எடுத்த எடுப்பில் சரேலென சீற விட்டான். கண்களில் பயம் மின்ன கார் போகும் வரை காத்திருந்து விட்டு உள்ளே வந்தாள் சுப்ரஜா.

கிழக்கு வானில் கருமேகங்கள் ஒன்று கூட ஆரம்பித்தன.

சுப்ரஜாவின் இனம்புரியாத பயத்திற்கும், படபடப்பிற்கும் அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் அர்த்தம் புரிந்தது.

கண்டெயினர் ஏற்றி வந்த லாரி தினகரன் போன காரின் மீது மோதி... கார் இரண்டு டைவ் அடித்து பள்ளத்தில் போய் விழ...



32955 5088 309

தினகரன் தலை முழுகக ரத்த வெள்ளத்தோடு தனியே விழுந்து கிடந்தான்.

சுப்ரஜாவிற்கு தகவல் போனபோது அலறி விட்டாள். அவள் அழுவதைப் பார்த்து என்னவோ... ஏதோவென்று பயந்து தினேசும், மகேசும் அழ வீடே கலங்கிப் போனது.

சரியாய் தூங்காமல், சாப்பிடாமல், குளிக்காமல், டிஸ்பென்சரி பக்கமே எட்டிக் கூட பார்க்காமல் தினகரனின் அருகிலேயே அமர்ந்திருந்தாள் சுப்ரஜா. நேற்றுதான் ஆஸ்பிடலிலிருந்து வீட்டிற்கு கொண்டு வந்தாள். சின்ன டர்க்கி டவலை இளஞ்சூடான தண்ணீரில் நனைத்து... மரக்கட்டையாய் படுத்திருந்த தினகரனின் உடல் முழுக்க துடைத்து சுத்தப்படுத்தி பவுடர் போட்டு வேறு உடை மாற்றினாள்.

''பரத்... மை டியர் பரத்!'' அடங்கியிருந்த கண்ணீர் மீண்டும் வெளியே வர துடிக்க... குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.

டாக்டர் ஷேக் முகமது பத்து நிமிடத்திற்கு முன்புதான் வந்து பரிசோதித்து விட்டுச் சென்றார்.

''டோன்ட் ஒர்ரி மிஸஸ் சுப்ரஜா... ஹி இஸ் பெட்டர் நவ். பல்ஸ் நார்மலா இருக்கு. எந்நேரமும் கான்ஷியஸ் வரலாம். பக்கத்திலேயே இருங்க!''

''ஓக்கே டாக்டர்!''

இதற்கு முன்பு ஆறேழு வருடத்திற்கு முன் முதன் முதலாக இவள் காரில் அடிப்பட்டு இதேபோல் இவன் கான்ஷியஸிற்காக காத்திருந்தாள். இதோ இப்போதும் அதே காத்திருப்பு. என்ன ஒரு வித்தியாசம் அப்போது இவன் உயிர் மட்டுமே பிரதானமாக, தன்னால் ஒரு உயிர் போய் விடக் கூடாதே என்று காத்திருந்தாள். ஆனால், இப்போதோ அவன் உயிரோடு, இவள் உயிரும் சேர்ந்தல்லவா துடிக்கிறது. இவனின்றி தானில்லை என்கிற நிலை எப்போதோ உண்டாகி விட்டதே!

''பரத்... சீக்கிரம் முழிச்சிப்பாருங்களேன். நீங்கள் இப்படி படுத்துக் கிடக்கறதை காண சகிக்கவில்லையே...''

சுப்ரஜா அவனையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சுமார் இரண்டு மணி நேரம் சென்றிருக்கும் அவனிடம் லேசாய் அசைவு தெரிந்தது. வலது கை விரல்கள் லேசாய் துடித்தன. புருவங்கள் சுருங்கின. கண் இமைகள் அசைந்தன.

சுப்ரஜாவிற்கு குபீரென சந்தோஷம் பற்றிக் கொண்டது.

''பரத்... பரத்...''

கஷ்டப்பட்டு கண்களை மலர்த்தினான்.

''ப...ர...த்! ஓ... தாங்க் காட்! பாருங்க... நான் நான்தான் உங்க சுப்ரஜா'' உணர்ச்சி மிகுதியில் அவன் கைகளை பற்றிக் கொண்டாள்.

தினகரன் சுற்று முற்றும் கண்களை ஓட விட்டவன் மீண்டும் மூடிக் கொண்டான். மண்டைக்குள் பேரிரைச்சல் மூளைப் பகுதியில் வெள்ளைத் திரை விலகியது.

''பூ..ர..ணீ... பூ..ர..ணீ...'' குரல் தொண்டையை விட்டு வெளியே வர மறுத்தது.

''பரத்... என்னைப் பாருங்க... கண்ணை திறந்து பாருங்க பரத். உங்க சுப்ரஜா பக்கத்திலேயே இருக்கேன். யூ ஆர் ஆல்ரைட் மை டியர். உங்களுக்கு ஒண்ணுமில்லே. பரத் கமான்... எதையாவது பேசுங்க!''

''பூ..ர..ணி... என் பூரணி எங்கே?''

சுப்ரஜாவின் முகம் நிறம் மாறியது.

''பரத்... இங்கே பாருங்க... பூரணியா? யார் அது? நான் உங்க சுப்ரஜா பரத்...! என்னை தெரியலே?''

''நீங்க யாரு?''

ஓரடி பின்னே நகர்ந்தாள். யாரோ மலையுச்சியில் இருந்து அவளை தள்ளி விட்டது போலிருந்தது.

''ப..ர..த்...! என்னைப் பார்த்தா யாருன்னு கேக்கறீங்க? மைகாட்! நா நான் சுப்ரஜா... உங்க சுப்ரஜா?''



''சுப்ரஜா? சாரி மேடம்... தெரியலை?''

''மேடமா? ஐயோ... என்ன கொடுமை இது? நிஜமாகவே என்னை உங்களுக்கு தெரியலையா பரத்? உங்களுக்கு என்ன ஆச்சு?''

''நோ... நான் பரத் இல்லே.. ஐயம் தினகரன்'' இப்போதுள்ள குழப்பத்தின் உந்துலால் தினகரனால் தெளிவாய் பேச முடிந்தது.

''ஓ!'' சுப்ரஜாவிற்கு புரிந்துப் போனது விபத்தில் அடிபட்ட அதிர்வில் தொலைந்து போன நினைவுகளை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறான்.

'என் எதிரில் நிற்கும் இந்தப் பெண் எதற்காக சம்பந்த மில்லாமல் ஏதேதோ பேசுகிறாள்? ஏன் இப்படி அழுகிறாள்? பேயறைந்தவள் போல் திகைத்துப் போய் நிற்கிறாள்? என்ன நடக்கிறது. என்னை சுற்றி? பூரணி எங்கே? ஆளே காணோம்? ஓ... நான் அவளை சென்னையில் விட்டு விட்டு பாம்பே வந்திருக்கேன் அல்லவா? ஆமாம்... கேசவன் எங்கே? அவனும் அடிபட்டு இங்கே இருக்கிறானா? இது எந்த இடம்? பார்க்க வீடு போல் உள்ளதே! தலையெல்லாம் கட்டுப் போட்டிருக்கிறது. ஏன் ஆஸ்பிடலில் சேர்க்காமல் யார் வீட்டிலோ படுக்க வைத்திருக்கிறார்கள்? யார் என்னை இங்கே அழைத்து வந்தது? இது யார் வீடு?'

கர்ச்சீப்பை வாயில் வைத்து விசும்பிக் கொண்டிருந்த அந்த பெண்ணை பார்க்க பார்க்க குழப்பம் அதிகரித்தது.

''ப்ளீஸ்... அழாதீங்க! எனக்கு ஒண்ணுமே புரியல. நான் எங்கேயிருக்கேன்? நீங்க யார்? சீக்கிரம் சொன்னீங்கன்னா நான் பூரணியை பார்க்க கிளம்பிடுவேன்.''

''பூரணி... பூரணின்னு யாரை கூப்பிடறீங்க?'' சுப்ரஜா அழுகையை நிறுத்தி ஆத்திரத்துடன் கேட்டாள்.

''என் உயிரை அழைக்கிறேன்.''

''உயிரா?''

''ஆம்... பூரணி என் மனைவி?''

ஒரு பெரிய இடி சுப்ரஜாவின் இதயத்தை குறி வைத்து தாக்கியது.

''மனைவி? மனைவியா? யூ மீன் வொய்ஃப்?''

''யெஸ்...''

''கல்யாணமானவனா?'' ஏமாற்றமும், அழுகையுமாய் முகத்தை பொத்தி கொண்டு அழுதாள்.

''நீங்க யாருன்னு சொல்லவேயில்லையே!'' தினகரன் மீண்டும் கேட்க... வேதனை கலந்த பார்வையோடு அவனை ஏறிட்டாள்.

''உங்க மனைவி!''

''எ...ன்...ன?''

''யெஸ்... நினைவு தப்பியிருந்த ஏழு வருஷமா? உங்களோட மனைவியா நான் வாழ்ந்தேன்.''

தேள் கொட்டியது தினகரனுக்கு.

''நோ...!'' எழ முயற்சித்தான். 'ஏழு வருஷமாவா?'

''டாடி... டாடி... ஹவ் ஆர் யூ டாடி? நாங்க ரொம்ப பயந்துட்டோம் டாடி. அம்மா பாவம் அழுதுகிட்டே இருந்தாங்க'' தினேசும், மகேசும் அவனருகே அமர்ந்து கழுத்தை கட்டிக் கொண்டனர்.

'யார் நீங்க?' என்று அவன் குழந்தைகளை பார்த்துக் கேட்டு விடப் போகிறானோ என்கிற பயத்தில் அவள் முந்திக் கொண்டு சொன்னாள்.

''நம்ம குழந்தைங்கதான்!''

''காட்!'' தலையை பிடித்துக் கொண்டான். தலை மட்டும் தனியே பம்பரம் சுழல்வது போல் இருந்தது.

''என்ன டாடி? தலை வலிக்குதா? தைலம் தேய்ச்சு விடட்டுமா?'' தெளிவான ஆங்கிலத்தில் பேசிய சிறுவர்களை நம்ப முடியாத அதிர்ச்சியோடு பார்த்தான் தினகரன்.



''மகேஷ், தினேஷ்... டாடிக்கு இப்ப ரெஸ்ட் தேவை... டிஸ்டர்ப் பண்ணக் கூடாது. போய் விளையாடுங்க.''

''ஓக்கே மம்மி! நல்லா ரெஸ்ட் எடுங்க டாடி!'' கன்னத்தில் ஆளுக்கொரு முத்தத்தை பதித்து விட்டு ஓடினார்கள்.

நான் தப்பு பண்ணிவிட்டேன். இவனைப் பற்றி முழுக்க தெரிந்துக் கொள்ளாமல், கல்யாணம் செய்து கொண்டு, குழந்தைகளையும் பெற்றுக் கொண்டு இப்போது என்ன செய்வது? ஒன்றுமே புரியவில்லையே! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... இவனின்றி நானில்லை.

மூன்றாவது உலகப் போர் தொடங்கி இருந்தால் கூட இந்தளவு காயங்களையும் வேதனைகளையும் ஏற்படுத்தியிருக்காது. ஆனால் விநாடி நேர பூகம்பம் மூன்று உயிர்களின் எதிர்காலத்தை அல்லவா விழுங்கி ஏப்பம் இட்டு விட்டது? இதில் மனித தவறென்று எதுவுமே இல்லையே! சுயநலமின்றி மனிதத்தன்மையுடன், லட்சிய இளைஞனாக பூரணிக்கு வாழ்க்கை தந்து எதிர்பாரா இயற்கை தாக்குதலால் நினைவிழந்து, சுப்ரஜாவின் மனம் கவர்ந்து பரத்தாக புதிய அவதாரம் எடுத்து அவளை மணந்து... இரண்டு குழந்தைகளுக்கு அப்பாவாய் உயர்ந்து இன்று மீண்டும் பழைய தினகரனாய் உருவெடுத்தவன் எதிரே ஏழு வருட காதல் வாழ்க்கை கானல் நீராய் மறைந்து போன மாபாதகம்தான் என்ன?

இயற்கையே... இனியாவது மனிதனின் வாழ்க்கையோடு விளையாடும் விளையாட்டிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடு.

ஒரு வாரம் கடந்தது.

தினகரன் எழுந்து நடமாடும் அளவிற்கு தேறினான். அந்த வீடே அந்நியமாய் தெரிந்தாலும்... தினேஷ் மகேஷிடம் தன்னைக் கண்டு குற்ற உணர்வில் துடித்தான். ஒவ்வொரு அறையிலும் இவன் தோளில் சாய்ந்து சிரித்தபடி, இவன் கழுத்தில் கைகளை மாலையாக போட்டு அணைத்தபடி என்று விதவிதமாய் இவனுடன் முகம் கொள்ளாத சிரிப்போடு சுப்ரஜா எடுத்துக் கொண்ட போட்டோக்களை பார்க்கும் போதெல்லாம் நா வறண்டு போகும்.

''என்ன மாமா இப்படி பண்ணிட்டீங்களே...?'' என்று பூரணி இவன் மனதில் விசுவரூபமெடுத்து கேள்வி கேட்டு துளைத்தாள்.

அவனால் குழந்தைகளிடம் கூட ஒரு விதத்தில் பிரியமாய் இருக்க முடிந்தது. ஆனால் எதையோ பறிகொடுத்து எதையோ எதிர்பார்க்கும் ஆவலோடு தன்னை பார்க்கும் சுப்ரஜாவின் முகத்தை மட்டும் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. தான் தவறு செய்து விட்டோமா?' என்று அவளை பார்க்கும் போதெல்லாம் அனலில் தூக்கிப் போட்ட புழுவாய் துடித்தான்.

அவள் செய்யும் சின்னச் சின்ன உதவிகளையும், பணிவிடைகளையும் கூட ஏற்றுக் கொள்ள முடியவில்லை. டைனிங் டேபிளில் அவள் பரிமாறும் முன்பே எடுத்து வைத்து சாப்பிட்டான். குளிக்க டவலையும், டிரஸ்சையும் அவள் எடுத்து கொடுக்கும் முன்பே இவன் எடுத்து கொண்டிருப்பான். ஏழெட்டு மணிவரை தூங்குபவன் இவள் தொட்டு எழுப்புகிறாளே என்கிற சங்கடம் தாக்க... விடியற்காலையிலேயே அலாரம் வைத்து எழுந்தான்.

சுப்ரஜா தனிமையில் அழாத நாளில்லை.

'இறைவா... ஏனிப்படி அருகில் வைத்தே தூரமாக்கி விடுகிறாய்? இந்த விளையாட்டிற்கு முடிவுதான் எப்போது? எனக்கு இந்த தினகரன் வேண்டாம். என் பரத்தை மீட்டுக் கொடு. பாழாய் போன பழைய நினைவுகளை ஏன் கொடுத்தாய்? என் வாழ்க்கையை குட்டி சுவராக்கினாய்?'

பழைய தெம்பும், உடம்பும் அவனிடம் வந்து சேர்ந்ததும் முதல் வேலையாக பம்பாய் புறப்பட்டான்.

கையில் சூட்கேஸோடு கிளம்பியவனை பீதியோடு பார்த்தாள் சுப்ரஜா!

'என்னை விட்டு விட்டு போகிறானோ?'

''எ... எங்கே கிளம்பறீங்க?'' குரலில் நடுக்கமும், சொல்லொணா துயரமும் போட்டி போட்டது. அந்த வேதனை தினகரனை கொஞ்சம் அசைத்து பார்த்தது.



'பாவம் இவள்! இவள்தான் என்ன செய்வாள்? ஒரு டாக்டராக இருந்தும், சாதாரண பெண் போல எனக்கு பணிவிடை செய்யும் இவள் அன்புதான் எத்தகையது?'

அவளையே சிறிது நேரம் பார்த்தவன் ''பாம்பே வரை போய் வருகிறேன்'' என்றான்.

''ஏன்?''

''ஏழு வருடங்களுக்கு முன், என் எதிர்காலத்தை தொலைப்பதற்கு முன் மிச்ச மீதி ஏதாவது மிஞ்சி இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். யார் மூலமாவது அறிந்து, என் பூரணி அங்கு கடிதம் போட்டிருக்கலாம் அல்லவா?''

அவன் எதிர்பார்ப்பே அபத்தமானது என்பது அவனுக்கே புரியத்தான் செய்தது.

''அவசியம் போகணுமா?''

''ம்...!''

''நானும் துணைக்கு வரட்டுமா?''

''நான் திரும்ப இங்கேதான் வருவேன். பயம் வேண்டாம்'' அவன் சாதாரணமாக சொன்னானோ, உள்ளர்த்தத்துடன் சொன்னானோ? ஆனால் அந்த பதில் சுப்ரஜாவை பதம் பார்த்தது.

முகமறியா பூரணி மேல் ஆத்திரமாய் வந்தது.

தினகரன் பம்பாய் வந்தான். தான் தங்கியிருந்த லாட்ஜில் விசாரித்துப் பார்த்தான். தன்னுடன் வேலை தேடி வந்த மற்றவர்கள் என்ன ஆனார்கள்? அந்த கேசவன் என்ன ஆனான்? உயிர் பிழைத்தானா, இல்லையா? பூரணியிடம் இருந்து கடிதம் வர சான்ஸே இல்லையென்றாலும் அந்த பதிலை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

உடனடியாக பூரணிக்கு தன் நிலை குறித்து விளக்கமாக கடிதமெழுதினான். சுப்ரஜா வீட்டு அட்ரஸைதான் அதில் குறிப்பிட்டிருந்தான்.

நாள்தோறும் தபால்காரனிடம் இருந்து கடிதம் எதிர்பார்த்து ஏமாந்தான். சுப்ரஜா அவன் எதிர்பார்ப்பு புரியாமல் கேட்டாள்.

''எதுக்காக போஸ்ட்மேனை எதிர்பார்க்கறீங்க?''

''முக்கியமான லெட்டர் வரணும்.''

''லெட்டர்? பிஸினஸ் மேட்டரா?''

''இல்லை... பெர்ஸனல்!''

''யாரிடம் இருந்து!''

''பூரணியிடம் இருந்து.''

''ஓ... அட்ரஸ் கிடைத்துவிட்டதா?'' என்றாள் ஏமாற்றமாய்.

''பழைய அட்ரசுக்குதான் லெட்டர் போட்டிருக்கேன். அவளுக்கு கிடைக்கும். கிடைச்சாகணும்... இல்லேன்னா...!'' சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொண்டான்.

''இல்லேன்னா? சொல்லுங்க! என்ன பண்ணப் போறீங்க? தற்கொலை பண்ணிப்பீங்களா? அப்படியே அவள் மீண்டும் உங்களுக்கு கிடைத்தால்... எங்களை என்ன பண்ணப் போறீங்க? நான் வெறும் அஞ்சாறு மாசம் மட்டும் குடும்பம் நடத்தியிருந்தாக் கூட விலகியிருப்பேன். ஆனா, ஏழு வருஷம், முழுசா ஏழு வருஷம் குடும்பம் நடத்தி ரெண்டு பிள்ளைங்களை பெத்து, வயித்துல ஒண்ணை சுமந்திட்டிருக்கேன். இதுக்கெல்லாம் என்ன பதிலை சொல்லப் போறீங்க?'' கீச்கீச் சென்று கத்தி அழுதாள் சுப்ரஜா.

பதில் சொல்லத் தெரியாமல் தலை குனிந்தான் தினகரன்.

''என்ன சொல்ல வருகிறாள் இவள்? அஞ்சாறு மாசம் என்னுடன் குடும்பம் நடத்திய பூரணியை விட ஏழு வருடம் தாம்பத்யம் நடத்திய இவளுக்குத்தான் உரிமையா? அப்படியானால் பூரணி?''

''ஐயோ... என் பூரணி! எங்கேம்மா இருக்கிறே? என்னை காணாமல் எப்படியெல்லாம் துடித்திருப்பாயோ? என்னை மட்டுமே நம்பி ஆற்றில் இறங்கிய பச்சைக் களிமண் ஆயிற்றே நீ! இந்நேரம் எந்த நிலையில் இருக்கிறாயோ?'



பூரணியைப் பற்றிய நினைவுகள் தந்த கணம் தாங்காமல் தான் ஆண் என்பதையும் மறந்து சிறுபிள்ளை போல் அழ ஆரம்பித்தான்.

சுப்ரஜாவிற்கு சப்த நாடியும் ஒடுங்கியது.

'பரத்... என் பரத்தா அழுவது? ஐயோ... இந்த கோலத்தில் பார்க்க என்னால் தாங்க முடியவில்லையே!' நடுங்கும் கைகளால் அவன் முகத்தை ஏந்திக் கொண்டாள்.

''ப்ளீஸ் டார்லிங்! டோன்ட் க்ரை... அழுவது ஆம்பிளைக்கு அழகல்ல. இப்படி அழுதால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது பரத்!''

அப்போதுதான் உணர்ந்தான். 'நானா அழுதேன்?' லேசாய் வெட்கமும் கோபமும் ஏற்பட தன்னையே நொந்து கொண்டான்.

''நான் சொல்றதை தயவு செஞ்சு நிதானமா கேட்கணும்!''

''என்ன?''

''நான் எப்படியாவது பூரணிய பார்த்தாகணும். உனக்குத் தெரியாது. அவ... அவ... சின்னக் குழந்தை மாதிரி. எதுவுமே தெரியாது. அதிகம் படிக்காதவ... இந்த ஏழு வருஷத்திலே அவ என்ன பாடுபட்டாளோ? இதையெல்லாம் நினைக்க... நினைக்க நெஞ்சே வெடிச்சிடும் போலிருக்கு. அவளை நான் பார்க்கணும். அதுக்கப்புறம் மீதிய பேசிக்கலாம். நா... நான் மெட்ராஸ் போகப் போறேன்.''

தூக்கி வாரிப் போட... கண்ணீருடன் நிமிர்ந்தாள் சுப்ரஜா.

'பூரணி மீண்டும் இவருக்கு கிடைத்து விட்டால்.. என் கதி? நோ... இவரை தனியே அனுப்புவது... என் கையால் நானே கண்ணை குத்திக் கொள்வது போல். இனிதான் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். எந்தவிதத்திலும் எதிர்ப்புணர்ச்சியை காட்டிக் கொள்ளக் கூடாது. இவனை விட்டு பிரியவே சந்தர்ப்பம் தரக் கூடாது. இவன் வழிக்கே போய்... விட்டு பிடிக்க வேண்டும்.'

சலனமின்றி அவனை நோக்கினாள்.

"போகலாம்... ஆனால் தனியே அல்ல. நானும் குழந்தைகளும் உங்களுடனே வருகிறோம். இங்குள்ள சொத்துக்களை விற்க ஏற்பாடு பணணுங்கள்."

இந்த மட்டுமாவது சம்மதித்தாளே... என்பதுடன் அந்த யோசனையும் சரியென பட... துரிதமாய் காரியத்தில் இறங்கினான்.

அடுத்த மாதம் மூட்டை முடிச்சுகளோடு சென்னையில் கால் பதித்தனர்.



## 13

"போம்மா... உங்கூட நான் பேசலை!" முகுந்த் அவளுக்கு முதுகை காட்டி நின்றான்.

"என் ராஜாவுக்கு என்மேல என்ன கோபம்?"

"மூச்... டுன்னா... டுதான். பேசக் கூடாது!"

"இதோப்பார் முகுந்த்! இப்படியெல்லாம் வீம்பு பண்ணினா அம்மா அழுதுடுவேன்" குரல் கம்மியது பூரணிக்கு.

சடாரென திரும்பினான் முகுந்த்.

"பின்னே என்னம்மா? இன்னைக்கு ஸ்கூல்ல ஆன்னுவல்டே! போட்டியெல்லாம் வெச்ச பிரைஸ் எல்லாம் குடுத்தாங்க. எல்லா பாடத்திலேயும் நான் பர்ஸ்ட்! மோனோ ஆக்டிங், ரன்னிங்ல கூட நான்தான் பர்ஸ்ட்."

"நிஜமாவா?" சந்தோஷத்தில் கண்கள் விரிய மகனை பார்த்தவளின் கண்களில் முகுந்த்தின் முழங்கை பட்டது. ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

"என்னப்பா ரத்தம்?" பதறிப் போனாள்.

"அதுவா? ஓடும் போது விழுந்துட்டேன்னா... தேஞ்சு ரத்தம் வந்திட்டது. அப்பக் கூட நான்தான் எழுந்து ஓடி முதல்ல வந்து ஜெயிச்சேன்!"



"வலிக்குதாப்பா?"

"அதை விடும்மா! இதோ பார்... எத்தனை கப் வாங்கி வந்திருக்கேன்!" அவனை அப்படியே வாரியணைத்து விம்மினாள் பூரணி.

"கண்ணா... இவ்வளவும் நீ வாங்கினதா? ஐய்யோ... உங்கப்பா இதை பார்த்தா எவ்ளோ சந்தோஷப்படுவார் தெரியுமா?"

முகுந்த்தின் பார்வை போட்டோவில் இருந்த தினகரனின் மீது போனது. அந்த பார்வையில் தெறித்த ஏக்கம், தவிப்பு, முகுந்த்திற்கு மட்டுமே தெரியும். அவன் எதையும் வெளிக்காட்டி கொள்ள மாட்டான்.

முகுந்த்திற்கு இப்போது ஏழு வயது! ஆனாலும் சிந்தனையில், நடத்தையில், பேச்சில் ஒரு முதிர்ச்சி இருந்தது.

நாள்தோறும் அம்மா அப்பா போட்டோவை பார்த்து கண்ணீர் சிந்தும் போதெல்லாம் அம்மாவைப் பார்க்க பரிதாபமாய் இருக்கும்.

அவன் படிக்கும் ஊனமுற்றோர் பள்ளியில் பிள்ளைகளோடு அவர்கள் பெற்றோர்களும் வந்திருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் போதெல்லாம் அந்த பிஞ்சு மனம் ஏங்கிப் போனது. இதேபோல் அம்மாவும், அப்பாவும் வரமாட்டார்களா? அவர்கள் கையை பற்றிக் கொண்டு நான் நடக்க மாட்டேனா?

அவன் அந்த ஏக்கத்தையெல்லாம் நெஞ்சிலேயே புதைத்துக் கொண்டான். ஒரு நாளும் அப்பாவைப் பற்றி அம்மாவிடம் கேட்டதில்லை.

'பாவம்... இன்னும் நொந்து போவாள். அப்படி எங்கேதான் போனார் இந்த அப்பா? சே... ரொம்ப மோசம்!'

"என்னடா அமைதியாய்ட்டே?" பூரணி முகுந்த்தின் தோளை பிடித்து உசுப்பினாள்.

''அ... எனக்கு எவ்ளோ கஷ்டமாயிடுச்சி தெரியுமா? எனக்கு ப்ரைஸ் குடுக்கும்போது எப்படி கைதட்டினாங்க தெரியுமா? எங்கே நீதான் வரலியே...''

''இல்லேப்பா... அம்மாவுக்கு மட்டும் அதையெல்லாம் பார்க்க ஆசையாய் இருக்காதா? பாருப்பா... அம்மா எப்படி இருக்கேன்? இந்த கோலத்தோட நான் அங்கே வர முடியுமா?''

பூரணியின் தலையெல்லாம் சிமெண்ட் கலவை ஏற்றி ஏற்றி... கருநாகம் போல் நீண்டிருந்த கூந்தல் இப்போது சாம்பல் பூத்து கிடந்தது கை, கால்களில் செதில் செதிலாய் சுண்ணாம்பு சேர்ந்த ஒரு படர்வு என்னதான் குளித்து சுத்தப்படுத்தினாலும், அந்த பழைய பளபளப்பும், அழகும் இனி வராத ஒன்று. இந்த கந்தல் கோலம் நிரந்தரமாய் தங்கி விட்டது.

''என்னடா கண்ணா அப்படி பாக்கறே?''

''உனக்கு என்னம்மா குறைச்சல்? இந்த மாதிரி அம்மா வேற யாருக்கு கிடைப்பாங்க? எனக்கு ஏதேதோ சொல்லிக் குடுக்கிறே... இப்படி இருக்கணும், அப்படி நடந்துக்கணும்னு. ஆனா நீ இப்படி பண்றது சரியா? உன்னைப் பத்தி நீயே ஏம்மா தாழ்த்திக்கறே?''

பேசுவது ஏழுவயது முகுந்த் மாதிரி தெரியவில்லை. தினகரனே எதிரில் நிற்பது போலிருந்தது.

''அடேயப்பா... பெரிய மனிதன் போல பேசறியே... என் கண்ணே பட்டுடும் போலிருக்குடா ராஜா!'' அவன் முகத்தை வழித்து திருஷ்டி சுற்றினாள்.

''நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்டா! உனக்கு என்ன வேணும் கேள். அம்மா வாங்கித் தரேன். சொல்லுப்பா... என்ன வேணும்?''

''நிச்சயமா வாங்கித் தருவியா?'' கண்களில் பளபளப்பு.

''கண்டிப்பா...!''

''ஒரு சின்ன சைக்கிளும்...''



''சைக்கிளா? ம்... அப்புறம்?''

''கோழிக்கறி பிரியாணியும்! வாங்கி தர்றியாம்மா... தினமும் ரசம் சோறும், இட்லியும் சாப்பிட்டு சாப்பிட்டு நாக்கு மரத்துப் போச்சம்மா! ஒரே... ஒரு நாள் மட்டும் பிரியாணி வாங்கித்தாம்மா! அப்புறம் கேட்கவே மாட்டேன்!''

பூரணி நெக்குருகிப் போனாள்.

'எப்படியெல்லாம் இருக்க வேண்டிய பிள்ளை? வாய்க்கு ருசியாய் ஒரு வேளை கூட சாப்பிட முடியாத தரித்திரத்தில் வாழ வேண்டிய துர்பாக்கியம் ஏன்? இவன் தாத்தா, பாட்டி எல்லாம் எவ்வளவு செல்வச் செழிப்பில் மிதப்பவர்கள்? படித்த அருமையான அப்பா! எல்லாரும் இருந்தும்... என் பிள்ளைக்கு எதுவும் கிட்டவில்லையே!' நெஞ்சை அடைத்துக் கொண்டது துக்கம்.

பூரணி சம்பாதிக்கும் பணம் மூன்று வேளை சாப்பிடவும், முகுந்த்தின் எதிர்காலத்திற்காக குருவி போல சேமிக்கவும், அவன் பள்ளி படிப்பிற்காக மாதத்திற்கு முன்னூறு ரூபாய் செலுத்தவுமே உன்னைப்பிடி, என்னைப்பிடி என்றிருந்தது. அப்படியிருக்க... கறிக்கும், முட்டைக்கும் எங்கே போவது?

பிள்ளை முதன் முதலில் ஆசைப்பட்டு கேட்கிறான். எப்பாடு பட்டாவது வாங்கி குடுத்தே ஆகணும்.

''வாங்கித் தர்றேன் கண்ணா... நிச்சயமா வாங்கித்தர்றேன். ஆனா, சைக்கிள் மட்டும் உன் பிறந்த நாளன்னைக்கு வாங்கித் தர்றேன். கொஞ்ச நாள் பொறுத்துக்கறியா?''

முகுந்த்தின் முகம் பூவாய் மலர்ந்தது.

சரியென பலமாய் தலையாட்டினான். அந்த நேரத்தில் கதவு தட்டப்பட்டது.

ராஜம்மாவாகத்தானிருக்கும். அரிசி வாங்கப் போனவள் திரும்பியிருப்பாள். கதவைத் திறக்க எழுந்தவளை தோள்பற்றி

அழுத்தி... ''நான் போறேம்மா.. ஆயாதான் வந்திருப்பா!'' என்றபடி கதவை நோக்கி நடந்தான்.

முகுந்த் இப்போது எவ்வளவோ தேவலை. ஆனாலும் நடக்கும் போது லேசாய் தத்தி தத்தி செல்வது போல் பாதம் முழுதாய் நிலத்தில் பதியவில்லை. அதற்கான பயிற்சி அளித்து வருகிறார்கள். விரைவில் எல்லோரையும் போல் சாதாரணமாய் நடந்து விடுவான் என்று பள்ளியில் நம்பிக்கை தெரிவித்து இருந்தார்கள்.

தலையில் சுத்தியால் அடிப்பது போல் வலித்தது கண்கள் சிவந்து எரிச்சலை தந்தது. காய்ச்சல் அனலாய் கொதித்தது. இரண்டு நாட்களாய் வேலைக்குப் போக முடியவில்லை.

''பூரணி... பூரணி...'' புஷ்பாவின் குரல் ஒலிக்க கண்களை திறந்தாள்.

''வா... புஷ்பா!''

''என்ன... இன்னும் காய்ச்சல் இறங்கலியா? நேத்துக்கூட கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போய் மாத்திரை வாங்கி தந்தேனே... போட்டியா?''

''சாப்பிட்டும்... இறங்கலை புஷ்பா!''

''அப்ப நான் போய்ட்டு வரேன். நேரமாச்சி... முத்தமிழ் நகர்ல ஒரு வீட்ல இன்னிக்கு கான்க்ரீட் சீலிங் போட்றாங்க. மேஸ்திரி சீக்கிரமா வரச் சொன்னார். உடம்பை பார்த்துக்க... நான் வர்றேன்.''

''இரு... இரு... போய்டாதே... நானும் வந்துடறேன்'' பாயை விட்டு எழுந்தாள் பூரணி.

''என்ன? வரப்போறியா? இந்த ஜுரத்திலா? விளையாடாதே பூரணி... சும்மா இல்லே... நாலாவது மாடிக்கு தளம் போடணும். செம டிரில் வாங்கிடும் வேலை உன்னால முடியாது!''

''அதுக்குப் பார்த்தா... பணம் கொஞ்சம் அதிகமா தருவாங்க இல்லே...?''



புஷ்பா அவளை பரிதாபமாய் பார்த்தாள். புஷ்பாவை விடவும் பூரணி சிறியவள் தான். ஆனால் வயதுக்கு மீறிய உழைப்பும், கவலையும் அவள் தோற்றத்தை சின்னா பின்னா படுத்திவிட்டிருந்தது. பத்து வயது கூடி தெரிந்தாள்.

புஷ்பாவின் கணவன் சென்ட்ரிங் வேலை செய்பவன். அதனால் அவளிடம் பணம் தாராளமாய் புழங்கும். சாப்பாட்டிற்கோ, துணிமணிகளுக்கோ பிரச்சினையின்றி வாழ்ந்து வந்ததால் பூரணியின் வறுமையும், கஷ்டங்களும் அவளுள் இரக்கத்தை உண்டு பண்ணியது.

''இப்போதைக்கு நான் கொஞ்சம் பணம் கடனா தரேன். அத வச்சு வீட்டு செலவை பார்த்துக்க. இந்த காய்ச்சல்ல வராதே பூரணி!''

''கடனாவா? வேணாம் புஷ்பா! அதெல்லாம் எனக்கு பெரிய பாரமா இருக்கும்!''

''பூரணி... புஷ்பா சொல்றதை கொஞ்சம் காது குடுத்து கேளும்மா. சரியா வயித்துக்கு சாப்பிடாம ரொம்ப களைச்சி போயிருக்கே... இப்ப வேலைக்கு போறது நல்லதில்லே'' ராஜம்மா பாசமுடன் சொன்னாள்.

''ஆயா... எனக்கு ஒண்ணுமில்லே! என் உடம்பு உறுதியாத்தான் இருக்கு பேச நேரமில்ல... கொஞ்சம் இரு புஷ்பம்... இதோ வந்துட்டேன்.''

மடமடவென பல்விளக்கி, ராஜம்மா தந்த டீயை குடித்துவிட்டு பள்ளிக்கு புறப்பட காத்திருந்த முகுந்தின் கன்னத்தில் முத்தமிட்டு புஷ்பா பின்னே நடந்தாள்.

கிட்டத்தட்ட இருபது முப்பது பேர் வேலை செய்துக் கொண்டிருந்தனர். சாரம் கட்டி, ஏணி வைத்து, சிமெண்ட் கலவையை தலையில் வாங்கி நாலாவது தளத்திற்கு கொட்டி பரப்பிக் கொண்டிருந்தார்கள். பூரணிக்கு கஷ்டமாகத் தானிருந்தது. கால்கள் தொய்ந்து போய் வலித்தது. ஜுரத்தை இன்னும்

அதிகப்படுத்தியது. ஆனால் அந்த வேதனைகளை எல்லாம் மீறி ஒரு ஆறுதல் வீட்டின் சொந்தக்காரர் நல்ல வசதி என்பதுடன் தாராள மனம். வேலை செய்பவர்களுக்கு தலைக்கு நூறு ரூபாய் என்பதுடன் அன்று பகலுக்கு பிரியாணி போட தயார் பண்ணியிருந்தார். சமையல் ஆள் வைத்து சமைத்துக் கொண்டிருந்த கமகம வாசனை பூரணிக்கு சுறுசுறுப்பை தந்தது.

முகுந்த் ஆசைப்பட்டு கேட்ட பிரியாணி!

பகலில் பரிமாறிய பிரியாணியை ஒரு பருக்கைக் கூட வாயில் போடாமல் பொட்டலமாய் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

நிற்க முடியவில்லை. தலை கிறுகிறுத்தது. கீழே பூமி அதல பாதாளமாய் தெரிந்தது. அவ்வளவு உயரத்திலிருந்து கீழே பார்க்க... பார்க்க மயக்கம் வருவது போலிருக்க... கண்கள் இருண்டன. பிடிமானம் தேடி அலைந்த கைகளுக்கு காற்று மட்டுமே சிக்க... பிடுங்கி போடப்பட்ட கோழி இறகாய் நாலாவது மாடியிலிருந்து விழுந்தாள் பூரணி!

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது அப்பட்டமான நிஜம்.

ராஜம்மா ஒரு வித நடுக்கத்தோடு முகுந்த்தை அணைத்தபடி நின்றிருந்தாள்.

''சாமி... எங்கம்மாவ காப்பாத்து... சாமி எங்கம்மாவ காப்பாத்து. எனக்கு எல்லாமே அம்மாதான். என்னை அனாதையா ஆக்கிடாதே! அப்புறம் நானும், ஆயாவும் அனாதையா ஆய்டுவோம். எங்கம்மா பாவம். அவங்கள உன்னோட கூட்டிட்டு போய்டாதே சாமி!'' முகுந்த் கண்கள் மூடி தனக்குள் உதடு பிரியாமல் வேண்டிக் கொண்டிருந்தான். அந்த வராண்டாவில் மேஸ்திரி வீட்டு சொந்தக்காரர், புஷ்பா அனைவரும் குழுமியிருந்தனர்.

ஆபரேஷன் அறையிலிருந்து வெளிப்பட்ட டாக்டர் வியர்வை முகத்தை கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டார்.



''டாக்டர்... என்ன ஆச்சு?'' வீட்டின் சொந்தக்காரர் ரகுபதி அருகே வந்தார்.

''காட்ஸ் க்ரேட்! நாலாவது மாடியிலிருந்து விழுந்தும் அதிர்ஷ்டவசமா உயிருக்கு ஆபத்தில்லே! கீழே கொட்டியிருந்த மணல்ல விழுந்திருக்காங்க. ஆனா, சாரம் மூங்கில் வயித்து பகுதியில பட்டு பலமா அடிபட்டிருக்கிறதால... கர்ப்பப்பை டேமேஜ் ஆயிருக்கு. அதை ரிமூவ் பண்ணிட்டதால... ஆறுமாசத்துக்கு எந்த கடினமான வேலையும் செய்யக்கூடாது. பழையபடி நடக்க சில மாதங்களாகும்!''

பூரணி உயிர் பிழைத்ததே போதும் என்று ஆண்டவனுக்கு நன்றி கூறினர் அனைவரும் மேஸ்திரியும், ரகுபதியும் கருணையுடன் கொடுத்த பணம் தான் பூரணியின் உடல் நலம் தேற கை கொடுத்தது.

வேலைக்கு போக முடியாத நிலையில் வீட்டில் முடங்கிப் போனாள் பூரணி. இருந்த கொஞ்ச சேமிப்பும் கரைய... பயந்து போனாள்.

அடுத்த மாதம் முகுந்த்திற்கு பீஸ் கட்டக் கூட பணமில்லை. என்ன செய்ய போகிறேன்? இரண்டு நாட்களாக ராஜம்மாவும் பூரணியும் கொலை பட்டினி. இருந்த கொஞ்ச பணத்தில் முகுந்திற்கு மட்டுமே டீயும் பன்னும் வாங்கி கொடுக்க முடிந்தது. இதையெல்லாம் காணப் பொறுக்காத ராஜம்மா ஒரு முடிவுக்கு வந்தாள்.

''பூரணி... நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். இனி உன் பேச்சை கேட்டுக்கிட்டிருக்க என்னால முடியாது.''

பூரணி அதிர்ச்சியோடு நோக்கினாள்.

'என்ன சொல்கிறாள்? ஒருவேளை இவளும் என்னை விட்டு போய்விட போகிறாளா?'

''என்ன ஆயா?''

''நானும் சித்தாள் வேலைக்குப் போகப் போறேன். புஷ்பாகிட்டே சொல்லிட்டேன். கூட்டிட்டு போறேன்னு சொல்லியிருக்கா!''

''ஆ..யா...!'' ஜீரணிக்க முடியாத நிலையில் விக்கித்துப் போனாள்.

''நீயா? அந்த வேலைக்கா? இந்த வயசிலேயா?''

''மனசுக்கும் வயசக்கும் சம்பந்தமில்லை பூரணி. நீ சொல்லுவியே... மனசு திடமாயிருந்தா... எதுவும் நம்மை ஒண்ணும் பண்ணிட முடியாதுன்னு. என் மனசிலேயும் உறுதி இருக்கும்மா! நீ நல்லா இருந்தப்பத்தான் என்னை இதுக்கு அனுமதிக்கலே... இப்பவும் மறுத்திடாதே தாயீ!''

''இல்லை... இதுக்கு என்னால சம்மதிக்க முடியாது. உன்னை ஆயாவா நினைக்கல... அம்மாவாதான் நினைக்கிறேன்.

இந்த வயசு... உன்னை உக்காரவச்சி சோறு போட்டு திருப்தி படுத்தற வயசு. கரணம் தப்பினா மரணம்ங்கற அந்த காசுல நான் நிம்மதியா உக்காந்து சாப்பிடுவேன்னு நினைக்கறியா?''

''நீ என்னை அம்மாவா நினைச்சிருந்தா... இப்படி பேசமாட்டே!'' ராஜம்மா விறைப்பாய் சுவற்றை பார்த்தாள்.

''அம்மாவா நினைக்கிறதாலதான் என்னால அனுமதிக்க முடியல. மூணு பிள்ளைங்க கிட்ட கிடைக்காத சந்தோஷமும், நிம்மதியும் என்கிட்ட கிடைக்குதுன்னு. நீ சொன்னப்ப... நான் பட்ட சந்தோஷம் எனக்கில்ல தெரியும்? அந்த சந்தோஷத்தையாவது எனக்கு மிச்சம் வை ஆயா!'' அவள் கைகளை பற்றி அழுதாள் பூரணி.

அவள் அழுவதை பொறுக்காத ராஜம்மா பூரணியை கட்டி அணைத்துக் கொண்டாள்.

''உன் மனசை கஷ்டப்படுத்தணும்னு நான் நினைக்கலம்மா... நம்ம முகுந்தை நினைச்சுப்பாரு. நாம பட்டினியா இருந்துடலாம்.



அந்த குழந்தை தாங்குமா? அவனோட எதிர்காலத்தை எண்ணிப்பாரும்மா!''

''யோசிச்சேன் ஆயா! இன்னும் அஞ்சாறு மாசம். அதுக்குள்ளே எனக்கு எல்லாம் சரியாய்டும். அதுவரைக்கும் வீட்லேயே இட்லி கடை வைக்கலாம். ஒரு நாளைக்கு பத்து இருபது கிடைச்சாக்கூட போதுமே!''

ராஜம்மா பெருமூச்சு விட்டாள்.

''ஆனாலும் உனக்கு இவ்ளோ வீம்பு ஆகாதுடியம்மா!''

பூரணி புன்னகைத்தாள்.

''இது வீம்பு இல்லே... தன்னம்பிக்கை என் புருஷன் எனக்கு குடுத்துட்டு போன பெரிய சொத்து. இது மட்டும் இல்லேன்னா... நான் இந்நேரம் மண்ணோடு மண்ணா போயிருப்பேன் ஆயா!''

ராஜம்மா பதில் பேசவில்லை. அவளிடம் உள்ள சிறந்த குணம் இது. பூரணி தினகரனைப் பற்றி பேசும் போதெல்லாம் அமைதியாய் கேட்டுக் கொள்வாள். அவன் மீது பூரணி கொண்டிருந்த அளவிடற்கரிய காதல்... தினகரனை ஒரு நல்ல மனிதனாகவே உருவகப்படுத்தியிருந்ததால்... தான் தப்பி தவறி எதையாவது பேசப் போக... அது இவள் மனதை குத்தி கிழித்து விடுமோ என்று அஞ்சினாள். அதனாலேயே அவள் வாய் திறப்பதில்லை.

ஆனால் ஒரே ஒரு முறை மட்டும் கேட்டாள்.

''ஏன் பூரணி? இந்த பட்டணத்துல கைக்குழந்தைய வச்சுக்கிட்டு சின்னப் பொண்ணு நீ கஷ்டப்படணுமா? ஊர் ஒதுக்கி வச்சாதான் என்ன? சாட்சிக்காரன் கால்ல விழறதை விட சண்டைக்காரன் கால்ல விழலாமே! இந்த ஊர்ல வயசு பொண்ணு தனியே வாழறதும், தலைகீழா நின்னு தண்ணி குடிக்கிறதும் ஒண்ணுதான். நீ ஊருக்குப் போய்டு. உன் மாமனார், மாமியார் கால்ல குழந்தைய போட்டு மன்னிப்புக் கேள். இந்த பிஞ்சு முகத்தை பார்த்துக் கூடவா மனசு இளகாது? என்னைக்காவது உன் புருஷன்

உன்னை தேடி வந்தாலும்... இங்கே இல்லேன்னதும் நேரே ஊருக்கு வந்து தானே பார்ப்பார்? போய்டேம்மா!''

தலையை பலமாக ஆட்டி மறுத்தாள்.

''நான் கல்யாணத்துக்கு முன்னாடி இருந்த அம்மாஞ்சி பூரணியா இருந்திருந்தா... இந்நேரம் போய் விழுந்து தான் இருப்பேன். ஆனா இப்ப நான் தினகரனோட மனைவி. அவர் இல்லாம தனியா நான் போய் நின்னா... ஊரு காறித் துப்புமே! என் மாமாவை ஏசுமே! தேவையா? அவரோட மானம் மரியாதைய விட என் உயிரு பெரிசா என்ன? இல்ல ஆயா! என்னைப் பொறுத்தவரை ஆயி, அப்பன், மாமா, அத்தை எல்லாமே என் மாமாதான். என்னைத் தேடி நிச்சயம் ஒருநாள் வருவார். அப்ப அவரை பத்தி நீயே புரிஞ்சிப்பே...''

''அந்த நாள் சீக்கிரம் வரணும்னு தான் நானும் ஊர்ல உள்ள தெய்வங்ககிட்டே எல்லாம் வேண்டிக்கிட்டிருக்கேன்!'' என்றாள் நெகிழ்வுடன் ராஜம்மா.

அது குடிசைப் பகுதி என்பதால் இவர்கள் சுட்டு விற்ற இட்லி, தோசைக்கு வரவேற்பிருந்தது. தினசரி இருபதுக்கு குறையாமல் வருமானம் கிடைத்தது. ஆனாலும் அந்த வருமானம் அவர்களுக்கு போதவில்லை. முகுந்தின் பள்ளி படிப்பிற்காக... அவன் ஆசைப்பட்டு கேட்ட சைக்கிள் வாங்க... இதற்கெல்லாம் வேறு வேலை மூலம் சம்பாதித்தால் தான் முடியும் என்கிற நிலை.

பூரணி யோசித்தாள். இப்போது ஓரளவு குணமாகி விட்டிருந்தாலும் வயிற்றில் சுருக்...சுருக் என்று ஆபரேஷன் பண்ணிய இடத்தில் ஊசிபோல் குத்தியது வலித்தது. சித்தாள் வேலைக்கு போக முடியாது. வீட்டிலிருந்தே எதையாவது செய்ய வேண்டும்.

என்ன செய்யலாம்?

பூரணிக்கு சிறிய வயதிலிருந்தே கை வேலைப்பாடுகளில் நல்ல திறமையுண்டு. விதவிதமான டிஸைன்களில் வயர் கூடைகள்,



மாடங்களுக்கு தொங்கவிட, வாசல்களுக்கு மாட்டிவிட, மணிகளும், கடல் சிப்பிகளும் சேர்த்து அலங்கார திரைச்சீலை போல் அழகழகாய் பின்னுவாள். அதை இப்போது பின்னினால்... நாலு காசு கிடைக்குமே! வீடு வீடாய் விற்கலாம். கடைகளில் போடலாம். நினைப்பே சந்தோஷத்தை தர... அடுத்த நாளே வயர்கள், மணிகள், ஜிகினாக்கள், சிப்பிகள் என்று வாங்கினாள். இட்லி கடை முடிந்த கையோடு இந்த வேலையில் இறங்கிவிடுவாள்.

ராஜம்மாவே ஆச்சரியப்பட்டு போனாள்.

''அடேயப்பா! எவ்வளவு அழகாய் இருக்கிறது. ஸ்டோர் கடைகளில் இதெல்லாம் நூறு ரூபாய்க்கு குறையாமல் கிடைக்காது. இத்தனை மலிவாய்... அழகாய் உள்ளதை யார் தான் வாங்க மறுப்பார்கள்?''

அவளுக்கும் ஆர்வம் ஏற்பட பூரணியிடம் அதன் நுணுக்கங்களை தெரிந்து கொண்டு... அவளும் தயாரிக்கத் தொடங்கினாள்.

பூரணி அதை வீதிவீதியாய் விற்று வரலானாள். லஷ்மியின் கடைக்கண் பார்வை அவள் பக்கம் விழுந்ததோ? வியாபாரம் பிய்த்துக் கொண்டு ஓடியது. அதுமட்டுமன்றி இரண்டு மூன்று கடைகளிலிருந்தும் ஆர்டர் வர... பூரித்து போனாள் பூரணி.

கைத்தொழில் கைகொடுக்க... பம்பரமாய் சுற்றி ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கத் தொடங்கினாள்.



## 14

''காபி...''

''அப்படி வச்சிட்டு போ!'' கண்களை நிமிர்த்தாமலேயே கைகள் பேப்பரை திருத்திக் கொண்டிருக்க வாய் மட்டும் திறந்தது.

சுப்ராஜா வேதனை பொங்க அவனைப் பார்த்துவிட்டு அகன்றாள். வயிறு பெருத்து... நிறை மாத கர்ப்பிணி என்பதை வெளிச்சம் போட்டு காட்டியது.

தினகரன் சென்னைக்கு வந்து மாதங்கள் ஓடியும் பூரணியை கண்டுபிடிக்க முடியவில்லை. சென்னையில் கால் பதித்த உடன் அவன் சென்ற முதல் இடம் பூரணியுடன் அவன் வசித்த வீட்டிற்குத்தான். அது இப்போது இரண்டு மூன்று கைகளுக்கு மாறி இருந்ததால்... இப்போதைய ஓனரான அந்தோணி சாமிக்கு பூரணி பற்றி தெரிந்திருக்க நியாயமில்லை.

தினகரன் சோர்ந்து விடவில்லை. தன் சொந்த ஊரின் போஸ்ட் மாஸ்டருக்கு எஸ்.டி.டி. மூலம் பேசினான்.

''பூரணி அங்கு வரவேயில்லை'' என்று திட்டவட்டமாக சொல்லி விட்டார்.

தினகரனுக்குள் வண்டு குடைந்தது.

'அதிகமாய் குறுகிய காலத்தில சம்பாதித்து... ஏன் லட்சியங்களை விரைந்து செயல்படுத்தி விடணும் என்பதற்காக நான் கொடுத்த பெரிய விலை என் பூரணியா?'

'கடவுளே... உன்னிடம் எப்படி யாசிப்பது என்று தெரிய வில்லை. ஆனால் நியாய தர்மத்தோடு நல்ல தீர்ப்பை சொல். ஒன்றும் அறியா அப்பாவி பூரணியை என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடு' அவன் இதயம் நாள்தோறும் இறைஞ்சியது.

சுப்ரஜா நுங்கப்பாக்கத்திலேயே விலைக்கு வந்த பெரிய பங்களாவை வாங்கினாள். விசாலமான அதன் ஒரு பகுதியை கிளீனிக்காக மாற்றி பணிபுரிந்தாள். அவள் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் பிஸினஸில் ஈடுபடாமல் தினா மனநிம்மதிக்காகவும், திருப்திக்காகவும் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிக்கு சேர்ந்திருந்தான் அந்த சூழலில் கொஞ்சம் வசந்தம் கிடைக்கவே செய்தது. தினேஷையும், மகேஷையும் அதே பள்ளியில் தான் சேர்த்திருந்தான். ஆனால், சுப்ரஜா மட்டும் நெருப்பின் மேல் நின்றிருப்பது போல உணர்ந்தாள்.

தினகரன் அவளிடம் அளந்து தான், அதுவும் அவசியமாக இருந்தால் மட்டுமே பேசுவான். படுக்கை கூட தனியே தான். பூரணி



தன்னிடமிருந்து விலக... இவளும் ஒரு காரணம் என்கிற நியாயமற்ற கோபம் அவனுள் வேரூன்றி விட்டது.

ஆருயிர் கணவன் தன் காற்றுப்பட்டால் கூட தோஷம் என்று நினைக்கும் அளவிற்கு மாற்றியது பூரணி தான் என்ற அபாண்டமான நினைப்பு சுப்ரஜாவுக்கு.

முகம் முழுக்க வழிந்தோடிய வியர்வையை வழித் தெறிந்தாள் பூரணி. இன்று ஆகஸ்ட் 27. நாளை முகுந்தின் பிறந்தநாள். அவள் ஆசைப்பட்டு கேட்ட சைக்கிளை வாங்கிக் கொடுக்க வேண்டிய பணம் சேர்ந்து விட்டிருந்தது. இந்த நுங்கம்பாக்கத்தில் ஒரு கடையிலிருந்து புதிதாய் ஆர்டர் வந்திருந்தது. அதுபற்றி விரிவாய் பேசி விட்டு போகவே வந்தாள். கடை அட்ரஸும் கையில் கொண்டு வர மறந்து வெயிலில் அலைந்து கொண்டிருந்தாள்.

சூரியனின் உக்கிர பார்வையில் தார்ச்சாலைகள் அனலாய் கொதித்தன. தொண்டை காய்ந்து போனது.

அந்நேரம்... ஒரு பெரிய பந்து அவள் தோள்பட்டையில் வந்து விழ... விர்ரென மின்சாரம் பாய்ந்த வலி! எங்கிருந்து வந்து விழுந்ததோ தெரியவில்லை. அந்த தெருவே வெறிச்சென இருந்தது.

தாகம் தொண்டையை கிழித்தது. யார் வீட்டிலாவது தண்ணீர் கேட்டு குடிக்கலாமா? அப்படியே அந்த கடையை பற்றியும் விசாரிக்கலாம்.

நடையை விரைவுப்படுத்தி எதிரே தென்பட்ட பெரிய பங்களாவின் முன் நின்றாள்

கேட் உட்புறமாய் தாழிடப்பட்டிருக்க... லேசாய் தட்டினாள்.

''கௌன்?'' என்று இந்தியில் கேட்டபடி தோட்டத்திலிருந்து ஓடிவந்தான் தினேஷ். அவன் பின்னாடியே மகேஷ்.

பூரணிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. தமிழில் சொன்னால் புரியுமா?

''முதல்ல கதவை திறப்பா! வீட்ல யாரும் பெரியவங்க இல்லையா?''

''க்யா?'' என்றான் மகேஷ். கதவை திறந்தபடி. அப்போது தான் பார்த்தான் அவள் கையில் கிரிக்கெட் பால் இருந்ததை. வீட்டு பின்பக்கம் விளையாடிக் கொண்டிருந்த பால் காணவில்லை என்று அங்கே தேடினால்...? இவளிடம் எப்படி வந்தது? தினேஷும் பார்த்து விழித்தான். இருவருக்கும் குழப்பம்.

பூரணி அப்போது தான் உற்றுப் பார்த்தாள்.

'அட... இந்த பையன்ங்க கிட்டத்தட்ட நம்ம முகுந்த் மாதிரியே இல்லை? அந்த கண், மூக்கு, தலைமுடி, மோவாய், பற்களின் அமைப்பு... எல்லாமே! என்ன ஒரே வித்தியாசம். முகுந்தை விட இவர்கள் நல்ல நிறம், பால்வெள்ளை, வில்லிருந்து விடுபட்ட அம்பாய் அவர்கள் ஓடிவந்த அழகு. அதேபோல் என் முகுந்தும் ஓடி விளையாடும் காலம் வெகுதூரமில்லை.

பாசமிகுதியோடும், ஆச்சர்யமும், ஆவலுமாய் அவர்கள் கன்னத்தை கிள்ளி முத்தமிட்டாள்.

''உங்க பேரு என்னப்பா?''

''மகேஷ்! தும் ஆஜாவோ... யே பச்சா பகட்னே வாலா ஹை! காலாஸே ஹை செஹரா... குரூரி ஹைஸ தௌட்கர் ஆஜா! மாஜிக்கே பாஸ் போல் சக்தேஹோ!''

(மகேஷ் வந்துடு! இவ பிள்ளை பிடிக்கிறவ. மூஞ்சிய பார் கருப்பா... பயங்கரமா... ஓடிவந்துடு. அம்மாகிட்டே போய் சொல்லலாம்)

மறுகணம் தினேஷின் கையை பிடித்துக் கொண்டு ஓடினான் மகேஷ்.

அவர்கள் பேசிக் கொண்டதே சத்தமாய் புரியவில்லை. ஆனால், அந்த பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவும் அவளை கவர்ந்திருந்தது.



சிறிது நேரத்தில் சுப்ரஜா கடுகடுப்புடன் வந்தாள். இன்று ஞாயிற்று கிழமை. அதுமட்டுமல்லாது நாளை அவளின் திருமணநாள். இப்போதுதான் தினகரன் அவளிடம் நெருங்கி வர ஆரம்பித்திருக்கிறான். அந்த சந்தோஷத்தை விமரிசையாக நாளைய திருமண நாளோடு சேர்த்து கொண்டாட... விதவிதமாய் தானே சமைத்து அடுக்கி கொண்டிருந்தாள். அந்த நேரம் பார்த்து பிள்ளைகள் திமுதிமுவென்று ஓடிவந்து, ''யாரோ ஒரு பொம்பளை... பார்க்க பிள்ளை பிடிக்கிறவ மாதிரி இருக்கா. எங்க கிரிக்கெட் பாலை திருடி வச்சுக்கிட்டு... எங்களை பிடிச்சி முத்தம் குடுக்கிறா. நீ வந்து பார் மம்மி! டாடி எங்கே? அவரையும் கூப்பிடு!'' என்றனர்.

''டாடி வேணாம். அவர் பிஸியா இருக்கார். நான் வர்றேன் வாங்க!'' என்று கேஸை அணைத்து சமையலை பாதியில் நிறுத்திவிட்டு வந்தாள்.

''ஏய் யார் நீ? என்ன வேணும்? எதுக்காக பிள்ளைகளுக்கு முத்தம் கொடுத்த?'' வந்ததும் வராததுமாய் சுப்ரஜா கடுகுபோல் வெடிக்க திகைத்துப் போனாள் பூரணி.

ஏனோ, பார்த்த முதல் பார்வையிலேயே பூரணியை எதிரிபோல் நினைக்கத் தோன்றியது. எரிச்சல் பட வைத்தது. ஆனால் பூரணி, 'மல்லிப்பூ மாதிரி... வெள்ளை வெளேர்னு இவ்வளவு அழகா?' என்று வாய் பிளந்து நின்றிருந்தாள்.

''ஏய் கேக்கறேன்ல? யார் நீ? அகப்பட்டதை சுருட்டிக் கிட்டு ஓடலாம்னு வந்தியா?'' தமிழ் சத்தமாய் வந்தது.

''ஐயய்யோ... அம்மா... அவசரப்பட்டு தப்பான முடிவுக்கு வந்துடாதீங்க! நான் ஒரு அட்ரஸை தேடி வந்தேன். தாகமா இருந்துச்சு. கொஞ்சம் தண்ணி கேட்டு குடிக்கலாம்னு வந்தேன். பிள்ளைங்க... அழகா, துருதுருன்னு இருந்ததைப் பார்த்து கன்னத்தை கிள்ளி முத்தம் குடுத்தேன்!''

''சரி... சரி... கிளம்பு!''

''அம்மா... குடிக்க கொஞ்சம் தண்ணி தர்றீங்களா?''

''தலைக்கு மேலே வேலை இருக்கு. வேற யார் வீட்லேயாவது வாங்கி குடிச்சிக்க... ஜாவ்... ஜாவ்!''

பூரணி சுப்ரஜாவை விநோதமாய் பார்த்தாள்.

'ஆள் பார்க்க கொள்ளை அழகு! வீடோ மாளிகை மாதிரி. ஆனா மனசு மட்டும் ஏன் சிறுத்துப் போயிருக்கு?'

''ஐஸே... கெட் அவுட்! உன்னை போன்னு சொல்லி ரொம்ப நேரமாகுது!'' கோபத்தில் முகம் சிவந்தது. அப்படி இறைந்து கத்தியதால் சுப்ரஜாவிற்கு மூச்சு வாங்கியது.

''பாவம்... பிள்ளைதாய்ச்சிப் பெண். ஏதோ மனசு கஷ்டத்தில் இருக்கிறாள். இந்த நேரத்தில் நானும் தொல்லை கொடுக்கிறேனே...'' உருகிப் போனாள்.

''தொந்தரவுக்கு மன்னியுங்க... நான் வர்றேம்மா!'' என்றவள் திரும்பி நடந்தாள்.

உள்ளே வந்த சுப்ரஜாவிடம் ''யார் வெளியே? ரொம்ப கத்திக்கிட்டிருந்தே போலிருக்கே?'' என்றான் தினகரன்.

''ஒண்ணுமில்லை... வரவர பிச்சைக்காரங்க தொல்லை தாங்க முடியல!''

களைப்பில் ஆடி அசைந்து மெதுவாய் நடந்துக் கொண்டிருந்த பூரணியை பார்க்க பார்க்க கோபமாய் வந்தது. தினேஷிற்கும், மகேஷிற்கும்! சட்டென்று ஒரு கருங்கல்லை எடுத்து அவளை நோக்கி எறிந்து விட்டு மரத்துக்குப் பின்னே மறைந்து கொண்டான் தினேஷ்.

எதிர்பார்க்காத தருணத்தில் விர்ரென்று பறந்து வந்த கல் அவள் நெற்றியை பதம் பார்த்தது.

''அம்மா...'' என்று முனகியபடி தலையை பிடித்துக் கொண்டாள். குபுகுபுமென்று ரத்தம் கொட்ட... வேதனை தாங்காமல் துடித்துப் போனாள். திரும்பிப் பார்த்தவள் கண்களுக்கு மரத்துக்குப் பின்னே மறைந்த தினேஷ் கண்ணில் பட்டான். மெல்ல



நடந்து பக்கத்திலிருந்த பம்ப்பில் தண்ணியடித்து ரத்தத்தை கழுவினாள்.

மகேஷ் திபுதிபுவென உள்ளே ஓடினான். எதிர்ப்பட்ட தினகரன் மேல் மோதி நின்றான்.

''என்னடா, இப்படி ஓடி வர்றே?''

''டாடி... டாடி... தினேஷ் இல்லே... அந்த பிள்ளை பிடிக்கிறவ மேல கல்லெறிஞ்சிட்டான். அவளுக்கு ரத்தமா கொட்டுது!''

தினகரன் துணுக்குற்றான்.

''நான்சென்ஸ்... அவனை வந்து கவனிச்சிக்கிறேன். அந்த லேடி எங்கேயிருக்கா!''

''நம்ம தெருவில தான்!''

''சரி...! நீ உள்ளே போய் மம்மிகிட்டே சொல்லி ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்து வைக்கச் சொல்லு. நான் அவளை அழைச்சிட்டு வர்றேன்!'' வெளியில் வந்தான்.

தண்ணியால் கழுவ... கழுவ... ரத்தம் பாட்டுக்கு சுரந்து கொண்டே தானிருந்தது. தினகரன் அவளுக்கு பின்னே வந்து நின்றான்.

''அடி பலமா பட்ருச்சா?''

''இந்தக் குரல்... இந்தக் குரல்?'' உணர்வுகள் மொத்தமும் குலுக்க சடாரென திரும்பினாள்.

எதிரே நின்ற தினகரனின் உருவம், பீறிட்ட அவள் கண்ணீரில் கலங்கலாய் தெரிந்தது.

'மாமா தானா? என் மாமாவே தானா? கடவுள் கண்ணை திறந்து விட்டாரா?'

தினகரனுக்கு சட்டென்று தெரியவில்லை.

''மா... மா... நீ... நீங்களா?'' பூரணியின் உதடு துடித்தது.

தினகரனால் நம்ப முடியவில்லை. உடம்பெல்லாம் சிலிர்த்து மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

'சந்தல் கோலமாய், கறுத்து, மெலிந்து, கன்னத்தில் எலும்பு துருத்திக் கொண்டு முகமெல்லாம் ரத்தம் வழிய... இவளா என் பூரணி? என்ன கோலம் இது?' இதயமெல்லாம் உருகி வாய் வழியே வெளிப்பட்டது.

''பூ... ர... ணி!''

''மா... மா!''

''என்னம்மா இப்படியாய்ட்டே...?''

''மா... மா!''

பூரணியால் வேறெதையும் பேச முடியவில்லை.

பிரிந்தவர் மீண்டும் ஒன்று சேர்ந்தால்... அழுதால் கொஞ்சம் நிம்மதி.

அதே போல் அவர்களிடையே எந்த பேச்சும் வரவில்லை. கண்ணீர் மட்டுமே கடந்து போன காலத்தின் கோலத்தையும், விசாரிப்புக்களையும் வெளிப்படுத்தி கொண்டிருந்தது.

கணவனின் மார் மீது விழுந்து புரண்டு அழவேண்டும் போலிருந்தது. அவனுக்கும் அவள் தோள் மீது சாய்ந்து துக்கத்தை காற்றில் கரைத்து விடவேண்டும் என்ற ஆவலிருந்தது. ஆனால், இருவருமே அது தெரு என்பதால் அன்பிற்கு அணை போட்டனர்.

''எப்படியிருக்கீங்க மாமா?''

''நீ எப்படிம்மா இருக்கே?''

''நா... நான் நல்லா இருக்கேன் மாமா!''

''ஏம்மா... இப்படியாய்ட்டே?''

''இனிமே... நல்லாய்டுவேன்! கண்களை துடைத்துக் கொண்டாள்.



'இனி என்ன குறை எனக்கு?' நான் தேடிக் கொண்டிருந்த பொக்கிஷம் கிடைத்து விட்டது. இனி முருந்த் ஸ்கூல்ல நடக்கும் விழாக்களுக்கு இவரோடு கைகோர்த்து போய் விடமாட்டேனா? என் மாமா எவ்வளவு அழகாய் இருக்கிறார்? சிவப்பாய், சதை பிடிப்பாய், சினிமா நடிகர் போல் எத்தனை அழகு? நான் தான் இவருக்கு பொருத்தமேயில்லாமல் குரங்கு மாதிரி ஆய்ட்டேன்! லேசாய் அந்த சூழ்நிலையிலும் வெட்கம் வந்தது.

''என்னை விட்டுட்டு எங்கே போய்ட்டீங்க மாமா? நான் உங்களை காணாம இந்த ஏழு வருஷமா... ரொம்ப துடிச்சு போய்ட்டேன்!'' தொண்டை கமறியது.

எதைச் சொல்வேன்? என்னவென்று சொல்வேன்? நெஞ்சை அடைத்துக் கொண்டது துக்கம்.

''உன்கிட்ட நிறைய பேசணும் பூரணி! வா... வீட்ல போய் பேசலாம்!''

''வீட்டுக்கா?'' புருவம் மேலேறியது.

''இ... இதோ... இருக்குப்பார்... இந்த வீடுதான். ரத்தம் அதிகமா கொட்டுது. மொதல்ல ஃபர்ஸ்ட் எய்ட் தரேன்... வா!'' அவன் வீட்டை சுட்டிக் காட்ட இன்னும் குழம்பிப் போனாள்.

''இந்த வீடா?'' அவன் பின்னே ஆட்டுக்குட்டியாய் பின் தொடர்ந்தாள்.

அந்த வீட்டில் கால் வைத்ததும் ஏனோ நடுங்கியது. தலை சுற்ற வராண்டாவில் அமர்ந்துக் கொண்டாள்.

'அந்தப் பெண்? அந்த குழந்தைகள்? இவர்களெல்லாம் இவருக்கு என்ன உறவு?' பலமாய் அறைந்த இதயத்தை கட்டுப்படுத்த இயலாமல் அந்த அறையை சுற்று முற்றும் பார்த்தவளின் இதயம் சில கணங்கள் அசையாமல் நின்றது.

சுவற்றில் சுப்ரஜாவும், தினகரனும் கழுத்தில் மாலையோடு! பாலைவனத்தில் விழுந்த மழைத்துளியாய் சட்டென அவள் சந்தோஷம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது.

தினகரன் அவள் நெற்றிக்கு கட்டு போட்டுக் கொண்டே குற்ற உணர்வோடு, நடந்ததெல்லாம் நிதானமாய் சொல்லிக் கொண்டே வர... எந்தவித சலனமும் பூரணியினுள் இல்லை.

"இதெல்லாம் என் தவறில்லை பூரணி! சத்தியமாய் உனக்கு துரோகம் செய்யும் எண்ணம் எனக்கில்லை. நான் உன்னை எந்தளவு நேசிக்கிறேன் என்று எனக்குத் தான் தெரியும். ஒரு விநாடியும் உன்னை நான் மறக்கவில்லை. உன்னை பிரிந்து நான் துடித்த துடிப்பு... அதை வார்த்தையால் சொல்ல முடியாது பூரணி! இனி உன்னை நான் ஒரு நிமிஷம் கூடப் பிரிய மாட்டேன் பூரணி... பிரியவே மாட்டேன்!" பூரணியின் கைகளை பற்றி நெஞ்சில் வைத்து விம்மினான் தினகரன்.

உருகிப் போனாள் பூரணி. கூடை கூடையாய் அவள் மேல் ரோஜாப் பூக்களை கொட்டி அபிஷேகம் செய்தது போல் இருக்க ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

இயற்கை செய்த சதிக்கு என் மாமா பொறுப்பில்லை. இதோ... இப்போதும் கூட தான் செய்யாத தவறுக்கு சின்னக் குழந்தை போல் அழுகிறாரே! ஏன்? என் மீதுள்ள அழியா நேசத்தினால் தானே? என் கணவர் எனக்கு துரோகம் செய்யவில்லை. என்னை நினைத்து காணாமல், தேடி அலைந்து உருகி கொண்டிருந்திருக்கிறார். எனக்கு இதைவிட வேறென்ன வேண்டும்? மகிழ்ச்சியும் அழுகையும் போட்டி போட... அங்கு உணர்ச்சிகள் கரை புரண்டுக் கொண்டிருந்தன.

"அழாதீங்க மாமா! இதில் எதுவும் உங்க தப்பில்லே. உங்களை என்னால புரிஞ்சிக்க முடியுது. நடந்ததையெல்லாம் கெட்ட சொப்பனமா நினைச்சு மறப்போம். இனி நாம சந்தோஷமா இருப்போம்!"

"தாங்க்ஸ் பூரணி! என்னை நீ நல்லா புரிஞ்சிக்கிட்டதுக்கு! இத்தனை வருஷமா நீ எங்கே, என்ன பண்ணிட்டிருந்தே பூரணி?"



"சொல்றேன் மாமா! உங்க பூரணி... எந்த பிடிமானமும் இல்லாம... எப்படி கரை சேர்ந்தாங்கறதை விவரமா சொல்றேன். அதுக்கு முன்னால முக்கியமா தெரிஞ்சிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கு மாமா! முகுந்த்... நம்மளோட..." பூரணி திடீரென்று பேச்சை நிறுத்தினாள்.

காரணம் விசும்பும் சத்தம்.

திடுக்கிட்டு நிமிர்ந்தனர் பூரணியும், தினகரனும்.

சுப்ரஜா அறைவாயிலில் கண்ணீரோடு நின்றிருந்தாள். அவள் பூர்ணியை பார்த்த பார்வையில் டன்டன்னாய் வெறுப்பு வழிந்தது.

தினகரன் அவளருகே சென்றான்.

"சுப்ரஜா... இவள் யார் தெரியுதா? என் பூரணி! தொலைஞ்சு போன என் உயிர் திரும்ப என்கிட்ட வந்து சேர்ந்துடுச்சு சுப்ரஜா. என் பூரணி எனக்கு கிடைச்சிட்டா!" குரலில் வானைத் தொட்ட சந்தோஷம்.

அவ்வளவுதான்... வீறிட்டு அழ ஆரம்பித்தாள் சுப்ரஜா.

"என் பூரணி... என் பூரணின்னு மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்றீங்களே... அப்ப நான் யார்? இத்தனை வருஷம் குடும்பம் நடத்தி குழந்தைகளை பெத்துப் போட்டேனே! எனக்கென்ன பெயர்? முஜே தும் க்யா கர்ணா... ஜாதே ஹோ? ஜவாப் போலோ? என்னை என்ன பண்ணப் போறீங்க? டெல் மீ!" சுப்ரஜா அடித்தொண்டையில் கத்தினாள். விழிகள் விரிந்து கனல்களை கக்கின.

பூரணி திறந்த வாய் மூடவில்லை.

நிறைமாத கர்ப்பிணி, அதுவும் ஒரு டாக்டர். இப்படி அழுது துடிப்பாள் என்பது அவள் எதிர்பாராத ஒன்று. இதற்கு காரணம்... அவள் தினகரன் மேல் கொண்டுள்ள காதல்.

"சுப்ரஜா... ப்ளீஸ்... காம் டவுன்! பூரணி நொந்து போய் வந்திருக்கா... வார்த்தையால் அவளை நோகடிக்காதே!"

''யாரைப் பத்தியும் எனக்கு அக்கறையில்லை. நானா... அவளா? இப்பவே முடிவெடுங்க. ஆனா, ஒண்ணு மட்டும் நிச்சயம் உங்களை பிரிஞ்சி என்னால வாழ முடியாது. என்னை நீங்க உயிரோடு பார்க்கவே முடியாது. சத்தியமா பாக்கவே முடியாது! ஐ வான்ட் யூ! நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம்'' ஆவேசமாய் கத்திவிட்டு மாடிப்படிகளில் ஏறி ஓடினாள்.

விக்கித்து போனான் தினகரன்.

பூரணி அருகில் வந்து அவன் கரங்களை பற்றி கண்களில் ஒற்றினாள்.

''மாமா... பாவம் அவங்க... பதறிப்போய், பயந்து போய் இருக்காங்க. முதல்ல அவங்கள போய் சமாதானப் படுத்துங்க! நான் வர்றேன்!''

''நீ எங்கே போறே பூரணி?'' அவன் கண்களில் கலக்கம் கை பிடி இறுகியது.

புன்னகைத்தாள்.

''உங்களை விட்டு எங்கேயும் போயிட மாட்டேன் மாமா! நானா நெனச்சாக்கூட உங்க இதயத்தில் இருந்து என்னால விலக முடியாது. நாளைக்கு பேசிக்கலாம். இப்ப நான் இங்கே இருக்கிறது சரியில்லை மாமா!'' என்றவள் அவன் எதிர்பாராத நேரத்தில் காலைத் தொட்டு வணங்கிவிட்டு வெளியேறினாள்.

தினகரனால் எதையும் செய்ய முடியவில்லை.

ரத்தம் கசிய தெருவில் இறங்கிப் போய்க் கொண்டிருந்த பூரணியை அழைப்பதா... மாடியில் தாழ் போட்டுக் கதறி கொண்டிருக்கும் சுப்ரஜாவை தேற்றுவதா?

மதில் மேல் பூனை! இரு பக்கமும் பால்!





# 15

எழுதியதை மறுபடியும் படித்துப் பார்த்தாள் பூரணி!

''என்னுயிர் மாமாவுக்கு!

உங்கள் பூரணி எழுதுவது. இந்தக் கடிதத்தை தெளிவான மனதுடன் நியாயம் எது என உணர்ந்து எழுதுகிறேன்.

என் மாமாவை காண மாட்டேனா? என்று ஊசிமேல் தவமிருந்த எனக்கு இன்று தான் ஆண்டவன் கண் திறந்தான். இந்த சாதகப் பட்சிக்கு இன்றுதான் விமோசனம் கிடைத்தது.

மாமா... சில விஷயங்களை மனிதர்கள் உருவாக்கலாம். ஆனால் நடப்பதென்னவோ, தெய்வத்தின் விதிப்படிதான். எதெல்லாம் நடக்கக் கூடாதோ... அதெல்லாம் நடந்து விட்டது. நேற்றைய நாளை இன்று நம்மால் எப்படி மீட்டுத் தரமுடியாதோ... அதுபோல் தான் கடந்து போன சம்பவங்களை நம்மால் அழிக்க முடியாததும்.

உங்கள் அன்பு மாறாதது... அழிவில்லாதது... அது எனக்குத் தெரியும். பூரணி இன்றும், என்றும் உங்கள் உயிரில் கலந்திருப்பாள். அந்த சந்தோஷம் போதும் எனக்கு. அதுவே யானை பலம் மாதிரி உலகை கட்டி ஆண்டு விட மாட்டேனா என்ன?

சுப்ரஜா அழகான பெண். அன்பான பெண். உங்களின் குழந்தைகளுக்கு தாய் எல்லாவற்றையும் விட இத்தனை ஆண்டுகளாய் உங்களுடன் தாம்பத்யம் நடத்தியவள். ஆறுமாதம் வாழ்ந்த எனக்கே உங்கள் பிரிவு வாட்டும்போது... ஏழாண்டுகள் வாழ்ந்து கண்ணெதிரே எனக்கு உங்களை தாரை வார்க்க யாருக்குத்தான் மனம் வரும்? இவ்வளவு காலம்

உங்களை பிரிந்து என்னால் உயிரோடு இருக்க முடிந்தது. சுப்ரஜாவினால் இருக்க முடியாது மாமா! கொஞ்ச காலம் என்றாலும்... நிறைவாய் வாழ்ந்திருக்கிறேன். அந்த சந்தோஷத்தை கொஞ்சம் கொஞ்சமாய் அசைபோட்டு வாழவே நூறாண்டுகள் வேண்டும் எனக்கு. அதனால், மனிதாபிமானத்தோடு இந்த முடிவை எடுக்கிறேன். நான் உங்களை விட்டுப் போகிறேன். தனியே அல்ல! நம் குழந்தை முகுந்தோடு! ஆம்... ஏழு வயதில் உங்கள் அன்புச் சின்னம் வளர்ந்து... என்னுடன் துணையோடு வருகிறான். இதை நான் நேரில் சொல்ல அவகாசம் கிடைக்கவில்லை. நம் குழந்தையை இப்போது உங்களிடம் காட்டாததற்கு மன்னியுங்கள். வாழ்க்கை ஒருத்தர் கொடுத்து மற்றவர் வாழ்வதல்ல. அது ஆண்டவன் போடும் முடிச்சு.

நான் மறுபடியும் உங்களை சந்திப்பேன். நம் மகனை நீங்கள் விரும்பியது போல் படிக்க வைத்து, ஒரு நல்ல நிலைக்கு உயர்த்தி நீங்களே மெச்சும்படி உங்கள் முன் நிறுத்துவேன். அதுவரை நீங்கள் என்னைத் தேட வேண்டாம். என் பேச்சிற்கு மதிப்பளிக்கும் மனப் பக்குவம் உங்களுக்கு உண்டு. சுப்ரஜாவை சந்தோஷமாக வைத்திருங்கள். காலங்கள் கரையட்டும். வயோதிகம் நிச்சயம் மனதை மாற்றும். அப்போது எனக்கு சுப்ரஜா தோள் கொடுப்பாள். அந்த காலம் வராமல் போகாது. அதுவரை எட்டியிருந்தே... உங்கள் சந்தோஷத்தில் பகிர்வு கொள்கிறேன். நாம் மறுபடியும் சந்திக்கும் வசந்த காலத்திற்காக... இன்றிருந்தே காத்திருக்க தொடங்கி விட்டேன். அந்த எதிர்பார்ப்பு தான் எனக்கு டானிக். நான் நினைத்தவைகளை நிறைவேற்றத் தூண்டும் கிரியா ஊக்கி!



அதுவரை உங்கள் நினைவுகளை என் உயிரில் சுமந்து மீண்டும் சந்திக்க காத்துக் கொண்டிருப்பேன். விடை கொடுங்கள் மாமா!

இப்படிக்கு...

உங்கள் பூரணி!

கடிதத்தை மடித்து உறையிலிட்டு... மீண்டும் அந்த வீட்டிற்கு சென்றாள். மரங்களிடையே நிசப்தமாய் உறங்கிக் கொண்டிருந்தது பங்களா. இந்த நிம்மதி நீடிக்கட்டும் என்று மனதார வேண்டிக் கொண்டு அந்த கடிதத்தை கேட்டில் செருகப்பட்டிருந்த லெட்டர் பாக்ஸில் போட்டாள். நிச்சயம் காலையில் எடுத்து படிப்பார்கள்.

தூங்கிக் கொண்டிருந்த ராஜம்மாவை எழுப்பினாள்.

''நாம இந்த இடத்தை விட்டு... வேறெங்காவது கொஞ்ச தூரமா போய்டணும் ஆயா!''

''அப்படி என்ன தாயீ நடந்தது?''

''நீ உன் பிள்ளைகளை விட்டு ஏன் பிரிஞ்சி வந்தே?''

இப்போது எதற்கு இந்த கேள்வி? என்ற தினுசில் பார்த்தாள் ராஜம்மா!

''சொல்லு ஆயா...''

''அவங்களுக்கு இடைஞ்சலா இருக்கக் கூடாதுன்னு.''

''அதே தான்... அதே காரணத்துக்காகத்தான் இப்ப நாம் கிளம்பறதும், தேன் கூட்டில் கல்லெறிஞ்சி கலைக்க நான் விரும்பல ஆயா! வேற எதையும் இப்ப என்னை கேட்காதே! நானே எல்லாத்தையும் ஒரு நாளைக்கு சொல்வேன்... கிளம்பு!''

ராஜம்மா குழப்பத்தோடு அவளை பார்த்துவிட்டு, சாமான்களை மூட்டை கட்ட ஆரம்பித்தாள்.

வாய் பிளந்து உறங்கும் முகுந்தை அள்ளி தோளில் போட்டுக் கொண்டாள் பூரணி.

ராஜம்மா பின் தொடர, முன்பைவிட தன்னம்பிக்கை கூடி, அயர்ச்சி நீங்கி, முகத்தில் பிரகாசம் ஒளிர, நடையில் கூட ஒரு துள்ளலோடு... பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

தலைக்கு நேரே ஒளிவட்டத்துடன் பவுர்ணமி நிலா.. அவளுடன் கூடவே சென்றது.

இனி அவள் பாதையில் இருட்டுக்கு இடமில்லை!



# காதல் தர வந்தேன்...!

## 1



அதிகாலை வாடைக் காற்று... திறந்திருந்த ஜன்னல் வழியே சிலிர்ப்புடன் நுழைந்தது. மீனாவின் கைகள் தன்னிச்சையாக விலகியிருந்த போர்வையை இழுத்து கழுத்து வரைப் போர்த்திக் கொண்டது.

பத்தடிக்குப் பத்தடி அகலமுள்ள அந்த அறையிலிருந்த மின் விசிறி நோஞ்சான் கிழவனாய் மெல்ல சுற்றிக் கொண்டிருந்தது.

கார் வேகமாக... மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. எதிர்பட்ட வாகனங்கள் மின்னல் வேகத்தில் காணாமல் போக... அதிக வேகத்தில் அடி வயிற்றில் ஜிவ்வென்ற உணர்வு எழ.... பயத்தில் கண்களை இறுக மூடி அவன் தோளில் சாய்ந்துக் கொண்டாள்.

"வேணாம்... வேணாம்.... வேணாம்... ப்ளீஸ்.... நிறுத்திடுங்க...." கோழிக் குஞ்சாய் உடல் வெட வெடக்க... பயத்தில் அலறினாள்.

அவனோ அவள் அலறலை ரசித்தபடி ரோஸ் நிற ஈறுகள் தெரிய கவர்ச்சியாய் சிரித்தான். இடது கையை அவள் தோளில் போட்டு அணைத்துக் கொண்டு வாய் விட்டு சிரித்தான்.

"நிறுத்துங்க... ப்ளீஸ்... நிறுத்துங்க...!"

''நோ... நோ... டோண்ட் ஃபியர் மைடியர்!'' அவளை சிரித்தபடி ஆறுதல் படுத்தினானே ஒழிய காரை நிறுத்தவில்லை. மாறாக, வேகத்தை இன்னும் அதிகப்படுத்தினான்.

அவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டுவர... உடலெங்கும் குப்பென்று வியர்த்தது.

''நோ...'' என்றலறியபடி மயங்கி அவன் மீதே சரிந்தாள்.

''லொக்... லொக்...'' என்ற இருமல் சத்தம் விடாமல் கேட்க புரண்டு படுத்தாள் மீனா.

''மீனா... மீனா...'' மூச்சு வாங்க... நடுநடுவே இருமல் தொந்தரவு செய்ய.... அதே அறையில் ஒரு பக்கமாய் படுத்திருந்த கிருஷ்ணசாமி மகளை அழைத்தார்.

முகமெங்கும்... வாடைக் குளிரிலும் பொட்டு பொட்டாய் வியர்த்திருக்க... கை கால்களை கட்டிப் போட்ட அவஸ்தையில் அவளால் உடம்பை அசைக்க முடியவில்லை.

அப்பாவின் குரல் கிணற்றுக்குள்ளிருந்து கேட்பது போலிருந்தது. எழ முயன்றாலும் அவளால் முடியவில்லை.

அடுத்த முறை கிருஷ்ணசாமி அவள் பெயரை உச்சரிக்கும் முன் பெரிதாய் இருமல் வந்து சொல்ல விடாமல் தடுத்தது.

இந்த முறை வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தமர்ந்தாள்.

ஒரு கணம் சூழ்நிலையின் வித்தியாசத்தில் திணறியவள்... மெல்ல உண்மை புரிந்தபோது... தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள்.

''ச்சே... அத்தனையும் கனவு! நானாவது, காரில் போவதாவது? அதுவும் அசுர வேகமாக?'' அண்ணாந்து பார்த்தாள். ஒரு நிமிடத்தில் அறுபது முறை சுற்றும் சோம்பேறி மின்விசிறி இருக்கும் வீட்டில் இருந்து கொண்டு கனவில் காரில் பறக்கிறேனா? ரொம்பத்தான் லொள்ளு இந்த கனவிற்கு! அதுவும் என் பக்கத்தில் ஒரு அழகிய ஆண் வேறு! எவ்வளவு தைரியமிருந்தால் என் தோளில் கை போட்டுக் கொண்டு... சே... நானும் எப்படி அவனோடு ஒட்டிக் கொண்டு அமர்ந்திருந்தேன்?' கனவு என்பதையும் மீறி அவள் தன் செய்கைக்காக வெட்கப்பட...



''மீனா...'' என்றார் அப்பா மூச்சு வாங்க...

திடுக்கிட்டு திரும்பினாள்.

மூச்சு விட சிரமப்பட்டு வாயை ஆவென திறந்து மூச்சை புஸ் புஸ்ஸென்று வெளிவிட்டுக் கொண்டிருந்தார் கிருஷ்ணசாமி.

அடுத்த கணம் கண்ட கனவெல்லாம் கரைந்தோடி மறைந்து விட... ''அப்பா... என்னப்பா ஆச்சு?'' என்று பதறியபடி எழுந்து அப்பாவிடம் வந்தாள்.

''மூச்சு விட முடியலேம்மா!'' சைகையில் சொன்னார்.

''என்னை எழுப்பக் கூடாதாப்பா?'' அவர் நெஞ்சை நீவி விட்டபடி.

''கொஞ்சம் சூடா தண்ணி...'' அதை சொல்லக் கூட சிரமமாய் இருந்தது. மூச்சை ஆயாசத்துடன் இழுத்து விட்டார்.

அந்த மூச்சில் முந்தின நாள் குடித்த பிராந்தி வாசம் கலந்திருந்தது.

மீனா முகம் சுளித்தாள். மனசு கனத்துப் போனது.

ஒன்றும் பேசாமல் சமையலறைக்குச் சென்று பம்ப் ஸ்டவ்வை பற்ற வைத்து வெந்நீர் வைத்தாள்.

சற்று நேரத்தில் சூடு பொறுக்கும் விதமாக பதமாக ஆற்றி, வீஸிங் ப்ராப்ளத்திற்காக டாக்டர் தந்த மாத்திரைகளில் இரண்டை எடுத்துக் கொண்டு அப்பாவின் அருகில் வந்தமர்ந்தாள்.

தானே அவருக்கு மாத்திரை போட்டாள்.

"கொஞ்ச நேரம் உட்கார்ந்திருங்க... அஞ்சு நிமிஷம் கழிச்சு படுத்துக்கலாம்!"

"ம்..." சுவற்றில் சாய்ந்து கொண்டார்.

பத்து நிமிடம் சென்ற பிறகு... சீரான மூச்சு வர... கிருஷ்ணசாமி மகளை கனிவுடன் பார்த்தார்.

"நீ போய் படுத்துக்கம்மா!"

"இனிமேல் போய் படுக்கறதா? விடிய ஆரம்பிச்சிடுச்சப்பா... இப்பவிருந்தே வேலைய ஆரம்பிச்சிட்டா... சரியா இருக்கும்."

"என்னாலதானேம்மா உனக்கு இவ்வளவு கஷ்டமும்?" குரல் அமுங்கி வந்தது.

"எனக்கு இதெல்லாம் ஒரு கஷ்டமும் இல்லேப்பா! நீங்க... நாள் தவறாம குடிச்சிட்டு வர்றீங்களே! இதுதான்பா.. கஷ்டமாயிக்கு! ஏற்கெனவே வீஸிங் ப்ராப்ளம் இருக்கு. இப்ப குடிச்சி, குடிச்சி இருமலும் சேர்ந்து போச்சு! கழுத்தெலும்பெல்லாம் வெளியே தெரியுதுப்பா... உங்க உடம்பு வரவர மோசமாயிகிட்டே வருது. அதுக்காகவாவது இந்த குடியை விடக் கூடாதா?"

"நான் வேணுமின்னே குடிக்கலே மீனா! உன்னை நினைச்சிதான். குடிக்கிறேன். என் பொண்ணுக்காக பத்து பைசா கூட சேர்க்க முடியலியே... அதை நினைச்சா... வேதனை தாங்கலே... அதை மறக்கத்தான் குடிக்கிறேன்!"

"ஏம்பா. பொய் சொல்றீங்க? குடிக்கிறவங்க அத்தனை பேரும் ஏன் நீங்களா ஒரு காரணத்தை உருவாக்கி அதுமேலே பழியைப் போடறீங்க? எனக்கு பத்து பைசா கூட சேர்க்க முடியலியேன்னு தினமும் முப்பது ரூபா செலவு பண்ணிக் குடிக்கிறீங்க? இது என்னப்பா நியாயம்? நிஜமாகவே என் மேலே அக்கறை இருந்தா... குடிக்கிறதுக்காக செலவு பண்ற பணத்தை எனக்காக சேர்த்து வைப்பீங்க? எங்கேப்பா... உங்களுக்கு என்மேல்



இருக்கிற அக்கறையை விட.... ஒயின் ஷாப் வச்சிருக்கிறவன் நல்லா பொழைக்கணும்னு அவன் மேல அக்கறை வச்சிருக்கீங்க!"

"மீ... னா...!!"

"நான் உங்களை கட்டாயப்படுத்த மாட்டேம்ப்பா...! அது உங்க இஷ்டம் ஆனா, இப்ப இந்த உலகத்திலே எனக்கு உங்களை விட்டா வேற யாருப்பா இருக்கா? அதை நினைச்சிப் பார்த்தீங்கன்னா... உங்க உடம்பை இப்படி பாழாக்கிக்க மாட்டீங்க! உங்களுக்கு ஏதாவதொன்னு ஆகிப் போச்சின்னா... அப்பறம் என் கதி? அதை நினைச்சிப் பாருங்கப்பா...!! கொஞ்சம் விட்டால் அழுது விடுவாள் போலிருந்தாள் மீனா.

சொல்லி முடித்து விட்டு அங்கிருந்து எழுந்து கொண்டாள்.

"மீனா..."

"தூங்குங்க... வெளியே பனி கொட்டுது!" என்றபடி அவர் தோளைப்பற்றி படுக்க வைத்து... போர்வையை நன்றாகப் போர்த்தி விட்டாள்.

கிருஷ்ணசாமி மகளையே மனம் கனக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தன் செய்கையால் காயப்பட்ட வேதனை மகள் முகத்தில் கண்ட போது... தந்தையைப் போல் இதயம் சுருங்கிக் கொண்டது.

அவரால் சற்று முன்னதாகவே உறக்கம் கலைந்த மீனா பரபரவென செயல்பட்டாள்.

தன் படுக்கையை சுருட்டி வைத்தாள்.

வாசலைப் பெருக்கி தண்ணீர் தெளித்து, கோலம் போட்டாள்.

தெருக் குழாயில் தண்ணீர் பிடிக்க... இரண்டு குடத்தை எடுத்துக் கொண்டு ஓடினாள் மீனா.

மகள் படும் சிரமங்களைக் கண்டு... கண்களோரம் கண்ணீர் துளிர்த்தது கிருஷ்ணசாமிக்கு!

## 2



கிருஷ்ணசாமிக்கு அதற்கு மேல் உறக்கம் வரவில்லை. படுக்கையை விட்டு எழுந்தமர்ந்து கொண்டார்.

மீனா சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் மீண்டும், மீண்டும் காதில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

நிஜம்தானே? திடீரென்று எனக்கு ஏதாவதொன்று ஆகிவிட்டால் மீனாவின் கதி?

நினைக்கும்போதே... நெஞ்சு கப்பென்று அடைத்துக் கொண்டது.

கிருஷ்ணசாமி எழுந்து நின்றார். சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பெரிய போட்டோவின் முன் வந்து நின்று கொண்டார்.

ஏழு பேர் அடங்கிய குடும்ப போட்டோ... கறுப்பு வெள்ளையில் எடுக்கப்பட்டிருந்த பழைய போட்டோ. அதில் இளம் வயது கிருஷ்ணசாமியும் அவர் மனைவி சகுந்தலாவும் அமர்ந்திருக்க... அவர்களுக்குப் பின்னால் ஒரே சாயலில் நான்கு பெண்கள் வசந்தி, பிரேமா, மாலினி, சாந்தி ஆகியோர் நின்றிருக்க... அம்மாவின் மடியில் இரண்டு வயது மீனா.. பொம்மை போன்று மிக அழகாக... மற்றவர்களை விட வசீகரமாக இருந்தாள்.

ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்! அப்படித்தான் ஆகிவிட்டார் கிருஷ்ணசாமி. அப்படியொன்றும் வசதியானவர் இல்லை. நடுத்தர வர்க்கம். ஆண் பிள்ளைக்கு ஆசைப்பட்டு வரிசையாய் ஐந்தும் பெண்ணாய் பிறந்து விட்டது. கிருஷ்ணசாமிக்கு தபால் அலுவலகத்தில் துணை அதிகாரி பணி! நல்ல சம்பளம்தான். ஐந்து பெண்ணாயிற்றே. எங்கிருந்து போதும்? யானை பசிக்கு சோளப் பொறிதான். சகுந்தலா அப்படி, இப்படி என்று மிச்சம் பிடித்து பெண்களுக்காக ஓரளவு சேர்த்தாள். இரண்டு பெண்களை தகுதிக்கேற்ற இடத்தில் கட்டிக் கொடுத்தாள். அதை



பார்த்த சந்தோஷமே போதும் என்று நினைத்தாளோ, என்னவோ, பத்து நாள் டைபாய்டு காய்ச்சலில் பொசுக்கென்று கண்களை மூடி விட்டாள்.

இடிந்து போய் விட்டார் கிருஷ்ணசாமி. மனைவி இருந்தவரை குடும்ப பாரம் தெரியவில்லை. இப்போது பெரும் சுமையாகி விட்டது. மூன்று பொட்டை பிள்ளைங்களை வைத்துக் கொண்டு எப்படிக் கட்டிக் காப்பாற்றுவது... என்ற பயமே அவரை சிறிது சிறிதாக அரித்தது. மனைவியைப் போல் மிச்சம் பிடித்து சேமித்து வைக்க... அந்த நெளிவு சுளிவு தெரியவில்லை. அதிலும் வீட்டுப் பொறுப்பை சுமந்துக் கொண்டிருந்த மாலினி ஆடம்பரப் பிரியை, குடும்ப செலவுகளுக்காக அப்பா தந்த பணத்தின் பெரும் பகுதி... ஃபேன்ஸி ஸ்டோருக்குத்தான் போனது.

ஒரு நாள் மாலினி ஒரு பணக்கார வாலிபனோடு ஓடிப் போன போதுதான் அவள் காதல் விவகாரமே தெரிய வந்தது. குடும்பம் மொத்தமும் துடித்துப் போக... நல்லவேளை மாதவன் நிஜமாகவே மாலினியை நேசித்திருந்த காரணத்தால்... அவன் தன் வீட்டில் பிடிவாதமாய் போராட்டம் நடத்தி காதல் மனைவி மாலினியை மருமகளாக்கி விட்டான்.

நிம்மதியாய் மூச்சு விட்டார் கிருஷ்ணசாமி. அவர் எந்த பொண்ணையும் அதிகமாய் படிக்க வைக்கவில்லை. பண வசதியின்மையே காரணம். அதுமட்டுமல்ல... மீனாவைத் தவிர மற்ற பெண்களுக்கு படிப்பில் நாட்டமும் இல்லை.

மாலினி ஓடிப் போன காரணம் காட்டி அடுத்தவள் சாந்திக்கு எந்த வரனும் குதிராமல் இழுத்துக் கொண்டே... போக... பயந்துவிட்டார் கிருஷ்ணசாமி.

ஒரே ஒரு வரன் தகையற மாதிரி வந்தது. இந்த இடத்தை எப்படியாவது முடித்து விட வேண்டும் என்று எண்ணினார். அவர் எண்ணத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்ட மாப்பிள்ளை

வீட்டார், தங்கள் தகுதிக்கும் மீறி, கிருஷ்ணசாமியின் நிலையைப் பற்றியும் யோசிக்காமல் கையில் நாற்பதாயிரம் ரொக்கம், பைக், சீர் செனத்தி என்று பெரிய லிஸ்டே எழுதிக் கொடுத்துவிட.... திகைத்துப் போனார் கிருஷ்ணசாமி.

தரகர் இரு வீட்டாரிடமும் ஏற்றி இறக்கி, கூட்டி குறைத்து சம்மதிக்க வைத்தார். வேறு வழியின்றி... கிருஷ்ணசாமி இருக்கிற லொட்டு லொசுக்கு லோனுக்கெல்லாம் அப்ளை பண்ணி, துடைத்தெடுத்து நான்காவது பெண்ணின் கண்ணீரை துடைத்து அனுப்பி வைத்த போது மீனா ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்தாள். கிருஷ்ணசாமிக்கோ ரிடையராக நாலைந்து மாதங்களே இருந்தன.

நல்ல மதிப்பெண்களோடு பாஸ் பண்ணிய மீனா மேற் கொண்டு டிகிரி படிக்க ஆசைப்பட்டாள். ஆனால் கிருஷ்ண சாமியால் அவள் படிப்புக்காக பத்து ரூபாய் கூட செலவு பண்ண முடியாத நிலைமை. ரிடையராகி விட்டிருந்தார். வருகின்ற சொற்ப பென்ஷன் பணம் வீட்டு வாடகைக்கும் சாப்பாட்டிற்குமே போதாத நிலை. எல்லா லோன்களும் எடுத்திருந்ததால்... ரிடையராகும்போது வந்த அம்பதாயிரத்தைக் கூட வாங்கிய கடனை அடைக்கத்தான் உதவியது.

செய்யாமல் விட்ட ஒவ்வொரு கடமையும் ஏழேழு ஜென்மத்திற்கும் தொடர்ந்து வரும். நான்கு பேரின் கடமையை முடித்து விட்டவரால் மீனாவுக்கு தான் என்ன செய்யப் போகிறோம் என்று கைகளைப் பிசைந்தார்.

துளி தங்கம் கூட சேர்த்து வைக்கவில்லை. இந்த குழந்தையை எப்படி கரையேற்றப் போகிறோம் என்ற கவலையில் குடிக்க ஆரம்பித்தார். நாளாக ஆக... அந்த குடியின்றி அவரால் இருக்க முடியாத நிலைக்கு மாற... குடிப்பதற்கு பணம் வேண்டுமே! அதற்காக ஒரு சேட்டுக் கடையில் கணக்கெழுதும் வேலைக்குச் சேர்ந்தார். கிருஷ்ணசாமியிடம் இருந்த நல்ல பழக்கம் வேலை நேரத்தில் குடியை வாயில் வைக்க மாட்டார்.



மீனா தன் எதிர்காலம் பற்றி நன்றாகத் தெரிந்துக் கொண்டாள். தன் கையே தனக்குதவி! வேலைக்குச் சென்று சம்பாதித்துதான் தனக்கென்று நான்கு காசு சேர்க்க முடியும் என்கிற நிலை. ஆனால், நல்ல வேலை கிடைக்க வேண்டுமானால் இந்தக் காலத்தில் அட்லீஸ்ட் ஒரு டிகிரியோ, கம்ப்யூட்டர் கோர்ஸோ படித்திருக்க வேண்டும். எப்படியாவது படித்தே தீர வேண்டும் என்கிற பேராவலில் தன் ப்ளஸ் டூ படிப்பிற்கேற்ற வேலையைத் தேடினாள். கடைசியில் எப்படியோ ஒரு ஜெராக்ஸ் கம்பெனியில் வேலை கிடைத்தது. அதிலேயே டிராவல்ஸும், பொது தொலைபேசியும் இயங்கியதால்... அத்தனையும் பொறுப்பாக கவனித்துக் கொண்ட மீனாவுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் தரப்பட்டது. அந்த நிலையில் அவளுக்கு அந்தப் பணம் வெல்லமாயிற்றே!

தபாலில் மேற்கொண்டு படிக்கவும், வீட்டிற்கு செலவு செய்யவும் அந்தப் பணம் சரியாக இருந்தது. கிருஷ்ணசாமியும் மகள் வேலைக்கு செல்வதை தடுக்கவில்லை.

அதிகாலையில் எழுந்து விடுவாள் மீனா. வீட்டு வேலைகளை முடித்து விட்டு சமைத்து, அப்பாவுக்கும் தனக்குமாய் டிபனில் அடைத்து வேலைக்குச் செல்ல இவள் தயாராவாள். கிருஷ்ணசாமி பணிபுரியும் இடம் சற்று தொலைவு என்பதால் அவளுக்கு முன்பே அவர் கிளம்பி விடுவார். மீனா வேலை செய்யுமிடம் நடந்து போகும் தூரம்தான்.

அப்படி இப்படியென்று இதோ... மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருக்கிறாள். ஆறேழு மாதத்தில் படிப்பு முடிந்து விடும். அடுத்து கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்க வேண்டும். படித்து விட்டால்... நிம்மதி. இதைவிட நல்ல வேலையைத் தேடிக் கொள்ளலாம். கை நிறைய சம்பளம் கிடைக்கும். பாவம்.... அப்பா மிகவும் சிரமப்படுகிறார். அவரை வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டும்! இப்படியெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருந்தாள் மீனா.

''என்னப்பா தூங்கலே?'' இடுப்பில் தண்ணீர் குடத்துடன் உள்ளே நுழைந்த மீனா, அப்பாவைப் பார்த்து ஆச்சரியமாய் கேட்டாள்.

''இல்லேம்மா... தூக்கம் வரலே!'' என்றவர் மகளை மனம் கனக்கப் பார்த்தார்.

''பாவம் மீனா! மற்ற பெண்களையாவது கரையேற்ற என்னிடம் ஓரளவு பணம் இருந்தது. ஆனால், இவளுக்கு செலவழிக்க என்னிடம் சல்லிக்காசு கூட இல்லையே! என்ன பண்ணப் போகிறேன்! எனக்கு மகளாய் பிறந்த பாவத்துக்கு இவள் கடைசி வரை கஷ்டப்பட வேண்டுமா? இல்லை... என் மகளை அந்தளவிற்கு விடமாட்டேன். நான் பெற்றவன். என் கடைசி சொட்டு ரத்தத்தை விற்றாவது என் மகளை நல்லவன் ஒருவன் கையில் ஒப்படைத்தே தீருவேன்?

அவள் சொன்னதுபோல் என் இன்பத்துக்காக நான் குடிக்கிறேன். அதை மறைக்க அவளை காரணம் காட்டுகிறேன். எப்பேர்ப்பட்ட சுயநலக்காரன் நான்? எப்படி மாறிப் போனேன் இப்படி? சம்பாதிக்கறதைக் கூட என் மகளுக்காக சேமிக்கத் தோன்றாமல் குடிப்பதற்கு செலவழித்த நான் எவ்வளவு பெரிய அயோக்கியன்?

என் குழந்தை அப்படியிருந்தும் கூட என்னை எப்படி மனம் கோணாமல் கவனித்துக் கொள்கிறாள்? சின்ன குழந்தையைப் போல் எவ்வளவு அன்பாய் பார்த்துக் கொள்கிறாள்? நாளெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்து, வீட்டையும் பராமரித்து, படிப்பையும் பார்த்துக் கொண்டு... போதாதற்கு நான் குடித்து விட்டு வந்தால் முகம் சுருங்காமல் சுத்தப்படுத்துவதும், நோயில் வாடினால் தாயாய் மாறி பேணுவதும்... என் குழந்தை எப்படியெல்லாம் கஷ்டப் படுகிறாள்?



இதற்கு மேலும் திருந்தாவிட்டால் நான் மனுஷனே இல்லை! கிருஷ்ணசாமியின் மனதில் ஒரு தெளிவு பிறந்தது.

## 3



மனிதன் ஒருவன்தான் சிரிக்கும் தகுதியை பெற்றிருக்கிறான். அப்படிப்பட்டவன் பிறர் சிரிக்குமாறு ஏன் நடந்து கொள்ள வேண்டும்?

கிருஷ்ணசாமி முற்றிலும் மாறிவிட்டார். குடியை சுத்தமாய் மறந்துவிட்டார். ஒழுங்காய் வேலைக்குச் சென்றார். வேலை முடிந்ததும் நேரே வீட்டிற்கு வந்தார். மீனா நம்ப முடியாமல் தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

''அப்பாவா... அப்பாவா இது? என்னவாயிற்று? எந்த போதி மரத்தடியில் போய் அமர்ந்தார்?'' மீனாவிற்கு சந்தோஷம் தாங்கவில்லை.

அதுமட்டுமின்றி ஒரு மாதம் வாங்கிய சம்பளப் பணத்தை ஒத்தை ரூபாக் கூட எடுக்காமல் அப்படியே கொண்டு வந்து மகளின் கையில் தந்தார்.

''அ....ப்....பா!'' ஆச்சரியமாய் பார்த்தாள்.

''என்னம்மா? அப்பா மாறிட்டாரேன்னு ஆச்சரியமாயிருக்கா? தெய்வமாகிப் போன உங்கம்மா மேலே சத்தியமா சொல்றேன். இனி அந்தப் பாழாப் போன குடியை வாயிலேயே வைக்கமாட்டேன். உன்னை கரையேத்தணும்... அந்த கடமைய முடிச்சிட்டேன்னா... நிம்மதியா கண்ணை மூடிடுவேன்...''

''அ....ப்....பா!'' நெகிழ்ந்து போனாள் கண்களில் ஈரம் படர்ந்தது.

கிருஷ்ணசாமி மகளின் கண்ணீரை துடைத்து தன் நெஞ்சில் சாய்த்து அவள் தலையை வருடிக் கொடுத்தார்.

''செய்யாம விட்ட, ஒவ்வொரு கடமையும் ஏழேழு ஜென்மத்துக்கும் கடனா திரும்ப வருமாம். உனக்கு மட்டும் குறை வைப்பேனா? பார்த்துக்கிட்டே இரு! உன் அழகுக்கும், குணத்துக்கும் தங்கமான மாப்பிள்ளையை தேடிக் கண்டு பிடிக்கிறேன்!''

''போங்கப்பா! வெட்கத்துடன் ஓடி விட்டாள். கிருஷ்ணசாமி மகளின் வெட்கத்தை ரசித்தார்.

எப்போதும் இல்லாத நிறைவும் சந்தோஷமும் இப்போது மீனாவின் மனசு நிறைய குடிகொண்டிருந்தது. பொறுப்பு மிக்க தலைமைதான் பிள்ளைகளின் தலையெழுத்து எழுதும் பேனா. இதுநாள் வரை இருந்த எதிர்காலம் பற்றிய பயமும், வெறுமையும் இப்போது துளியும் இல்லை.

டிராவல்ஸின் ஓனர் கூட இவளை கிண்டல் செய்தார்.

''என்னம்மா மீனா? கொஞ்ச நாளா கவனிச்சிட்டுதான் வர்றேன். ரொம்ப சந்தோஷமா தெரியறே! எதுனாச்சும் விசேஷமா? வீட்ல மாப்பிள்ளை பார்த்து வச்சிருக்காங்களா?'' என்றார் ஏழுமலை.

''ஐயோ... அதெல்லாம் இல்ல சார்!'' வெட்கத்துடன் அவசரமாய் மறுத்தாள்.

''அதுக்கேம்மா அலர்றே? ஆனா உன் முகத்துல ஏதோ ஒரு கல்யாண களை தெரியுதே!'' என்றார் வேண்டுமென்றே.

''போங்க சார்! உங்களுக்கு எல்லாமே கிண்டல்தான்!'' என்றாள் சிரித்தபடி.

''கிண்டல் பண்ணலே மீனா. மனசார வாழ்த்தறேன். இந்த சின்ன வயசுல உனக்குத்தான் எவ்வளவு பெரிய பொறுப்பு? வீட்டையும் கவனிச்சுக்கிட்டு, வேலைக்கும் போய்க்கிட்டு, கிடைக்கிற கொஞ்ச நேரத்துல படிக்கவும் செய்துக்கிட்டு.... உன்னை நினைச்சா எனக்கு



ரொம்ப பெருமையா இருக்கும்மா! உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லதாகத்தான் நடக்கும். அப்புறம் மீனா, அடுத்த மாசம் ஆடி பிறக்கப் போகுது. நம்ம வேனுக்கு டிமாண்டா இருக்கும். பெரியபாளையம் அது இதுன்னு புக் பண்ண வருவாங்க. போன வருஷம் திணறிப் போயிட்டோமில்லையா? அதனால புதுசா வேற ரெண்டு மெட்டாடர் வேனுக்கு ஆர்டர் பண்ணியிருக்கேன். மூணு நாள்ல வந்திடும். யார் வந்து கேட்டாலும், தலைகீழா நின்னாலும் வாடகைப் பணத்தைக் குறைக்காதே! டிரைவருக்கு பேட்டா வெல்லாம் தனின்னு சொல்லிடு...''

''நீங்க சொல்லாம நான் எப்படி குறைப்பேன் சார்!''

''சரிம்மா... நான் கொஞ்சம் பேங்க் வரைக்கும் போய்விட்டு... அப்படியே வீட்டுக்கு லஞ்சுக்கு போயிடுவேன். ஈவ்னிங்தான் வருவேன். ரொம்ப அவசியம்னா வீட்டுக்குப் போன் பண்ணு! பாண்டியன் வந்தான்னா... பணம் எதுவும் தராதே... ம்... வேணாம்... அப்புறம் உன்கிட்டே கத்த ஆரம்பிச்சிடுவான். முந்நூறு ரூபாய்க்கு மேல சல்லிக்காசு தராதேம்மா! ஹூம்... எனக்குன்னு வந்து பொறந்தானே... தவப்புதல்வன்? வயசான காலத்துல நான் ஓடியாடி வேலை செய்யறேன். அவர் ஊரை சுத்திட்டு... குடிச்சிட்டு வந்து வக்கணையா சாப்பிடுவார். அவருக்கு பெண்டாட்டி, பிள்ளை ஒரு கேடு... தூத்தெறி!'' என்றார் தன்னையே நொந்தபடி ஏழுமலை.

ஸ்டாண்டிலிருந்து பைக்கை விடுவித்து உசுப்பி புறப்பட்டு விட்டார்.

'வீட்டுக்கு வீடு வாசப்படி பணக்காரங்கன்னாலும் பிரச்னை. ஏழைங்கன்னாலும் பிரச்னை. ஆக மொத்தம் இந்த உலகில் யாருமே நிம்மதியாய் இல்லை' தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டே வேலையில் கவனம் பதித்தாள்.

'உன் முகத்துல ஏதோ ஒரு கல்யாணக் களை தெரியுதே' முதலாளியின் குரல் மறுபடி எதிரொலித்தது.

மீனா அதை நினைத்து சிரித்துக் கொண்டாள். சட்டென்று அந்த முகம் நினைவிற்கு வந்தது. அடிக்கடி கனவில் வந்த அந்த முகம் வேகமாய் காரை ஓட்டி இவளை பயமுறுத்தி... கிண்டலாய் சிரித்த முகம் எவ்வளவு அழகான முகம்?

யாரவன்?

'அடி முட்டாள் பெண்ணே! கனவில் வந்தவன் யாரென கேட்கும் அளவிற்கு மதி மயங்கி போய் விட்டாயா? கனவில் வந்தது கற்பனை உருவம்! அதைக்கூட பார்த்து மயங்குவார்களா? நீ டிராவல்ஸ் கம்பெனியில் வேலை செய்வதால்... கனவில் கார் வந்திருக்கிறது... அவ்வளவுதான். ஒரேயடியாக கோபுரத்தின் மீதேற ஆசைப்படாதே!'

'ஆசையா? நானா? என் வீட்டு நிலைமை தெரிந்தும் ஆசையெல்லாம் வருமா என்ன? படிப்பை முடித்து இதை விட நல்ல வேலையை தேடிக்கொண்ட பின்தான் என் எதிர்காலத்திற்கு சேர்க்க முடியும். இதோ அப்பாவும் சேர்க்க ஆரம்பித்து விட்டார். அப்படியே சேர்ந்தாலும்... எவ்வளவு சேர்க்க முடியும்? எங்கள் நிலைக்கேற்ப... சாதாரண கிளார்க் உத்யோகம் பார்ப்பவன் தான் வர முடியும்? அளவுக்கு மீறி ஆசைப்படுபவளா நான்?'

முகத்திற்கு நேரே விரலால் சிட்டிகை விழ... திடுக்கிட்டு கலைந்தாள் மீனா.

''ஹி.... ஹி... '' என்று இளித்தபடி நின்றிருந்தான் பாண்டியன்.

ஏழுமலையான் வாரிசு! குப்பென்று விஸ்கி வாசம் முகத்தில் மோதியது. கண்களில் சிவப்பு.

''என்ன மீனா தனியா இருக்கே! அப்பா இல்லையா?'' அவன் கேட்ட விதமும் பார்த்த பார்வையும் வேறு மாதிரி இருந்தது.



இதுவும் வாடிக்கையான ஒன்றுதான்! வழக்கம் போல் மீனா மௌனம் சாதித்தாள்.

பாண்டியன் சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அவள் எதிரே அமர்ந்தான்.

மீனாவுக்கு சங்கடமாய் இருந்தது. அவனை அங்கிருந்து சீக்கிரமாய் விரட்டியாக வேண்டுமே என்று முந்நூறு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

''இந்தாங்க சார்... உங்கப்பா தரச் சொன்னார்!''

''நமக்குள்ளே எதுக்கு மரியாதை? சும்மா பாண்டியன்னே சொல்லு! என் பொண்டாட்டி கூட என்னைப் பேர் சொல்லித்தான் கூப்பிடுவா... கட்டில்ல இருக்கறப்ப...'' சொல்லிவிட்டு அசிங்கமாய் சிரித்தான்.

மீனாவிற்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

''இந்த சுரிதார்ல நீ தேவதை மாதிரியிருக்கே மீனா.. சும்மா... பானுப்ரியா மாதிரி உடம்பு உனக்கு. ஹூம்... எங்கேயோ பிறக்க வேண்டியவ இங்கே வந்து அல்லாடறே! ஆனா, என் பேச்சை கேட்டேன்னு வச்சுக்க... உனக்கு ப்ரைட் ப்யூச்சர்தான்!''

மீனா அவனை முறைத்தாள்.

''என்ன முறைக்கிறே? முறைச்சா... நீ பத்தினின்னு ஆயிடுமா? வேலைக்குன்னு படி தாண்டி வந்துட்டா... எப்படி பத்தினின்னு கூப்பிட முடியும்? எவளுமே யோக்யம் இல்லே. அவ்வளவு ஏன் என் பொண்டாட்டி சித்ரா கல்யாணத்துக்கு முன்னாலே எவனையோ லவ் பண்ணவதான்! அதையெல்லாம் நான் மன்னிச்சுட்டேன். அது மாதிரிதான் இதுவும். காதல் வேற, கல்யாணம் வேற, படுக்கறதும் வேறதான்! பணம் சம்பாதிக்கறதுக் காகத்தானே வேலைக்கு வர்றே? எப்படி சம்பாதிச்சா என்ன? உன் கல்யாணத்துக்கு பணம் சேர்க்க வேணாமா? நிறைய பணம்

தார்றேன். ப்ளீஸ்டா மீனுக்கட்டி! வழக்கத்தை விடவும் அதிகமாய் பாண்டியன் பேச... வெகுண்டெழுந்தாள் மீனா.

''ஒரு வார்த்தை... இதுக்கும் மேலே ஒரு வார்த்தை பேசினாலும் நான் சும்மாயிருக்க மாட்டேன். உங்க மனசுல? வேலைக்குன்னு படிதாண்டி வந்திட்டா... எல்லா பொண்ணுங்களும் வேசியாய்டு வாங்களா? உன்னை பெத்தவளும் ஒரு பொம்பளைதானே? அந்த ஈவு இரக்கம் கூடவா இல்லாமப் போச்சு?''

''பச்... புளிச்சுப் போன டயலாக்! பிடிக்கலேன்னா வரமாட்டேன்னு சொல்லு! நீ என்ன ஊர்ல உலகில இல்லாத பேரழகியா? சும்மா படபடன்னு வாய் வலிக்க டயலாக் பேசிக்கிட்டு... நமக்கு பேசற பொம்பளைங்களை எல்லாம் பிடிக்காது. என் பேச்சை கேட்டு ஆடற பொம்பளைத்தான் எனக்கு வேணும். உன் மேல எனக்கு கொஞ்சம் கிரேஸ் இருந்துச்சு. வாயத் திறந்து கெடுத்திட்டயே கண்ணு! எதுக்கும் யோசிச்சு வை... நாளைக்கு வர்றேன். எங்கப்பாகிட்டே என்னைப் பத்தி போட்டுக் கொடுத்தாலும் கவலையில்லே... நான் அப்படி இப்படின்னு அவருக்கே தெரியும். என்ன... என்கிட்டேர்ந்து காப்பாத்த உன்னை வேலையிலேர்ந்து தூக்கிடுவார். நான் வரட்டுமா?'' சாவகாசமாய் எழுந்து போனான்.

இடிந்து போய் விட்டாள் மீனா.

## 4



மழை விசிறியடித்துக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியே சாரலடிக்க... மீனா ஓடிப் போய் ஜன்னலை சார்த்தி விட்டு வந்தாள்.

கிருஷ்ணசாமியின் விரல்கள் தட்டிலிருந்த சோற்றை அளைந்தபடியிருக்க... கண்கள் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டருந்தது.

மீனா ஆச்சரியமாய் அருகே அமர்ந்தாள்.



32955
808309

''அப்பா...''

''.....''

''அப்பா உங்களைத்தான்!''

''அ... என்னம்மா?''

''என்னப்பா... சாப்பிடாம அப்படி என்ன யோசனை?''

''ப்ச்... ஒண்ணுமில்லேம்மா!'' என்றார் பெருமூச்சுடன்.

''ஏம்ப்பா? வேலை செய்யற இடத்துல ஏதாவது பிரச்னையா? எதுவாயிருந்தாலும் சொல்லுங்க!''

''அப்படியெல்லாம் இல்லேம்மா!''

''வேற?''

''என் ஃப்ரண்ட் கணபதிய தெரியுமில்லே?''

''ம்... ஞாபகமிருக்கு சொல்லுங்க'' என்றாள் குழம்பை ஊற்றியபடி.

''அவனோட தூரத்து சொந்தத்துல ஒரு பையன் இருக்கானாம். படிச்சவன். சேலத்துல சொந்தமா ஸ்டீல் கம்பெனி வச்சிருக்கானாம். நல்ல குடும்பம். வரதட்சணை அது இதுன்னு எதுவும் வேணாம்... ஒரு நல்ல ஏழைப் பெண்ணாயிருந்தா போதும்னு சொல்லியிருக்காங்க. அந்த பையனோட தாத்தா சுதந்திர போராட்ட தியாகியாம். குடும்பமே முற்போக்கு சிந்தனையுள்ள குடும்பம். அதனாலதான் வரதட்சணை வேணும், நகை வேணும்னு டிமாண்ட் பண்ணலே! கணபதிக்குத்தான் உன்னைத் தெரியுமே! என்கிட்டே வந்து சொன்னான். இப்படியொரு நல்ல வாய்ப்பு நம்ம வீடு தேடி வந்தருக்கு!''

அப்பாவே பேசி முடிக்கட்டும் என்று மீனா அமைதியாய் இருந்தாள்.

''வேணாம்னு சொன்னா... அது முட்டாள்தனமில்லையா?

அதனால சரின்னுட்டேன்!''

''....''

''என்னம்மா அமைதியாயிருக்கே! உனக்கு இதுல...''

''அப்படியெல்லாம் இல்லேப்பா. உங்க விருப்பம்தான் என் விருப்பம் நீங்க பேசிக்கிட்டிருக்கப்ப... குறுக்கே பேச விரும்பலே... அதான்!''

''ரொம்ப சந்தோஷம் மீனா! உன்னை கரையேத்திட்டேன்னா... என் பாரமெல்லாம் குறைஞ்சிடும். நீயும் தட்டுப் போட்டுக்கம்மா!''

''இல்லேப்பா... நீங்க சாப்பிட்டு முடியுங்க... அப்புறம் நான் சாப்பிட்டுக்கிறேன்!''

''நான் பாட்டுக்கு சரின்னு சொல்லிட்டேன். அவங்க வேண்டாம்னு சொன்னாலும் உன்னை துடைச்சு வச்ச குத்து விளக்கு மாதிரி அனுப்ப முடியுமா? நம்ம சக்திக்கு ஏத்த மாதிரி அஞ்சாறு பவுனாவது போட்டாதானே மரியாதை? இப்ப அவங்க உன்னை பொண்ணு பார்க்க வந்தாக்கூட போட்டுக்க ஒரு நகைக் கூட இல்லேயேம்மா! நல்லவேளை ரெண்டு நாள்ல ஆடி மாசம் பொறந்திடும். இப்ப பொண்ணு பார்க்க வரமாட்டாங்க. ஒரு மாசத்துக்குள்ள... உனக்கு கழுத்துக்கு ஒரு சின்ன செயினாவது வாங்கிப் போடணும்!''

''அது எப்படிப்பா முடியும்?'' வியப்பாய் கேட்டாள்.

''மனமிருந்தால் மார்க்கமுண்டு மீனா! கடவுள் அதுக்கும் ஒரு வழிகாட்டிட்டான். நம்ம நிலைமையை கணபதிகிட்டே சொன்னேன். ரொம்ப வருத்தப்பட்டான். அவன் எனக்காக ஒரு வேலை வாய்ப்பை சொன்னான். மகாராஷ்ட்ராவில அவனுக்கு தெரிஞ்ச ஃபாக்டரியில ஒரு வருஷம் காண்ட்ராக்ட் வேலை வாங்கித் தர்றானாம். மாசம் குறைஞ்சது நாலாயிரம் சம்பளம் கிடைக்குமாம். முதல் மாசம் சம்பளம் வாங்கிட்டு லீவு போட்டுட்டு வந்துடு. மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை வரவழைச்சி... கல்யாணத்துக்கு தேதி குறிச்சிட்டு மறுபடி வேலைக்குப் போய் சம்பாதிச்சிட்டு வா... அப்படின்னான்!''



''என்னப்பா நீங்க... இதுக்கு ஒத்துக்கிட்டீங்களா?''

''பின்னே?''

''எனக்கு பிடிக்கலேப்பா! உங்களுக்கு ஏற்கெனவே உடம்புக்கு முடியலே. நான் கூட இருக்கும்போதே கஷ்டப்படறீங்க... அங்கே போய் தனியா... வேணாம்ப்பா... உங்க உடம்பு தாங்காது.''

''அதையெல்லாம் யோசிக்கற நிலைமையில நான் இல்லேம்மா! இப்படியொரு அருமையான வரன் மறுபடி அமையாது. ஒரு வருஷம்தானே? பல்லைக் கடிச்சிட்டு இருக்க வேண்டியதுதான்!''

''இருந்தாலும்....''

''ப்ச்... நல்ல காரியம் பேசறப்ப... தடையா சொல்லாதேம்மா! இன்னும் பத்து நாள்ல மகாராஷ்ட்ரா கிளம்ப வேண்டி வரும். என்னோட கவலையெல்லாம் உன்னைப் பத்தித்தாம்மா! உன்னை தனியா விட்டுட்டு போறோமேன்னு தான் வருத்தப்படறேன். நீ பிரேமா வீட்டிலேயாவது சாந்தி வீட்டிலேயாவது தங்கிக்கிறியா?''

''வேணாம்ப்பா... அது சரியா வராது. அவங்கல்லாம் மாமனார் மாமியார்னு கூட்டு குடும்பத்துல இருக்கிறவங்க. வீடும் சின்னது. நானும் போய்ட்டேன்னா... அவங்களுக்கு எல்லா விதத்திலேயும் கஷ்டம் வரும்.''

'அப்ப எப்படிம்மா?'' என்றாள் கவலையாய்.

''பயப்படாதேப்பா... எனக்கு நைட்டுக்கு மட்டும்தானே துணை வேணும்? பக்கத்து வீட்டு காமுப் பாட்டிய துணைக்கு கூப்பிட்டுக்கறேன். கவலைய விடுங்க!''

''அப்பாடா... இப்பதான் நிம்மதியாயிருக்கு! இனி நிம்மதியா தூங்குவேன்... நீயும் சாப்பிட்டுக்கம்மா... ஆறிடப் போகுது!'' கை கழுவ எழுந்தார்.

எழுந்து சென்ற அப்பாவை இதயம் கனக்கப் பார்த்தாள்.

''இந்த வயதான காலத்தில், அரசாங்கமே ஓய்வெடுக்க என்று ரிடையர்மெண்ட் கொடுத்து வீட்டிற்கு அனுப்பி விட்ட பிறகும் எதற்கப்பா இப்படி உழைக்க வேண்டும்? எல்லாம் என்னால்தானே? நான் பிறந்தேயிருக்காவிட்டால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்' கண்கள் சுரந்தது.

ஏனோ, அப்பா மகாராஷ்ட்ரா செல்வதில் மீனாவுக்கு விருப்பமே இல்லை.

ஒரு மாதம் வேகமாய் ஓடிப் போனது.

மீனாவிற்கு தனக்கு மட்டுமே சமைத்து சாப்பிடுவது, கொஞ்சமும் பிடிக்கவில்லை. என்றாலும் வேறு வழி? ஒரு நாளைக்கு ஒருவேளைதான் சமைப்பாள். அதையே இரவு வரை சாப்பிட்டு பணத்தை மிச்சம் பிடித்தாள். பாண்டியனின் வம்படி பேச்சு அத்துமீறிப் போனாலும் தன் வீட்டு நிலைமையை நினைத்து சகித்துக் கொண்டாள்.

இரவில் பக்கத்து வீட்டு பாட்டியின் துணையுடன் படுத்துக் கொண்டாள்.

அன்று... அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

'வரும் ஞாயிறு வீட்டிலிருப்பேன். வெள்ளியன்று புறப்படுவேன்' என்று பயணம் செய்யப்போகிற ரயில் தேதி, நேரம் எல்லாவற்றையும் குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

மீனாவிற்கு சந்தோஷம் பிடிபடவில்லை. ஒரு மாதம் கழித்து அப்பாவை பார்க்கப் போகிற மகிழ்ச்சி!



'அப்பா வர்ற அன்னிக்கு அவருக்குப் பிடிச்சதை எல்லாம் சமைச்சு வைக்கணும். பாவம் இந்த ஒரு மாசமும் என்ன சாப்பிட்டாரோ?'

அப்பா வந்து சேர மூன்று நாட்களே இருந்தன. பெரிய அக்கா வீட்டிற்கு சென்று விஷயத்தை சொல்லி, சென்டரல் ஸ்டேஷனுக்கு அப்பாவை வரவேற்க அழைத்தாள்.

''ஆமா... அப்பா எங்களுக்குத்தான் சம்பாதிச்சி கொண்டு வர்றாராக்கும்! எனக்கு தலைக்கு மேலே வேலையிருக்கு. நேரம் கிடைச்சா வீட்டுக்கு வந்து பார்த்துக்கறேன்!'' பக்கத்து வீட்டுக்காரி மாதிரி ஒட்டாமல் வந்தது வார்த்தை.

அக்காவின் பேச்சில் அயர்ந்து போய் விட்டாள் மீனா!

'அப்பா... இன்னமுமா சம்பாதித்து தர வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்?' வியந்தாள்.

அதன்பிறகு, வேறு அக்காள்கள் யார் வீட்டிற்கும் செல்லவில்லை.

'நாளை இந்நேரம் அப்பா வீட்டிலிருப்பார்' என்று நிமிடங்களை எண்ணத் தொடங்கினாள்.

கதவு தட்டப்பட்டது.

சென்று திறந்தாள். எதிர்வீட்டு பாக்யம் நின்றிருந்தாள். அவள் முகம் பேயறைந்தது மாதிரியிருந்தது.

''என்னக்கா?''

''மீனா... உங்கப்பா நாளைக்கு வர்றேன்னு எழுதியிருந்தாரா?''

''ஆமா...ஏன் கேக்கறீங்க?''

''எந்த டிரெய்ன்ல?''

சொன்னாள்.

''ஏன்க்கா... இதெல்லாம் கேக்கறீங்க?''

''இல்லேம்மா... வந்து... இப்ப டி.வி.யில்...''

''டிவி.யில?''

''செய்தியில... நீ சொன்ன அந்த டிரெய்ன்ல தீப்பிடிச்சிக்கிட்டு....''

''ஐயோ... என்ன சொல்றீங்க?'' அலறினாள்.

''ஓடற ரயில்ல தீப்பிடிச்சிக்கிட்டதாம்... நிறைய பேர் இறந்துட்டாங்கன்னு சொல்றாங்க... எதுக்கும் நீ ரெயில்வே ஸ்டேஷன்ல விசாரி...''

''இல்லேக்கா... எங்கப்பாவுக்கு ஒண்ணும் ஆகியிருக்காது. அவர் வருவார். மீனாம்மான்னு ஓடி வருவார். அப்பா ரொம்ப நல்லவர்க்கா... அவருக்கு ஒண்ணும் ஆகாது...!'' சொல்லிக் கொண்டே மடங்கி சரிந்தமர்ந்து அழுதாள் மீனா.

ஆனால் மீனாவின் நம்பிக்கை அனைத்தும் பொய்த்துப் போனது.

ரயில் தீப்பிடித்து எரிந்து போனதில் நூற்றுக்கும் அதிகமான பேர் உயிரிழந்தனர். அந்த நூறில் கிருஷ்ணசாமியும் அடக்கம் என்பதுதான் வேதனை! விபத்து நள்ளிரவில் நடந்ததால்... என்ன ஏது என்று அறிந்து கொள்ளுமுன்னரே... பஸ்பமாகிப் போயினர். உறக்கத்திலேயே... தன் உறவுகளை பிரியப் போகிறோம் என்று தெரியாமலேயே உயிரை விட்டிருந்தனர். அடையாளம் தெரியாத அளவிற்கு கரி கட்டையாய் ஒரு உருவத்தை மூட்டைக் கட்டி இதுதான் 'உன் அப்பா' என்று மீனாவின் கையில் கொடுத்தபோது இதயம் விண்டு போனது.

மீனாவினால் அழக் கூட முடியவில்லை.

'என்னோட கவலையெல்லாம் உன்னைப் பத்திதாம்மா! உன்னைத் தனியா விட்டுட்டு போறேனேன்னுதான் வருத்த



மாயிருக்கு!' என்றீர்களேப்பா! ஒரு வருஷம் பிரியறதுக்கே... கவலைப்பட்டீங்களே! இப்ப நிரந்தரமா... ஜென்மம் முழுக்க என்னை விட்டு பிரிஞ்சி போய்ட்டீங்களே! இனி உங்களை எப்பப் பார்க்கப் போறேன்... எப்படி பார்க்கப் போறேன்? மீனா உள்ளுக்குள் மருகி... குறுகிப் போனாள்.

அப்பாவை வரவேற்க ரயில்வே ஸ்டேஷன் வர மறுத்த பெண்கள் அவரை காட்டிற்கு வழியனுப்ப வந்திருந்தனர். நான்கு மருமகன்களும் வந்திருந்தனர்.

ரயில் தீ விபத்தில் இறந்த அத்தனை பேருக்கும் மத்திய அரசாங்கம் இரண்டு லட்ச ரூபாய் நஷ்ட ஈடு வழங்குவதாக அறிவித்திருந்தது.

கிருஷ்ணசாமியின் வெந்து போன உடலை மறுபடி தகனம் செய்து விட்டு வந்த இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அக்காள்கள் நால்வரும் மீனாவைச் சுற்றி அமர்ந்தனர்.

''கவலைப்படாதேடி... அப்பாவோட ஆயுள் முடிஞ்சு போச்சு... அதை விபத்தை காரணம் காட்டி எமன் பறிச்சிட்டுப் போயிட்டான். அதையே நினைச்சிட்டிருக்காம ஆக வேண்டியதை யோசி...'' என்றாள் வசந்தி.

''எப்படியோ... நம்ம குடும்பத்துல உன்னையாவது டிகிரி வரைக்கும் அப்பா படிக்க வச்சிருக்காரே... அந்த வகையில் நீ புண்ணியம் பண்ணியிருக்கே!'' என்றாள் பிரேமா!

''ஆனாலும், எங்க எல்லாரையும் விட அப்பாவுக்கு உன் மேலதான் பாசம் அதிகம். படிக்க வச்சதிலாகட்டும், தன் செல்ல மகளுக்காக வெளியூர்ல தங்கி வேலை செஞ்சு உனக்காகவே உயிர் விட்டதிலாகட்டும்... எல்லா விஷயத்திலேயும் அப்பா உனக்காகவே விட்டுக் கொடுத்திருக்கார்'' மாலினியின் குரலில் வெளிப்பட்டது ஆதங்கமா, பொறாமையா, பரிதாபமா என்றே புரியவில்லை.

''ஆனா, போறப்ப அப்பா நம்மளுக்கு நல்ல காரியம் பண்ணிட்டு தான் போயிருக்கார். அரசாங்கம் நஷ்ட ஈடா ரெண்டு லட்சம் தர்றதா அறிவிச்சிருக்கு. ரெண்டும் பெண் பிள்ளையா பிறந்திருக்கேன்னு நான் கண்ணீர் விடாத நாளில்லே. அவர் வேலை செய்யற கம்பெனியில ஏதோ பிரச்னையாம். கம்பெனிய இழுத்து மூடற அளவுக்கு நஷ்டத்துல ஓடறதால எல்லாருக்கும் சம்பளத்தை பாதியா குறைச்சிட்டாங்க. அப்படியே அப்பா பணத்தை அஞ்சு பாகமா பிரிச்சு எடுத்துக்கப் போகிறோம். எனக்குன்னு வர்ற பங்கை என் பொண்ணுங்க பேர்ல பேங்க்ல போட்டு வெச்சிடுவேன்!'' என்றாள் பிரச்னைக்கு தீர்வு கண்ட நிம்மதியுடன் சாந்தி.

''நீ சொல்றதும் சரிதான் சாந்தி! என் பெரிய பொண்ணு சரிதா இன்னைக்கோ, நாளைக்கோ பெரியவளாயிடற பக்குவத்துல இருக்கா! அவளுக்கு சடங்கு பண்ண எங்கே போய் கடன் கேக்கறதுன்னு கவலைப் பட்டுக்கிட்டிருந்தேன். அப்பா அந்த புண்ணியத்தைக் கட்டிக்கிட்டார்.'' ஆமோதித்தபடி சொன்னாள் வசந்தி.

மீனா அத்தனை பேரையும் ஏறிட்டுப் பார்த்து தனக்குள் வேதனையுடன் சிரித்துக் கொண்டாள்.

'இவர்கெளல்லாம் அப்பா இறந்ததற்காக வருத்தப்படு கிறார்களா? சந்தோஷப்படுகிறார்களா? எப்படி இவர்களால், இவ்வளவு சீக்கிரம், இந்த அளவிற்கு சுயநலமாய் சிந்திக்க முடிகிறது? இவர்களுக்காக, இவர்களை கரையேற்ற அப்பா எப்படியெல்லாம் அவஸ்தைப்பட்டார்? ஓடாய் தேய்ந்தார்? அதை சற்றாவது சிந்தித்துப் பார்த்தார்களா? இனிமேல் நம் அன்பான அப்பாவை பார்க்கவே போவதில்லை என்கிற ஆதங்கம் இவர்களிடம் துளியும் இல்லையே! ச்சே!' நொந்து கொண்டாள் மீனா.



''சரி... போட்டது போட்டபடி அப்படியே கிளம்பி வந்துட்டேன். நிறைய வேலையிருக்கு. நான் கிளம்பறேன் மீனா!'' என்று புறப்பட்டு விட்டாள் பிரமா.

''ரெண்டு நாளா என் மாமியாருக்கு நல்ல காய்ச்சல் தனியே அவஸ்தைப்பட்டுக்கிட்டிருப்பாங்க. நானும் புறப்படறேன். நீ பக்கத்து வீட்டு பாட்டியை துணைக்கு கூப்பிட்டு படுத்துக்க. கவலைப்படாதே... அப்பா எப்பவும் உனக்குத்தான் துணையாக இருப்பார்!'' ஆறுதல் சொல்லி விட்டு சாந்தியும் கிளம்பி விட்டாள்.

மற்ற இருவரும் ஏதோ சொல்லிவிட்டு... அவர்களும் இடத்தை காலி செய்துவிட... அரண்டுப் போனாள் மீனா!

சத்தியமாய் இதை அவள் எதிர்பார்க்கவில்லை. இவர்களில் யாராவது ஒருவர் தன்னை அவர்களுடன் அழைத்துச் செல்வார்கள் என்றே எதிர்பார்த்தாள்.

ஆனால், கல்லெறிந்த காக்கை கூட்டமாய் பறந்தோடி விட்டன உறவுகள். அதுவும் சொந்த ரத்த பந்தம். ஒரே தொப்புள் கொடியில் உதித்தவர்கள்.

மீனாவுக்கு பயமாயிருந்தது. தன்னந்தனியாய் தான் மட்டுமே அனாதையானது போல் உணர்வு.

கஷ்டத்தையும், துன்பத்தையும் துயரத்தையும் வாழ்க்கையில் அனுபவிப்பதுதானே அனுபவம்?

மீனாவிற்கு இப்போது அப்பாவின் இழப்பு பூதாகரமாய் தெரிய... அதுவரை அடங்கியிருந்த துக்கம் பீறிட்டு எழ... வாய் விட்டு கதறத் துவங்கினாள் மீனா.

## 5



"இன்னும் கொஞ்சம் ரசம் விடு!" சீனிவாசன் சொன்னதும் வசந்தி கரண்டியால் எடுத்து விட்டாள்.

"ஏன்... உன் முகம் ஒரு மாதிரியாயிருக்கு?"

"ஒண்ணுமில்லே..."

"உங்கப்பா இறந்ததற்காக கவலைப்படறே... அதானே?"

"வருத்தப்படாம இருக்க முடியுமா? பெத்த அப்பாவாச்சே?" குரல் நெகிழ்ந்தது.

"நல்ல மனுஷன்தான்! ஆனா, எமனுக்கு நல்லவங்க, கெட்டவங்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாது. அதையே நினைச்சிட்டிருந்தா எப்படி? செத்தவங்களை பத்தி கவலைப் படறதை விட இருக்கிறவங்களைப் பத்தி கவலைப்படு..."

"...."

"நாம வசதியானவங்க இல்லேதான்! சின்ன வீட்ல இருக்கிறவங்கதான். ஆனா நமக்கு விசாலமான மனசிருக்கு வசந்தி. உன் தங்கச்சி மீனாவுக்கு இனி யார் இருக்கா? அவளை அந்த வீட்லே தனியா விட்டுட்டு வந்திருக்கியே... கொஞ்சம் கூட பொறுப்பில்லாமா? ஆம்பளை இல்லாத வீடுன்னு எவனாவது வீட்டுக்குள்ளே புகுந்திட்டா அவ கதி என்னாகறது? அவளுக்காக தனியா சமைக்கப் போகிறோமா என்ன? அவளையும் நம்ம வீட்டிற்கு கூட்டிக்கிட்டு வந்திருக்கலாமே!" என்றான் சீனிவாசன்.

இந்த வார்த்தையை அவள் எதிர்பார்த்ததுதான். அவளுக்கு தெரியாதா தன் கணவனைப் பற்றி.

"நான் கூப்பிட்டேன். அவதான் பிடிவாதமா வர மறுத்திட்டா! இன்னும் கொஞ்ச நாள்ல லேடிஸ் ஹாஸ்டல்ல தங்கிக்கறேன்னு சொன்னா.. அதனால விட்டுட்டேன்!"



"வயசுப் பொண்ணு... நாமெல்லாம் இருக்கறப்ப ஹாஸ்டல்ல தங்கறதா? பைத்தியக்காரி அவதான் ஏதோ உளர்றான்னா... நீயும் தலையாட்டிக்கிட்டு வந்துட்டியா? நான் போய் கூப்பிடறேன்!"

பயந்து விட்டாள் வசந்தி.

"ஐயோ... வேணாங்க! நானே அவளை ரொம்ப வற்புறுத்தினேன். பிடிவாதமா வரமறுத்திட்டா. அவளைப் பத்தி எனக்குத் தெரியும். வர மாட்டா. தான் நினைச்சா... நினைச்சதுதான். மோர் விடவா?"

"வேண்டாம்!" என்றான் யோசனையுடன் தட்டிலேயே கையை கழுவிக் கொண்டு எழுந்தான்.

வசந்தி கணவனை வெறித்துப் பார்த்தாள்.

அவளுக்கு மீனா மீது அன்பிருந்தது. அக்கறையும் இருந்தது. நியாயமாய் பார்க்கப் போனால் அவளை அவள்தான் தன் பொறுப்பில் அழைத்து வந்திருக்க வேண்டும். ஆனால், முடியவில்லை. காரணம்...

மீனாவின் அதீத அழகு. இரண்டாவது கணவனின் வக்கர குணம்.

சீனிவாசனுக்கு சபல புத்தி அதிகம். நிறைய பெண்கள் தொடர்பு உண்டு. அதன் காரணமாய் கணவன் மனைவிக்குள் அடிக்கடி சண்டை வரும். ஆனால் சீனிவாசன் தன்னை திருத்திக் கொள்ளவில்லை. இந்த நிலையில் தங்கையை எப்படி வீட்டிற்கு அழைத்து வர முடியும்? பாலுக்கு பூனை காவல் போல.

அதைவிட, மீனா அங்கிருப்பதே பாதுகாப்பு என்பதை தெளிவாய் உணர்ந்திருந்தாள்.

"கடவுளே... என் தங்கையை எந்தக் குறையும் வராமல் நீதான் பாதுகாக்கணும்!" அவளால் வேண்டிக் கொள்ள மட்டுமே முடிந்தது.

''ரொம்ப டல்லாயிட்டே மீனா?'' பாண்டியன் அவள் அருகில் வந்தமர்ந்தான்.

''.....''

''இப்படி உங்கப்பா உன்னை அனாதையா விட்டுட்டு போவார்னு... நான் நினைச்சிக்கூட பார்க்கலே...''

''.....''

''போனவரையே நினைச்சி உன் உடம்பை வருத்திக்காதே மீனா! எப்படி இளைச்சிட்டே பார்! சாப்பிடறியா இல்லையா? நீ இப்படி இருக்கறது என் மனசுக்கு கஷ்டமாயிருக்கு மீனா!''

''.....''

''இனிதான் நீ யோசிச்சு, புத்திசாலித்தனமா ஒரு நல்ல முடிவை எடுக்கணும். மனுஷன் வாழ்றதுக்கு பணம் அவசியம் மீனா. அந்தப் பணத்தை சம்பாதிக்கத்தானே உங்கப்பா வெளியூருக்குப் போனார். கரிக்கட்டையா திரும்பி வந்தார். என் பேச்சை ஆரம்பத்திலேயே கேட்டிருந்தா உங்கப்பாவை பறி கொடுத்திருக்க வேண்டாம். அந்தப் பணத்தை நீயே சம்பாதிச்சிருக்கலாம்.'' என்றான் அவளை அர்த்த புஷ்டியுடன் பார்த்தபடி...

''.....''

''நீ அமைதியா இருக்கிறதைப் பார்த்தா நான் சொல்றதை யோசிக்கறேன்னு தெரியுது. இதோ பார் மீனா... நாட்லே முக்கால்வாசிப் பேர் இப்படித்தான் மீனா. அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போறாங்க! உனக்கும் இப்ப யாருமில்ல! அப்பாவும் போயிட்டார். இத்தனை அக்காள்கள் இருந்தும் யாராவது உதவுனாங்களா? அவ்வளவுதான்! எல்லோரும் சுயநலக்காரங்க மீனா. எனக்கு உன்மேல அக்கறை மட்டுமில்லே. அன்பும் இருக்கு. அன்புன்னு சொல்றதை விட காதல் இருக்குன்னு சொல்லலாம். நீ மட்டும் சரின்னு ஒரு வார்த்தை சொல்லு... கடைசி வரைக்கும் நான் உன்னை வச்சி காப்பாத்தறேன்...''



''.....''

''யோசி... நல்லா யோசி... இன்னைக்கு நைட்டு நான் உன் வீட்டுக்கு வருவேன். நல்ல பதிலா சொல்லு... உனக்கும் எனக்கும் ஏதோ ஒரு பந்தமிருக்கு மீனா... இல்லேன்னா இப்படி உன்னையே விரட்டி விரட்டி வருவேனா சொல்லு? கதவை உள்தாழ்ப்பாள் போடாம வச்சிரு என்ன? வரட்டுமா?'' பாண்டியன் எதையோ சாதித்து விட்ட திருப்தியில் விசிலடித்த படி எழுந்து போய் விட்டான்.

அதுவரை மௌனமாயிருந்த மீனாவின் உதடுகள் அழுகையில் துடிக்க ஆரம்பித்தது.

மீனா அவன் வரவை எதிர்பார்த்தபடியே காத்திருந்தாள். பக்கத்து வீட்டுப் பாட்டியை இன்று வர வேண்டாம் என்று சொல்லி விட்டிருந்தாள்.

மணி நள்ளிரவு பன்னிரெண்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

தாழ் போடாத கதவு மெல்ல திறந்து... பாண்டியன் முகம் எட்டிப் பார்த்தது.

''அட... சொன்னபடியே எனக்காகக் காத்துக்கிட்டிருக்கியா மீனு?'' செல்லமாய் குழைந்தபடி அவளருகில் வந்தான்.

''.....''

''வந்தவனை வான்னு கூட வரவேற்க மாட்டியா மீனுக்குட்டி?'' என்றவன் சட்டென அவள் தோளில் கை வைத்தான்.

திடுக்கிட்ட மீனா அவன் கையை தட்டி விட்டாள்.

''ஏய்... என்ன?''

''வெளியே போடா நாயே!'' என்றாள் மீனா ஆத்திரத்துடன்.

''மீ...னா!'' அதிர்ந்தான்.

''ஏண்டா... ஆம்பளைத் துணை இல்லேன்னா... எல்லா தெரு நாயும் மாமிசத் துண்டை தேடி வர்ற மாதிரி வர்றீங்களே... வெக்கமாயில்லே....?''

''என்னடி பத்தினி மாதிரி பேசறே? காலையிலே சொன்னப்ப அமைதியா கேட்டுக்கிட்டு... எனக்காக தாழ் போடாம வச்சிருந்துட்டு... இப்ப என்னடி பேச்சு மாறுறே? வேற எவனாவது அதிகமா பணம் தர்றேன்னு சொல்லிட்டானா?''

''இப்படித்தான் பணம் சம்பாதிச்சு உயிர் வாழணும்னா அப்படிப்பட்ட உயிர் எனக்குத் தேவையே இல்லே! கை நீட்டி சம்பளம் வாங்கினா... கையை தொட ஆசைப்படறியே... நீயும் ஒரு பெண் வயித்திலேதானே பிறந்தே?''

''ப்ச்... டயலாக் பேசி போரடிக்காதே! இங்கே பார்? என்னை பகைச்சுக்கிட்டு உன்னால வாழ்ந்திட முடியாது. உன்னை வாழ விடமாட்டேன். வேலையை விட்டே தூக்கியடிப்பேன்! மரியாதையா வா!'' வெறித்தனமாய் அவளை இழுத்து அணைக்க முற்பட்டபோது பளாரென முதுகில் அடி விழுந்தது.

திடுக்கிட்டு திரும்பிய பாண்டியனின் முகம் வெளிறியது.

ஏழுமலை நின்றிருந்தார்.

''அ... அப்பா...!''

''சீ... உன் வாயால கூப்பிடாதடா அப்படி? எனக்கு பிள்ளையா பொறந்துட்டு ஏண்டா உன் புத்தி நாய் மாதிரி அலையுது? மீனா தங்கமான பொண்ணுடா! தன் சுய உழைப்பால் படிச்சு முன்னுக்கு வர்ற பொண்ணு! அவளோட ஏழ்மைய உனக்கு சாதகமாக்கிக்கப் பார்த்தியே ராஸ்கல்! இன்னைக்கு அவகிட்டே நீ பேசினதை யெல்லாம் என்கிட்டே மறைக்காம சொல்லிட்டா! அதனாலதான் உனக்கு முன்னால இங்கே வந்து காத்திருந்தேன். இனி இவளுக்கு எந்தவிதத்திலேயாவது தொல்லை கொடுத்தியோ... நானே உன்னை



போலீஸ்ல பிடிச்சிக் கொடுத்திடுவேன்... சொல்லி விட்டேன்! போடா வெளியே!'' உறுமினார்.

பாண்டியன் விட்டால் போதுமென்று ஓடிவிட்டான்.

''அவன் சார்பில நான் உன்கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கிறேன் மீனா! நீ எங்க டிராவல்ஸ்ல வொர்க் பண்ற சலுகையில் அவன் இப்படியெல்லாம் நடந்துகிட்டான். அவன் கண்ணுல நீ பட வேண்டாம். நாளைலேர்ந்து நீ நம்ம டிராவல்ஸ்ஸுக்கு வேலைக்கு வரவேண்டாம். உன்னோட நன்மைக்காகத்தான் சொல்றேன். புரிஞ்சுக்குவேன்னு நம்பறேன். நானே உனக்கு தெரிஞ்ச நல்ல இடத்திலே வேலை வாங்கித் தர்றேன். இந்தாம்மா இதுல மூவாயிரம் ரூபா இருக்கு. செலவுக்கு வச்சுக்க... நான் வர்றேம்மா'' என்று ஒரு கவரை கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

கதவை தாழ் போட்டுவிட்டு ஆயாசத்துடன் பாயில் வந்தமர்ந்தாள்.

''எதிர்காலம் பற்றிய பயம் இன்னும் விஸ்வரூபமெடுத்தது. பாண்டியன் தொல்லை விட்டது சரி! வேலை போய் விட்டதே! மறுபடி வேலை தேடணும். ஏழுமலை சார் சொல்லிவிட்டார் என்பதற்காக அவர் உதவியை நாடி சிரமப்படுத்துவது சரியல்ல. ஹூம்.'' பெருமூச்சொன்றை எறிந்து விட்டு படுக்கையில் சரிந்தாள்.

உறக்கம் வருவேனா பார் என்று அடம் பிடித்தது.

அந்நேரம்... கதவு தட்டப்பட்டது.

'யாராய் இருக்கும்.... இந்த நேரத்தில்?' வியப்பால் எழுந்தாள்.

''யாரு?''

''நான்தான் மீனா... கதவைத் திற...'' சீனிவாசனின் குரல் ஒலித்தது.

மீனாவின் ஆச்சரியம் மேலும் அதிகரிக்க கதவைத் திறந்தாள்.

''என்ன மாமா... இந்த நேரத்திலே?''

''ஏன் வரக் கூடாதா?''

அவன் கேட்ட கேள்வியே சரியில்லை. மீனா பதை பதைக்கும் நெஞ்சுடன் அவனையே பார்த்தாள்.

''சாப்பிட்டியா மீனா?''

''ம்...!''

''ரொம்ப இளைச்சிட்டியேம்மா! ஆனாலும் உனக்கு ரொம்பத்தான் பிடிவாதம். வசந்தி கூப்பிட்டும் கூட வீட்டுக்கு வரமாட்டேன்னுட்டியாமே! ஏன் மீனா... நாங்க உன்னை நல்லா பார்த்துக்க மாட்டோமா?''

''அக்கா என்னை கூப்பிடலியே!'' என்றாள் ஆச்சரியமாய்.

''நினைச்சேன். அப்பவே நினைச்சேன். அவளுக்கு உன்மேல பொறாமை மீனா... நீ ரொம்ப அழகாயிருக்கேயில்லே... அந்த எரிச்சல். எங்கே அவளை விட்டுட்டு நான் உன் மேல ஆசைப்பட்டுடுவேனோன்னு பயம். ஹஹ்ஹா...'' என்று வாய் விட்டு சிரிக்க ஆரம்பித்தான்.

மீனா, பயத்துடன் அவனையே பார்த்தாள்.

''ஆனா, அவ பயப்படறதிலேயும் ஒரு அர்த்தமிருக்கு மீனா! யாரையும் வீழ்த்தற அழகு உன்கிட்ட இருக்கு! நான்கூட கொஞ்சம் தடுமாறிப் போயிட்டேன்னா பார்த்துக்க. சரி அதை விடு! நீ இங்கே தனியா இருக்க வேணாம் மீனா! உன்னைக் காப்பாத்தற பொறுப்பு எனக்கும் இருக்கு. நாளைக்கே நீ என்னோட கிளம்பி எங்க வீட்டுக்கு வந்திடு!''

''இ.... இல்லே மாமா! இங்கே எனக்கு எந்த தொந்தரவும் இல்லே. நான் இங்கேயே இருக்கேன். நீங்க கிளம்புங்க!''

''ப்ச்... புரிஞ்சிக்காம பேசாதே? மெனக்கெட்டு ஒருத்தன் நைட்ல இங்கே வர்றான்னா என்ன காரணம்? சரி... நீ நம்ம வீட்டுக்கு



வர வேணாம்... நான் இங்கே வர்றேன்... உனக்கு துணையா நான் இருக்கேன்... என்ன சொல்றே?'' சீனிவாசன் மெல்ல நெருங்கி வந்து அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''ச்சே!'' என்று கைகளை உதறி விடுவித்துக் கொண்டாள்.

''நீங்களா... நீங்களா இப்படியெல்லாம நடந்துக்கறீங்க?''

''மீ.... னா!''

''நீங்க பார்க்க வளர்ந்த பொண்ணு நான்! என்கிட்டேயே இப்படி கேவலமா நடக்க உங்களுக்கு எப்படி மாமா மனசு வந்தது? கட்டினவளுக்கு துரோகம் பண்ண நினைக்கறீங்களே... இது வசந்தி அக்காவுக்கு தெரிஞ்சா எவ்வளவு வருத்தப்படுவா?''

''ஏதோ போனா போகட்டும்.... தனியா இருக்கியே உதவலாம்னு வந்தா...''

''எது? இதுவா மாமா உதவி? அதைவிட நாலு முழ கயித்திலே தொங்கி நிரந்தரமா எங்கப்பாகிட்டேயே போய் சேர்ந்திடுவேனே! எதற்கு இந்த மானங்கெட்ட பொழைப்பு! போங்க... வெளியே போயிடுங்க... இனி இந்தப் பக்கம் வராதீங்க... மறுபடி இதை மாதிரி வந்து தொந்தரவு பண்ணீங்கன்னா... எழுதி வெச்சிட்டு செத்துப் போவேன்?'' என்றாள் உறுதியாக.

சீனிவாசன் நடுங்கியபடி வெளியேறிவிட்டான். மீனா தொய்ந்து போய் அமர்ந்து விட்டாள்.

இந்த உலகத்துல கன்னிப் பெண்கள் தனித்து வாழவே முடியாதா? ஏனிப்படி வல்லூறுகள் என்னைச் சுற்றி வட்ட மிடுகின்றன?

பாரிஜாத மலர்களாவதை விட பருத்தி பூக்களாவது சிறப்பு. மணப்பதை விட மானத்தை காப்பது மேல்.

எந்த சூழலிலும் என் மானத்தை இழக்க மாட்டேன். இனி இங்கே தனியே இருப்பது புத்திசாலித்தனமில்லை. முடிவு செய்து விட்டாள் மீனா.

## 6



அக்கா வீட்டில் போய் தங்குவது என்று முடிவாகி விட்டது. ஆனால், எந்த அக்கா வீட்டிற்குப் போவது என்றுதான் புரியவில்லை.

நான்கு சகோதரிகளும் சென்னையில்தான் வசிக்கிறார்கள்.

வசந்தி அக்கா வீட்டிற்குப் போக முடியாது. சீனிவாசனின் புத்தி தெரிந்தும் அங்கு போவது... கண்ணை மூடிக் கொண்டு கிணற்றில் விழுவதற்கு சமம்.

சாந்தியாக்கா பாவம் கஷ்டப்படுகிறாள். அவள் கணவருக்கும் சரிவர சம்பளம் வராதபோது நான் வேறு எதற்கு சுமையாக?

மாலினி கொஞ்சம் சுயநலக்காரி. எந்த ஒரு சின்ன விஷயத்திற்கும் முகத்திலடிப்பதுபோல் பேசி விடுவாள்.

பிரேமா அக்கா வீட்டிற்குப் போகலாமா? அவளும் அப்படி ஒன்றும் வசதிக்காரி இல்லை. அவள் கணவன் எக்ஸ்போர்ட் கம்பெனியில் சூபர்வைசராக இருப்பவர். அவளுக்கு என் மீது அன்பு இருக்கிறது. சிறு வயதில் என்னை அவள்தான் தூக்கி வளர்த்தாளாம். அப்பா சொல்வார்.

அவளிடமே போகலாம். யோசித்துக் கொண்டிருக்க எனக்கு யோக்கியதை இல்லை. கெஞ்சியாவது தங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

ஒரு தோல் பையில் சில உடைகளை வைத்து எடுத்துக் கொண்டு பிரேமா இருந்த போரூருக்கு பஸ் ஏறினாள்.

இவளை சற்றும் எதிர்பார்க்காத பிரேமாவுக்கு நிஜமாகவே தூக்கி வாரிப் போட்டது. பிரேமாவின் மாமியார் பார்த்த பார்வையில் 'இவளெங்கே இங்கே?' தெரிந்தது.

''வா மீனா? என்ன இங்கே?'' எதற்காக வந்தே என்பது போல் இருந்தது தொனி பிரேமாவிடமிருந்து.



''சு... சும்மாதான்க்கா! உன்னைப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன். அத்தான் இல்லையா?''

''வேலை விஷயமா மங்களூர் போயிருக்கார். வர மூணு நாள் ஆகும். இப்படி உட்காரு.''

''விக்னேஷும்... ரவிக்குமாரும் எங்கே?''

''ஸ்கூலுக்குப் போயிருக்காங்க. காபி சாப்பிடறியா?''

''சரிக்கா! அத்தே... நீங்க எப்படியிருக்கீங்க...?'' அக்காவின் மாமியாரைக் கேட்டாள்.

''ஏதோ இருக்கேன்ம்மா... ஆமா... உங்கப்பா செத்ததுக்கு அரசாங்கத்திலேர்ந்து பணம் தர்றேன்னு சொன்னாங்களே எப்ப வருதாம்?''

''இன்னும் ரெண்டு மாசமாகுமாம்!''

''சீக்கிரம் வந்தா நல்லது. சந்திரனுக்கு கல்யாணத்துக்கு நாள் வேற குறிச்சிட்டேன்.''

மனம் பிசைய அக்காவைப் பார்த்தாள். பிரேமா வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

'அப்பாவின் உயிர் விற்ற காசுக்குத்தான் எத்தனை தேவைகள்? அக்காவின் மச்சினனுக்கு கல்யாணம் பண்ணக் கூட அப்பாவோட பணம் உதவுகிறதே!' துளிர்க்க நினைத்த கண்ணீரை கண்களை சிமிட்டி உள்ளிழுத்துக் கொண்டாள்.

''மதியம் இருந்து சாப்பிட்டுட்டுப் போ... கொல்லையிலே வத்தல் காயப்போட்டிருந்தேன். அதைப் பார்த்திட்டு வர்றேன்.'' மாமியார்காரி பட்டம்மாள் எழுந்து சென்றாள்.

''ஹாய் மீனா... எப்ப வந்தே? ஸாரி... கேள்விப்பட்டேன். ரொம்ப வருத்தமாயிருந்தது. நடந்ததை மறந்திட்டு... நடக்கப்போறதை பத்தி யோசி... ஓக்கே?'' அந்தப் பக்கமாய் வந்த

பிரேமாவின் மச்சினன் சந்திரன் இவளைப் பார்த்ததும் நின்று பேசினான்.

''வேற வழி? என்ன பண்ணினாலும் அப்பா திரும்ப வரப் போவதில்லே... ஆமா... நீங்க எப்ப பெங்களூர்ல இருந்து வந்தீங்க...? சென்னைக்கே ட்ரான்ஸ்ஃபர்ல வந்துடலாமே!''

''வந்து நாலு நாளாச்சு மீனா? ட்ரான்ஸ்ஃபர் அவ்வளவு ஈஸியா கிடைச்சிடாது. ட்ரை பண்ணிட்டுத்தானிருக்கேன். அடுத்த மாசம் எனக்கு மேரேஜ் பிக்ஸ் பண்ணியிருக்காங்க.. தெரியுமா? கண்டிப்பா நீ வரணும்!''

''ஷ்யூர்!''

''அர்ஜெண்ட்டா வெளியே கிளம்பிட்டிருக்கேன்... வந்து பேசறேன் ஒக்கே?''

''சரி!'' என்றாள் சிரித்தபடி.

சந்திரன் போய் விட்டான்.

பிரேமா மீனாவின் உடைகளடங்கிய பேகை பார்க்கத் தவறவில்லை.

'ஒருவேளை... இங்க தங்க வந்திருக்காளோ? கடவுளே... இதென்ன புதுப் பிரசனை?' சங்கடத்தில் வியர்த்தாள் பிரேமா.

''மீனா... இப்படி வா...'' என்று சமையலறைக்கு அழைத்துச் சென்றாள்.

''காபி சாப்பிடு'' என்று டம்பளரை நீட்டினாள்.

''என்னக்கா... என்னை விருந்தாளி மாதிரியே ட்ரீட் பண்றே?''

''இன்னைக்கு ஸன்டேக் கூட இல்லையே... வேலைக்குப் போகலியா மீனா...?''

''இல்லேக்கா...'' என்று ஆரம்பித்தவளின் கண்கள் சட்டென கலங்க ஆரம்பித்தன.



''ஏண்டி அழறே?''

கேட்டதுதான் தாமதம்.

பாண்டியன் வீட்டிற்கு வந்தது. வேலையை விட்டது. வசந்தியின் கணவர் வந்தது... எல்லாவற்றையும் மடைதிறந்த வெள்ளம் போல் கொட்ட ஆரம்பித்து விட்டாள்.

கேட்க கேட்க ஒருபுறம் நெஞ்சு பதறியது பிரேமாவிற்கு. ஆனால், மறுபுறம் மீனா இங்கே வந்து நிரந்தரமாய் தங்கிவிடுவாளோ என்று நெஞ்சு பக்பக்கென அடித்துக் கொண்டது.

''அதனால...''

''போதும் அழாதே மீனா! கடவுள் உனக்கு ஒரு நல்ல வழியை காண்பிப்பார். கவலைப்படாதே! எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு. நீ அப்படி உட்கார்ந்து ரெஸ்ட் எடு! ரொம்ப டயர்டா தெரியறே!'' அவள் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் சென்று விட்டாள் பிரேமா.

அந்த செய்கை மீனாவிற்கு ஏமாற்றத்தைத் தந்தது.

பிளாட்பாரத்தில் பஸ்ஸிற்கு காத்திருக்கும் பயணியைப் போல் நடுரோட்டில் நிற்பதுபோல் தன்னை உணர்ந்தாள்.

தங்கைக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள் பிரேமா!

''பிரேமா...!'' கொல்லைப்புறத்திலிருந்து பட்டம்மாள் அழைப்பது கேட்டது.

''இதோ... வர்றேன்... என்று குரல் கொடுத்தவள், ''சாப்பிட்டுக் கிட்டிரு... வந்திட்டேன்!'' என்று போனாள்.

ஐந்து நிமிடம் சென்றிருக்கும்.

சாப்பிட்டு முடித்த மீனா கை கழுவ கொல்லைப்புற பக்கமாய் சென்றபோது, மாமியாரும், மருமகளும் பேசிக் கொண்டிருந்தது தெளிவாய் காதில் விழுந்தது.

''என்னடி... உன் தங்கை பெட்டியும், கையுமா வந்திருக்கா... இங்கேயா தங்கப் போறா?''

''தெ... தெரியலே அத்தே...!''

''கேட்டுத் தெரிஞ்சுக்க! ஆனா அவ வயசுப் பொண்ணு. அதை ஞாபகம் வச்சுக்க. சந்திரனுக்கு வேற கல்யாணம் ஆகப் போகுது. வயசுப் பையன் இருக்கிற வீட்லே உன் தங்கை தங்கினா... அது சரிப்படாது. நம்ம வீடோ சின்னது. நீ புருஷன் குழந்தையோட இருக்கிற ஒரே ஒரு பெட்ரூம்ல படுத்துக்கறே! ஸ்டோர் ரூமை சுத்தம் பண்ணி அங்கேதான் சந்திரன் தங்கியிருக்கிறான். நான் கிழவி... வராந்தாவில் படுத்துக்கறேன்... உன் தங்கையை அப்படி படுக்க வைக்க முடியுமா? அப்பா, அம்மா இல்லாத பொண்ணுதான். இல்லேங்கலே! ஆனா, அதுக்காக வேலியிலே போற ஓணானை காதுக்குள்ளே விட்டுக்கறது புத்திசாலித்தனமான காரியமில்லே! தங்கச்சிதானேன்னு மனசு இளகி சரின்னுடப்போறே? எந்த நேரத்திலே எது வேணாலும் நடக்கும். யார் கண்டது? இந்தக் காலத்திலே ஆண் பிள்ளைங்களையும் நம்ப முடியல, பெண் பிள்ளைங்களையும் நம்ப முடியலே. எதையும் விளக்கி சொல்லி மனசை கஷ்டப்படுத்தவும் நான் விரும்பலே. சொல்றதை சொல்லிட்டேன்.'' பட்டம்மாள் பேசி முடித்தாள்.

பிரேமா பாடுதான் திண்டாட்டமாகி விட்டது. எல்லாவற்றை யும் கேட்டுக் கொண்டிருந்த மீனாவின் இதயம் ரெண்டாய் விண்டு போனது.

சப்தம் எழுப்பாமல் அப்படியே திரும்பி விட்டாள். இதயத்து வேதனையை முகத்தில் காட்டாமல் சாதுர்யமாய் மறைத்தாள்.

கையை கழுவிக் கொண்டு பிரேமாவைத் தேடி வந்தாள்.

''அக்கா...''

''என்ன?'' என்றாள் குரலில் சற்றே எரிச்சல் கலந்து.



''நான் புறப்படறேன்க்கா!''

சட்டென தலைதூக்கிப் பார்த்தாள்.

'நாங்கள் பேசியதைக் கேட்டிருப்பாளோ?'

''நான் ஹாஸ்டல்ல தங்கலாம்னுதான் புறப்பட்டேன். அதுக்கு முன்னால உன் கையால சாப்பிட்டு போகணும்னுதான் இங்கே வந்தேன். திருப்தியா சாப்பிட்டேன். இது போதும்க்கா! வரட்டுமா?''

''மீனா... உன் நிலைமை இப்படியாடி ஆகணும்?'' உடைந்து போனாள் பிரேமா.

''ப்ச்... என்ன இது? அழாதே! நீ இப்படி அழுதா... நான் எப்படி தைரியமா இருப்பேன்...? சந்தோஷமா அனுப்பி வை!''

''போய் வாடி! அப்பப்ப வந்துட்டுப் போ!''

''சரிக்கா... வர்றேன்!'' என்று அவளிடமும், அத்தையிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

அவள் போகும் பாதை... ஒரே நேர்க் கோடாய் போய்க் கொண்டேயிருந்தது. நிழலுக்கு ஒதுங்க ஒரு மரமும் தென்பட வில்லை.

'எங்கே போவது? நான் பாட்டிற்கு ஹாஸ்டலில் தங்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எப்படி தங்க முடியும்? வேலையும் இல்லை. கையிலிருக்கிற பணத்தை வைத்துக் கொண்டு எத்தனை மாதம் ஓட்ட முடியும்? வேலை கிடைக்கும் வரைக்குமாவது பிரேமா வீட்டில் தங்க இடம் கிடைத்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். என்ன பண்ணப் போகிறேன்?' சோர்ந்து போய் ஒரு கல்லின் மீது அமர்ந்து விட்டாள்.

எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ... அவளுக்கே தெரியாது.

அருகில் ஒரு கார் வந்து நின்ற சப்தம் கூட அவளை கலைக்கவில்லை.

''சரிதான்... இங்கே போதிமரம் கூட இல்லையே... இங்கே உட்கார்ந்து தவம் பண்றே?'' குரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

மாதவன் கார் மீது சாய்ந்தபடி... இவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மாதவன் மாலினியின் கணவன்.

''மா...மா!''

''ஆ...மா!'' என்றான் அவளைப் போலவே.

''நீங்க எங்கே இங்கே?''

''அதையேதான் நானும் கேக்கறேன். நீ எங்கே இங்கே?''

''ஓ... ஒன்றுமில்லே... மாமா.. சும்மாதான்!''

சில கணங்கள் அவளையே பார்த்த மாதவன் தலையாட்டிக் கொண்டான்.

''இங்கே பக்கத்துல உங்க பிரேமா அக்கா வீடு இருக்கில்லே?''

''ஆ... ஆமாம்!''

''அங்கே போய்ட்டு வந்தியா?''

''ம்!''

''மேலும் மேலும் கேள்வி கேட்டு கஷ்டப்படுத்த விரும்பலே! என்னால புரிஞ்சுக்க முடியுது மீனா! உனக்கு இப்படியொரு கஷ்டம் வந்திருக்க வேண்டாம். உனக்கு இப்ப பாதுகாப்பான ஒரு இடம் தேவை? உன்னை பாதுகாக்கற பொறுப்பு எனக்கில்லையாம்மா? ஒரு போன் பண்ணியிருந்தா... நானே வந்து அழைச்சிட்டுப் போயிருப்பேனே! நல்லவேளை ஃபாக்டரி போயிட்டு திரும்பிட்டிருந்தேன். உன்னை பார்த்துட்டேன். தாங்க் காட்! வா... வண்டியில ஏறு!''

''இல்லை மாமா... பரவாயில்லே!''



அவள் பேகை வாங்கி காரில் வைத்த மாதவன்,

''ஏறு!'' என்றான் அழுத்தமாய் உச்சரித்து.

அதற்கு மேல் மறுப்பு சொல்லாமல் ஏறி அமர்ந்தாள்.

## 7



கணவனோடு காரில் வந்திறங்கிய மீனாவைப் பார்த்து அதிர்ந்தாள் மாலினி.

''என்ன ஷாக்காயிட்டே? உன் தங்கை மீனாவேதான். இப்படி வா!'' என்று தனியே அழைத்துச் சென்று காதில் கிசுகிசுத்தான்.

''இனிமே அவ இங்கேயே இருக்கட்டும். உள்ளே போ மீனா.. அவளை கூட்டிக்கிட்டு போ மாலு!'' என்றான் மாதவன்.

''ஹி...ஹி... வா வா... மீனா!'' கையைப் பற்றி அழைத்துச் சென்றாள்.

''யார் இது?'' என்றாள் எதிர்ப்பட்ட மாமியார்.

மீனா அவளையும், பிரம்மாண்டமான அந்த பங்களாவையும் பார்த்து அசந்து போய் விட்டாள்.

'மாலினி அக்கா... இவ்வளவு பெரிய வீட்டிலா வாழ்கிறாள்?'

மாலினியுடன் அவள் போனில் பேசியிருக்கிறாளே யொழிய அவள் வீட்டிற்கெல்லாம் வந்ததில்லை. மாலினியும் அழைத்ததில்லை.

''என் தங்கை அத்தை!'' என்றாள் தயக்கமாய்.

''ஓஹோ!'' என்று அலட்சியமாய் பார்த்து விட்டு நகர்ந்தாள்.

''யாரிவ?'' சோபாவில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த மாமனார் கேட்டார்.

''என் தங்கை...''

''அப்படியா? நான் யாரோ புதுசா சர்வண்ட் அப்பாயிண்ட் பண்ணிட்டீங்களோன்னு நினைச்சேன்?'' என்றவர் மறுபடி பேப்பரில் தலை கவிழ்ந்து கொண்டார்.

மாடிப்படி ஏறும்போது தாமோதரன் இறங்கிக் கொண்டிருந்தான். மாதவனின் அண்ணன். வீட்டின் மூத்த மகன். சென்ற வருடம்தான் அவன் மனைவி சுலோச்சனா ஹார்ட் ப்ராப்ளத்தால் இறந்து போனாள். அந்த வீட்டில் அண்ணன் தம்பி மட்டுமே வேறு பெண் பிள்ளைகள் இல்லை.

தாமோதரன் மீனாவை பார்த்ததும் கண்களில் கேள்வி தொக்கி நிற்க மாலினியைப் பார்த்தான்.

மெல்ல சொன்னாள் மாலினி.

''ம்...ம்...'' என்று தலையை ஆட்டியபடி இறங்கிப் போய் விட்டான்.

மாலினி மீனாவை தன்னறைக்கு அழைத்து வந்து கதவை உட்புறமாய் தாழிட்டு விட்டு தங்கையை கோபமாய் முறைத்துப் பார்த்தாள்.

''கொஞ்சமாவது அறிவிருக்கா உனக்கு? படிச்சவதானே நீ?''

அரண்டு விட்டாள் மீனா.

''அ...க்...கா!''

''உன்னை யார் இங்கே வரச்சொன்னது? கூட்டிக்கிட்டு வரணும்னா... உன்னை அப்பா செத்த அன்னைக்கே அழைச்சிருக்க மாட்டேனா? உடம்பு நிறைய நகையும், லாரி நிறைய சீர் செனத்தியுமாகவா அப்பா என்னை இந்த வீட்டுக்கு அனுப்பி வச்சார்? நான் எப்படியோ காலத்தை தள்ளிக்கிட்டிருக்கேன். நீ இப்ப வந்திருக்கே! என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க? நீயே பார்த்தே



இல்லை... உனக்கு கிடைச்ச வரவேற்பை? ஏண்டி என்னை அசிங்கப்படுத்தறே?''

''.......''

''சரி... சரி... இருந்துக்க... அப்புறம் நான்தான் விரட்டி அடிச்சிட்டேன்னு என் புருஷன் என்னை கோவிச்சுக்கப் போறார். தப்பா நினைச்சுக்காதே மீனா. விருந்தும் மருந்தும் மூணு நாளைக்குன்னு சொல்லுவாங்க. சீக்கிரமா ஒரு வேலைய தேடிக்க... என்ன?''

''சீக்கிரமாய் கிளம்பற வழியைப் பார்!'' என்று சொல்லாமல் சொல்வது போலிருந்தது.

அவமானத்தில் உடல் சிலிர்த்தது மீனாவிற்கு.

அமைதியாய் இருப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

ஆனால், மாலினி நிலையையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பணக்கார வீட்டில் கட்டின புடவையுடன் படியேறியவள். என்னால் அவளுக்கு மரியாதைக் குறைவு ஏற்படக்கூடாது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து புறப்பட வேண்டும். அதற்கேற்றாற்போல் ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வேண்டும்.

மீனாவிற்கு ஒரு சின்ன அறையை ஒதுக்கித் தந்தாள் மாலினி.

இரண்டு நாள் ஓடிப்போனது.

மீனா, சும்மாயிருக்கவில்லை. மாலினிக்கு எல்லா வேலையிலும் ஒத்தாசையாக இருந்தாள்.

''ஏ... பொண்ணு இப்படி வா!'' மாமனார் திரிவேதி அவளை அழைத்தார்.

''சொல்லுங்க மாமா!'' என்று அவரருகே சென்று பவ்யமாய் நின்றாள்.

''ருடா... ஒரு காபி எடுத்திட்டு வா... ஓடு! சர்க்கரை வேண்டாம். அப்படியே கொஞ்சம் எலுமிச்சம் பழம் பிழிஞ்சி எடுத்திட்டு வா!'' விரட்டினார்.

''இதோ வந்திட்டேன்!'' என்று அடுத்த இரண்டு நிமிடத்தில் காபியோடு வந்தாள்.

''பரவாயில்லே... சறுசறுப்பாத்தான் இருக்கே!''

''அடியே பொண்ணு... உன் பேரென்ன சொன்னே?''

''மீனா!''

''மீனா... இங்கே வா...அப்பப்பா...'' வலியால் முகம் சுருக்கினாள் மாமியார் லட்சுமி.

''என்ன அத்தை பண்ணுது?''

''கால் வலி தாங்க முடியலே... கொஞ்சம் தைலம் தேய்ச்சு விடறியா?''

''குடுங்க...!'' என்று தைலத்தை வாங்கி அவளின் காலடியில் அமர்ந்து கொண்டு காலில் தேய்த்து நீவிவிட்டாள்.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் கடந்தபோது... போனால் போகட்டும் என்பது போல், போதும் என்றாள்.

''அம்மாடி மீனா... தாமு ருமை கொஞ்சம் க்ளீன் பண்ணிடு. வேலைக்காரி திடீர்னு லீவு போட்டுட்டா... ஒரு வாரம் வர மாட்டாளாம்...''

''சரி...!'' என்று மாடிக்குப் போனாள்.

அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மாதவன் கோபத்துடன் அம்மாவிடம் வந்தான்.

''அம்மா... நீ பண்றது உனக்கே நல்லாயிருக்கா? அந்தப் பொண்ணை இப்படி வேலை வாங்கறே?''



''ஏன் செய்யட்டுமே! அதிலென்ன தப்பு? கஷ்டப்பட்ட குடும்பத்திலேர்ந்து வந்தவதானே? இங்கே வேலை செஞ்சா என்ன? சும்மாவா சோறு போடச் சொல்றே?''

''அல்பத்தனமா பேசாதேம்மா... அசிங்கமாயிருக்கு. உன்னை எல்லாம் திருத்தவே முடியாது!'' என்று கூறி விட்டு போய் விட்டான்.

அந்த வீட்டில் மாதவனுக்கு தனி குணம்தான். இரக்க சுபாவம் கொண்ட நல்லவன்.

மீனாவை நல்லபடியாய் பாதுகாத்து நல்ல இளைஞனாய் பார்த்து அவளுக்கு மணமுடிக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்துடன்தான் இங்கே அழைத்து வந்தான்.

அவளை அம்மா வேலைக்காரி போல் நடத்துவது பிடிக்கவில்லை.

மீனா முதன்முறையாய் அந்த அறைக்குச் சென்றாள்.

இங்குமங்கும் துணிகள் இறைந்து கிடக்க... போர்க்களம் போல் காட்சியளித்தது.

அறையில் யாருமில்லை. அறையை ஒட்டி இன்னொரு அறை இருந்தது. அட்டாச்டு பாத்ருமாயிருக்கும் என்று எண்ணியவள் அதை திறந்து பார்க்க ஆர்வப்படாமல் அறையை சுத்தப் படுத்துவதில் தீவிரமானாள். கலைந்து கிடந்த துணிகளை மடித்து வைத்து தரையைப் பெருக்கினாள்.

இங்கொன்றும், அங்கொன்றும் சிகரெட் துண்டுகள் எறியப்பட்டிருந்தன.

அவசர அவசரமாய் வேலை செய்ததில் இடுப்பில் வியர்வை கொப்புளங்கள் முத்தமிட்டிருந்த அழகைப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம் போலிருந்தன. பாத்ருமிலிருந்து தலையை துவட்டியபடி வெளிப்பட்ட தாமோதரன் அவளை தன் அறையில்

எதிர்பார்க்காத திகைப்பில் அப்படியே நின்று விட்டான். அவன் கண்கள் அவளை அங்குலம் அங்குலமாக நோட்டமிட்டன.

சந்தனச் சிலை போன்ற உடம்பு! நீளமான அழகிய கண்கள். சிவந்த உதடு. லேசாய் குழி விழுந்த கன்னம். கொஞ்சத் தூண்டும் மோவாய். சாதாரண ஏழை குடும்பத்தில் இப்படியொரு தேவ அழகை காண்பது அரிது.

பெண் உடம்பை தொட்டு நாளான அவன் கைகள் பரபரத்தது.

மிக எதேச்சையாகத்தான் நிமிர்ந்தாள் மீனா. இடுப்பில் டவலுடன் வெற்று மார்போடு தலையை துவட்டியபடி நின்றிருந்த தாமோதரனை பார்த்து திகைத்தாள்.

'கடவுளே... இவர் உள்ளேதான் இருந்திருக்காரா?'

நல்லவேளை... எல்லா வேலையும் முடித்து விட்டிருந்தாள். அதனால்... விறுவிறுவென்று வெளியே சென்று விட்டாள்.

தாமோதரன் அவள் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'கடவுளே... சீக்கிரம் எனக்கொரு வேலை கிடைக்க அருள் புரி!' கண் மூடி பிரார்த்தனை செய்து விட்டு படுத்தாள்.

அசதியாக இருந்தது. உடம்பெல்லாம் வலித்தது. இன்று வேலை பளு அதிகம். இரண்டு வேலைக்காரியும் சொல்லி வைத்தாற்போல் லீவு எடுத்துக் கொண்டதால் எல்லா வேலையும் இவளே செய்ய வேண்டியதாயிற்று.

மாதவன் அறையிலிருந்த தின நாளிதழின் வரி விளம்பரம் பகுதியை மட்டும் எடுத்து வந்திருந்தாள். அவளுக்கு ஒத்துப் போவது போல நாலைந்து வேலை வாய்ப்புகள் இருந்தன.

விடிந்ததும் முதல் வேலையாய் அவற்றிற்கு அப்ளிகேஷன் எழுதி அனுப்ப வேண்டும்.



யோசித்துக் கொண்டிருந்தவள், டொக், டொக் என தன்னறை கதவு தட்டப்படுவது கேட்டு ஆச்சரியமாய் எழுந்து கதவைத் திறந்தாள்.

திறந்ததுதான் தாமதம்... அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தது ஒரு உருவம். கணமும் தாமதியாது அவளை இறுக அணைத்து படுக்கையில் சாய்த்தது.

8



அந்த பஸ் மேட்டுப்பாளையம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

குளிர் காற்று சிலிர்ப்புடன் ஓடி வந்து ஜன்னலோரம் அமர்ந்திருந்த மீனாவை வெட வெடக்க செய்தது.

இருபதாவது முறையாக அந்த பேப்பரை எடுத்துப் படித்தாள்.

'பாரிஸ நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் வயதான அம்மாவை வீட்டோடு தங்கி கவனித்துக் கொள்ள ஆதரவற்ற விதவைப் பெண் தேவை!' என்று முகவரியும், போன் நம்பரும் தரப்பட்டிருந்தது. மீனா போனில் தொடர்பு கொண்டாள்.

நேரில் வரச் சொல்லி ஒரு பெண்ணின் குரல் அழைத்தது. இதோ புறப்பட்டு விட்டாள்.

முந்தின நாள் நடந்த சம்பவத்தை இப்போது நினைத்தாலும் உடம்பு தூக்கி வாரிப் போட்டது.

தாமோதரன் திடீரென்று தன்னறைக்குள் நுழைந்து அப்படி மூர்க்கத்தனமாய் நடந்து கொள்வான் என்று அவள் நினைத்துக் கூட பார்க்கவில்லை.

காட்டுப் புலியிடம் சிக்கிய மானாய் அவள் தப்பிக்க துள்ளினாள், துடித்தாள். ஆஜானுபாகுவாய் இருந்த தாமோதர னிடமிருந்து அவளால் விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

நல்லவேளை - கடவுளாய் பார்த்து அனுப்பியது போல மாதவன் அங்கு வந்தான். அவன் தாமதமாய் வீடு திரும்பியிருந்தான். உறக்கம் வராமல் பால்கனியில் நடந்தவன் அண்ணன் மீனாவின் அறைக்குள் நுழைவதைப் பார்த்து விட்டுத்தான் ஓடி வந்தான்.

தம்பியை அங்கு எதிர்பார்க்காத தாமோதரன் விக்கித்துப் போய் உடனடியாக வெளியேறினான்.

மீனா கூனிக் குறுகி அழுதாள்.

''ஸாரிம்மா... வெரி ஸாரி... அழாதே மீனா! எல்லாம் காலையிலே பேசிக்கலாம். இப்ப படுத்துத் தூங்கு. மனசில ஒண்ணும் வச்சுக்காதேம்மா!'' குற்ற உணர்வுடன் மன்னிப்பு கேட்டு விட்டுப் போனான் மாதவன்.

உடனடியாக மறந்து விடக்கூடிய செயலா இது? கடவுளே... எனக்கு எங்குமே பாதுகாப்பில்லையா? ஓட ஓட விரட்டிக் கொண்டிருக்கிறாயே! இனி இங்கு ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாது. விடிந்ததும் கிளம்பி விட வேண்டியதுதான். இனி, இந்த ஊரே நமக்கு வேண்டாம்! என்று முடிவு பண்ணியவள், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட்டாள்.

பேப்பரில் கண்ட விளம்பரம் அவளை ஈர்த்தது. தனக்கு எல்லாவிதத்திலும் இந்த இடம்தான் பாதுகாப்பானதாய் இருக்கும் என்று தோன்றியது. புறப்பட்டு விட்டாள்.

மேட்டுப்பாளையம் வந்திறங்கி அங்கிருந்து குன்னூர் சென்றாள்.

தினகர் எஸ்டேட்டை கண்டுபிடிப்பதில் அவளுக்கு அவ்வளவு சிரமம் ஏற்படவில்லை.

மீனா முதல் காரியமாய் நெற்றியிலிருந்த பொட்டை எடுத்து விசியெறிந்தாள்.



எஸ்டேட்டை ஒட்டி பெரிய பங்களா இருந்தது. வாட்ச்மேனிடம் விபரம் சொன்னதும் உள்ளே சென்று யாரிடமோ கேட்டு விட்டு வெளியில் வந்தான்.

''உங்களை வரச் சொன்னாங்க... நீங்க உள்ளே போங்கம்மா!'' என்று அனுப்பி வைத்தான்.

ஒருவித கிலியுடன்தான் உள்ளே நுழைந்தாள். கேட்டைத் தாண்டி விசாலமான புல்தரை நீண்டுக் கொண்டே போனது.

பழங்காலத்தில் கட்டப்பட்ட பங்களா! அங்கங்கு இக்கால நாகரிகத்திற்கேற்ப ஆல்டர் செய்யப்பட்டிருந்தது. பழமையும், புதுமையும் சேர்ந்த அந்த பங்களாவில் தெய்வீகம் குடி கொண்டிருந்தது.

பங்களாவின் முன்புறம் ஒரு அறை தடுக்கப்பட்டிருந்தது. அங்கு நடுத்தர வயதுள்ள பெண்ணொருத்தி நின்றிருந்தாள்.

''நீங்க...''

''என் பேர் மீனா... சென்னையிலிருந்து வர்றேன்!''

''வாங்கம்மா! உங்களுக்காகத்தான் மேடம் காத்திருக்காங்க... உள்ளே போங்க!'' என்று அந்த அறைக் கதவைத் திறந்து அனுப்பினாள்.

அது அலுவலக அறை போன்ற அம்சங்களுடன் இருந்தது.

உள்ளே நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் கண்ணாடி கண்களால் இவளை ஏறிட்டார்.

''வணக்கம்!''

''வணக்கம்... உட்காருங்க!''

அமர்ந்தாள்.

''நீங்கதான் மிஸஸ் மீனாவா?''

''ஆமாங்க!''

''உங்க ஹஸ்பெண்ட் எப்ப இறந்து போனார்?''

''போன வருஷம்''

''ஐ ஸீ... குழந்தைங்க?''

''இ... இல்லே...''

''ரொம்ப சின்னப் பொண்ணா இருக்கியேம்மா! தைரியமா ஊரை விட்டு வேற வந்திருக்கே! உன்னோட ரிலேஷன்ஸ் தடுக்கலியா?''

''எ... எனக்கு யாருமில்லேங்க... போன மாசம் என் அப்பாவும் தவறிட்டார்.''

''ச்சொ... ச்சொ!'' என்று கண்ணாடியை கழற்றி பரிதாபப் பட்டாள் புனிதா என்கிற அந்தப் பெண்மணி.

பொய் சொல்கிறோமே என்கிற பயம் இவளுக்கு.

''என் பேர் புனிதா! இந்த பங்களாவோட நிர்வாகத்தை நான்தான் பார்த்துக்கறேன்... குணவதி அம்மாவை கவனிக்க பொறுப்பான நல்ல பொண்ணாப் பார்த்து நியமிக்கிற பொறுப்பும் என்கிட்டேதான் ஒப்படைச்சிருக்காங்க. எங்க எம்.டி. ஐ.மீன்... குணவதி அம்மாவோட ஒரே மகன்... இப்ப வெளியூர் போயிருக்கார். ரெண்டு மூணு நாள்ல வந்திடுவார். எனக்கு உன்னை பிடிச்சிருக்கு. நீ முதல்ல குணவதியம்மாவை சந்திக்கணும். அப்புறம்... உனக்கு திருப்தி என்றால்... இந்த வேலை உனக்குத்தான்!''

''எனக்கு இப்பவே முழு திருப்திதான். நான் இந்த வேலைய முழு மனசோட ஏத்துக்கறேன்!''

புனிதா சிரித்தாள்.



''சரி... உனக்கு முழு நேரமும் இங்கேதான் வேலை. அம்மாவை அருகேயிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். அம்மாவோட உடம்பை சுத்தமா வச்சிருக்கணும். அம்மாவோட மனசு கோணாம நடந்துக்கணும். மாசம் ரெண்டாயிரம் சம்பளம். இங்கேயே தங்கிக்கலாம். சாப்பாடும் இங்கேயே... மனசுல கொஞ்சம் கூட அருயை இல்லாம அம்மாவை பராமரிக்கணும்..''

''அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாங்க. நான் சிறு வயதிலேயே தாயை இழந்தவள். அதனால என் தாயை மாதிரியே பார்த்துக்குவேன்.''

''எனக்கும் அந்த நம்பிக்கையிருக்கு. என் கூட வாம்மா!'' என்று அவளை அழைத்துச் சென்றாள் புனிதா.

இடது கோடியில் விசாலமாய் இருந்தது அந்த அறை. இரட்டைக் கட்டிலில் கிழிந்த நாராய் படுத்திருந்தாள் குணவதி அம்மாள். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த அந்த அம்மாவால் பேச முடியவில்லை. தலை வெள்ளை வெளேர் என்று நரைத்திருந்தாலும் முகத்தில் களையும், கனிவும் இருந்தது.

இவர்களை தலை சாய்த்துப் பார்த்தாள்.

''அம்மா... இது மீனா! உங்களை இனி இவங்கதான் கவனிச்சுக்கப் போறாங்க!''

குணவதிக்கு ஏனோ மீனாவைப் பார்த்ததும் பிடித்துப் போய்விட கண்களால் அருகே அழைத்தாள்.

மீனா... அவளருகே குனிந்தாள்.

''அம்மா... கவலைப்படாதீங்க... நீங்க ரொம்ப சீக்கிரமே குணமாகி எழுந்து நடமாடிடுவீங்கம்மா! அந்த நம்பிக்கை எனக்கிருக்கு!'' என்றாள் அன்பாக மீனா.

குணவதி திருப்தியுடன் புனிதாவைப் பார்த்தாள்.

மீனா ஒரே நாளில் குணவதியோடு ஒட்டிக் கொண்டு விட்டாள்.

இதற்கு முன் அவளை கவனித்துக் கொண்டிருந்த லீலாவதி என்கிற பெண்... குணவதியால் பேச முடியாது என்ற காரணத்தை சாதகமாக்கிக் கொண்டு அவளை சரிவர பராமரிக்காமல், பால் பழமெல்லாம் அவளே சாப்பிட்டு தன்னை மெருகேற்றிக் கொண்டாளே தவிர நோயாளியை கவனிக்கவில்லை. அதுமட்டுமின்றி... அவளெங்கே குணமாகி வந்து பேசப் போகிறாள் என்ற தைரியத்தில் குணவதியின் கண்ணெதிரிலேயே அந்த வீட்டு பொருட்களை திருடி எடுத்துக் கொண்டு செல்வாள். பல நாள் திருடி ஒருநாள் அகப்பட மாட்டாளா என்ன? அவள் அம்மாவின் எதிரே கால் மேல் கால் போட்டுக் கொண்டு பாலை அருந்திக் கொண்டிருந்ததை எதேச்சையாக அம்மாவைப் பார்க்க வந்த தினகர் பார்த்து விட்டான் அது போதாதா? அன்றே லீலாவதியை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விட்டான்.

மீனா குணவதியின் அறையிலேயே கட்டிலுக்கு அருகில் படுத்துக் கொண்டாள். காலை, மாலை இரு வேளையும் உடம்பை வெந்நீரால் துடைத்து உடை மாற்றினாள். இயற்கை கடன்களை முகம் சுளிக்காமல் சுத்தம் செய்தாள். டாக்டர் தந்திருந்த மருந்து, மாத்திரைகளை வேளா வேளைக்கு உட்கொள்ள வைத்தாள். சாப்பிட பிடிக்காமல் முகம் சுளித்தவளை அன்பாக வற்புறுத்தி ஊட்டி விட்டாள். அது மட்டுமில்லாது அவளருகே அமர்ந்து கந்த சஷ்டி கவசம் படித்தாள். இரண்டு நாளைக்கொருமுறை பெட் கவர் முதற்கொண்டு, கதவு ஜன்னல் திரைச் சீலைகளை எல்லாம் மாற்றுவாள்.

நோயாளிக்கு சுத்தமும், புத்துணர்ச்சியும் அவசியம் தேவை. ஒரே மாதிரியான போரடிக்கக்கூடிய, விஷயங்களை பார்க்க நேரிடும்போது வெறுப்புதான் மேலோங்கும். அதுவும் குணவதி போன்ற கை, காலை அசைக்க முடியாத நோயாளிகளுக்கு இம்மாதிரியான விஷயங்கள் வெகுவாகவே தாக்கத்தை ஏற்படுத்தும். மன ரீதியாக பாதிக்கப்படும் விஷயங்கள் பற்றி மீனா



அறிந்திருந்ததால்... அவள் ஒவ்வொன்றையும் கவனமுடன் செய்தாள்.

சுவாமி பாடல்களை மெல்லிய சப்தத்தில் டேப் ரிக்கார்டரில் ஓட விடுவாள். குண்வதி பார்வையில் படுமாறு அழகான கோகுல கிருஷ்ணன் சிலையை வைத்து மலர்களால் அலங்கரித்து பூஜித்தாள்.

அவளின் இந்த அணுகுமுறை, சின்னச் சின்ன விஷயங்களையும் நேர்த்தியாக செய்யும் திறமை குணவதிக்கு ரொம்பவே பிடித்திருந்தது.

'மகாலக்ஷ்மி மாதிரியிருக்கிறாள். இருபது வயதுக் கூட நிரம்பியிருக்காது போலிருக்கிறாள். அதற்குள் கணவனை இழந்து விட்டிருக்கிறாள். பாவம்! தினகரிடம் சொல்லி இவளுக்குத் தேவையான உதவிகளை செய்யச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

குணவதி தூங்கிய பிறகு மீனா தோட்டத்திற்கு செல்வது வழக்கம். அழகழகான மலர்களால் சூழ்ந்திருந்த வண்ண வண்ண மலர்களையும், அதை தாங்கி நின்றிருந்த மரம், செடி, கொடிகளையும் உரசியபடி செல்லும் மேகப் பொதிகளின் ஜில்லிப்பை தொட்டு ரசிப்பதென்பது அவளுக்கு மிக பிடித்தமான ஒன்று. போராட்டம், போராட்டம் என்று வாழ்க்கையில் ரண களத்தை மட்டுமே சந்தித்துக் கொண்டிருந்தவளுக்கு இந்த ஊரும், இயற்கை அழகும் அவளுக்கு அரு மருந்தாய் இருந்தது. பாதுகாப்பான இடத்தில், தாயின் மடியில் படுத்திருக்கும் நிம்மதி இப்போது அவளிடம்.

பூத்து உதிர்ந்து வீணாய் மலர்கள் சருகாகிப் போவதில் அவளுக்கு உடன்பாடில்லை. அதனால் அவற்றை தொடுத்து அழகிய மாலையாக்கி தினசரி கோகுல கிருஷ்ணனுக்கு அணிவிப்பாள்.

இரண்டு, மூன்று நாட்களில் வருவதாய் சொல்லிவிட்டு சென்றவன் ஒரு வாரம் கழித்துதான் வந்தான்.

வந்தவன் நேரே அம்மாவின் அறைக்குத்தான் சென்றான்.

அறைக்குள் சென்றவன் ஸ்தம்பித்து நின்றான். சுத்தமாய் மெல்லிய நறுமணம் வீச... மூடிய அறைக்குள் சூரிய ஒளி தங்கியிருப்பது போல் பளீரென்றிருந்த அறையும், அம்மா முகத்தில் கண்ட தெளிவும் அவனுக்குள் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் உற்பத்தி செய்தது.

''அம்மா... நல்லாயிருக்கியாம்மா...?'' அம்மாவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டு அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

மகனைப் பார்த்து புன்னகைத்தாள் குணவதி.

புனிதா அங்கு வந்தாள்.

''சார்... அம்மாவை கவனிச்சுக்க புதுசா ஒரு லேடிய போட்டிருக்கோம். அவங்கதான் இப்ப கவனிச்சுக்கறாங்க. அம்மாவோட உடம்புல ஓரளவு முன்னேற்றம் தெரியுதுன்னு டாக்டர் கூட சொன்னார் சார்!''

''ஐ... ஸீ... அம்மாவை கவனிச்சுக்கிற அந்த லேடிய வரச் சொல்லுங்க...'' என்றான் ஆச்சரியமாய்.

''இதோ இவங்கதான்!'' வந்துக் கொண்டிருந்த மீனாவை காண்பித்தாள்.

அவனைப் பார்த்த மீனாவும், அவளைப் பார்த்த தினகரும் ஒரு சேர அதிர்ந்தனர்.

''சு... பா...!'' என்றான் மீனாவைப் பார்த்த அதிர்ச்சியில் தினகர்.



9



''சார் இவங்க பேர் மீனா!'' என்ற புனிதா, ''மீனா இங்கே வா... இவர்தான் எம்.டி. தினகர்!'' என்றாள் அருகில் அழைத்து கிசுகிசுப்பாக.

சகலமும் பதறியது மீனாவுக்கு அவனைப் பார்த்த பிரம்மிப்பும், பதற்றமும் சேர்ந்து கொண்டு, ''வ... வணக்கம் சார்!'' என்றாள் கை கூப்பி.

அவன் முகத்தில் கடுமையா, கோபமா? என்று இனம் பிரித்துப் பார்க்க முடியாத ஏதோவொன்று தினகர் முகத்தில் படர்ந்திருந்தது. அவன் மீனாவைப் பார்த்த பார்வையில் வெறுப்பு மேலோங்கி யிருந்தது.

மீனாவுக்கு அவனைப் பார்க்க பார்க்க... ஆச்சரியமும், அதிர்ச்சியும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

'அவன்தான்... அவனேதான்! என் கனவில் அடிக்கடி வருபவன். வேகமாய் காரை ஓட்டி எனக்கு பீதியேற்படுத்தி அதைப் பார்த்து சந்தோஷப்படுபவன். கனவில் வந்தவன் எப்படி நிஜத்தில்? இது கனவா? நனவா? இவன்தான் சேச்சே... என்ன பெண் நான்? மரியாதையில்லாமல் அவன் இவன் என்கிறேன்? இவர்தான் இந்த எஸ்டேட் முதலாளியா?'

''யார் நீ, எங்கேர்ந்து வர்றே?'' என்றான்.

அந்த கேள்வியில் திணறிய மீனா எச்சில் கூட்டி விழுங்கிக் கொண்டாள்.

''என் பேர் மீனா! சென்னையிலேர்ந்து வர்றேன்!''

''பொய் சொல்லாதே. நீ மீனா இல்லே... சுபா! சுபாதானே?''

''மீனா ஆச்சரியமாய் எல்லோரையும் ஒரு பார்வை பார்த்து விட்டு. ''இல்லே சார். நான் மீனாதான்... என் பேர் சுபாயில்லே?''

''பேரை மாத்தி வச்சுக்கிட்டா... தெரியாமப் போயிடுமா என்ன? அமெரிக்காவுலேர்ந்து எப்ப வந்தே?''

''அமெரிக்காவா? நான் சென்னையிலேர்ந்து வர்றேன் சார்!''

புனிதா தினகரை வியப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சார்... இவங்க பேரு மீனாதான். சென்னைதான் பூர்வீகம்... இவங்க சர்ட்டிபிகேட்ஸ் என்கிட்டேதான் இருக்கு... இவங்க ஒரு விடோ சார்!''

''ஓஹோ... விக்னேஷ் பின்னாடி நாய் மாதிரி அமெரிக்காவுக்குப் போனியே... என்னாச்சுப் பார்த்தியா? உன்னை விட்டுட்டு மேலோகம் போயிட்டான். ஆமா... இங்கே வந்து ஆயா வேலை பார்க்கிற அளவுக்கு ஏழையாயிட்டியா? கோடிக் கணக்கிலே சொத்து இருந்ததே... அதெல்லாம் என்னம்மா ஆச்சு? இங்கே பார்... ஏதோ திட்டம் போட்டுக்கிட்டு என் வீட்டுக்கு வந்திருக்கே... ஆம் ஐ கரெக்ட்? உன்னோட எந்த திட்டமும் இங்கே வொர்க் அவுட் ஆகாது. மரியாதையா வெளியே போயிடு!''

மீனா சிலையாகி விட்டாள்.

'என்ன சொல்கிறான் இவன்? யார் அந்த சுபா? என்னைப் போலவே இருப்பாள் போலும். அவள்தான் நானென்று இவன் தவறாக எண்ணி விட்டிருக்கிறான்.'

''சார்... நீங்க நினைக்கிற மாதிரி நான் சுபாயில்லே. நான் மீனா சார்! யாருமில்லாத அனாதை.''

''ஆமா சார்... இவங்க மீனாதான்!'' என்றாள் புனிதா.

''ஹலோ மேடம். எதை வச்சு இது மீனாதான்னு அடிச்சு சொல்றீங்க? சுபாவைத் தெரியுமா உங்களுக்கு? தெரியாம பேசக்கூடாது. இவதான் சுபா. எனக்கு நல்லாத் தெரியும். ஏய்...



உன்னோட நடிப்பு என்கிட்டே எடுபடாது. மரியாதையா வெளியே போயிடு.''

''சா...ர்...'' என்றாள் கண்ணீர் மல்க.

''சும்மா கண்ணீர் விட்டா மயங்கிடுவேன்னு நினைக்காதே. அதெல்லாம் ஒரு காலம். மரியாதையா போயிடு.''

அவள் கழுத்தில் கையை வைத்து தள்ளினான்.

குணவதி நடப்பவை அனைத்தையும் பார்த்து பதறினாள்.

'அவளை வெளியே அனுப்பாதே தினகர்' என்று எழுந்தோடி வந்து தடுக்க நினைத்தாலும் உடல் அசைய மறுக்கிறதே வாய் பேச மறுக்கிறதே!

''ம்...ம்...'' என்று முனகினாள்.

தினகர் அம்மாவைப் பார்த்தான்.

குணவதி சிரமப்பட்டு தலையை ஆட்டி, 'அவளை அனுப்பிடாதே' என்று மறுத்தாள்.

அதை புரிந்து கொண்ட தினகர் அம்மாவிடம் வந்தான்.

''அம்மா... இவ நல்லவ இல்லேம்மா! உன் பிள்ளையோட வாழ்க்கையை கெடுத்தவ...''

''சார்... நீங்க என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. நீங்க நினைக்கிறா மாதிரி நான் சுபா இல்லே சார். நான் சென்னையை தாண்டி இதுவரைக்கும் எங்குமே போனதில்லே. வேற போக்கிடம் இல்லாம, ஒரு வேலையைத் தேடி இப்பதான் முதன்முதலா சொந்த மண்ணை விட்டு இந்த ஊருக்கு வந்திருக்கேன். ஒருவேளை நீங்க சொல்ற சுபா என்னை மாதிரி இருப்பாங்களோ என்னவோ? தயவு செய்து நான் சொல்றதை நம்புங்க சார்!'' என்றாள் மீனா.

'அவள் சொல்வதெல்லாம் உண்மையாகத்தான் இருக்கும். அவளை நம்புடா' என்றது அம்மாவின் பார்வை.

இப்போது தினகருக்கும் குழப்பம் எட்டிப் பார்த்தது.

'இவள் சொல்வது நிஜமாய் இருக்குமோ?' அவளை கூர்ந்து கவனித்தான்.

அதே முகம். அதே நிறம். கண், மூக்கு, உதடு எல்லாமே அதேதான். ஆனால் சுபாவுக்கு மூக்கு பக்கத்தில் வலது புறம் ஒரு மச்சம் இருக்கும். இவளிடம் இல்லையே! இல்லாத மச்சத்தையாவது ஒட்ட வைத்து ஏமாற்றலாம். இருக்கிற மச்சத்தை மறைக்க முடியாதே. ச்சே... நான் தான் அவசரப்பட்டு விட்டேனோ?' தினகருக்கு தன் தவறு புரிந்தது என்றாலும் அவளிடம் தவறை ஒப்புக் கொள்ள ஈகோ தடுத்தது.

''சரி... சரி... போ!'' என்று கூறிவிட்டு சரேலென வெளியேறி னான்.

மழை பெய்ந்து ஓய்ந்தாற் போலிருந்தது.

குணவதி மீனாவை கண்களால் அருகே வரும்படி அழைத்தாள்.

'அவன் பேசிய எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதேம்மா' என்றது அவள் பார்வை.

மீனா அந்தம்மாளின் தலையை ஆதுரமாய் தடவிக் கொடுத்தாள்.

''சந்தர்ப்பமும், சூழ்நிலையும், என் தோற்றமும் எனக்கு எதிராக இருக்கும்போது சாரை எப்படி குறை கூற முடியும்? நான் எதையும் மனசில வச்சுக்கலேம்மா? ஆனா, என்னைப் போலவே வேறொருத்தி இந்த உலகத்திலே இருக்காங்க என்பதை நினைக்கிறபோது ஆச்சரியமாகவும், இருக்குது. அந்த சுபாவை பார்க்கணும் போலவும் இருக்குது'' என்றாள்.

''சுபாவை நீ மட்டுமில்லே... இந்த பங்களாவிலே யாருமே பார்க்காம இருக்கிறதுதான் ரொம்ப நல்லது. சார் கூட ஒரு முறை



அந்த சுபாவைப் பார்த்திருக்கேன். அவர் உன்னைப் பார்த்து கோபப்பட்டதுல தப்பே இல்லே. நான் கூட உன்னை முதன் முதலா பார்த்தப்ப... எனக்கே ஷாக்தான். ஆனா அவ அல்ட்ரா மாடர்ன் கேர்ள். அவளோட நடை உடை பாவனை வேற. நீ சுபா இல்லேன்னு புரிஞ்சுக்கிட்டேன். இப்பதான் சார் புரிஞ்சுக்கிட்டாரே. இனி எந்த பிரச்னையும் இல்லை. சரி... நேரமாகுது... நீ வேலைய கவனி மீனா...'' என்று கூறி விட்டு நகர்ந்து விட்டாள் புனிதா.

மீனா குணவதியருகே வந்தமர்ந்தாள். அவளை படுக்கை யிலிருந்து மெல்ல தூக்கி முதுகில் இரண்டு தலையணைகளை வைத்து சாய்ந்தவாக்கில் அமர வைத்தாள். அவளுக்கு வாகாக உடம்பை குணவதியால் ஓரளவு அசைக்க முடிந்தது. ஒத்துழைப்பு கொடுக்க முடிந்தது. கூடிய விரைவில் முன்பு போல் தன்னால் எழுந்து நடமாட, பேச முடியும் என்ற நம்பிக்கை குணவதியின் மனசில் அழுத்தமாய் எழுந்திருந்தது.

மீனா கவனமாய் அவளுக்கு மதிய உணவை ஊட்டினாள். முன்பு போல் குணவதி வேண்டாம் என்று அடம் பிடிப்பதில்லை. அமைதியாய் மீனாவின் முகத்தையே பார்த்தபடி சாப்பிட்டாள். அவளின் அழகான, அமைதியான முகம் அந்தம்மாவிற்கு மிகவும் பிடித்திருந்தது.

'இந்தப் பெண் எந்தக் குறையும் வராமல் நன்றாயிருக்க வேண்டும்' என்று அவள் மனசு மனப்பூர்வமாய் வாழ்த்தியது.

இரவெல்லாம் உறக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள் மீனா.

காலையில் நடந்த சம்பவம்தான் மறுபடி மறுபடி கண்முன் விரிந்தது.

'யாரந்த சுபா? இவர் அவளை காதலித்திருப்பார் போலும். அவளால் வெகுவாய் பாதிக்கப்பட்டிருக்கிறார். அதனால்தான் என்னைப் பார்த்ததும் அவ்வளவு கோபப்பட்டிருக்கிறார்.'

என்னைப் போல் உள்ள ஒருத்தியைத்தான் அவர் காதலித்திருக்கிறார். அந்த எண்ணமே அவளுக்கு வெகுவான சந்தோஷத்தை தந்தது.

முட்டாள் பெண்ணே! உன்னைப் போல் உள்ள ஒருத்தியைத்தான் அவன் இப்போது வெறுக்கிறான். அதைப் புரிந்து கொள்.

என்ன... அவன் மீது கண்டதும் காதலா? கனவில் அடிக்கடி வந்தவனை நேரில் பார்த்ததும் கற்பனை கரை புரண்டு ஓடுகிறதா?

இந்த கற்பனையை இதோடு நிறுத்திக் கொள்! தினகர் யார்? உனக்கு சம்பளம் தரும் முதலாளி. நாலைந்து எஸ்டேட்களுக்கு சொந்தக்காரன். உடைக்கேற்ற நிறத்தில் காரில் போகிற பணக்காரன். ஆயிரம் குடும்பங்கள் அவனால் வாழ்கின்றன.

நீ யார்? அவனிடம் கை நீட்டி சம்பளம் வாங்கும் வேலைக்காரி. அதுவும் ஆயா வேலை பார்ப்பவள். வயிற்றுப்பாட்டிற்காகவும், உன் கற்பை பாதுகாத்துக் கொள்ளவும் விதவை என வேஷம் போட்டிருப்பவள். உறவினர்கள் இருந்தும் அனாதையானவள். கூடப் பிறந்த சகோதரிகள் உன்னை தங்களுடன் வைத்திருக்க பயந்து உன்னை பந்தாடியதை மறந்திருந்தால்... ஒதுங்க இடம் தேடி, அலைந்ததை நீ மறந்திருந்தால்... மறுபடி ஒரு முறை நினைத்துப் பார்த்துக் கொள்! காதலாவது கத்தரிக்காயாவது? தராதரம் என்று ஒன்று இல்லையா? கனவில் வருகிறவனை யெல்லாம் காதலிக்க நினைத்தால் நாடு தாங்குமா? புத்தியை அலைய விடாமல் ஒழுங்காய் இரு!'

மனசாட்சி அவளை, கண்டித்து அடக்கியது.



## 10



தினகரின் முன்னே சின்ன மர வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய டீப்பாய் இருந்தது. அதன் மீது அயல்நாட்டு மதுபானங்கள் அவன் தொட காத்திருந்தன. ஒரு பீங்கான் தட்டில் சிக்கன் இருந்தது.

தினகர் எட்டாவது சிகரெட்டை உதட்டிற்கு கொடுத்தான். லைட்டரால் அதன் முனையை சிவப்பாக்கியவன் எழுந்து பால்கனிக்கு வந்தான்.

மாலை ஆறு மணிக்குள் வெகுவாய் இருட்டி விட்டிருந்தது. மார்கழி மாதம் என்பதால் பனியின் ஆதிக்கம் அதிகமாய் இருந்தது. தோட்டத்தில் சர்வ சாதாரணமாய் வேலையாட்கள் இங்குமங்கும் அலைந்துக் கொண்டிருக்க... அது யார்... பவள மல்லி மரத்தருகே?

தினகர் கூர்ந்து பார்த்தான்.

தோட்டத்து விளக்குகள் வெளிச்சத்தை துப்பிக் கொண்டிருந்த தால்... அவளை கண்டுபிடிக்க சிரமம் ஏற்படவில்லை.

மீனாதான்! பூக்களை பறித்துக் கொண்டிருந்தாள்.

தினகரின் கண்களில் சிவப்பேறியது.

அவள் சுபா இல்லை. அது தினகருக்கே புரிந்தது. என்றாலும் மீனாவைப் பார்க்கும் போதெல்லாம் தலையில் கொதித்தது. அவளை அடித்து துவைத்து சின்னாபின்னப் படுத்த வேண்டும் போலிருந்தது.

தினகர் இரு கைகளை தட்டி ஓசையெழுப்பினான். கைதட்டும் சப்தம் கேட்டு சுற்றுமுற்றும் பார்த்த மீனா, முதலாளிதான் அழைக்கிறார் என்பதை அறிந்து அட்டென்ஷனில் நின்றாள்.

''என்ன பார்த்துக்கிட்டே நிக்கிறே? மேலே வா!'' என்றான் அலட்சியமாய்.

என்னவோ, ஏதோ என்று பயந்தபடி மூச்சிரைக்க ஓடி வந்தாள் மீனா.

''சார்!'' என்று பவ்யமாய் அவன் முன் நின்றாள்.

அவளை ஏற இறங்க ஒருமுறை பார்த்த தினகர், ''உனக்கென்ன வயசு?'' என்றான்.

''இ...இருபது...''

''அறிவிருக்கா?''

''.......''

''இருபது வயசாகுதே. கொஞ்சமாவது அறிவிருக்கான்னு கேட்டேன்!''

எதற்காக திடீரென்று கூப்பிட்டு வைத்து இப்படி கேள்வி கேட்கிறார்? அவராகவே பேசட்டும். நாம் வாயே திறக்கக் கூடாது என்று மௌனமாய் நின்றிருந்தாள்.

''அம்மாவை பார்த்துக்கச் சொன்னா... கார்டன்ல உனக்கென்ன வேலை?''

''அம்மா தூங்கறாங்கய்யா! அதனாலதான் தோட்டத்துக்கு வந்து பூப்பறிச்சிட்டிருந்தேன்.''

''அதுக்குத்தான் அறிவிருக்கான்னு கேட்டேன். விளக்கு வெச்சிட்ட பிறகு பூப்பறிப்பாங்களா?''

''எ....எனக்கு தெரியாது சார். இனிமே இப்படியெல்லாம் நடக்காது.''

''ம்... சரி...சரி... என்னோட பெட்ரூம்ல பெட் கவரெல்லாம் மாத்தணும். போய் மாத்து. இங்க பார் அம்மாவை பார்த்துக்கறது மட்டுமில்லே... அம்மா தூங்கற நேரத்திலே வீட்டு வேலையும் செய்யணும். நான் எந்த வேலை சொன்னாலும் செய்யணும்.



இதுக்கெல்லாம் விருப்பம்னா இங்கே இருக்கலாம். இல்லேன்னா இப்பவே இடத்தை காலி பண்ணலாம்.''

''இல்லே சார்... எந்த வேலைன்னாலும் நான் செய்வேன் சார்!''

''ஓஹோ... எல்லாத்துக்கும் தயாராதான் இருக்கே... அப்படித்தானே?'' என்றான் அர்த்தமான சிரிப்பொன்றை வீசி!

''மீனா வாயே திறக்கவில்லை.

பேசட்டும். அவன் என்ன வேண்டுமானாலும் பேசட்டும்.

''சரி... சரி... போ!''

நகர்ந்தாள்.

''கொஞ்சம் நில்லு! எனக்கு ஐஸ் க்யூப் வேணும்...''

''இதோ வந்திட்டேன்... சார்!'' என்றவள் ஃப்ரிட்ஜைத் திறந்து ஐஸ் க்யூபை எடுத்துக் கொண்டு வந்து டீப்பாய் மேல் வைத்தாள்.

''ம்... யு மே கோ நவ்!'' என்றவன் அவள் வெளியேறியதும் படாரென கதவை அறைந்து சாத்தினான்.

தினகர் கப்போர்டை திறந்து ஒரு ஆல்பத்தை எடுத்தான்.

ஒவ்வொன்றாய் பிரித்துக் கொண்டே வந்தவன் அந்த போட்டோவைப் பார்த்ததும் வெறித்துப் பார்த்தான்.

அவன் முகத்தோடு முகம் ஒட்டி தோளில் கை போட்டு இறுக்கிக் கொண்டு பளீரென்று சிரித்தபடி போஸ் கொடுத்திருந்தாள் சுபா.

மீனாவின் ஜெராக்ஸ் பிரதி.

''சுபா... சுபா... என்னை ஏமாத்திட்டியே! நான் உனக்கு எதுல குறை வச்சேன்? என் அந்தஸ்துல கால் தூசுக் கூட எட்ட முடியாத தூரத்தில் இருந்தாலும் அதை எல்லாம் பார்க்காம... உன் மேல உயிரையே வச்சிருந்தேனே! அதையாவது நினைச்சிப் பார்த்தியா? கல்யாணம் பண்ணினா உன்னைதான் பண்ணுவேன்னு அம்மா

கிட்டே உறுதியா சொல்லியிருந்தேன். அம்மாவுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் என் சந்தோஷத்துக்காக ஒத்துக்கிட்டாங்களே!''

'ஆனா... ஆனா...' அதற்கு மேல் அவனால் யோசிக்க முடியவில்லை. பாட்டிலை திறந்து அப்படியே தொண்டைக்குள் சரித்துக் கொண்டான்.

தினகரின் நண்பன் விக்னேஷ் மூலமாக அறிமுகமானவள்தான் சுபா.

அழகென்றால்... அப்படியொரு அழகு! தொடை தெரிய அவள் அணியும் ஆடை... அவளின் அதீத கவர்ச்சியை பளீரென்று காட்டும்.

ஒரு பார்ட்டியில்தான் அவளை சந்தித்தான் தினகர். அந்த சந்திப்பு தொடர்கதையானது. சுபாவுக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள ஒரேயொரு மாமா மட்டுமே! அவர்தான் அவளை படிக்க வைத்து, பராமரிப்பதெல்லாம். நுனி நாக்கு ஆங்கிலம் பேசுபவள். அவள் குறிக்கோளெல்லாம் அமெரிக்காவில் ஒரு வேலையை தேடிக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

தினகர் சுபாவின் அறிமுகம் தொடர்கதையானது. எதையாவது காரணம் சொல்லி அவளை அவனும், அவனை அவளும் பார்க்க வந்தனர்.

அவன்தான் முதலில் தன் மனதை வெளிப்படுத்தினான். சுபாவுக்கு வானத்தையே தொட்டுவிட்ட உற்சாகம்.

இருக்காதா பின்னே? கோடீஸ்வர இளைஞன். அழகன். அப்படிப்பட்டவன் வலிய வந்து ஐ லவ் யூ சொல்கிறான் என்றால் சாதாரணமான விஷயமா? இருவரும் கரம் கோர்த்து சிறகடித்துப் பறந்தனர். அவ்வளவு ஏன்? ஒரு முறை தினகரின் பிறந்த நாள் வந்தபோது, ''உங்களுக்குக் கொடுக்க என்னிடம் இதைவிட வேறெந்த உயர்வான பொருளும் இல்லை'' என்று தன்னையே தந்தாள்.



இவளுக்கு தன் மீது இவ்வளவு அன்பா? என்று நெக்குருகிப் போனான் தினகர்.

மகன் யாரோ ஒரு பெண்ணுடன் ஊர் சுற்றுகிறான் என்று கேள்விப்பட்டு குணவதி வேதனையுற்றாள்.

பெண் ஏழையாய் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் குடும்பத்திற்கேற்ற பெண்ணாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தாள். ஆனால், சுபாவைப் பற்றி அவள் காதிற்கு எட்டிய செய்தி நல்லவிதமாய் இல்லை என்பதால் வருத்தப்பட்டாள்.

தினகர் அவளிடம் சுபாவைப் பற்றி கூறியபோது மறுத்தாள். 'அந்தப் பெண் வேண்டாம் தினகர்' என்று கெஞ்சினாள். தினகர் விடாப்பிடியாய் இருந்ததால் அவளை வீட்டிற்கு அழைத்து வா என்றாள்.

இந்த அளவிற்கு அம்மா இறங்கி வந்ததே பெரிய விஷயம்.

தரையில் கால் படவில்லை அவனுக்கு.

''முதன் முதலில் வீட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறோம். அம்மாவுக்கு மாடர்ன் டிரெஸ் என்றால் பிடிக்காது. சேலை கட்டிக் கொண்டு வரச் சொல்லலாம்'' ஆவலாய் சுபாவின் வீட்டிற்கு சென்றான்.

வாசலில் விக்னேஷின் கார் இருந்தது.

'அட பயலும் இங்கேதான் இருக்கிறான் போலுள்ளது' என்று நினைத்தபடி தாழிடாமல் வெறுமனே சார்த்தி இருந்த கதவை தள்ளிக் கொண்டு உள்ளே சென்ற தினகர்... தன் வாழ்நாளிலேயே அப்படியொரு அதிர்ச்சியை சந்தித்திருக்க மாட்டான். அப்படிப்பட்ட அதிர்ச்சியை கண்டான்.

படுக்கையறையில் சுபாவும், விக்னேஷும் பார்க்கக் கூடாத கோலத்தில்.

32955
5008309

இவன் மட்டுமல்ல... அவர்களும் இவனைக் கண்டு திகைத்துப போய் விட்டனர்.

ஒரு வார்த்தை கூட பேசாமல் திரும்பி விட்டான் தினகர்.

வானமே இடிந்து தலைமேல் விழுந்து விட்ட அதிர்ச்சியில் அகப்பட்டிருந்தான்.

'சுபாவா? சுபாவா இப்படி? எப்படி மனசு வந்தது? என்னிடம் கொடுத்த அதே உடம்பை விக்னேஷிற்கும் தர எப்படி முடிந்தது அவளால்? உடம்பும், மனசும் கூசாதா? விக்னேஷிடம் இந்தளவு பழகுபவள் எதற்காக என்னை காதலிக்க வேண்டும்? அத்தனையும் நடிப்பா?'

ஒரு சந்தர்ப்பத்தில் அவளிடம் கேட்டே விட்டான். அதற்கு அவளிடமிருந்து அலட்சியமாகத்தான் பதில் வந்தது.

''இப்ப என்ன? எதுக்காக கத்தி ஆர்ப்பாட்டம் பண்றே? எனக்கு என் சந்தோஷம் முக்கியம். என் லட்சியம் முக்கியம். விக்னேஷ் அமெரிக்காவில் போய் செட்டிலாகப் போகிறார். எனக்கும் அங்கே ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு பண்ணியிருக்கார். அதுமட்டுமில்லே... அவரும் என்னை லவ் பண்றார். உன்னை காதலிச்சது தெரிஞ்சிருந்தும் என்னை ஏத்துக்கறதுக்கும் ஒரு மனசு வேணும். அது விக்னேஷ்கிட்டே இருக்கு. நிச்சயமா உன்கிட்டே இல்லை. எனக்கு எல்லாவிதத்திலேயும் விக்னேஷ்தான் பொருத்தமானவர்னு புரிஞ்சுக்கிட்டேன். என் விருப்பப்படி முடிவெடுக்க எனக்கு உரிமையிருக்கு. அடுத்த வாரம் விக்னேஷ் கூட அமெரிக்கா கிளம்பறேன். நாம நல்ல நண்பர்களா பிரியணும்னு ஆசைப்படறேன். தினகர்! பழசையெல்லாம் மறந்திடு. எங்களை வழியனுப்ப நீ அவசியம் ஏர்போர்ட் வரணும். ஓக்கே!'' என்று கைகுலுக்க கையை நீட்டினாள்.

தினகர் அவளை அருவருப்பாய் ஒரு பார்வை பார்த்து விட்டு, தன் கோபத்தையெல்லாம் காலில் கொண்டு வந்து... பாதையில் கிடந்த கல்லை எட்டி தள்ளிவிட்டு, காரில் ஏறி அமர்ந்து திரும்பி கூட பார்க்காமல் வந்து விட்டான்.



சரிவர சாப்பிடாமல், பிஸினஸை கவனிக்காமல், தாடி வளர்த்துக் கொண்டு அறையிலேயே முடங்கிக் கிடந்த மகனைப் பார்க்கும்போது அடி வயிறு கலங்கியது குணவதிக்கு.

லேசுபாசாய் சுபாவின் அதிரடி முடிவு பற்றி அவளும் அறிந்திருந்தாள். காலைச் சுற்றிய பாம்பு விடுபட்டதே என்று சந்தோஷப்பட்டாலும் மகனின் வேதனையை தான் அந்த தாயால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கணவரின் பிரிவிற்கு பிறகு மகனின் முகம் பார்த்துதான் தன்னை தேற்றிக் கொண்டிருந்தாள். இப்போதோ... மகனின் முகம் பார்த்து துடித்துக் கொண்டிருக்கிறாள்.

அவனுக்கு ஒரு திருமணம் செய்து வைத்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று தோன்ற... அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

கல்யாணம் என்ற வார்த்தை காதில் விழுந்ததுமே கருந்தேள் கொட்டி விட்டது போல் எகிறினான்.

''இனி... என் வாழ்க்கையில் கல்யாணம் என்ற பேச்சிற்கே இடமில்லை. என் வாழ்க்கையில் எந்த பெண்ணிற்கும் இடமில்லை. வெறுக்கிறேன். எல்லா பெண்களையும் வெறுக்கிறேன். இந்த தலைமுறை பெண்கள் எல்லோரும் கெட்டவர்களம்மா! யாரையும் நம்பக் கூடாது. யாரும் சுத்தமாயில்லேம்மா! இனி இந்த பேச்சே எடுக்காதே! எடுத்தால்... என்னை உயிரோடவே பார்க்க மாட்டேம்மா!'' என்று பெரிய குண்டாய் தூக்கிப் போட... அந்த கவலையில் படுத்தவள்தான் குணவதி.

எந்திரிக்க முடியாமல் பராலிசிஸ் அட்டாக் ஆகி விட்டது.

நடந்து மூன்று வருடம் ஓடிப்போனாலும் சுபாவினால் ஏற்பட்ட பாதிப்பு தினகரின் அடி மனசு வரை பாயந்திருந்தது.

சாதாரணமாய் எல்லா பெண்களையும் வெறுத்தவன் சுபாவின் மறு பிரதியாய் வந்து நின்ற மீனாவை மட்டும் கொஞ்சுவானா

என்ன? அவளை மேலும் மேலும் துன்புறுத்தி பார்க்க ஆசை ஏற்பட்டது அவனுக்கு.

## 11



பிறருக்கு நாம் செய்யும் பணிவிடை, கடவுளுக்கு நாம் தரும் காணிக்கையாகும். நல்ல மனசுள்ளவர்களின் பணிவிடையும் பிரார்த்தனையும் ஒருநாளும் வீண் போனதில்லை.

ஐந்தே மாதத்தில் குணவதி முழுக்க குணமாகி விட்டாள். அவளால் நன்றாகப் பேச முடிந்தது. நடக்க முடிந்தது. இதை தினகரே எதிர்பார்க்க வில்லை. ஆனந்த அதிர்ச்சியில் அம்மாவை அணைத்துக் கொண்டான்.

''தினகர்...!'' என்று கண்ணீர் தளும்ப மகனின் உச்சியில் முத்தமிட்டாள் குணவதி.

''அம்மா... உங்க வாயால என் பேரை கேட்டு எத்தனை வருஷமாச்சும்மா. எனக்கு இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? கூப்பிடும்மா வாய் நிறைய என் பேரை சொல்லி கூப்பிட்டுக்கிட்டே இரும்மா!''

''தினகர்... என் மகனே!'' என்று சந்தோஷத்துடன் விம்மினார்.

''உன்னை பழையபடி திருப்பிக் கொடுத்த நம்ம டாக்டருக்கு நாம ஏதாவது பெரிய பரிசா தரணும் போலிருக்கும்மா!''

''தினகர்.''

''என்னம்மா?''

''டாக்டர் கொடுத்த மருந்து மாத்திரையைவிட என்னை ஒரு குழந்தையை மாதிரி ஒரு தாய் ஸ்தானத்துல இருந்து பார்த்துக்கிட்ட மீனாவுக்குதான் நாம பரிசு கொடுக்கணும். எனக்கு ஒரு பொண்ணு இருந்திருந்தாக் கூட இந்தளவு கவனிச்சு இருப்பாளாங்கிறது



சந்தேகம்தான். ஆனா, கொஞ்சம் கூட முகம் சுளிக்காம எனக்கு சேவை பண்ணின மீனாவின் மனசை யாருக்கும் வராது தினகர்.''

''மீனா... மீனா... மீனா! அப்படியென்ன பண்ணிட்டா? சும்மாவா பண்ணினா? சம்பளம் வாங்கலே? வேளா வேளைக்கு மூக்கு பிடிக்க சாப்பிடலே? யாருமில்லாத அனாதைக்கு, புருஷனை இழந்த விதவைக்கு இப்படியொரு ராஜ வாழ்க்கை எளிதாக கிடைச்சிடுமா? சும்மா, இலவசமா வந்து சேவை செய்ய சொன்னா... செஞ்சிருப்பாளா? சம்பளம் கொடுத்தோம். வேலை செஞ்சா. அதோட முடிஞ்சு போச்சு. அது மட்டுமில்லே...''

''......''

''அவளை இங்கே வேலைக்கு சேர்த்ததே உங்களுக்காகத்தான். இப்ப நீங்க முழுக்க குணமாயிட்டீங்க. இனி அவளுக்கு இங்கே வேலையில்லே... அவளோட கணக்கை முடிச்சிட்டு அனுப்பிட போறேன்.''

''தினகர் வேணாம்ப்பா... பாவம் அந்தப் பொண்ணு! இவ்வளவு சின்ன வயசிலே பூவையும், பொட்டையும் இழந்துட்டு நிக்கறா! நாம அப்படியொண்ணும் சம்பளத்தை அள்ளிக் கொடுத்திடலே இருந்தாலும் அந்தப் பணத்துக்காக வயித்துப் பசிக்காகத்தானே... ஊர்விட்டு ஊர் வந்து இங்கே வேலை செய்யறா? அவ வயித்திலே அடிக்கிற பாவத்தை நாம செய்ய வேணாம் தினகர். நம்மகிட்டே எத்தனையோ பேர் வேலை செய்யறாங்க. அதுல ஒருத்தியா அவளும் இருந்திட்டு போகட்டுமே. பாவம்ப்பா... சின்னப் பொண்ணு'' மீனாவுக்காக மகனிடம் கெஞ்சினாள்.

''அம்மா... நீங்க அவளுக்கு ரொம்ப இடம் தர்றீங்க...!''

''அவளும் என்னை மாதிரி ஒரு பொண்ணுதானே? நானே அவளுக்கு உதவலேன்னா... நான் மனுஷியா இருக்கவே தகுதியில்லே. அவளுக்கு இந்த வீட்லேயே ஏதாவது ஒரு வேலை போட்டு கொடுத்திடலாம்...''

''சரி... சரி... அவளையும் இந்த வீட்லே ஒரு வேலைக்காரியா சேர்த்துக்குங்க. வீடு சுத்தமா இருக்கணும். ஒரு குப்பை காகிதம் பார்த்தாக் கூட அவ சீட்டை கிழிச்சிடுவேன்'' போனால் போகட்டும் என்று சம்மதித்தான்.

''இந்த மட்டுமாவது சம்மதிச்சியே... ரொம்ப நல்லது தினகர்'' என்றாள் குணவதி. அவளுக்கு மீனாவை விட்டுப் பிரியவே மனசில்லை. அவளின் சாந்தமான முகம் அவளுக்கு மிகவும் பிடித்து விட்டிருந்தது.

அன்றிலிருந்து மீனா ஆயா பதவியிலிருந்து இறக்கப்பட்டு வேலைக்காரிகளில் ஒருத்தியானாள். இந்த வேலைதான் என்றில்லாது எல்லா வேலையும் செய்தாள்.

மார்க்கெட் செல்வாள், தோட்ட வேலை செய்வாள், பாத்திரம் தேய்ப்பாள் வீட்டை துடைப்பாள், எல்லாமே செய்வாள்.

மீனா எதற்காகவும் முகம் சுளிக்கவில்லை. அவள் எந்த வேலையும் செய்ய தயாராய் இருந்தாள். அவளுக்குத் தேவை இரண்டு வேளை உணவும், பாதுகாப்பான இடமும்தான்.

இந்த இரண்டு தேவைகளுக்காக அவள் தன் பொட்டையும், பூவையும் அல்லவா இழந்திருக்கிறாள். மண மேடையில் ஏறியதில்லை. மேள தாளம் முழங்க தாலியை கட்டிக் கொள்ளவில்லை. அட்சதை தூவவில்லை. ஆனால் மீனா விதவை.

சிலசமயம் இதை நினைத்து அவளுக்கு சிரிப்பும் வரும், அழுகையும் வரும்.

'அப்பா... எனக்கு ஒரு கல்யாணம் பண்ணிப் பார்க்க எவ்வளவு ஆசைப்பட்டீர்கள்? ஆனால் கல்யாணமே நடக்காமல் விதவையாகி விட்டேன் அப்பா! இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால், மகாராஷ்ட்ரா வேலைக்கு போயிருக்க மாட்டீர்கள் அல்லவா? படித்து முடித்து நல்ல வேலைக்குப் போக ஆசைப்பட்டேன்; முடியலேப்பா, இந்த உலகம் ரொம்ப மோசம்.



எங்குமே எனக்கு பாதுகாப்பு கிடைக்கலேப்பா. அதனாலதான்... எவ்வளவு திட்டினாலும் பொறுத்துக்கிட்டு இங்கேயே வேலை செய்யறேன். இங்கே எனக்கு எந்த பயமும் இல்லேப்பா' அப்பாவின் போட்டோவை எடுத்து வைத்துக் கொண்டு கண் கலங்குவாள்.

மீனாவை எதையாவது சொல்லி திட்டிக் கொண்டும், விரட்டிக் கொண்டும் இருப்பதில் சுபாவை பழி வாங்கும் திருப்தி ஏற்பட்டது தினகருக்கு.

அன்று அப்படித்தான்.

பொள்ளாச்சியிலிருந்து குணவதியின் தங்கை குடும்பம் குன்னூருக்கு வந்திருந்தது. எல்லோரும் மொத்தமாய் அமர்ந்து கலகலப்பாய் சிரித்து பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மீனாதான் அனைவருக்கும் உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

''இங்கே இதை வை... அங்கே அதை வை!'' என்று ஆளாளுக்கு அவளை விரட்டிக் கொண்டிருக்க பம்பரமாய் சுழன்றுக் கொண்டிருந்தாள் மீனா.

''மட்டன் குருமா... நல்ல காரமா மணமா சூப்பரா இருக்குக்கா!'' ரசித்து சாப்பிட்டாள் குணவதியின் தங்கை.

''எல்லாம் இந்த மீனாவோட கைமணம் தான். அற்புதமா சமைக்கிறா!'' அம்மா பாராட்டு பத்திரம் வழங்கினாள்.

தினகருக்குள் எரிந்தது.

''ஏய்... கொஞ்சம் குருமா விடு!'' அதட்டலாய் அழைத்தான்.

மீனா பரபரப்பாய் அவன் அருகே வந்து பரிமாற... அந்த பதற்றத்தில் ஒரு துளி குழம்பு அவன் சட்டையில் பட்டுவிட... அந்த சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்தவனாய்... ''நாயே... கண்ணு தெரியலே உனக்கு?'' என்று பளாரென்று அவளை அறைய... கையிலிருந்த குழம்பு பாத்திரம் எகிறி அவள் முகத்திலேயே கொட்டி விட்டது.

சூடும், காரமும் முகம் முழுக்க பரவ, ''அம்மா...'' என்றலறியபடி துடித்து விட்டாள் மீனா...

தினகர் குழம்பு முகத்தில் கொட்டி விடும் என்று எதிர்பார்க்க வில்லை. குற்ற உணர்வில் அங்கிருந்து எழுந்து போய்விட்டான்.

குணவதிதான் துடித்துப் போய் விட்டாள்.

''அம்மாடி... மீனா... என்னம்மா ஆச்சு?''

''அம்மா... எரியுதும்மா... கண்ணை திறக்க முடியலேம்மா!'' மீனா அழுதாள்.

குணவதிக்கு தாங்க முடியவில்லை. டாக்டரை வரவழைத்தாள். முகம் ரத்தமாய் சிவந்துப் போய் விட்டது. கண்களில் எரிச்சல் அடங்கவேயில்லை. தூக்கமேயில்லாமல் மூன்று நாட்கள் அவஸ்தைப் பட்டாள்.

நான்காவது நாள் எழுந்து நடமாடினாள். கண்கள்தான் கோவைப் பழமாய் சிவந்திருந்தது.

''அவன்தான் கோபக்காரன்னு தெரியுதில்லே. கொஞ்சம் நிதானமா செய்யக் கூடாதா? பார்த்து பரிமாறக் கூடாதா? மீனா இப்ப எப்படி இருக்கு. வலிக்குதா?'' பரிவாய் கேட்டாள் குணவதி.

அந்த அன்பான வார்த்தையில் கரைந்து போனாள்.

''இப்பப் பரவாயில்லேம்மா. தப்பு என் பேர்லதான். நான் இனிமே கவனமா நடந்துக்கறேன்ம்மா!'' என்றாள்.

தோட்டத்திலுள்ள குப்பைகளை எல்லாம் அகற்றி... தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தாள்.

எப்போதாவது மாலை நேரங்களில் வாக்கிங் போவது தினகரின் பழக்கம்.

அன்றும் அப்படித்தான் வாக்கிங் போனபோது... விசும்பல் சப்தம் கேட்டு அரண்டு நின்று விட்டான்.



'யார் அழுகிறார்கள்? அதுவும் நம் தோட்டத்தில்?' வியப்பு மேலிட சுற்றுமுற்றும் பார்த்தபோது ஒரு மரத்தின் பின்னால் அசைவு தெரிய... ஆர்வமாய் முன்னேறினான்.

அங்கு...

மரத்தோடு மரமாய் சாய்ந்துக் கொண்டு, கண்கள் மூடி... இதயத்து வேதனைகளெல்லாம் விசும்பலாய் வடிவெடுக்க... மாலை மாலையாய் கண்ணீர் விட்டபடி நின்றிருந்தாள் மீனா.

அந்தக் காட்சி... அவனை வெகுவாய் பாதித்தது.

இந்தக் கண்ணீருக்கு என்ன காரணம்? நானா? அவனுள் கேள்வி எழ அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் வந்த சுவடே தெரியாமல் திரும்பி நடந்து விட்டான்.

அந்த சம்பவத்திற்குப் பின் மீனா அவன் கண்களில் அதிகமாய் தென்படுவதில்லை.

அவன் அறையை சுத்தம் செய்வதெல்லாம் அவன் இல்லாத போதுதான் அவள் கண்களில் தென்படாதது அவனுக்கும் நிம்மதியாக இருந்தது.

''மீனா... மீனா...'' அம்மாவின் குரல் கேட்டு தினகர் எட்டிப் பார்த்தான்.

அவளைப் பார்த்து எவ்வளவு நாளாகி விட்டது?' என்ற யோசனையுடன்.

''இல்லேம்மா... மீனாவை நான்தான் மார்க்கெட்டிற்கு அனுப்பி வெச்சிருக்கேன்.'' என்றபடி வந்தாள் சமையல்காரி அகிலாண்டம்.

''ஏன் அகிலாண்டம்! உனக்கு எத்தனை முறை சொல்லுவேன்? கடைக்கெல்லாம் மீனாவை அனுப்பாதேன்னு. அவ சின்னப் பொண்ணு, எல்லார் கண்ணும் ஒரே மாதிரியாவா இருக்கும்? மழை வேற பேயாட்டம் பெய்யுது! வேலனை அனுப்பி இருக்கக்

கூடாதா? பாவம்... மழையில மாட்டிக்கிட்டு எங்கே அவஸ்தைப் படறாளோ...?'' அம்மா கோபமாய் கத்தினாள்.

அடுத்த கணம் தினகரின் கால்கள் தன்னிச்சையாக நடந்து போர்டிகோவிற்கு சென்று காரில் ஏறியமர்ந்தான்.

''தினகர்... இந்த மழையிலே நீ எங்கேப்பா போறே?''

''அவசரமா எஸ்டேட் போக வேண்டியிருக்கும்மா!''

சரேலென காரை உசுப்பி புறப்பட்டான்.

''இந்த மழையிலா?'' கவலையாய் ஒலித்த அம்மாவின் குரல் அவன் காதில் எட்டவில்லை.

மார்க்கெட் நோக்கி செலுத்தினான். மழையினால் கூட்டம் அதிகமில்லை.

மீனாவை அவன் பார்த்து விட்டான்.

மழை கொட்டுவதை கூட பொருட்படுத்தாமல் தெப்பலாய் நனைந்து காய்கறி வாங்கிக் கொண்டிருந்தாள். குளிர் காற்றில் அவள் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது.

'இப்படியா நனைவது? மழை விடும் வரை எங்காவது ஒதுங்கியிருக்கலாம் அல்லவா?'

அவளோ காரியமே கண்ணாக வாங்குவதை வாங்கிக் கொண்டு வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள் மழையில்.

தினகர் காரை விட்டிறங்கி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். முழுக்க நனைந்து விட்டோம் என்பதை கூட உணராமல்... ஏன் வந்தோம், எதற்காக வந்தோம் என்றே புரியாத நிலையில் வெகு நேரம் நனைந்து கொண்டிருந்தான் தினகர்.



## 12



சிரிப்பலையில் அந்த இடமே அதிர்ந்தது.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு தினகர் மனம் விட்டு சிரித்தான்.

பின்னே இருக்காதா? அவனுடன் படித்த கல்லூரித் தோழர்கள் ஏழெட்டு பேர் இத்தனை வருடத்திற்குப் பிறகு வந்திருக்கின்றனர். இரண்டு நாட்கள் இங்கே தங்கி விட்டு செல்வதாக திட்டம் மகிழ்ச்சிக்கு பஞ்சமிருக்குமா என்ன?

அவர்களுக்காக தினகர் இரண்டு நாட்களும் எஸ்டேட் பக்கமே திரும்பக் கூடாது என்று முடிவு செய்து விட்டான்.

''வீரேந்திரனை நீ பார்க்கறதுண்டா கமல்?''

''ம்ஹூம்... அவன் எங்கே இருக்கான்னே தெரியலே.. நம்ம பாலு கதை தெரியுமா?''

''யாரு... படிக்கும்போதே... கீதாவை தள்ளிக்கிட்டுப் போய் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டானே அந்த பாலுவா?''

''அதே... அதே! இப்ப அவனுக்கு எத்தனை குழந்தைங்க தெரியுமா? நாலு!''

''நாலா... எப்படிடா?'' ஆச்சரியமாய் கேட்டான் தினகர்.

''எப்படின்னு கேக்கறான் பார்! நம்ம பாலுவைப் பத்தி தெரியாதா உனக்கு? ஹார்ட் வொர்க் ஹானஸ்ட் பாலுன்னுதானே அவனுக்கு பேரே.''

''ஓஹ்ஹோ...'' பயங்கரமாய் சிரிப்பு சத்தம் எழுந்து குன்னூரையே கிடுகிடுக்க வைத்தது.

''ஆமா... தினகர்... நீ எப்ப குடுமி வச்சுக்கப் போறே?'' சீரியஸாய் கேட்டான் குமரன்.

''என்னது குடுமியா?''

''ஐ மீன்... நீ எப்ப குடும்பஸ்தனா மாறப்போறேன்னு கேட்டேன். கிட்டத்தட்ட நம்ம குருப்ல உன்னைத் தவிர எல்லாருக்கும் கல்யாணமாய்டுச்சி.''

தினகரின் முகம் மாறிப் போனது.

''ப்ளீஸ்... ஃப்ரண்ட்ஸ்... இந்த விஷயத்தைப் பேச வேண்டாமே!'' என்றான் தயவாய்.

''ஸாரிடா தினகர். நானும் விஷயம் கேள்விப்பட்டேன். பட், அதுக்காக...''

''ப்ளீஸ்...'' என்றான் அழுத்தமாய்.

''ஓக்கே... ஓக்கே! அதைப்பத்தி பேசலே... நம்ம மாதவன் எங்கேயிருக்கான். எப்படியிருக்கான்? அவனைப் பத்தி எதுவும் தெரியலியே...''

''மாதவனை ரெண்டு மாசம் முன்னாடி சென்னையிலே பார்த்தேன். ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்றானாம். வெல் செட்டில்ட். அவனும் கூடிய சீக்கிரம் இங்கே வர்றதா ப்ராமிஸ் பண்ணினான்'' என்றான் தினகர்.

உடம்பை சூடேற்றும் மது பானங்கள் காலியாகிக் கொண்டிருக்க... நண்பர்களின் குரலும், உடலும் தள்ளாடத் தொடங்கின.

''சரி... கீழே போகலாம் வாங்க... சாப்பிடலாம்!''

''தினா... கீழே வேண்டாம்டா... அம்மா இருக்காங்க. எங்களை இப்படி பார்த்தாங்கன்னா தப்பா நினைச்சுப்பாங்க... சாப்பாட்டை இங்கே கொண்டு வந்துடச் சொல்லேன்... ப்ளீஸ்'' கெஞ்சினான் குமரன்.

அவன் கூறுவதும் சரியெனப் படவே... இண்டர்காமில் தொடர்பு கொண்டு சாப்பாட்டை மேலே கொண்டு வரச் சொன்னான்.



இரண்டு வேலையாட்கள் லீவு எடுத்துக் கொண்டதால் வேறு வழியின்றி மீனாதான் அவர்களுக்குப் பரிமாற வேண்டியதாயிற்று.

தினகர் அவளை எதிர்பார்க்காததால் தலைகவிழ்ந்துக் கொண்டான்.

மற்றவர்களின் கண்கள் அவளைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் விரிந்தது.

கிசுகிசுப்பாகக் கேட்டனர்.

''யார் தினா இது? சூப்பர் ஃபிகரு? மிஸ் பெமினா போட்டிக்கு அனுப்ப வேண்டியவங்களை இங்கே வச்சிருக்கே?''

''......''

''பேர் என்னடா? ஆள் எப்படி? டச் பண்ணிட்டியா?''

''கமல்!'' அதட்டினான்.

''ப்ச்... தெரிஞ்சுக்கலாம்னுதான். குளிர் பிரதேசம் வேற. சரக்கு உள்ளே போயிருக்கு எதிரே லட்டு. கை பரபரங்குது தினா!'' என்றான் முரளி.

''ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர் டங்க்! இது நீங்க நினைக்கிற மாதிரி ஹோட்டல் இல்லே. இவளும் அப்படிப்பட்டவ இல்லே... பேசாம சாப்பிடு'' மெல்லிய குரலில் அதட்டினான்.

அதன் பிறகு பேசாமல் சாப்பிட்டாலும் அவர்களின் கண்கள் மீனாவை துகிலுரித்தன.

மீனா எதையும் கண்டு கொள்ளவில்லை.

தினகருக்கு கோபமாய் வந்தது.

'இவள் எதற்கு இங்கு வர வேண்டும்?'

முரளி... வேண்டுமென்றே டம்ளரை கீழே தள்ளிவிட மீனா... குனிந்து எடுக்க... ரசத்தை தட்டிவிட... அது அப்படியே மீனாவின்

சேலை மேல் கொட்டிவிட்... 'அடடா' என்று பதறியபடி அவளை தொட்டு துடைத்து விட முற்பட்டான் முரளி.

தினகருக்குப் புரிந்தது. முரளியின் வக்கிரம்!

''ப... பரவாயில்லே சார்... பரவாயில்லே'' என்று அவனிடமிருந்து விலகி பாத்ரூம் நோக்கிச் சென்றாள்.

'நீ வராதே... வேற ஆளை அனுப்பு' என்று சொல்வதற்காக தினகரும் எழுந்து வந்தான்.

வெறுமனே சார்த்தியிருந்த பாத்ரூம் கதவை கைகளால் தள்ளியவன் உறைந்து விட்டான்.

முந்தானையை விலக்கி... தண்ணீர் விட்டு துடைத்துக் கொண்டிருந்தாள். ஈரமான உடையில் அவளை பார்த்த தினகரின் உடல் சூடேறியது. சட்டென அவள் பார்க்கும் முன் கதவை இழுத்து சார்த்தி விட்டான்.

விடாமல் மழை பெய்து கொண்டிருந்தது. குன்னூரில் அங்கங்கே தண்ணீர் தேங்கி நின்று தேயிலைகள் நாசமாகி விட்டன. மண் சரிவு வேறு ஏற்பட்டு பாதைகள் போக்குவரத்திற்கு இடையூறாக பாதிக்கப்பட்டிருந்தன. அதனால் காரில் செல்லாமல் நடந்தே சென்று எஸ்டேட்டை பார்வையிட வேண்டியதாயிற்று.

வசதியாய் வாழ்ந்து பழகிய உடம்பு இந்த கடின உழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து... காய்ச்சலில் படுக்க வைத்து விட்டது.

குணவதி அருகே இருந்து மகனை கவனித்துக் கொண்டாள். காய்ச்சல் இறங்குவதும், ஏறுவதுமாய் கண்ணா மூச்சி விளையாடியது.

தினகரின் செல்போன் அலறியது.

''ஹலோ...!''

''ஹலோ... தினகர் நான் மாதவன் பேசறேன்!''



''வாட் எ சர்ப்ரைஸ்? எங்கேர்ந்து?''

''மேட்டுப்பாளையத்திலிருந்துதான்! ஒரு வேலையா வந்தேன். நாளைக்கு குன்னூர் வரலாம்னு இருக்கேன். நீ ஃப்ரீயா இருக்கியா?''

''நான் ஃப்ரீதான். ஆனா... அங்கங்கே மழையினால பாதை சரியாயில்லே... நீ எப்படி வந்து சேருவே?''

''பறந்தாவது வருவேன். கவலைப்படாதே! நான் முக்கியமான ஒரு நபரைத் தேடித்தான் அங்கே வர்றேன்.''

''முக்கியமான நபரா? யாரது?''

''நாளைக்கு சொல்றேனே...'' என்று போனை கட் பண்ணி விட்டான்.

''யாருப்பா போன்ல?''

''என் ஃப்ரெண்ட் மாதவன்ம்மா! நாளைக்கு இங்கே வர்றானாம்...''

''நல்லது... ஆனா எப்படி? மழையில பாதையெல்லாம்...''

''அவன் எப்படியாவது வந்திடுவான்ம்மா! நீங்க போய் படுங்க...''

''உன்னை இப்படியே விட்டுட்டா? முடியாதுப்பா... டாக்டர் ரெண்டு மணி நேரத்திற்கொருமுறை மாத்திரை தர சொல்லியிருக்கார்.''

''நானே பார்த்துக்கறேன். நீங்க போய் ரெஸ்ட் எடுங்க.''

''நீதான்ப்பா நல்லா ரெஸ்ட் எடுக்கணும்!''

''சரி, வேற யாரையாவது அனுப்புங்க... நீங்க போங்க.''

''வேலனும், செந்திலும் அவங்க வீடு மழையில வெள்ளம் புகுந்திடுச்சின்னு போய் இருக்காங்க. அகிலாண்டம் எட்டு மணிக்கே தூங்கப் போயிடுவா. இருக்கிறது மீனா மட்டும் தான்.''

''சரி... அவளையே அனுப்பி வையுங்க...'' என்றான் பட்டென்று.

''தி...ன...க...ர்.'' ஆச்சர்யமாய் மகனைப் பார்த்தாள்.

அவளுக்கு சந்தோஷமாகவே இருந்தது.

'பாவம்... அந்த அபலைப் பெண் மீது கண்மூடித்தனமாக வைத்திருந்த கோபம் இப்போதில்லையே... அது போதும்' என்று.

தினகர்அதற்குமேல் அம்மா எதையாவது கேள்வி கேட்டு விடப் போகிறாளே என்கிற அச்சத்தில் கண்களை மூடிக் கொண்டான்.

சற்று நேரத்தில் மீனா அவன் அறைக்கு வந்தாள். அவள் முகத்தில் ஒருவித பதட்டம் இருந்தது. அவன் எதிரே வருவதையே தவிர்த்தவளை... அவன் அறைக்கே போகச் சொன்னால்?

'கடவுளே... நான் எதை செய்தாலும் குற்றம் கண்டுபிடிப்பவர். அவர் அறைக்கே போக வேண்டிய சூழ்நிலை. எனக்கு நிதானத்தைக் கொடு. எதையாவது செய்யப் போயி... அவன் கோபத்திற்கு ஆளாக்கி விடாதே!'' கடவுளை வேண்டிக் கொண்டாள் மீனா.

இரண்டு நாள் காய்ச்சலில் பாதியாய் இளைத்து விட்டிருப்பதைப் பார்த்ததும் மீனா மனம் இளகினாள்.

அவளை ஏறிட்டுப் பார்த்த தினகர், ''அப்படி உட்கார்'' என்றான்.

''ப... பரவாயில்லை சார்.''

''விடியற வரைக்கும் நின்னுக்கிட்டே இருக்க முடியாது. சொன்னதைச் செய்'' கட்டளையிட்டான்.

சட்டென அமர்ந்தாள்.

''எந்தெந்த டாப்லெட்டை தரணும்னு தெரியுமா?''



''டாக்டரோட ப்ரிஸ்க்ரிப்ஷன் இருக்கு. அதை வச்சு தந்துடுவேன் சார்!''

தெளிவாய் அவள் பேசிய விதம் அவனுள் வியப்பை ஏற்படுத்தியது.

''நீ எதுவரைக்கும் படிச்சிருக்கே?''

'பி.காம்' என்று சொல்ல வாயெடுத்தவள், ''எஸ்.எஸ்.எல்.சி.'' என்றாள்.

''இந்தப் படிப்புக்கு சென்னையிலேயே ஏதாவது எக்ஸ்போர்ட் கம்பெனியிலே சேர்ந்திருக்கலாமே! எதுக்காக குன்னூருக்கு வந்தே?''

மறுபடி தன்னை சுபா என்ற சந்தேகத்தில் கேள்விகளை எழுப்புகிறான் என்று நினைத்தவள் பதில் சொல்ல தடுமாறினாள்.

''கேக்கறேன்ல?''

''இ... இங்கே பாதுகாப்பா இருக்கலாமேன்னு...''

''ஓஹோ...''

அந்த ஓஹோவில் ஏளனம் ஒளிந்திருப்பது போல் பட்டது மீனாவுக்கு.

விடிய விடிய இப்படி பேசிக் கொண்டிருப்பானோ என்ற பயமும் எழுந்தது.

''உன் கணவர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார்.''

''அது... அது வந்து... ஒரு வக்கீலிடம் கிளார்க்காக...''

''எப்படி இறந்தார்...?''

''ஆக்சிடெண்ட்டில்!''

''சின்ன வயசு... ஏன் மறுமணம் பண்ணிக்கக் கூடாது.

''......''

''ஏன்... புருஷனை மறக்க முடியலையா?''

''ம்...''

''சும்மாவாச்சும் டயலாக் அடிக்கிறவங்களை கண்டாலே எரிச்சலாயிருக்கு. இந்தக் காலத்து லேடீஸுங்கதான் விதவிதமா ருசி பார்க்க ஆசைப்படறவங்களாச்சே! நீ மட்டுமென்ன விதிவிலக்கா?''

மட்டமாய் பேசினான். மீனா வாயை இறுக மூடிக் கொண்டாள்.

அவனுக்கே தன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு சமயம் மீனாவுக்காக பரிதாபப்படும் அதே இதயம்தான் அவளை வார்த்தைகளால் குத்தி கிழிக்க ஆசைப்பட்டது. அதை அவனால் தடுக்க முடியவில்லை. அவளை பார்க்க பார்க்க... சுபாவை பார்க்கிற வெறுப்புதான் மேலோங்கியது.

நேரமானதும் டாப்லட்டும், தண்ணீரும் எடுத்துக் கொண்டு அருகில் வந்தாள்.

அதை வாங்கி போட்டுக் கொண்டவன், ''பக்கத்து அறையை சுத்தம் பண்ணி வச்சிடு. நாளைக்கு என் ஃப்ரண்ட் வர்றார்!'' என்றான்.

''சரிங்க சார்!''

கண்களை மூடினான். மீனா தன் இருக்கையை அவன் காலடியில் போட்டு அமர்ந்து கொண்டு அடுத்த இரண்டு மணி நேரம் கரைய காத்திருந்தாள்.

கண்ணயர்ந்தான் தினகர் நேரம் ஆக ஆக காய்ச்சல் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

''ம்...ம்'' என்று அரற்றினான்.

பயந்து போன மீனா, ''டாக்டரை அழைக்கட்டுமா சார்?'' என்றாள்.

''வேண்டாம். மழையில அவரால வர்றது கஷ்டம் விடியட்டும் பார்க்கலாம்.''



''தைலம் தேய்ச்சு விடவா?''

''செய்!''

மீனா தைலத்தை அவன் நெற்றியிலும் உள்ளங் கால்களிலும் தேய்த்தாள்.

எப்படி செய்தாலும் காய்ச்சல் விடவே மாட்டேன் என்றது.

''அம்மாவை எழுப்பட்டுமா சார்?''

''பயந்திடுவாங்க... வேண்டாம்...'' அவன் உடல் உதறிப் போட்டது.

''சார்... தண்ணீரில் துணியை நனைத்து உடலை துடைத்து விட்டால்... காய்ச்சல் இறங்கும்னு டாக்டரே சொல்லியிருக்கார்.''

''நடுங்குது... பச்சை தண்ணியிலே உடம்பை துடைக்கறதா... விளையாடறியா?''

''ப்ளீஸ் சார். இப்படியே விட்டா... ஃபீவர் அதிகமாகும். கொஞ்சம் பொறுத்துக்கிட்டீங்கன்னா...'' என்றான் கெஞ்சலாய்.

''சரி... சரி!'' என்று அரை மனதாய் சம்மதித்தான்.

போர்த்தியிருந்த கம்பளியும், சட்டையும் கழற்றி விட்டு தண்ணீரில் துணியை நனைத்து பிழிந்து அவன் உடம்பில் வைத்ததும்... ''ஸ் ஸ்... ஆ...'' என்று நடுங்கினான்.

''கொஞ்சம்... கொஞ்சம் பொறுத்துக்குங்க...'' சொல்லிக் கொண்டே அவன் உடம்பு முழுக்க துடைக்க பல்லைக் கடித்து பொறுத்துக் கொண்டான்.

பத்து நிமிடம் சென்றிருக்கும். காய்ச்சல் இறங்கியிருந்தது.

''சூடாய் பால் சாப்பிடறீங்களா சார்?''

''ம்...!''

"ஃப்ளாஸ்கில் இருந்த பாலை டம்பளரில் சரித்து அவனிடம் கொண்டு வந்து கொடுத்தபோது... மின்சாரம் துண்டானது. இருள் வந்து கவ்விக் கொண்டது.

"கேண்டில்... கேண்டில் எங்கே...?"

"இதோ எடுக்கறேன் சார்!" யூகித்து அருகிலிருந்த டேபிள் மேல் பால் டம்பளரை வைத்து விட்டு டிராயரில் மெழுகு வர்த்தியை தேடினாள்.

அகப்படவேயில்லை.

"இன்னும் என்ன பண்ணிட்டிருக்கே...?"

"கிடைக்கலே சார்!"

தினகர் கட்டிலை விட்டிறங்கி தேட வந்தான்.

"நீ நகர்ந்துக்க..." என்றவன் அவள் மீது வந்து மோதினான்.

எதிர்பார்க்காத மீனா எந்தப் பக்கம் நகர்வது என்று புரியாமல் தடுமாற... தினகரின் தடுமாறிய கைகளில் அவள்தான் அகப்பட்டாள். படக்கூடாத இடங்களில் அவன் கைகள் பட... தினகர் தன்னைமறந்தான். அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"சா...ர்!" மீனா தன்னை விடுவித்துக் கொள்ள பெரிதும் போராடினாள்.

ஆனால், இளமை, தனிமை, இருள், மழை, அவன் உடல் நிலை... தினகரை மூர்க்கனாக்கியது.

எதை பாதுகாத்துக் கொள்ள அலைந்தாளோ... அதை வெகு எளிதாய் பறித்துக் கொண்டான் தினகர்.



## 13



விடிந்தது.

தினகர் கண் விழித்தான். நள்ளிரவில் நடந்ததெல்லாம் கனவு போல மனத்திரையில் ஓட... புரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தான். போராடியதில் கைத் தவறி கீழே விழுந்திருந்த பால் தரையெங்கும் சிதறியிருந்தது.

விதிர் விதிர்த்துப் போனான்.

"இல்லை... நிஜம்... நடந்தது அத்தனையும் நிஜம்!" உறைத்தபோது மனசு வலித்தது.

பட்டென்று நெற்றியில் அறைந்து கொண்டான்.

'சே... நானா... இப்படியெல்லாம் நடந்து கொண்டேன்? அவள் முகத்தில் எப்படி விழிக்கப் போகிறேன்?' பயத்தில் விட்டிருந்த காய்ச்சல் மறுபடி வரத் துவங்கியது.

'என்ன பண்ணப் போகிறேன்?' குழம்பினான்.

"ஐயா உங்களைத் தேடிக்கிட்டு யாரோ மாதவன்னு ஒருத்தர் வந்திருக்கிறார்!" என்றாள் அகிலாண்டம்.

"வரச் சொல்... அம்மா எந்திரிச்சிட்டாங்களா?"

"பூஜை பண்ணிட்டிருக்காங்க..."

"சரி... நீ போ... மாதவனை என் ரூமுக்கு அனுப்பு."

சற்று நேரத்தில் மாதவன் வந்தான்.

'ஹாய் தினா... எப்படிடா இருக்கே? என்னடா நோயாளி மாதிரியிருக்கே?"

"இப்ப நோயாளிதான். நீ எப்படியிருக்கே? இப்பதான் இந்த தினகரைப் பார்க்க மனசு வந்துச்சா?"

''இப்பவும் மனசு வரலேதான். வேற ஒரு காரியமாகத் தான் குன்னூர் வந்தேன். அதை சாக்கா வச்சு அப்படியே உன்னைப் பார்த்துட்டு வரலாம்னுதான் வந்தேன்.''

''படவா... நீயெல்லாம் ஒரு ஃபிரண்டாடா...? அந்தச் சண்டைய அப்புறம் வச்சுக்கறேன். ஆமா, நேத்துக்கூட நீ சொன்னேயில்லே... முக்கியமான நபரை பார்க்கத்தான் இங்கே வரப்போறேன்னு... யார் அப்படிப்பட்ட இம்பார்ட் டென்ட் பர்சன்? எங்கேயிருக்காங்க?''

''இங்கே உன்னோட வீட்லே.''

''இங்கே என் வீட்லேயா?'' புருவம் மேலேற கேட்டான்.

''யெஸ்... இங்கேதான்!''

''யாருப்பா அது?''

''மீனா!''

''மீ...னா?'' தூக்கி வாரிப் போட்டது தினகருக்கு.

''மீ...மீனாவையா?''

''ஆமாம் தினகர். அவளை நான் எங்கெங்கோ தேடிட்டிருந் தேன். போன வாரம்தான் எனக்கு தெரிஞ்ச ஒருத்தர் மீனாவை குன்னூர் தினகர் எஸ்டேட் பங்களாவுல பார்த்தேன்னு சொன்னாங்க. சர்ப்ரைசா இருக்கட்டுமேன்னுதான் நான் சொல்லலே. அவளை கூப்பிடு தினகர்... நான் பார்க்கணும்.''

''நீ சொல்றது எனக்கு ஒன்னுமே புரியலே. மீனா யாரு? நீ ஏன் அவளைத் தேடறே?''

''அதுசரி... மீனா என் வொய்ஃபோட தங்கச்சி யாருக்கும் தெரியாம அவ இங்கே வந்துட்டா...''

''அப்ப நிச்சயமா நீ தேடி வந்த மீனா இங்கேயில்லே. இங்கே வேலை செய்யற மீனா ஒரு விதவை. விபத்துல கணவனை பறி கொடுத்தவ...''



''அப்படியா சொல்றே? எனக்கு தகவல் சொன்ன நபர் மீனாவை நன்கு அறிந்தவர். அவர் எப்படி தவறான தகவலை கொடுக்க முடியும்? எனக்கு குழப்பமாயிருக்கு தினகர்.''

''அவங்க போட்டோ வச்சிருக்கியா?''

''இதோ இருக்கு...'' ப்ரீப்கேஸை திறந்து ஒரு போட்டோவை எடுத்து காண்பித்தான் மாதவன்.

அதைப் பார்த்த தினகரின் சப்த நாடியும் ஒடுங்கியது. போட்டோவில் மீனாவேதான். அழகாய் நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டும், தலை நிறைய மல்லிகைப் பூவுமாய் தேவதைப் போலிருந்தாள்.

''மாதவன்... இவள்தான் மீனா... ஆனா அவ தன்னை ஒரு விடோன்னு...''

''சேச்சே... அவளுக்கு இன்னும் கல்யாணமே ஆகலே தினகர்..''

''அப்ப ஏன் அப்படியொரு பொய் சொல்லி இங்கே வேலைக்கு சேரணும்?''

''பெண்... இந்தியப் பெண்... குறிப்பா தமிழ்நாட்டுப் பெண்ணாச்சே. தன்னை, தன் கற்பை காப்பாத்திக்க ஒரு பெண் என்ன மாதிரி வேஷமெல்லாம் போட வேண்டியிருக்கு பார்த்தியா? பாவம் மீனா... அவளுக்கு வந்த கஷ்டம் வேற யாருக்கும் வரக்கூடாது...''

என்ற மாதவன் மீனாவைப் பற்றிய முழு விபரத்தையும் கூறினான்.

அப்பா இறந்தது முதல் தாமோதரன் அவளை சிதைக்க முயற்சித்தது வரை எல்லாமே சொன்னான்.

நெஞ்சு கப்பென அடைத்துக் கொள்வது போலிருந்தது தினகருக்கு.

'சே... என்ன காரியம் பண்ணிவிட்டேன்? தன் கற்பை காப்பாற்றிக் கொள்ள விதவை வேஷம் போட்ட மீனா எங்கே? காதலை காலில் போட்டு நசுக்கி கற்பை கடைச்சரக்காக்கி விக்னேஷ் பின்னால் ஓடிப் போன சுபா எங்கே? உருவத்தில் ஒரே மாதிரி இருக்கின்ற ஒரே காரணத்திற்காக... மீனாவை என்ன பாடுபடுத்தி விட்டேன்? எதை பாதுகாக்க இங்கே ஓடி வந்தாளோ... அதை நானே... ச்சே...?' தன்னையே நொந்து கொண்டான் தினகர்.

''தினகர்... நான் முதலில் மீனாவைப் பார்க்கணும்...''

''ஒரு நிமிஷம்...'' என்று கூறி விட்டு அகிலாண்டத்தை மேலே வரச் சொல்லி இண்டர்காமில் அழைத்தான்.

அகிலாண்டம் வந்தாள்.

''மீனாவை வரச் சொல்'' என்றான்.

''மீனாவா... அந்தப் பொண்ணு இங்கில்லையே...?''

''என்ன சொல்றே?''

''ஆமாங்கய்யா... அந்தப் பொண்ணு காலையிலேயே பெட்டியும், கையுமா புறப்பட்டுடுச்சு. எங்கேம்மா போறே அப்படின்னு கேட்டேன். எனக்கே தெரியாதுன்னு சொல்லிவிட்டு போய்கிட்டே இருந்துச்சு.''

''மை காட்...'' தலையை பிடித்துக் கொண்டான் தினகர்.

''ஸாரி... ஸாரி... மீனா... ஸாரி...''

''தினகர் என்னாச்சு? மீனா எங்கே போயிட்டா? எதுக்காக போயிட்டா?'' மாதவன் அரண்டு போய் கேட்டான்.

''தெ... தெரியலே மாதவன்...''

''எனக்கு பார்க்கணும்... மீனாவை பார்த்தே ஆகணும். அவளுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரணும்னுதான்



ஓடி வந்தேன். இப்ப எங்கே போய் கஷ்டப்படறாளோ? தினகர் அவளை நான் பார்க்கணும். இனியும் அவ கஷ்டப்படக்கூடாது!''

''நானும் மீனாவைப் பார்க்கணும் மாதவன். இல்லேன்னா காலம் முழுக்க குற்ற உணர்ச்சியிலே துடிச்சி துடிச்சே செத்துப் போயிடுவேன்'' என்றான் குரல் தழுதழுக்க.

''நீ என்ன சொல்றே?''

''எல்லாம் பிறகு சொல்றேன். மீனாவை முதல்ல தேடி கண்டுபிடிச்சாகணும்... அவ நிச்சயம் குன்னூரைத் தாண்டி போயிருக்க முடியாது. ஹர்ரி அப்...'' என்று விரைந்தெழுந்தான் தினகர்.

அவசர அவசரமாய் உடையை மாற்றிக் கொண்டு கார் சாவியை பொறுக்கிக் கொண்டு தினகர் கீழிறங்க... மாதவன் பின் தொடர்ந்தான்.

அம்மா எதிர்ப்பட்டாள்.

''என்னப்பா... உடம்பு சரியில்லாத பிள்ளை... இந்த மழையிலே எங்கே போகிறே?''

''என் உயிரைத் தேடி...'' என்று ஒரு வார்த்தையில் பதில் கூறி விட்டு நகர... குணவதி மகனை குழப்பமாய் பார்த்தாள்.

மாதவனுக்கு அந்த வார்த்தை எதையோ உணர்த்தியது.

கார் சீறிப் புறப்பட்டது. மழையினால் பாதை மண் சரிந்து, மர முறிந்து அங்கங்கே அடைப்பட்டிருக்க... குறுக்கு வழியிலெல்லாம் காரை நுழைத்து பஸ் ஸ்டாண்ட் நோக்கி விரைந்தான்.

மீனா... நிச்சயம் அங்குதான் சென்றிருப்பாள்.

தினகர் முகத்தில் தெரிந்த பயமும், பதட்டமும் மாதவனுக்கு ஒருவித சந்தோஷத்தைத் தந்தது.

எப்படியோ காடு மேடு பள்ளங்களைத் தாண்டி பஸ் ஸ்டாண்ட் வந்து விட்டான்.

நிறுத்தியிருந்த ஒவ்வொரு பஸ்ஸிலும் ஏறி தேடினர்.

"எங்கே போயிருப்பா?"

"எனக்கு பயமாயிருக்கு தினகர்!"

"இல்லே... எனக்கு நம்பிக்கையிருக்கு... மீனாவை நிச்சயம் பார்ப்போம்கிற நம்பிக்கை எனக்கிருக்கு. அதோ மாதவன்... அதோ அங்கே ஒரு பஸ் கிளம்பப் போகுது. அதுல பார்க்கலியே..."

தினகர் தன் உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் ஓடினான். பஸ்ஸும் ஓடத் துவங்கியது. அதுவரை தலை கவிழ்ந்திருந்த மீனா, கண்ணீரைத் துடைத்தபடி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

மாதவன் ஜன்னலருகே தெரிந்த மீனாவைப் பார்த்து, விட்டான்.

"மீ...னா..." என்று கத்தினான்.

குரல் கேட்டு திரும்பிய மீனா, மாதவனைப் பார்த்து, அதிர்ந்து... கண்டக்டரிடம் சொல்லி விட்டு இறங்கினாள்.

மூச்சிரைக்க தினகரும், மாதவனும் அவள் முன் போய் நின்றனர்.

இருவரையும் எதிர்பார்க்காத மீனா செய்வதறியாது நின்று விட்டாள்.

அதிலும் தினகரைப் பார்த்தபோது அழுகை குமுறிக் கொண்டு வந்தது.

'இவன் எதற்கு வந்திருக்கிறான்?'

"என்ன மீனா, இப்படி பண்ணிட்டே? என்கிட்டே கூட சொல்லாம கொள்ளாம ஓடி வந்திட்டியே... உன்னை அழைச்சிட்டுப் போகத்தான் நான் இங்கே வந்தேன்..." என்றான் மாதவன்.



மீனா பதிலேதும் பேசாமல் கண்ணீர் வழிய நின்றிருந்தாள்.

"கிளம்பும்மா... உன்னை நல்லவன் ஒருத்தன் கையிலே ஒப்படைக்கிறது என் பொறுப்பு! வயசுப் பொண்ணு... தனியா இப்படி ஊர் விட்டு ஊர் போறது பெரிய தப்பு. கிளம்பு இனிதான் உனக்கு நல்ல எதிர்காலமே இருக்கு!"

"எனக்கா?" அழுகை வெடித்துக் கொண்டு வந்தது மீனாவுக்கு.

அவள் அழுகை தினகரின் இதயத்தை கூறு போட்டது.

"வா... மீனா... கிளம்பலாம்... தினகர்... பஸ் கிளம்பப் போகுது.. நாங்க வர்றோம்" என்று அவள் கையைப் பற்றி அழைத்துச் சென்றான் மாதவன்.

அவளும் பின்தொடர... தினகர் பதறினான்.

"மீ...னா..."

"........"

"மீனா... நில்லு..."

"......." நிற்காமல் நடந்தாள்.

"ஸாரி... மீனா..."

"......."

"மீனா... ஐ.. லவ் யூ...!"

சட்டென நின்றன கால்கள். மீனா விழிகள் விரிய பார்த்தாள்.

மாதவன் இதை எதிர்பார்த்தவனாய் தனக்குள் சிரித்தான். தினகரின் பதட்டம், அம்மாவிடம் சொல்லி விட்டு வந்த வார்த்தை மீனாவின் அழுகை... ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்கிறது என்பதை மாதவன் உணர்ந்து கொண்டான்.

"நான் உன்கிட்டே ரொம்ப மோசமா நடந்துக்கிட்டேன். மீனா... ஆனா, அந்த கோபத்துக்கு காரணம் எங்கே நான் உன்னை

காதலிச்சிடுவேனோங்கற பயம்தான். காதல் ஜெயிச்சிடுச்சி மீனா! நான் உன்னை கேட்காமலேயே உன்னை பறிச்சிக்கிட்டேன். அதுக்கு பதிலா நான் என் காதலை தர வந்திருக்கேன். ஏத்துக்குவேயில்லே?'' தன் அந்தஸ்து ஈகோவையெல்லாம் கழற்றி எறிந்து விட்டு கெஞ்சலாய் கேட்டான் தினகர்.

மீனாவின் விழிகள் கண்ணீரை நிறுத்தின. திடீரென்று குளிர் காற்று வீசியது. மீனாவின் வறண்டிருந்த வானத்தில் காதல் மேகங்கள் திரண்டன. உதடுகள் துடித்தன.

தினகர் கையை நீட்ட... மீனா நடுங்கும் கைகளால் அதைப் பற்றிக் கொள்ள... அந்த நடுக்கத்தைப் போக்க மேலும் இறுக்கினான் தினகர்.

''இதென்னப்பா... கதையே மாத்திப்புட்டே?'' மாதவன் கேட்டான்.

''.......'' அவர்களிடம் பதிலில்லை. அவர்கள் இந்த உலகத்தில் இருந்தால்தானே?

''மீனா... நீயும் என் கூட வர்ற ஐடியா இல்லையா?''

''.......''

''ம்ஹூம்... உங்களை கலைக்க முடியாது போலிருக்கே. பாட்டு ஏதும் பாடற ஐடியா இருந்தா... அப்படி தோட்டத்து பக்கமா போயிடறது பெட்டர். இது பஸ் ஸ்டாண்ட். டிஸ்டர்ப் பண்ணாதே தினகர்.''

மாதவன் கத்தினாலும் அவர்கள் காதில் விழப் போவதில்லை.

பார்வைகளால் ஒருவர் இதயத்தில் மற்றவர் இறங்கிக் கொண்டிருக்கையில்... எந்த தொந்தரவும் அவர்களை அசைக்கப் போவதில்லை.

மீனாவின் கனவு இன்று நனவாகி விட்டது.

32955
5008339